வெளியீடு : 20-10-2008

Issued : 20-10-2008

ப.எ.
25.3.09
19
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 28, 2008—தொகுதி 50—எண் 2

Monday the 28th April, 2008 —Volume 50—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2ıı, 31'P28
P08.50.2
228383

[Price Rs. 3. 00

28-4-2008

## உள்ளடக்கம்

எழும்பூர்

பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 355-394

2. **உரிமைப் பிரச்சினை—**

பேரவையில் 25-4-2008 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதம் குறித்து அ.இ.அ.தி.மு.க. கொறடா அறிக்கை வெளியிட்டது 395-398

* மாண்புமிகு திரு. துரைமுருகன் 395-397

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 397-398

திரு. கோவை தங்கம் 398

3. **தகவல் கோரல்—**

(அ) மின் பற்றாக்குறை குறித்து பேரவைமுன் வைக்கப்பெற்றுள்ள ஏட்டில் குறிப்பிட்டுள்ளது 398-404

திரு. ஓ. பன்னீர்செல்வம் 399-400

திரு. சி. ஞானசேகரன் 401, 402-403

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 401-404

(ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி 404, 406-413

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 404, 407-409

* மாண்புமிகு திரு. எ.வ. வேலு 409-413

| | பக்கங்கள் |
|---|---|
| **3. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (இ) பாலாற்றின் குறுக்கே குப்பம் அருகில் ஆந்திர அரசு அணை கட்டப் போவதாக வந்துள்ள செய்தி | 404-406 |
| திரு. ஜி.கே. மணி | 405 |
| * மாண்புமிகு திரு. துரைமுருகன் | 405-406 |
| (ஈ) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அன்பரசன் என்பவரை சிங்கள அரசும், அங்குள்ள காவல் துறையும் சித்ரவதை செய்து படுகொலை செய்துள்ளது | 406 |
| திரு. தி. வேல்முருகன் | 406 |
| **4. அறிக்கைகள் அளித்தல்**— | |
| பொதுக் கணக்குக் குழு | 413 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 413-527 |
| கோரிக்கை எண் *21* – நெடுஞ்சாலைகள் துறை | |
| *மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் | 413-414<br>437,496-518,<br>522-526 |
| திரு. ஓ.கே. சின்னராஜ் | 437-446 |
| திரு. எஸ்.ஆர். இராஜா | 446-452 |
| திரு. சு. சிவராஜ் | 452, 453-458 |
| திரு. அ. தமிழரசு | 458-463 |
| *திரு. ப. டில்லி பாபு | 464-468 |
| *திருமதி பி. பத்மாவதி | 468-471 |
| *திரு. வீர. இளவரசன் | 471-476 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| * திரு. ம. இராஜ்குமார் | 478-484 |
| * திரு. எஸ். ராஜகுமார் | 484-491 |
| * திரு. இ. மகேந்திரன் | 491-496 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 527-529 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228383
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 16

## 2008 ஏப்ரல் 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"*

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேச மாட்டார்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 161, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

162—

#### தடுப்பணை

***11236—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் தென்பெண்ணை மற்றும் கெடிலம் ஆற்றில் தடுப்பணைகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கெடிலம் ஆற்றின் குறுக்கே பாதிரி குப்பம் மற்றும் கூத்தபாக்கம் கிராமங்களின் அருகே தடுப்பணை அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. அதேவேளையில் கடலூரில் பெண்ணையாறு மற்றும் அதன் கால்வாய்கள் வழியாக கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உவர்ப்பு நீராக மாறி வருகின்றது. இதனால் நிலத்தடி நீர் மற்றும் விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதை அறிந்த மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்கள் 1996—2001-ல் கடலூருக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் குடிநீர் வழங்குவதற்காக 17 கோடி ரூபாய்க்கான திட்டத்தைத் தீட்டி, 17 கோடி ரூபாயை ஒதுக்கி கடலூரில் உள்ள பொதுமக்கள் என்றென்றும் நினைவில் கொள்கின்ற வகையில் குடிநீர் விநியோகம் தொடர்ந்து சீரான முறையில் நடைபெற உதவிபுரிந்து வருகிறார்கள். பெண்ணையாற்றிலும் இதுபோன்று தடுப்பணைகள் கட்டி உதவி செய்வதற்கு மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெடிலத்தில் பாதிரி குப்பத்தில் 177 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கூத்தபாக்கத்தில் 550 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் தடுப்பணைகள் கட்டுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பெண்ணையாற்றைப் பொறுத்தவரையில் அரசால் ஒரு தடுப்பணை கட்டப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிகுப்பம் அருகே பாண்டிச்சேரி அரசின் தேசிய வெள்ளத் தடுப்பு தொலைநோக்குத் திட்டம், அதாவது மத்திய 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கெடிலத்தினுடைய கரையைப் பலப்படுத்தவும், சில குறுக்கணைகள் கட்டவும், பெண்ணையாற்றில் 3 இடங்களில் [illegible] உப்பனாற்றிலே இரண்டு இடங்களில் அமைக்கவும், மலட்டாற்றிலே [illegible] இடத்திலே அமைக்கவும், பரவனாற்றிலே ஒரு இடத்திலே அமைக்கவும், மொத்தம் 48 கோடி

சென்னை-600 008





ரூபாய்க்கான திட்டம் தீட்டப்பட்டு, National Perspective Plan-க்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் மழைக் காலங்களில் வழிந்து வருகின்ற மழைநீர், நிலங்களில் இருந்து வழிந்து வருகின்ற நீர் மட்டுமே கெடிலம் ஆறாக இருந்து கொண்டிருக்கிறது. தென்பெண்ணை ஆற்றைப் பொறுத்தவரையில், சாத்தனூர் டேம், மேட்டூர் டேம் ஆகியவற்றிலிருந்து வெள்ள நீர் எப்போதும் வருகின்ற காலங்களில், மழைநீர் வருகின்ற காலங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து வருகின்ற ஆறாக இருந்து வருகிறது. புதுவை அரசு இப்போது கடலூர் அருகே குண்டுசாலை என்ற இடத்திலே ஒரு தடுப்பணை கட்ட திட்டமிட்டு, மாண்புமிகு புதுவை முதல்வரோடு நாங்கள் எல்லாம் சென்று அதன் துவக்கப் பணியில் ஈடுபட்டிருந்தோம். கடலூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குண்டு உப்பளவாடி என்ற இடத்தில் தடுப்பணை கட்டினால் உப்புநீர் உள்ளே புகாமல் இருப்பதற்கும், விவசாய நிலங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏதுவாக இருக்கும். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு உதவ முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் active voice-ல் சொன்னேன். அவர் passive voice-ல் என்னிடம் கேள்வியாகக் கேட்கிறார். அதாவது, கெடிலம் ஆற்றைப் பற்றி சொன்னார். அது விழுப்புரம், பண்ருட்டி, திருக்கோவிலூர் வட்டங்கள் வழியாக கடலூருக்கு வந்து கடலில் கலக்கிறது. 5 கிலோ மீட்டருக்கு கடல் தண்ணீர் உள்ளே நுழைந்து விடுகிறது. ஆகையினால் குடிநீருக்குக்கூட பாதகம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால்தான் அங்கே இரண்டு இடங்களிலே தடுப்பணைகள் கட்டலாம் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். பெண்ணையாற்றைப் பொறுத்தவரையிலே, அதன் ஸ்தல வரலாற்றையும் சொன்னார். ஆனால், ஸ்தல வரலாற்றைச்

சொன்னாலும், அந்த இடத்திலே நான் சொன்னேன், the standardisation and widening of the existing flood bank, Pennar river from Kandakorankottai National Highways Road to Melkumaramangalam Village - Rs.4.50 crores estimate; formation of flood bank on right bank of the Pennar River from Cuddalore-Pondy Highways-ல் கட்டுவதற்கு 2 கோடியே 27 இலட்சம் ரூபாய்; formation of flood bank on right bank of the Pennar River, Melkumaramangalam Village to Melpattambakkam வரையிலே ரூ.6 கோடியே 35 இலட்சம். ஆக, இந்தப் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசினுடைய National Perspective Plan-னுடைய நிதியுதவி பெறுவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்படுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குறைகளெல்லாம் நிவர்த்தியாகிவிடும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே துணைக் கேள்வி கேட்பதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதியிலே, கொடுமுடி அருகே காவிரி ஆறு தெற்கு நோக்கி வந்து, அந்த இடத்தில் கிழக்கு நோக்கித் திரும்புகிறது. அந்த இடத்தில், வட்டக்கொம்பணை என்று ஆற்றின் போக்கை மாற்றுவதற்காக இருந்தது. அதற்கு மேல் மூன்று கொம்பணைகள், கீழ் மூன்று கொம்பணைகள் உண்டு. அந்தக் கொம்பணைகள்தான் அந்த ஆற்றினுடைய போக்கையே மாற்றி, கிழக்கு நோக்கிச் செல்ல விடுகிறது. அந்தக் கொம்பணைகள் அனைத்தும் இப்போது பழுதடைந்து, இன்னும் சொல்லவேண்டுமென்றால், முழுமையாகச் சீர்குலைந்திருக்கின்றன. அந்தக் கொம்பணைகளைப் பழுதுநீக்கி, புதுப்பித்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆறு கிழக்கு நோக்கி ஓடிவருகிறது என்று சொன்னார். எல்லா ஆறுகளும் கிழக்கு நோக்கித்தான் ஓடுகின்றன. மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், துரக்கடவு, பெருவாரிப்பள்ளம், ஆழியாறு இவைதான் மேற்கு நோக்கி ஓடுகின்றன.





பாண்டியாறு, புன்னம்புழா ஆகிய ஆறுகளும் மேற்கு நோக்கி ஓடுகின்றன. மற்ற ஆறுகளெல்லாம் கிழக்கு நோக்கித்தான் ஓடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பார்த்தால், மிகவும் மோசமாக இருக்கும்போல் தெரிகிறது. இவ்வளவு மோசமானதை மூன்றாண்டு காலம் பொறுத்துக்கொண்டிருக்கிறீர்களே, அதற்கு ஒரு மரியாதை கொடுத்து, தனிக் கேள்வி போட்டிருந்தால், விவரமாக அல்லவா பதில் சொல்லியிருப்பேன்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் குப்பாசமுத்திரம் வாய்க்கால் அருகே, குடமுருட்டியாற்றின் அருகே 500 ஏக்கர் நிலத்தின் பாசன வசதிக்காக, ரெகுலேட்டர் வசதியுடன்கூடிய படுக்கையணை—bed dam—அமைத்துத்தர வேண்டும். இந்த இடத்தில் படுக்கையணை கட்டப்பட்டால், ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுவார்கள். இந்த இடத்தில் படுக்கையணை கட்டப்படுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. இதற்கு அரசு அனுமதியளித்து, இந்த இடத்தில் bed dam கட்டித் தரப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா எனக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைப்போல், அது அரசினுடைய பரிசீலனையில் இருக்குமானால், நிச்சயம் முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த தி.மு.க. ஆட்சியிலும் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, பாலாற்றின் குறுக்கே அம்பலூர், கொடியாஞ்சி ஆகிய இடங்களிலே தடுப்பணை கட்டுவதற்காக, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக

நிதியொதுக்கப்பட்டு, ஆய்வுகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, மூன்று கோடி ரூபாயிலே ஒரு தடுப்பணை மட்டும் கட்டப்பட்டிருக்கிறது. மற்றொரு தடுப்பணை கட்டப்படாமல் இருக்கிறது. பாலாற்றிலே கடல் நீர் சென்று கலக்காமல் தடுத்திட, அதேபோல, ஐந்து கிலோமீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்டி, தண்ணீரை வழங்குவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது, அம்பலூர் பக்கம். அம்பலூர் என்பது, வாணியம்பாடிக்கு வடமேற்கு மூலையில் உள்ளது. அங்கேபோய், பாலாற்றில் எப்படி கடல்நீர் கலக்கிறது என்று தெரியவில்லை. இரண்டாவது, அவர் சொன்னதுபோல, அந்த அணைகளைக் கட்டுவதற்கு குடிநீர் வடிகால் வாரியம், deposit work-ஐ எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே கட்டியிருக்கிறோம். மறுபடியும் தேவையென்றால், குடிநீர் வடிகால் வாரியம் கொடுத்தால், deposit work செய்யப்படும். கடல் நீர் உள்ளே நுழைகிற அளவிற்கு பாலாற்றிலே நீர் இல்லை. ஆகையால், ஒரு திட்டம். கீழே ஒரு இடத்திலே, ஒரு பெரும் அணையொன்றைக் கட்டுவதற்கு நம்முடைய குடிநீர் வடிகால் வாரியம் பொதுப் பணித் துறையிடத்திலே ஒப்படைத்தார்கள். அது பல்வேறு காரணங்களால்—கேள்வி நேரம் என்பதால், அவற்றை நான் விவரிக்க விரும்பவில்லை—அந்த திட்டம் நீதிமன்றம் வரையிலே சென்று, இப்பொழுது திரிசங்கு சொர்க்கத்திலே நிற்கிறது. மீண்டும் அதுகுறித்து முடிவெடுக்க வேண்டியது, குடிநீர் வடிகால் வாரியம். அவசியமென்றால், அவர்கள் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

(முற்பகல் 9-40)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்படுகிறபொழுது, பல்வேறு பாதிப்பிற்குள்ளாகிற பகுதிகள் இருக்கின்றன. அவற்றிலே குறிப்பாக, கொள்ளிடத்திலே சென்ற இரண்டு தடவைகளிலே மிகப் பெரிய உடைப்புகள் ஏற்பட்டு, கொள்ளிடம் ஒன்றியம் பகுதியிலே இருக்கிற அளக்குடியிலே மிகப் பெரிய உடைப்பு ஏற்பட்டது. அந்த இடத்திலே முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்கள் காலத்திலே



கட்டப்பட்ட தடுப்புச் சுவர்கள் இருக்கின்றன. அதற்குப் பக்கத்திலேதான் அந்த உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் அங்கு சென்று பார்த்தோம் அந்த உடைப்பு ஏற்பட்ட காலத்திலே. அங்கு சொல்கிற காரணங்களைப் பார்க்கின்றபோது, அந்த இடத்திலேயிருந்து ஒரு துணை ஆறாகவே, அந்தப் பகுதி வெறும் நிலப் பகுதியாக இருக்கிறது, வயல் பகுதி, வடிகால்கள் இருக்கின்றன, அதிலேயிருந்து கொண்டுபோய் கடலிலே சேர்ப்பதற்குரிய ஒரு புதிய ஆறே வெட்டினால் இந்த மாதிரி வெள்ளம் ஏற்படுகிறபோது, மிகப் பெரிய சேதங்கள் ஏற்படாத வகையிலேயும் மற்ற இடங்களில் உடைப்பு ஏற்படாத வகையிலேயும் தடுப்பதற்குரிய வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகள் பலரும் அந்தக் கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிகிற காரணத்தினாலே, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்படுமா? இதைப்போலவே பல இடங்கள் இருக்கின்றன. எங்கள் தொகுதியிலே பாமினியாறு, கோரையாறு இந்த மாதிரியான வெள்ளச் சேதத்திற்கு ஆட்படுகிறது. அதற்கும் ஒரு துணை ஆறு என்ற முறையிலே ஏற்படுத்தினால், அது நேராகக் கடலுக்குச் செல்கிறபோது, இந்த மாதிரியான வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. உலக வங்கி நிதி உதவிகள் எல்லாம் வருகிற காரணத்தினாலே இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டுவதற்கு பொதுப் பணித் துறை முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் சொல்வார்கள் தன் இலைக்குப் பாயசம் வேண்டும் என்றால் பக்கத்து இலைக்குப் போடுங்கள் என்று. அதுமாதிரி கொள்ளிடத்தைக் கேட்டுவிட்டு, அவருடைய தொகுதியிலே இருக்கிற பாமினியாறு, கோரையாறு திட்டத்திற்கு வருகிறார். பாமினியாறு, கோரையாறு திட்டம் எங்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது கொள்ளிடக் கரையிலே மற்ற பகுதிகள் மிகு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூடத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அவற்றை maintenance-லே எடுப்பதாக உத்தேசம்.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீர் திருவள்ளூர் மாவட்டத்திலே கடலோரப் பகுதியிலே 20 கிலோ மீட்டர் வரை நீர் அதிகமாக உறிஞ்சி எடுத்த காரணத்தினாலே, கடல் நீர் அதிகமான அளவு அங்கே seepage water-ஆக வந்து கொண்டிருக்கிறது. அதனாலே, கொசஸ்தலை ஆற்றிலும், ஆரணி ஆற்றிலும் நிறைய தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 163. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**163—**

### பேருந்து வசதி

***2148—திரு. டி. மூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்பேட்டிலிருந்து திருப்போரூர் வழியாக பாண்டிச்சேரிக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு உத்தரவிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) கோயம்பேட்டிலிருந்து திருப்போரூர் வழியாக பாண்டிச்சேரிக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசு



2008 ஏப்ரல் 28]

போக்குவரத்துக் கழகம் காஞ்சிபுரம் மண்டலத்தால் பரீட்சார்த்தமாக சில நாட்கள் பேருந்து இயக்கப்பட்டு பயணிகள் பயன்பாடு மிக மிகக் குறைவாக இருந்ததால் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கிட தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பரீட்சார்த்தமாக இயக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதிலே மிகக் குறைவாக வசூலானது என்று சொன்னார்கள். ஏனென்று சொன்னால், அங்கு சென்னையிலே உலக அளவிலே பிரசித்திபெற்ற முக்கியமான Information Technology அதிகமாக இருக்கிற பகுதி அந்தப் பகுதி. எனவே, நாம் சென்னையிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலை வழியாக அந்தப் பேருந்துகளை இயக்குகிறபொழுது பாண்டிச்சேரி, கடலூர் மாவட்டத்தில் இருக்கிறவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்கிற வாய்ப்பு இருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் அந்தப் பகுதியில் ஏறக்குறைய 80 கிலோ மீட்டர் நீளத்திற்குச் செல்கிற வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், திருப்போரூர் முருகன் கோயில், மாமல்லபுரம், கல்பாக்கம் பகுதிகள் அந்தச் சாலையிலே இருக்கிற காரணத்தினாலே, ஏராளமான பயணிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, கூடுதலாக அங்கு பேருந்துகள் இயக்குவதற்கும், அதேபோன்று மாமல்லபுரத்திலிருந்து திருவண்ணாமலை, திருவள்ளூர் போன்ற மாவட்டத் தலைமையிடங்களுக்கு நேரடிப் போக்குவரத்து இல்லை. எனவே, அதை இயக்குவதற்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேட்டிலிருந்து புதுச்சேரிக்கு திண்டிவனம் வழியாக 20 பேருந்துகள் 80 நடைகள் சென்று வருகின்றன. மேலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புறநகர்ப் பகுதியை விரிவுபடுத்தவேண்டும்

[2008 ஏப்ரல் 28

என்பதற்காகத்தான் 40 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரம் பேருந்துகள் செல்லலாம் என்று உத்தரவிட்டு, அதன் காரணமாக தாம்பரம் பகுதியிலிருந்து கேளம்பாக்கம் வழியாக மாமல்லபுரத்திற்கும், அந்தப் பகுதியில் இருக்கிற திருக்கோயில்கள் எல்லாம் பயன்பெறத்தக்க வகையிலே நிறைய பேருந்துகள் அங்கிருந்து கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல சென்னையிலிருந்து புதிய ஒரு திட்டமாக பட்டினப்பாக்கம் பேருந்து நிலையம் அல்லது திருவான்மியூர் பேருந்து நிலையத்திலிருந்து தொடர்ந்து பாண்டிச்சேரிக்கு நேரிடையாகவே பேருந்துகளை இயக்குவதற்குரிய முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அடையாறு பேருந்து நிலையத்திலிருந்து அதை இப்போது பரீட்சார்த்தமாக இயக்கிக்கொண்டிருக்கிறோம். எனவே, பேருந்து விடுவதிலே எங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஏற்கெனவே பார்த்தால், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்து வசதி நம்முடைய முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. அதேபோல, திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சென்னைக்கு நேரடியாக பேருந்துகள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது அங்கு I.T. Sector அதிகமாக இருப்பதாகவும், பயனாளிகள் நிறைய வருவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். விரைவில் அதைப்பற்றி ஆய்வு செய்து, நேரடியாகப் பேருந்து விடுவதற்கு நிச்சயமாக அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூரிலிருந்து, அனுமந்தபுரம்-சிங்கப்பெருமாள் கோவில் வழியாக செங்கல்பட்டுக்கும், திருப்போரூரிலிருந்து மறைமலை நகருக்கும், நகரப் பேருந்துகள் விடுவெதற்கான முயற்சிகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2008 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசியம் ஏற்படுமானால் அதைப்பற்றியும் பரிசீலித்து, நிச்சயமாக நகரப் பேருந்து விடப்படும். ஏனென்றால், சென்னை மாநகரத்தினுடைய பேருந்து வசதி என்பது, இப்பொழுது 3,000 பேருந்துகள்வரை வந்திருக்கின்றோம். இந்த ஓராண்டு காலத்தில், கிட்டத்தட்ட 400 புதிய வழித்தடங்களிலே 1,000 புதிய பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகருக்கு மட்டும் 1,000 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, பேருந்து பற்றாக்குறை என்பது அர்த்தமல்ல. பயணிகள் பயன்பாடு இருக்குமானால், நிச்சயமாகப் பேருந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் அரசு வழங்கக்கூடிய இலவச Bus pass நகரப் பேருந்துகளுக்கு மட்டுமல்லாமல் புறநகர்ப் பேருந்துகளிலே — Mofussil bus-களிலே வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று ஏற்கெனவே சென்ற ஆண்டு வினா எழுப்பியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆகவே, வரும் கல்வியாண்டிலாவது அரசினுடைய அனைத்துப் பேருந்துகளிலும் இலவச Bus pass வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கை முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசித்தான் அதற்குச் சரியான பதில் சொல்ல முடியும்.

மேலும், நகரப் பேருந்துகளில் மட்டும் இலவச Bus pass வழங்குவதற்குக் காரணம், அதில் பேருந்துக் கட்டணம் குறைவு. மேலும், காலை நேரத்திலே பயணிகள் நகரப் பேருந்துகளில் செல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால். நீண்டதூரப் பேருந்துகளை நிறுத்தி நிறுத்தி செல்வது என்பது இயலாத காரியம். எந்தப் பகுதியிலே நகரப் பேருந்து இல்லையோ அந்தப் பகுதியிலே மட்டும் புறநகர்ப்

[2008 ஏப்ரல் 28

பேருந்துகளிலே பயணச் சீட்டு அனுமதிக்கப்படுகிறது. மேலும், இதைப்பற்றி விவரம் வேண்டுமானால் முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு தக்க பதில் உங்களுக்குத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையிலேயிருந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை ஒரு மகளிர் நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று நான் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது கேட்டிருந்தேன். அப்பொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை அந்தப் பேருந்து இயக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது அந்த மகளிர் நகரப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மானாமதுரையிலிருந்து சென்னை வருவதற்கு இப்பொழுது எந்தப் பேருந்து வசதியும் கிடையாது. Railway line-ம் இப்பொழுது பிரித்து broad gauge வேலை நடந்துகொண்டிருக்கின்றது. அதனால், நாங்கள் சென்னைக்கு வருவதற்கு மதுரை வந்துதான் வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால், மானாமதுரையிலேயிருந்து ஒரு சொகுசுப் பேருந்தை சென்னைக்கு இயக்க அரசு முன்வருமா என்பதை அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு குடிசை மாற்று வாரிய அமைச்சர் அவர்கள்கூட மானாமதுரையிலிருந்து சென்னைக்கு பேருந்து வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறீர்கள். முதலிலே, மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு நகரப் பேருந்தும், விரைவிலே புதிய வண்டிகள் வருகின்றபோது மானாமதுரையிலிருந்து நேரடியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்தும் நிச்சயமாக விடப்படும்; அதுவும், விரைவிலேயே விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.



2008 ஏப்ரல் 28]

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு போக்குவரத்துக் கழகத் தொழிலாளி என்கின்ற அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களின் தந்தையாக விளங்கக்கூடிய தலைவர் கலைஞர் அரசு, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி சம்பள உயர்வு arrears அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோதே, arrears உங்களுக்கு வருவதற்கு இரண்டு, மூன்று மாத காலம் தாமதமாகும் என்று சொல்லித்தான் ஏற்படுத்தப்பட்டது. மே மாதம் 1-ஆம் தேதி தொழிலாளர் தினம் என்ற காரணத்தால், அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அவர்களுக்கு arrears தொகை வழங்குவதற்குரிய நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக, அரசாங்கத்திலிருந்தே நேற்று முன்தினம் கிட்டத்தட்ட 86 கோடி ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ளபடி அத்தனை arrears-ம் 30 ஆம் தேதி அவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான வேடசந்தூரிலேயிருந்து, நாகூருக்கு பேருந்து சென்று கொண்டிருந்தது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் இயக்கப்படவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட கோரிக்கை வைத்ததுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே பேசப்பட்டும்கூட காலம் தாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக அப்பேருந்தினை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் வழிசெய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி சென்னைக்கு கடந்த ஆண்டு ஆயிரம் புதிய பேருந்துகளும், இந்த ஆண்டு ஆயிரம் புதிய பேருந்துகளும் என்று முதலமைச்சர் அவர்கள் வழங்கியதுபோல, மதுரையிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்திற்கு, அதனுடைய பழைய பேருந்துகளை மாற்றுவதற்காக அவர்களுக்கு மட்டும் தனியாகவே, ஆயிரம் புதிய பேருந்துகளை இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, விரைவில் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *164*, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை. மாறாக, திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

164—

## கட்டட வசதி

***2741—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரூர் துணை சுகாதார நிலையம் தற்போது குடும்ப நலத் துறைக்குச் சொந்தமான அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, பேரூர் துணை சுகாதார நிலையத்திற்கென புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.



2008 ஏப்ரல் 28]

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதிக்குட்பட்ட சுகுணாபுரம், குனியமுத்தூர் ஆகிய இரண்டு இடங்களில், துணை சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே, இந்த அரசு கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட மேடூர், வெல்ஸ்புரம், காலனிபுதூர், குஜகனூர், சாஸ்திரி நகர், வடவள்ளி, சென்னம்பாளையம், பெரியகுமாரபாளையம் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையம் கட்டுவதோடு, சிறுமுகை, வீரபாண்டி ஆகிய பேரூராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் *8,706* துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் *6,510* மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. *2,196* துணை சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன. *234* துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தமாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக, நபார்டு வங்கிமூலம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. அந்நிதியுதவி வந்தால், இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னால், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், வருகின்ற தொழிலாளர்கள் தினமான மே தினத்தையொட்டி, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்க வேண்டிய arrears தொகையை . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, என்ன?

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை, இல்லை, நன்றி சொல்லிவிட்டு, என்னுடைய துணைக் கேள்விக்குப் போகிறேன். அனுமதியுங்கள். ஒரே நிமிடம்தான். ஆகவே, வழங்குவதாக அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய துணைக் கேள்விக்குப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றியைத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றும் கேட்கவில்லை.

ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புவது, இந்த சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுகின்றபோது, அதிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களும் தங்குவதற்குரிய வீட்டுவசதியோடு, quarters வசதியோடு அந்தக் கட்டடங்கள் கட்டப்படுமா? ஏனென்றால் அப்படி இல்லாத காரணத்தால் பல மருத்துவர்கள் இரவு நேரங்களில் அங்கே தங்குவதில்லை. அவசரமாக டெலிவரியோ அல்லது மற்ற கேஸ்கள் என்று வரக்கூடிய பொதுமக்கள் இதனால், பல பாதிப்பிற்குள்ளாகுகிற காரணத்தினால், மருத்துவர்கள் அங்கேயே தங்குகிற அடிப்படையில் வீட்டுவசதியோடு, அந்தப் புதிய கட்டடங்கள் சுகாதாரத் துறைமூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களில், இப்போது 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்த ஆண்டு கட்டுவதற்கு நிதிநிலை அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி சட்டமன்ற தொகுதி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குரால்நத்தம் ஊராட்சியிலே உள்ள துணை சுகாதார நிலையக் கட்டடம், மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. அந்தக் கட்டடம் பயன்பாட்டிற்கு இல்லாத நிலையில் இருக்கிறது. அதிலே புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின்மூலமாக கடன் கோரப்பட்டுள்ளது. அது வந்தவுடன் நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ராசிபுரத்திலே போதமலை கிராமத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது அது கள்ளங்குளம் என்ற ஊராட்சியிலே இயங்கி வருகிறது. ஏனென்று கேட்டால், போதமலைக்கு நடந்து செல்கின்ற பாதையாக இருக்கிற காரணத்தால், அங்கே சாலை வசதி இல்லாத காரணத்தால், அது தற்காலிகமாக நம்முடைய கள்ளங்குளம் பகுதியிலே இயங்கி வருகிறது. அதற்கு, ஊர் பொது மக்கள் எல்லாம் சேர்ந்து நிலமும் அரசுக்கு வாங்கிக் கொடுத்துள்ளார்கள். அந்த இடத்திலே நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

[2008 ஏப்ரல் 28

165—

## ஆக்கிரமிப்புகள்

***27427—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, மேல்பட்டாம்பாக்கம் சிவலோகநாதர் கோயில் நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, மேல்பட்டாம்பாக்கம் சிவலோகநாதர் கோயில் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, மேல்பட்டாம்பாக்கத்திலுள்ள சிவலோகநாதர் கோயிலுக்கு சுமார் 9 ஏக்கர் அளவுக்கு நிலம் சொந்தமானதாக இருக்கிறது. அந்த நிலத்தை பல்வேறு பிரிவினர்கள் உபயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலத்தை பொதுமக்களுடைய தேவைக்கேற்ப, அந்தக் கோயிலுக்கு வருமானம் வருவதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுத்து, முறைப்படுத்துமா என்பதை அமைச்சர் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மேல்பட்டாம்பாக்கம் அருள்மிகு சிவலோகநாதர்சுவாமி திருக்கோயிலுக்கு நன்செய் நிலங்கள், 3.15 ஏக்கரும், புன்செய் நிலங்களாக 6.12 ஏக்கர் நிலமும், அதேபோல நத்தம் நிலமாக 0.45 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 9.72 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மேற்படி நிலங்களில் நன்செய் நிலம் 3.15 ஏக்கரும், புன்செய் நிலத்திலே 3.52 ஏக்கரும், ஆக மொத்தம் 6.67 ஏக்கர் நிலம் ஆண்டுதோறும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு, முறையான வருவாய் வந்துகொண்டிருக்கிறது. மீதி இருக்கக்கூடிய 3.05 ஏக்கர் புன்செய் நிலங்கள் மற்றும் நத்தம் நிலங்கள் மனைப் பகுதிகளாக உள்ளன. இவற்றில் 1.28 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர் சமூகத்தைச் சார்ந்த மக்களால் கூட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடிசை வீடு கட்டி வசித்து வருகின்றார்கள். மேற்படி நபர்களை அரசாணை நிலை எண் 340, நாள் 6-8-2007-ன்படி கூட்டு ஆக்கிரமிப்பை முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 0.57 சென்ட் புன்செய் நிலத்தை திருக்கோயில் வசம் ஒப்படைக்கக்கோரி பண்ருட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு, ஓ.எஸ். நம்பர் 207/99-ன்படி வழக்கு தொடரப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது.



2008 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6.67 ஏக்கர் நிலம் வருடந்தோறும் குத்தகைக்கு விடுவதாகச் சொன்னார்கள். அந்தக் குத்தகை சரியாக வசூலிக்கப்படுகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகின்றேன். மேலும், அந்த 1.28 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரை சுமார் 90 ஆதி திராவிடர் குடும்பங்களைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகள் 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியிலே குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு, கூட்டு ஆக்கிரமிப்பை முறைப்படுத்துகின்ற திட்டத்தின்கீழ் அந்த நிலத்தை ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒப்படைத்து, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய

வினாவிற்குப் பதில், 6.67 ஏக்கர் நிலம் என்பது, ஆண்டுதோறும் பொது ஏலத்தில் விடப்படுகின்ற ஒன்று. அது ஒரு தொடர் குத்தகை அல்ல. ஓராண்டு ஏலம் விடுவது என்றால், அவர் ஏலத் தொகையைக் கட்டிவிட்டுத்தான் அதைப் பயன்படுத்த இயலும். ஆகவே, 6.67 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரையில், முறையாக வசூல் நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய மற்றொரு வினா, 1.28 ஏக்கர் நிலத்தை ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் கூட்டு ஆக்கிரமிப்பு முறையிலே ஆக்கிரமித்து அவற்றிலே குடிசை வீடுகளை அமைத்திருக்கின்றார்கள். இதற்கு கடந்த 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலோடு, 30 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருக்கின்றவர்கள் அடிப்படை வசதிகளான மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வசதி போன்ற வசதிகளைப் பெறவேண்டுமென்பதற்காக, அந்த இடங்கள் திருக்கோயிலுக்கு தேவையற்ற இடங்களாக, உபயோகத்திற்கு தேவையில்லாத இடங்களாக இருந்தால், அவற்றை 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருக்கின்றவர்களுக்கு, ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே அவற்றை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்த வகையிலே 21 ஆயிரம் நபர்கள், கூட்டு ஆக்கிரமிப்பு சலுகையின்கீழ் பயன்பெற்றிருக்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப்போல, துறையின் சார்பிலே பட்டா வழங்குவது என்பது இயலாது. தேவைப்பட்டால் ஆதி திராவிட அமைப்பின் சார்பிலே இருக்கக்கூடிய அந்தத் துறையின்மூலமாக விண்ணப்பித்தால் பரிசீலிப்பதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, அருள்மிகு பாகல்பட்டி சென்றாயப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலம், பெரியார் பல்கலைக்கழகத்திற்கு எதிரிலே நீண்டநாட்களாக தனியார் ஒருவரின் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அவருடைய பெயரிலே இருந்து வருகின்றது. இதை இந்து சமய அறநிலையத் துறையின் பெயருக்கே மாற்றம் செய்து, அந்த நிலத்தை அரசே பயன்படுத்துமா, இயக்குமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த நிலம் பற்றிய கேள்வியை ஏற்கெனவே இந்தப் பேரவையில் எழுப்பியிருக்கின்றார் என்று நினைக்கின்றேன். அவருக்கு உரிய பதிலும் வழங்கப்பட்டிருக்கின்றது, உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. தமிழரசு, அவ்வளவுதான், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம், பண்ருட்டி, கடலூர் போன்ற இடங்களில் அரசுக்குச் சொந்தமான, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களை, Walmart, Reliance போன்ற தனியார் நிறுவனங்களுக்கு, சில உள்ளூர் தாதா, ரவுடிகள் மூலம் Syndicate form செய்துகொண்டு, அரசு ஏலம் விடுகின்றபோது அவர்களுக்குத் தாரை வார்க்கின்ற முறை கடலூரில் நடந்தேறியிருக்கின்றது. 30 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை வெறும் 5 கோடி ரூபாய்க்கு ரவுடிக் கும்பல் ஏலம் எடுத்ததாகத் தகவல் வருகின்றது. எனவே அதை மீண்டும் அரசுடைமையாக்க இந்து சமய அறநிலையத் துறை முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த இடம் 5 கோடி ரூபாய்க்கு மேலே பொது ஏலத்தில் விடப்பட்டது. குறிப்பாக, அதன் மதிப்பீடு ஒரு கோடி ரூபாய் என்பது மதிப்பிடப்பட்டு, நீதிமன்றத்தின் மூலமாகத்தான் ஏலம் நடத்தப்பட்டது. அதிலே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுதுதான் தெரிவித்திருக்கின்றார். நீதிமன்றத்தின் மேற்பார்வையில், துறையின் சார்பிலேதான் அங்கே ஏலம் நடந்ததே தவிர, அதிலே எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெற்றதற்கு வாய்ப்பில்லை. நீதிமன்றம் நிர்ணயம் செய்த அடிப்படைத் தொகையே

2 கோடி ரூபாய். ஆனால் 5.5 கோடி ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டிருக்கின்றது. ஆகவே இதிலே முறைகேடுகள் நடைபெற வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

166—

**சாலை வசதி**

***22937—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வத்தல்மலை, பால்சிலம்பு ஆகிய கிராமங்களுக்குச் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வத்தல்மலையின்மீது பெரியூர், பால்சிலம்பு, கருங்கல்லூர் என 7 குக்கிராமங்கள் இருக்கின்றன. இங்கே 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அங்கே இரண்டு நடுநிலைப் பள்ளிகளும், இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. அங்கே துணை சுகாதார நிலையமோ, கால்நடை மருத்துவமனையோ இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. மருத்துவ வசதிக்காக, அங்கே பிரசவ நேரத்திலே, தாய்மார்களை ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் தொட்டில் கட்டி எடுத்துவரவேண்டிய ஒரு அவல நிலை, அதேபோல மாணவர்களும் அவர்களுடைய படிப்பை எட்டாம் வகுப்போடு நிறுத்திக்கொள்கின்ற ஒரு அவல நிலை, மருத்துவ வசதி இல்லாமல் கால்நடைகள் இறந்துகொண்டிருக்கிற ஒரு அவல நிலை, தொடர்ந்து





நீடித்துக்கொண்டிருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதியினுடைய மக்கள் சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவு செய்து ஏழு கிலோ மீட்டர் ... *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். ரோடு போடவேண்டுமென்று கேட்கிறீர்கள், அவ்வளவுதானே?

**திரு. இல. வேலுசாமி:** மண் சாலையை அவர்களே அமைத்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், மழைக்காலங்களில் ஓடைப் பகுதியில் வருகின்ற மழைநீரானது அந்தச் சாலையை அடித்துச் சென்றுவிடுகிறது. இதனால், இன்றைக்கு அந்தப் பகுதியிலே, சாலை வசதி இல்லாமல் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏழு கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோருகின்ற பால்சிலம்பு வரை 5.5 கிலோ மீட்டர் நீளம், சாலை அமைக்கவேண்டும். அதற்கு மூன்று காப்புக் காடுகள், உரல்சேரஹள்ளி காப்புக் காட்டுக்குள்ளும், வத்தல்மலை காப்புக் காட்டுக்குள்ளும், அதேபோல, மூக்கனூர் காப்புக் காட்டுக்குள்ளும் மூன்றரை கிலோ மீட்டர் நீளம் அந்தக் காப்புக் காடுகளுக்குள் செல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு, மத்திய அரசினுடைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நாம் அனுமதி பெறவேண்டும். அதற்கு அனுமதி பெறவேண்டுமென்றால், நான் பலமுறை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன், என்ன நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமென்று. அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அதைப்பற்றி எடுத்துச் சொல்லி, உரிய படிவத்திலே, அதற்கான வேண்டுகோளை வனத் துறைக்கு அனுப்புவார்களேயானால், அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அந்த அனுமதியைப் பெற்றதற்குப் பின் அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். ஆனால், இந்த ஆண்டிலேயே அதை நிறைவேற்றுவதற்கு நாங்கள் திட்டம் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலுள்ள கம்மம்பட்டி ஊராட்சியானது, ஏறத்தாழ 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள், ஆறாயிரம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்தப் பகுதியானது, முழுக்க முழுக்க தருமபுரி மாவட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. காரணம், இடையிலே 3 கிலோ மீட்டர் அளவிற்கு, வனப் பகுதியிலே அந்த நடைபாதை இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அந்த ஒட்டுமொத்த மக்களும் அரசு அலுவலகங்களுக்கோ அல்லது வேறு வியாபாரத்திற்கோ அல்லது மருத்துவமனைகளுக்கோ செல்லவேண்டுமென்று சொன்னால் 30 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டிய ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்திலிருந்து, மலையூர் காட்டிலிருந்து, பதிகம் வரை மூன்று கிலோ மீட்டர் அளவிற்கு மண் சாலை மட்டும் அமைத்துக் கொடுத்தால்கூட, இப்போது அந்த மக்கள் தருமபுரிக்கு வருவதற்கு உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இதைச் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளிலேயிருந்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அடிப்படை வசதிகளை அமைத்துத்தர வேண்டுமென்பதிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், உறுதியாகச் செயல்படுபவர்கள். அவர்களுடைய ஆட்சியிலேதான் கிராமச் சாலைகள் அமைக்கப்பட்டு, 1,500 கிராம மக்கள் வாழ்கின்ற இடத்திற்கு இணைப்புத் தரவேண்டுமென்றும், அதன் பின்னாலே ஆயிரம் மக்கள் என்று மாற்றப்பட்டு, அதன் பின்னாலே 500 மக்கள் என்று மாற்றப்பட்டு, அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் தரவேண்டுமென்று, தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்த அளவில், இந்தச் சாலைகள் அமைப்பதிலே,





நாங்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கிக்கொண்டிருக்கிறோம். 2006-2007-லே 7.32 எக்டேர் நிலம் அதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, 2007-2008-லே 46.83 எக்டேர் நிலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து, இதுபோன்று -- மத்திய அரசினுடைய வனப் பாதுகாப்புச் சட்டம் மிகக் கடுமையானது -- அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு எங்கெங்கு சாலைகள் அமைக்கமுடியுமோ அங்கெங்கெல்லாம் இந்த அரசு செய்யும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைவாசல் தொகுதியில், கெங்கவல்லி வட்டாரப் பகுதியில், பச்சமலையிலே 33 கிராமங்கள் மலைப் பகுதிகளில் இருக்கின்றன. அந்த மலைப் பகுதிகளுக்குச் செல்வதென்றால், திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் வழியாக மலைக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதனால் நேரடியாக கூடமலை, நரிப்பாடி, நிலங்கரை வழியாக மாயம்பாடி, கொடுங்கல், சேத்தகம், செம்பேறி பகுதிகளுக்குச் செல்ல, புதிய சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரே, தன்னுடைய கேள்வியிலேயே குறிப்பிட்டிருக்கிறார், திருச்சி மாவட்டத்திலே உள்ள உப்பிலியாபுரம் சென்று அதன் பின்னாலே டாப்செங்காட்டுப்பட்டிக்குச் செல்வதற்கு சாலை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதன் மிக அருகிலேதான் அந்த உப்பிலியாபுரம் என்று அவர் குறிப்பிடுகின்ற இடம் தம்பம்பட்டியிலிருந்து இருக்கிறது. ஆனால் சாலைகளே இல்லாத பல இடங்களுக்குத்தான் சாலை அமைப்பதற்காக இந்த அரசு முயன்று கொண்டிருக்கிறது. அவர் கேட்கிற அந்தப் பகுதியிலே சாலை அமைக்க வேண்டுமேயானால் செங்குத்தான மலைப் பகுதி. கொண்டை ஊசி வளைவு கொண்ட அந்தச் சாலைகளை அமைப்பதற்கு அதிகமான நிலம் தேவைப்படும். இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்ட

வேண்டுமேயானால் அதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவையெல்லாம் பெற வேண்டியிருக்கிற காரணத்தால், அதைப் பற்றிப் பரிசீலித்து, அந்தச் சாலை அமைப்பதற்கு ஏதுவாக இருந்தால் அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலைப் பகுதியில் வனப் பகுதிக்குச் சொந்தமான இடங்களில் சாலை வசதி ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய அடிப்படையில்தான் போட முடியும். அதற்கு அனுமதி வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓராண்டு காலம், அல்லது இரண்டாண்டு காலம் வனப் பகுதியில் மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழ்கிற இடங்களுக்கு அனுமதியை நீங்கள் துறையின்மூலமாக வாங்கி வைத்துவிட்டால் அந்தச் சாலைகள் போடுவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ, அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவோ சாலை போடுவது என்று சொன்னால் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிதி செலவழிக்கப்பட வேண்டும். அங்கிருந்து D.F.O.-மூலமாகவோ, Conservator-மூலமாகவோ அல்லது C.C.F.-மூலமாகவோ அனுமதியைப் பெற வேண்டுமென்று சொன்னால், அந்தக் காலம் நீட்டிக்கப்படுகிறது. சாலை வசதி செய்வதற்கு காலதாமதம் ஆகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் வாயிலாக வனப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய அனுமதியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீங்களே அந்த அனுமதியைப் பெற்றுவிடுவீர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. .உதயசூரியன், short-ஆகக் கேளுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** முக்கியமான கேள்வி தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியம்தான், எல்லாமே முக்கியம் தான். Short-ஆகக் கேளுங்கள்.





**திரு. தா. உதயசூரியன்:** ஆகவே வனத் துறையின் மூலமாக இந்த அனுமதியைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களாக –suo-motu– அதைப்போன்ற நிகழ்வுகளை நடத்த முடியாது. பயன்பாட்டுத் துறை user agency தங்களுக்கு வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்க வேண்டும். அந்த வேண்டுகோளை விடுப்பதற்கு முன்பு எவ்வளவு நிலம் தேவையோ அந்த நிலத்திற்கு இரு மடங்கு நிலத்தை நாங்கள் தருகிறோம் என்று அவர்கள் அதிலே ஒப்புதல் தரவேண்டும். அந்த இரண்டு மடங்கு நிலத்திலும் மரம் வளர்ப்பதற்கு, மரத்தை வளர்த்து குறிப்பிட்ட ஆண்டுகள் பாதுகாப்பதற்கான தொகையைக் கட்ட வேண்டும். அதன் பின்னாலே அந்த நிலத்திற்கான செலவையும் அவர்கள் என்ன மதிப்பீடு, அதாவது ஒரு எக்டேருக்கு 5.8 இலட்சம் ரூபாய் முதல் 9.2 இலட்சம் ரூபாய் வரை நில்த்திற்கேற்ப அரசு நிர்ணயித்திருக்கிறது. அந்தத் தொகையைச் செலுத்த வேண்டும். அதன் பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த வன நிலத்தைத் தவிர வேறு நிலம் இல்லை என்ற சான்றிதழை அவர்கள் தரவேண்டும். இப்படிப்பட்ட அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அதைப் பெற்றதற்குப் பின்பு இயற்கையாக வளர்ந்த மரங்கள் இருக்குமேயானால் அந்த மரத்தை வெட்டுவதற்கும் அந்த மரத்தினுடைய தொகையையும் செலுத்த வேண்டும். இதுவே சரணாலயப் பகுதியாக இருக்குமேயானால் உச்ச நீதிமன்றத்தினுடைய அதிகாரம் பெற்ற மத்திய அதிகாரக் குழுவினுடைய உத்தரவைப் பெற்று அதன் பின்னாலே மத்திய உச்ச நீதிமன்றம் சென்று அதனுடைய அனுமதியைப் பெற வேண்டும். இத்தனை நிபந்தனைகள் இல்லையென்று சொன்னால் வனப் பகுதிகள் அழிந்துவிடும் என்ற காரணத்தினாலேதான் 1980-லே இந்த வனப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இத்தனை நிபந்தனைகளுக்குட்பட்டு இதைப் பெறுவதிலே இருக்கிற நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும், தேவைப்படுகின்ற இடத்திலே இந்த அரசு அவற்றையெல்லாம் உரிய முறையிலே மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2006-2007-லே 67.19 கிலோ மீட்டருக்கும், 2007-2008-லே 100 கிலோ மீட்டருக்கும் இதுபோன்ற அனுமதி பெற்றுத் தந்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 167, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**167—**

### மாநில மகளிர் ஆணையம்

***23036—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மகளிர் ஆணையத்தைத் தன்னாட்சி அமைப்பாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்குச் சட்டப்பூர்வமான அதிகாரம் அளிப்பதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. முதற்கட்டமாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையைப் பெற்று சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலே 22-4-2008 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தாமதமாக வந்தாலும், நிதிநிலை அறிக்கையிலேயே தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்து, மகளிர் ஆணையத்திற்கான தன்னாட்சி அந்தஸ்தை உருவாக்குவதற்கான சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில், ஆணையத்தினுடைய பரிந்துரைகளை சட்டமன்றத்தில் வைத்து, எதிர்காலத்தில் விவாதிக்கப்படுமா? அவ்வாறு விவாதிக்கப்பட்டு எடுக்கப்படும் முடிவுகளை, பெண்கள் ஆணையம் நிறைவேற்றுவதற்கான காலம், அதற்கான வரையறை நிச்சயிக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 28]

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே, இந்தச் சட்டம் விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது விரிவாக விவாதிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டமுன்வடிவில் பல்வேறு சிவில் உரிமை உள்பட வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, இந்தப் பெண்கள் ஆணையம் செயல்படுகின்றபோது, பெண்களுக்கு எதிரான வழக்குகளைப் பதிவு செய்வதற்கு, விசாரிப்பதற்கு, தனிக் காவல் பிரிவு உருவாக்கப்படுமா? உதாரணமாக, போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, இவற்றிற்கெல்லாம், தனி ஆய்வாளர், துணை ஆய்வாளர் இருப்பதுபோல, தமிழகப் பெண்கள் ஆணையத்திற்கும் வழக்குகளை விசாரிப்பதற்காகக் காவல் பிரிவு உருவாக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் ஆணையத்திற்கென தனியாக காவல் பிரிவு ஒன்றை உருவாக்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், கடந்த ஒரு வருடமாக சமூக நலத் துறை, மகளிர் ஆணையத்தின் வாயிலாக பல மாவட்டங்களுக்குச் சென்று கருத்தரங்கங்கள், விழிப்புணர்வு முகாம்கள், குறிப்பாக காவல் துறையோடு இணைந்து நடத்திக்கொண்டு வருகின்றன. முக்கியமாக மகளிர் காவல் நிலையங்களில், பெண்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளான வரதட்சணை, குடும்ப வன்முறை போன்ற பிரச்சினைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்ற பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

168—

## கால்நடை மருத்துவமனை

***32491—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்து சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்கும் பணி 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் இம்மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை 32 ஊராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவமனையாகும். அங்கே போதிய கட்டட வசதி இல்லை, சுற்றுச் சுவர் வசதி இல்லை என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தி மேம்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டும். அதோடு அங்கே இருக்கக்கூடிய மருத்துவர், அங்கே நிர்வாகப் பொறுப்பையும் கிராம ஊராட்சிகளில் உள்ள மருந்தகங்களுக்குச் செல்ல வேண்டிய காரணத்தால், மேலும் நிரந்தரமாக, கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் 220 கால்நடை மருத்துவர்கள் அரசு தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் நிரந்தரமாக மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று திருத்துறைப்பூண்டி அருகில் 10 கி.மீ. தூரத்தில் உள்ள எழிலூர் ஊராட்சி, நுணாகாடு ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றால், திருத்துறைப்பூண்டி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே எழிலூர் ஊராட்சியில் ஒரு கிராம கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் புதிய மருத்துவ நிலையம் அமைக்க இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச் சுவர் எழுப்பப்படுமா? என்னுடைய மீன்சுருட்டி கால்நடை மருந்தகத்தில் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. அங்கு பாதுகாப்பற்ற நிலைமை உள்ளது, அதற்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கப்படுமா? அங்கு போதிய உயிர் காக்கும் மருந்து இல்லை. குறிப்பாக மூன்று மாதங்களுக்கு முன் என்னுடைய கறவை மாட்டுக்கு சரியான உயிர் காக்கும் மருந்து இல்லை. எனவே, நானே கடையில் வாங்கிக் கொடுத்து அதற்குப் போட

வைத்திருக்கிறேன். அதனால் என்னுடைய தொகுதிக்குட்பட்ட மருந்தகங்களுக்கு உயிர் காக்கும் மருந்துகளும், அதேபோல் சுற்றுச் சுவரும் அமைத்துக் கொடுக்கப்படுமா என்று தங்கள்மூலமாக கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மீன் சுருட்டி பகுதியில் உள்ள அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்று கூறினார்கள். சுற்றுச் சுவர் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்து கட்டிக்கொள்ளலாம். ஏனென்றால் சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அதுபோல உயிர் காக்கும் மருந்துகள் எல்லாம் தட்டுப்பாடாக இருக்கின்றன என்று கூறினார்கள். அதுபற்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தமிழகத்தில் மருந்து தட்டுப்பாடு இல்லை என்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. ஒருவேளை தாங்கள் குறிப்பிடும் அந்த மருந்து, துறைமூலமாக வழங்கப்படுகிறதா? என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் காட்டாத்துறையில் அமைந்திருக்கக்கூடிய உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைப்பதற்காக 3 சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து வாகனம் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அந்த வாகனம் சுமார் 3 மாத காலமாக உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநர் இல்லாத. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சுற்றுச் சுவர் கட்டுவது சம்பந்தமானது சார்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இது கால்நடை மருத்துவமனை பற்றியது சார். நடமாடும் மருத்துவமனை பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஓட்டுநர் இல்லாத காரணத்தினால் அந்த வாகனம் அங்கே நின்று கொண்டிருக்கிறது. ஓட்டுநரை நியமித்து அந்த வாகனத்தை இயக்க





அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடமாடும் கால்நடை மருந்தகம் அவசியமாகத் தேவை, மலைப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அது தேவை என்று கூறி அதற்காக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து வாகனமும் வாங்கப்பட்டுள்ளது. இந்தத் துறை மானியக் கோரிக்கையில் அதற்கான பதிலை அளிக்கலாமென்று இருந்தேன். மேற்படி நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். அதனால் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**169—**

**பயிற்சி**

***35103—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாணவ, மாணவியருக்கு மத்திய மற்றும் மாநிலப் பணிகள் தேர்வுகளுக்கான பயிற்சியை தாட்கோ மூலம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டத் தலைநகரிலும், தாட்கோ மூலம் மத்திய மாநிலப் பணித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தாட்கோ மூலம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றனவா? எத்தனை இடங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? எந்த ஆண்டு முதல் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? அதற்காக செலவிடப்பட்ட நிதிகள் எவ்வளவு? இந்திய ஆட்சிப் பணியில் இந்த ஆண்டு நிர்வாகத் தேர்வுக்குச் சென்றவர்கள் எத்தனைபேர்? மேலும், சென்னை அண்ணா நகரில் இருப்பதுபோல் மாவட்டத் தலைநகரங்களில் பயிற்சி மையங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் 1999 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய மற்றும் மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மற்றும் வங்கிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் மனுதாரர்கள் தாங்கள் போட்டியிடும் திறனை வளர்த்துக்கொள்வதற்காக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு மாதம் ரூபாய் 5,000 வீதமும் ஊராட்சி ஒன்றியங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு ரூ.1,000 வீதமும் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்படுகிறது. தற்போது 30 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 385 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரைக்கும் 97,123 மனுதாரர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.380.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல இந்திய ஆட்சிப் பணியில் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குச் செல்வதற்காக Main Exam செல்வதற்காக 100 பேருக்கு தலா ரூ. 25,000 வழங்கலாம் என்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். ஆனால் ஆதி திராவிடர் மாணவ, மாணவிகள் 148 பேர் அந்தத் தேர்வில், அதாவது preliminary தேர்வில்



2008 ஏப்ரல் 28]

வெற்றி பெற்றிருந்தார்கள். அவர்கள் மேல்நிலைத் தேர்வுக்கு, முதன்மைத் தேர்வுக்குச் செல்வதற்காக 148 பேர்களுக்கும் தலா ரூ. 25,000 வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அந்த மாணவர்கள் 37 பேர்கள் நேர்முகத் தேர்வுக்கு சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின்மூலமாக அந்தந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியப் பணிகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தனியாக ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விரிவான பதிலுக்கு நன்றி. அதேவேளையில் சென்னை அண்ணா நகரில் இயங்குவதைப் போன்று மாவட்ட அளவில் இல்லாவிட்டாலும், மண்டல அளவிலாவது திருச்சி, மதுரை, கோவை, நெல்லை போன்ற இடங்களில் இதுபோன்ற பயிற்சி மையங்கள் எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளுக்கான தேர்வுகளுக்கு ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அண்ணா நகரிலே பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநில அளவிலே பயிற்சி அளிக்கும்போதுதான் infrastructure என்று சொல்லக்கூடிய அடிப்படை வசதிகளை நாம் செய்து தந்திருக்கின்றோம். அந்தக் காரணத்தினாலேதான், இதுவரையிலே எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு கலைஞருடைய ஆட்சியில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 54 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரிலும் இப்படிப்பட்ட பயிற்சிகள் வழங்குவது என்பது இயலாத காரியம். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு இங்கே பயிற்சி கொடுக்கிறோம். அவர்களுக்குத் தங்கும் இடம், உணவு அத்தனையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைத்தக்க நிகழ்வுகள் அவ்வப்போது நிகழ்வது உண்டு. அந்த வகையிலே, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக பயிற்சி அளிக்கப்பட்ட விமானப் பணிப் பெண்களில் பயிற்சி முடித்த 200 பேரை நம்முடைய தமிழக முதல்வர் சந்தித்தது ஒரு பெருமைக்குரிய நிகழ்வு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அப்படிப் பயிற்சி பெற்ற, தேர்வு பெற்ற விமானப் பணிப் பெண்கள் இப்போது வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்களா? அதற்கு துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எந்த அளவிற்கு அந்த முயற்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் 200 பேருக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு பெண்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு பயிற்சி பெற்ற அந்த 100 பெண்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் வேலைவாய்ப்பைப் பெற்று பணியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பணியில் வருமானம் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். மீதமுள்ள நபர்களுக்கும் பணி வாய்ப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் அந்த மாதிரியான பயிற்சிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விமானப் பணிப் பெண் பயிற்சி என்பது தற்போது விமானங்கள் அதிக அளவில் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் வேலைவாய்ப்புகள் அதிகமாகி இருக்கின்றன. எனவே, பயிற்சி பெற்ற அனைவருக்குமே நிச்சயமாக வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



2008 ஏப்ரல் 28]

170—

### மீன் பதப்படுத்துதல்

***35700—திரு. ந. கணபதி:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வானூர் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்தில் மீன் பதப்படுத்தும் குளிர்சாதனக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வானூர் சட்டப் பேரவைத் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்தில் மீன் பதப்படுத்தும் குளிர் சாதனக் கட்டடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தொகுதி மற்றும் மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், மரக்காணம் பேரூராட்சி, மொத்தம் 19 மீனவ கிராமங்கள் உள்ளன. இங்கு விவசாயத்திற்கு அடுத்தப்படியாக, மீன்பிடித் தொழிலே மிக முக்கியத் தொழிலாக உள்ளது. மேலும் மீன் வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மிக அதிக அளவில் அங்கே நடைபெற்று வருகிறது. இங்கே பிடிக்கப்படும் வஞ்சிரம், அயலா, இறால், சொங்கம், மத்தி, கணவாய் போன்ற அனைத்தும் ஏற்றுமதித் தரம் வாய்ந்த மீன்களாகவே உள்ளன. இவை அனைத்தையும் சந்தைப்படுத்தவும் மற்றும் பதப்படுத்தி விற்பனை செய்ய போதுமான உட்கூறு கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தால், நாள்தோறும் பல இலட்சம் மதிப்பிலான மீன்கள் மற்றும் மீன் வகைகள் பயனற்றுப் போகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, இவ்வகை மீன்கள் மற்றும் இறால் வகை மீன்களை சந்தைப்படுத்தவும், பதப்படுத்தவும், விற்பனை செய்திடவும் குளிர்சாதனப் பெட்டிகளுடன் கூடிய கட்டட வசதி ஏற்படுத்தித் தர ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மீனவக் கிராமங்களில் பிடிக்கப்படும் மீன்கள், உள்ளூர் மக்களின் தேவைக்கும் மற்றும் வெளியூர் வியாபாரிகள்மூலமாக பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் மீன்கள் உடனடியாக வெளியூர் சந்தைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் கெட்டுப்போகாமல் இருக்க மானிய விலையில் மிதி வண்டியுடன் கூடிய குளிர்பதனப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தனியார் பனிக்கட்டி நிலையங்களும் அந்தப் பகுதியில் செயல்பட்டு வருகின்றன. மேற்காணும் காரணங்களால் மரக்காணம் ஒன்றியத்தில் குளிர்பதனக் கட்டடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரமும் இதேபோன்று கேள்வி நேரத்தில் மீன் விற்பனை நிலையம் ஒன்று கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்கள் அதற்கும் சாத்தியக்கூறு இல்லை என்றார். இப்போதும் சாத்தியக்கூறு இல்லை என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள். சாத்தியக்கூறு இல்லை, சாத்தியக்கூறு இல்லை என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தால், என்ன அர்த்தம்?

**திரு. ந. கணபதி:** என்னுடைய மரக்காணம் ஒன்றியத்தில் ஏதாவதொரு கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர், ஏதாவதொரு கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று உறுப்பினர் கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் இதே மன்றத்தில் பதில் அளித்திருந்தேன். அதற்கான நகல்கூட இங்கே இருக்கிறது. மரக்காணம் ஒன்றியத்தின் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்கள் நம்முடைய உள்ளாட்சி முகமைக்கு, அங்கே மீன் அங்காடி அமைப்பதற்கான ஒரு மனுவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பியுள்ளார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயமாக அந்தப் பகுதியிலே அது அமைக்கப்படும் என்பதனையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் மீன் பிடித்துக்கொண்டிருக்கிற மேட்டூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் அதன் உறுப்பினர்கள், பிடித்த மீனைக் கெட்டுப்போகாமல் பதப்படுத்துவதற்காக ஒரு பனிக்கட்டித் தொழிற்சாலை-Ice Factory-உருவாக்க வேண்டுமென்று நீண்டநாட்களாகக் கேட்டு வருகிறார்கள். நான்கூட அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோள் வைத்திருந்தேன். ஆகவே, நடப்பாண்டில் அந்தப் பனிக்கட்டித் தொழிற்சாலை-Ice Factory—அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, மேட்டூர் அணையிலே நீர் அதிகமாக இருக்கிறது. அதேநேரத்தில், மீன் குஞ்சு பொரிப்பதற்கான தொட்டிகள் அமைப்பதற்கும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே மீன் உற்பத்திக்கு குஞ்சுகள் பொரிப்பதற்கான தொட்டிகளை அமைப்பதற்கும், தாய் மீன்களை வாங்கி முட்டை பொரிப்பதற்கான வாய்ப்புகளை எல்லாம் ஏற்படுத்துவதற்கும் இந்த ஆண்டில் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியதுபோல, மேட்டூர் அணைக்கட்டுப் பகுதியில் மீன்பிடிப்பு—இப்போது உங்களுக்கெல்லாம், இங்கே மன்றத்திலே உள்ள அனைவருக்கும் தெரியும், மீன் தேவைகள், அதாவது மக்களுக்கு மீன் உணவு அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தால்—அன்றாடம் பிடிக்கப்படுகின்ற மீன்கள் அனைத்தும் அந்தந்தப் பகுதியிலேயே விற்று முடிக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலேயுள்ள மீன்

வளத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, தேவைப்படுமேயானால் அந்தப் பகுதியிலே மீன் பதப்படுத்தும் குளிரூட்டு நிலையம் அமைப்பதற்காக அரசு பரிசிலனை செய்யும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்கின்ற தொட்டிகள் இதைப்போன்ற நீர்த்தேக்கங்களுக்கு அருகிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் தேவைப்படுமேயானால் அமைக்கப்படும் என்பதனையும் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலேயே முதல்முறையாக நாட்டு மீனவர்களுக்கு வலை வாங்குவதற்கும், படகு வாங்குவதற்கும் அரசு மானியத்தைத் தருகின்றது. இந்தத் திட்டம் கடல் மீனவர்களுக்கும் நீட்டிக்கப்படுமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை மீனவர்களுக்கு, சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவப் பெருமக்களுக்கு 110 கோடி ரூபாய் செலவில் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்களுடைய அரசு, மீன்பிடி உபகரணப் பொருட்களை வழங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கி வருவதைப்போல, எதிர்காலத்தில் கடல் மீனவர்களுக்கும் வழங்கப்படுவது சம்பந்தமாக மீண்டும் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதனையும் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. உரிமைப் பிரச்சினை

### பேரவையில் 25-4-2008 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதம் குறித்து அ.இ.அ.தி.மு.க. கொறடா அறிக்கை வெளியிட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தங்களுடைய தீர்ப்பினை நான் எதிர்பார்க்கிறேன். இந்த மன்றத்தில் ஓர் உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கருத்தில் மற்றோர் உறுப்பினருக்கு உடன்பாடு ஏற்படாவிட்டால், தங்களிடத்திலே அனுமதி பெற்று, அதை மறுக்கலாம். பிறகு, பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டால், தாங்கள் சொல்லலாம். ஆனால், இந்த அவையில் ஓர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைக்குப் பதில் சொல்கிற பொறுப்பும், வாய்ப்பும், மற்றொரு உறுப்பினருக்கு இருக்கும்போது, இந்த அவையில் நடந்து முடிந்த ஒரு பிரச்சினையை அதன் தொடர்ச்சியாக, இங்கே பேசிய உறுப்பினரைப் பற்றியும், பேசாமல் இருந்த அமைச்சர்களைப் பற்றியும் வெளியில்போய் இட்டுக் கட்டும் ஓர் அறிக்கை வெளியிடுவது எந்தவகையிலே நியாயம் என்பதுதான் என் முதல் வாதம்.

*முற்பகல் 10-35*

மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள், ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். வால்பாறையில் 100/- ரூபாய்க்குக் கூலி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே? கொடநாடு எஸ்டேட்டிலே எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்குப் பதில் அளிக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், நாங்கள் இவ்வளவு கொடுக்கிறோம் என்று தெரிந்தால் சொல்லலாம் அல்லது கொடுக்கவில்லை என்று சொல்லலாம். அதற்குப்பிறகு, எது அவைக்குறிப்பில் இருக்கலாம் என்பதை நிர்ணயிக்கின்ற உரிமை தங்களுக்கு இருக்கிறது. ஆனால், திரு. கோவை தங்கம் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு, அவர் பதில் அளிப்பது, எப்படிப் பதில் அளித்தார் என்பதைப் பற்றி நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதோடு விட்டுவிடாமல், இங்கே அவருக்குப் பொறுப்பு உண்டு. கோவை தங்கம் அவர்கள் பேசிய பேச்சு பற்றி வெளியில் இருக்கிற ஒரு அரசியல்வாதி, அவர் இதைத் திறனாய்வு

செய்து அறிக்கை விடலாம். ஆனால், பேசுகிற உரிமைபெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன், வெளியிலே போய் இந்த அவையில் நடந்த அந்தப் பிரச்சினைக்குத் தொடர்கதை எழுதுவதைப்போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்களுடைய கருத்தை, அவரைப்பற்றித் தவறான செய்தியை உருவாக்கும்படி ஓர் அறிக்கையை வெளியிட்டிருப்பது இந்த அவையினுடைய மரபுக்கு உகந்ததுதானா என்பது இரண்டாவது.

திரு. கோவை தங்கம் கேட்டார்: நூறு ரூபாய் வால்பாறையிலே கொடுக்கச் சொல்கிறீர்களே, கொடநாட்டிலே எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். நீங்கள் பதில் சொல்லுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கேட்டார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு பதில் சொல்வதற்கு அமைச்சருக்கு உரிமை இல்லையா? உடனே, அதற்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் பதில் சொல்லலாம். ஆனால், 'மின்வெட்டு உண்டா இல்லையா என்று கேட்டால், அதுபற்றிச் சொல்வதற்குத் தெரியாத மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி' என்று வெளியிலே சொல்லியிருப்பது அவையினுடைய மிகப்பெரிய உரிமை மீறல் ஆகும். 'இங்கே சொல்வதற்கு மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமிக்குத் தெரியவில்லை' என்கிறாரே. மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொல்வதை அவர் புரிந்துகொள்கிறாரா, இல்லையா என்பதை நான் இப்போது அவர்மீது குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. சரி, அதோடு விடுங்கள்.

மூன்றாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தனிப்பட்ட முறையில் இழுத்து, அவரது பெண்டு, பிள்ளைகளையெல்லாம் இழுத்து, அவர்களெல்லாம் என்ன படிக்கிறார்கள் என்று கேட்டு, வழக்குகளையெல்லாம் கேட்டு, இவ்வளவும் செய்வது நியாயம்தானா என்பதைக் கேட்கிறேன். ஆகையால், இந்த அவையில் பேசுகிற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். இங்கே நாம் அவையில் துணிந்து ஒரு கருத்தைச் சொல்லலாம், அது தவறு என்றாலும் திருத்திக்கொள்ளலாம் அல்லது சரி என்றால் பதிவுசெய்யலாம் என்ற எண்ணம் இருந்தால்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் செய்யமுடியும். எனவே, என்னைப் பொறுத்தவரையில், இந்த அவையினுடைய (குறுக்கீடு) விதி 219, 220 அதெல்லாம் பேரவைத் தலைவருக்குத் தெரியும். நான் கேட்பது, இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் என்ற முறையில், சட்டத் துறை அமைச்சர் என்ற முறையில்





நான் எடுத்து வைக்கிற முறையீடு இதுதான். இப்படி ஓர் அறிக்கை வெளியிடப்படுமானால், நாளைக்கு நான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் அவையில் எப்படிப் பேசினார் தெரியுமா என்று இங்கே சொல்லாததை வெளியிலே போய்ச் சொன்னால், அவையிலே ஒன்று, வெளியிலே ஒன்று, என்று இரண்டுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுமேயானால், மாண்புமிகு உறுப்பினர் எப்படி தன்னுடைய பணியை ஆற்றமுடியும்? எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது, உரிமை மீறல் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே, என்னுடைய இந்த உரையை உரிமை மீறல் அறிவிப்பாக எடுத்துக்கொண்டு, இதை உடனடியாக உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

*முற்பகல் 10-40*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, சபையிலே நேருக்குநேர் பதில்சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டு எவ்வளவு மணித் துளிகள் சபையிலே பேசுவதற்கு, எங்களுக்குத் தேவையான நேரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் (குறுக்கீடு) இருங்கள், நான் பேசுகிறேன். இதுபோன்று சபையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள்—எதிரே இன்றைக்குச் சொல்கின்ற, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்றவர் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது எத்தனை முறை இந்தச் சபையைப் பற்றி அறிக்கைகள் தமிழ்நாட்டிலே வெளியிட்டிருக்கிறார் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் இதை வலியுறுத்துவதற்குக் காரணம், இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலேயிருந்து தண்ணீர் எடுப்பது தமிழ்நாட்டிற்குத் தேவை என்கின்றபோது, அதை இப்போது ஒத்திவைக்கலாம் என்று சபை இருக்கின்றபோதே அன்றைக்கு எல்லாம் 2, 3 நாட்கள் விடுமுறை இருக்கின்றது, ஆகவே, நான் சொல்லியிருக்கிறேன் என்று சொல்வது, அது எப்படிச் சாலப்பொருத்தமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, எங்களுக்கு 2 நாட்கள் இடைவெளியில்லை; நீங்கள் பேசினீர்கள், முடித்தீர்கள், உட்காருங்கள் என்கிறீர்கள், உட்கார்ந்து விட்டோம். அதற்குப் பதில் சொல்வதற்கு அன்றைக்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் 2 நாட்கள் மக்களிடத்திலே

[கே.ஏ. செங்கோட்டையன்] [2008 ஏப்ரல் 28

வருகிற செய்திகளைப் பார்க்கிறபோது என்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றனவோ என்பதை முதலமைச்சர் எப்படிச் சுட்டிக்காட்டினாரோ, அதைப்போல நாங்கள் அறிக்கையின் வாயிலாகச் சுட்டிகாட்டியிருக்கிறோமே தவிர வேறொன்றும் அதிலே தவறில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து சம்பளப் பிரச்சினைகளுக்காக, கடந்த 7 ஆண்டு காலம் இந்தப் பிரச்சினையை நான் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டம், மறியல் போராட்டம் வால்பாறையிலே நடத்தினேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம்—என்னைப் பற்றி ஜெயா டி.வி.-யில், அரசாங்கத்திடமிருந்து Notification வந்த 3 நாட்களில் சம்பளம் வாங்கித் தரவில்லை என்று சொன்னால், திரு. கோவை தங்கம் "ராஜினாமா செய்வாரா, ராஜினாமா செய்வாரா" என்று பத்திரிகையிலும், ஜெயா டி.வி.-யிலும் வந்துகொண்டேயிருந்தது. அதற்காக நான் ஒன்றும் வருத்தப்படவில்லை. ஆனால், நான் கேட்டது, அரசாங்கம் Notification அறிவித்த பிறகு, அதே 102 ரூபாயை கொடநாட்டிலே இருக்கின்ற எஸ்டேட் தொழிலாளர்களுக்கு வழங்குவார்களா, வழங்கவேண்டும் என்றுதான் நான் கேட்டேன். இதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சின்னசாமி, (குறுக்கீடுகள்) திரு. சின்னசாமி, No. You have no locus-standi to answer.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால் பேரவை விதி 226-ன்கீழ் இப்பிரச்சினையை விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) மின் பற்றாக்குறை குறித்து பேரவைமுன் வைக்கப்பெற்றுள்ள ஏட்டில் குறிப்பிட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.



2008 ஏப்ரல் 28]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டப் பேரவையில் உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஓர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, தமிழ்நாடு மின்சார வாரியம், தற்போதுள்ள நிலவரப்படி 800 மெகா வாட் மின் பற்றாக்குறையைச் சந்திக்கிறது என்றும், அது 2008 ஆம் ஆண்டு உயரளவு மின் சக்தி பயன்படுத்தப்படும் கோடைக்காலத்தில் 1,300 மெகா வாட்டாக அதிகரிக்கக்கூடும் என்றும் அதன் தலைவர் தெரிவித்துள்ளார். தெரிவிக்கப்பட்டு, சில தொழிற்சாலைகளில் Captive Generator-மூலம் தாங்களே மின்சாரத்தைத் தயாரித்துக்கொள்கின்ற உபகரணங்கள் இருக்கின்றன என்றும், அதற்கு எரிபொருளாக ஊதுலை எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது என்றும், அந்த ஊதுலை எண்ணெய் வாங்குவதற்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று தங்களுக்கு வரப்பெற்றதாகவும், கடந்த பிப்ரவரி மாதத்திலிருந்து மே மாதம் வரைக்கும் அந்த வரி விலக்கு அளிக்கப்படும் என்றும், அதன் தலைவர் ஒப்புதல் தந்து, அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது என்ற ஓர் அறிக்கையை இன்றைக்குச் சட்டமன்றத்திலே தாக்கல் செய்திருக்கின்றார்கள். ஆக, அந்தத் துறையினுடைய அமைச்சரிடம் விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Correct. Zero hour-ல் முன்னறிவிப்புக் கொடுத்து விட்டு இதெல்லாம் பேசவேண்டும். நீங்கள் திடீரென்று (குறுக்கீடு) நீங்கள் எதிலிருந்து எதைப் பேசுகிறீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இங்கே இருக்கிறது. இன்றைக்கு Table-ல் paper place பண்ணியிருக்கிறீர்கள். அதைப் படித்துவிட்டு நான் விளக்கம் கேட்கிறேன். அதைக் கேட்கலாம். Table-ல் paper place பண்ணியிருப்பதைப் பற்றிக் கேட்கலாம். இந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர் கேட்கலாம்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் காலையிலேயே சொல்ல வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** என்ன நியாயம் இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த issue-ஐ நான் raise செய்யப் போகிறேன் என்று என்னிடம் நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏன் கோபப்படுகிறீர்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) எடுத்துச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பேரவையில் இன்றைக்குத்தான் paper-ஐ place செய்திருக்கிறார்கள்; படித்துப் பார்க்கிறேன்; அதிலே சில விளக்கங்களைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் காலையிலே வந்து இந்த விஷயம் பற்றிப் பேசப்போகிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லி அனுமதி வாங்கியிருக்க வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இங்கேதான் வந்து பார்க்கிறேன். நேற்றைக்கு இது கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நேற்றைக்கு வந்த தபாலில் இந்த paper வரவில்லை. இன்றைக்கு table-இலே place செய்திருக்கிறீர்கள். நாங்கள் இப்போது அவைக்கு வந்த பின்னர்தான் பார்க்கிறோம்.

மின் வாரியத்தினுடைய தலைவர் மின் பற்றாக்குறை 800 மெகா வாட் ஆகவும், அது 2008 ஆம் ஆண்டில் கோடைக்காலத்தில் 1,300 மெகா வாட் ஆகவும் 300 மெகா வாட் Captive Generators மூலம் நிறைவு செய்யப்படும் என்று சொல்லி அவரே ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார். ஆகவே, மின் பற்றாக்குறை 1,000 மெகா வாட்டாக இருக்கும் என்று மின் வாரியத்தினுடைய தலைவர் ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கின்றார். ஆனால் தற்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் மின்சாரப் பற்றாக்குறையே இல்லை என்ற ஒரு பதிலை, ஓர் அறிக்கையை, எங்களுக்கு முன்னால் தந்திருக்கின்றார். ஆகவே தற்போதுள்ள உண்மையான நிலை என்ன என்பதைத்தான் கேட்பதற்காக எழுந்தேன்; சட்டமன்றத் தலைவர் அவர்கள் அதற்குள்ளே இருக்கின்ற பொருளை முழுவதுமாகக் கேட்டு வாய்ப்பு தந்திருக்கலாம். அதைவிடுத்து பேச்சில் குறுக்கிடுவது என்பது சரியான நடைமுறையாக இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வந்து பார்த்த பின்னர்கூட என்னிடம் வந்து அனுமதி கேட்டிருக்கலாம். (குறுக்கீடு) What is this?



2008 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு . . . (குறுக்கீடு)

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker, Sir . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எந்தவிதமான இரகசியமான கேள்வியும் கேட்கவில்லை. இந்த அவையிலே நம்முடைய அரசாங்கத்தாலே அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட, ஒரு செய்தியைத்தான் இங்கே கேள்வியாகக் கேட்கிறார்கள். தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இல்லை என்று இந்த அவையிலே எப்பொழுதும் நான் சொன்னதில்லை. நான் என்ன சொன்னேன் என்று கேட்டால், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் காற்று வீசாத காரணத்தால் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது; அதைச் சமாளிப்பதற்காக வட மாநிலங்களிலேயிருந்து 600 மெகா வாட் மின்சாரத்தை நாங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறோம்; அந்த மின்சாரத்தை விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். இந்த அவையிலே சொன்னது record ஆகியிருக்கிறது. இப்பொழுது இங்கே அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற கருத்து, தொழில் அதிபர்களையெல்லாம் கூட்டி, அவர்களோடு பேசி, யார், யார் Generator வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லாம் Furnace Oil பயன்படுத்தினால் அதற்கு VAT வரியிலிருந்து விலக்கு தரப்படும் என்றும், மற்ற சலுகைகள் எல்லாம் வழங்கப்படும், ஒரு யூனிட்டிற்கு 10 காசு மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்றெல்லாம் நாங்கள் சொன்னோம். அதை நான் இந்த அவையிலேயே ஏற்கெனவே மின்சாரத் துறை மானியத்தின்போது தெரிவித்திருக்கிறேன். அவர்கள் என்ன கேட்டார்கள் என்றால், 'உங்களுடைய வாய்மொழி உத்தரவாக நீங்கள் சொன்னதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அதைக் கடைப்பிடித்து வருகிறோம். ஆனால் அரசாங்கம் ஆணையாக வெளியிடவில்லையே' என்று ஒரு கேள்வி

கேட்டார்கள். அதற்காகத்தான் அரசாங்க ஆணையாக இன்றைய தினம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒன்று. நல்ல வேளையாக மார்ச் மாதத்திலே எப்போதும் இல்லாத அளவிற்கு மழை பெய்த காரணத்தினாலே நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இருந்த நேரத்திலே நம்முடைய விவசாயிகள் பம்பு செட்டுகளைப் பயன்படுத்துவது குறைந்து, 1,000 மெகா வாட் அளவிற்கு மின்சாரத் தேவை குறைந்திருந்தது அந்த நேரத்தில், மார்ச் மாதத்தில்.

இப்போது மகிழ்ச்சியான செய்தியைச் சொல்கிறேன். நேற்றிலிருந்து எதிர்பாராதவிதமாக, நாங்களேகூட திணறிக்கொண்டிருந்த நேரத்தில், 1,200 மெகா வாட் மின்சாரம் காற்றாலைகள்மூலமாக நேற்று 3-00 மணியிலேயிருந்து கிடைத்துக்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே எந்த இடத்திலேயும் நேற்று இரவு மின் தடை இல்லை; இன்று காலையிலேயும் 6-00 மணியிலேயிருந்து இதுவரையிலே மின் தடையில்லை. காற்று தொடர்ந்து வீசும். ஏனென்றால் காற்று எப்போதுமே ஏப்ரல் 30 ஆம் தேதிக்குப் பிறகு வீசக்கூடும். நல்லவேளையாக 27 ஆம் தேதியே வீச ஆரம்பித்திருக்கிறது. எனவே, மின்சாரப் பற்றாக்குறை எந்தக் காரணத்தைக்கொண்டும் ஏற்படாது என்று எதிர்பார்க்கிறேன். அப்படியே ஏற்பட்டாலும்கூட, பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலங்களிலிருந்து வாங்கி, விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் Speaker-உடைய position-ஐ முதலிலே explain பண்ணிவிடுகிறேன். விதி 31-லே 'எந்த ஒரு சட்டத்தின்படி பேரவை மேசை முன் வைக்கப்பெறும் எந்த ஏட்டினையும் உறுப்பினர் எவரேனும் பேரவை விதிகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு பொருத்தமான தீர்மானம் ஒன்றினை அறிவிப்புக் கொடுத்து பேரவைக்கு தலைவரால் அறிவிக்கப்பெறின் பேரவையில் விவாதிக்கலாம்.' (குறுக்கீடு) இல்லை. Whatever it is, என்னுடைய permission இல்லாமல் நீங்கள் எதையும் raise பண்ணக்கூடாது Sir. (குறுக்கீடு) No. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன். சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது. இந்த Papers placed on the Table of the House-இல்



வருகிறபோது, 800 மெகா வாட் இப்போது பற்றாக்குறை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது காற்றாலைமூலம் நேற்று மூன்று மணியிலிருந்து 1,300 மெகா வாட் கூடுதலாகக் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். நேற்று மாலையிலேயிலிருந்து எங்கும் மின்வெட்டே இல்லையென்று சொன்னார்கள். ஆனால், நேற்று நான்கூட மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வேலூருக்கு வருகை தந்தபோதுகூட, ஒரு கருத்தை வலியுறுத்தினேன். ஒரு மணி நேரம்கூட மின்சாரம் இல்லாமல் ஒடுக்கத்தூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் பகுதிகளிலே குடிநீருக்குக்கூட பற்றாக்குறை. அதேபோல சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்திலேகூட ஏதோ பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்த மின் விநியோகம் எப்படி செய்யப்படுகிறது? குடிநீரும், அதேபோல பயிரெல்லாம் வாடிக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கூடுதலாகக் கிடைத்திருக்கிறது என்கிற செய்தியே, இதிலே இந்த Papers placed on the Table of the House-இல் வரவில்லை, இன்று வைக்கக்கூடியதிலே. இதிலேயாவது சொல்லியிருக்கலாம். இல்லையென்று சொன்னால், இங்கே மின் விநியோகம் சீராகத் தமிழகம் முழுமையிலும் அவர்கள் சரியாகத் தந்து, குடிநீர் பற்றாக்குறையில்லாமலும், அதேபோல பயிர்கள் வாடாமலும் பார்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே என்ன வழிவகை செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) எல்லோரும் சொல்வதைக் கேட்ட பின்னர் சொல்லிவிடலாமே!

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் வேலூர் சென்றிருந்தபோது ஒரு விழாவிலே அவரும் என்னோடுதான் கலந்துகொண்டார். என்னிடத்திலே அந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார். அவர் எதிரிலேயே மின் துறை அதிகாரிகளையெல்லாம் கூப்பிட்டு 100 மெகா வாட் மின்சாரம் கூடுதலாக வேலூர் மாவட்டத்திற்கு வழங்கச் சொன்னேன். நேற்று 2 மணியிலேயிருந்து வேலூர் மாவட்டத்திற்குக் கூடுதலாக 100 மெகா வாட் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் காற்று வீச ஆரம்பித்தது. அதற்குப் பிறகுதான், மூன்று மணியிலேயிருந்து 1,200 மெகா வாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. நேற்று மாலை மூன்று மணிக்குப் பிறகு எங்கேயாவது மின்வெட்டு தமிழ்நாட்டிலே இருந்திருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னால் அதை நான்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஏப்ரல் 28

கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இன்று காலையிலேகூட சொல்கிறேன். ஏனென்றால், Member (Distribution) அவர்களிடத்திலே தினந்தோறும் காலையிலே 6 மணிக்கு, இன்றையதினம் மின்சாரம் எவ்வளவு நமக்குத் தேவைப்படுகிறது, மின்சாரம் எவ்வளவு நம்மிடத்திலே கையிருப்பு இருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் கேட்டுத்தான் பொறுப்போடு நான் பதில் சொல்கிறேன். இன்று நமக்கு 1,200 மெகா வாட் காலையிலேயே காற்றாலைகள்மூலம் கிடைக்கின்ற மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, தமிழகத்திலே காலையிலும் மின்தடை இருக்காது, பகலிலேயும் இருக்காது, இரவிலும் இருக்காது. நாளைக்கு என்னவென்று நாளைக்குத்தான் தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

### (ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தந்திருக்கிற இந்த அனுமதியின்மூலம் தமிழகத்திலே இருக்கின்ற அடித்தட்டு மக்களை மிகவும் ஆழமாகப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய கவனத்தையும் குறிப்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும் ஈர்க்க நான் ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற இரண்டு கோடி ரேஷன் கார்டுகள், இந்த இரண்டு கோடி ரேஷன் கார்டுகளை முறையாக வகைப்படுத்தி, இந்த ரேஷன் கார்டுகளுடைய தராதரத்தை அறிவதற்காக நம்முடைய அரசுக்குச் சொந்தமான எல்காட் நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை . . . *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய அறிவிப்பைத்தான் எடுக்கப்போகிறேன். நான் கூப்பிட்டதற்கு அப்புறம் நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** சரி. *(குறுக்கீடு)*

### (இ) பாலாற்றின் குறுக்கே குப்பம் அருகில் ஆந்திர அரசு அணை கட்டப்போவதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. ஜி.கே. மணி.



2008 ஏப்ரல் 28]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு குப்பத்தின் அருகில் அணை கட்டப் போவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. ஏற்கெனவே நீதிமன்றத்திலே தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தொடர்ந்து அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மீறி இப்போது அணை கட்டும் பணி துவங்கயிருப்பதாகத் தகவல் வருகிறது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, உங்கள் இடத்திற்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அது தொடர்ந்தால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பாலாற்றில் வராமல் போய்விடும். ஆகவே, தமிழ்நாட்டினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா? அணை கட்டாமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுசம்பந்தமாக அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டால், இப்போதே முடிந்துபோய்விடும். பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நாம் வழக்கு தொடுத்தோம். உச்ச நீதிமன்றம், 'இதில் மத்திய அரசு தலையிட வேண்டும்' என்று சொன்னது. அதனடிப்படையில், மத்திய அரசினுடைய Central Water Commission-க்கு முன்னால், அவர்களுடைய அதிகாரிகளும், நம்முடைய அதிகாரிகளும், மற்றவர்களும் உட்கார்ந்து பேசினார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் அந்த அணை கட்டுவதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பது குறித்த எல்லா விவரங்களையும் மத்திய அரசின் கையிலே தரவேண்டும்; ஏன் நாம் எதிர்க்கிறோம் என்பதற்கான காரண, காரியங்களை நாம் அவர்களுக்குத் தரவேண்டும்; அதைச் சொல்லியிருக்கிறோம். ஆக, அந்த நிலையில்தான் இருக்கிறது. இடையிலே இப்படிப்பட்ட ஒரு செய்தி வந்திருக்கிறது. இது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அரசு கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே, எல்லா நிலையிலும் உரிமையை விட்டுக் கொடுக்காமல் இருப்பதைப்போல், இப்படி வந்த செய்தியிலும் உரிமையை விட்டுக்கொடுக்காமல் நடந்து கொள்ளும். அப்படி இந்த

ஒப்பந்தத்தை ஏதாவது மீறி, உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த ஆலோசனைக்குப் பிறகும், ஆந்திர அரசு ஈடுபடுமானால், அதை எந்தெந்த வகையிலே இந்த அரசு சந்திக்க வேண்டுமோ, அப்படிச் சந்திக்கும்.

### (ஈ) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அன்பரசன் என்பவரை சிங்கள அரசும், அங்குள்ள காவல் துறையும் சித்ரவதை செய்து படுகொலை செய்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன், என்ன? இந்த subject-ஆ அல்லது வேறு subject-ஆ?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்கள் உலக நாடுகளில் எங்கு பிழைக்கப் போனாலும், விபத்துக்குள்ளாகி இறப்பது வாடிக்கை; நாம் அந்த உடலைக் கொண்டுவருவது வாடிக்கை; அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும். ஆனால், நேற்றைய முன்தினம் எங்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்பவரின் மகன் அன்பரசன் என்பவரைச் சிங்களப் பேரினவாத அரசும், அங்கிருக்கிற காவல் துறையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று, சித்ரவதைக்கு உள்ளாக்கி, அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த சிங்களப் பேரின அரசு, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, தற்போது அங்கிருக்கிற ஒரு இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களை ருசி கண்டது போதாது என்று, தமிழகத்திலிருந்து பிழைக்கச் சென்ற தமிழர்களையும் (மணியடிக்கப்பெற்றது) அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** தாய்த் தமிழ்நாட்டின் தமிழர்களையும் கொன்று குவித்திருப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

### (ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி–தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ள சுமார் 2 கோடி ரேஷன் அட்டைகளில், 30 இலட்சம் ரேஷன் அட்டைகள் போலியானவை என்று 'எல்காட்' நிறுவனம்மூலம் தெரியவந்துள்ளது





குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோர், விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் ஒருவர் சுருக்கமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்சினை, இப்போது ஒரு பயங்கரமான உருவத்தை எடுத்திருக்கின்ற செய்தி அறிந்து நாமெல்லாம் அதிர்ச்சியடைந்திருக்கிறோம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். நம்முடைய தமிழக அரசு வழங்கியுள்ள 2 கோடி ரேஷன் அட்டைகளிலே, 15 விழுக்காடு ரேஷன் அட்டைகள், ஏறக்குறைய 30 இலட்சம் ரேஷன் அட்டைகள், போலி ரேஷன் அட்டைகள் என்று, e-governance என்கிற அந்த புதிய முயற்சியை மேற்கொண்டிருக்கின்ற 'எல்காட்' நிறுவனம், அதைச் சரிபார்க்கும்போது கண்டுபிடித்திருக்கிறது. இதிலே அதிர்ச்சி தரக்கூடிய மற்றொரு தகவல் என்னவென்று சொன்னால், பல்லாயிரக்கணக்கான ரேஷன் அட்டைகளுக்கு ஒரே எண் இருப்பதாகவும், இலட்சக்கணக்கான ரேஷன் அட்டை கோரி வந்த மனுக்களுக்கு ஒரே எண் இருப்பதாகவும், அந்த ஒரே எண்ணுள்ள ரேஷன் அட்டைகளும், ஒரே எண் உள்ள ரேஷன் அட்டைக்குக் கொடுக்கப்பட்ட மனுக்களையும் பார்க்கின்றபோது, இந்தப் போலியான ரேஷன் கார்டுகள் தமிழகம் முழுவதும் பரவலாக வினியோகிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலை நம்முடைய 'எல்காட்' நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்திலே, இந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட போலி ரேஷன் கார்டுகள் ஏறக்குறைய 9,979 ஆகும். இந்த 9,979 போலி ரேஷன் கார்டுகளும், யாரிடமிருந்து அல்லது யார் மூலமாகப் பெறப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்கின்றபோது, அந்த ரேஷன் அட்டைகளிலே மிகப் பெரும்பாலானவை, rice mill முதலாளிகளுக்கும், அவர்களுடைய பங்குதாரர்களுக்கும் சொந்தமான ரேஷன் அட்டைகள் என்கிற விவரமும் தெரிய வந்திருக்கிறது. இந்த 15 விழுக்காடு ரேஷன் அட்டைகள் என்பது 30 இலட்சம் ரேஷன் கார்டுகள் ஆகும். இந்த 30 இலட்சம் ரேஷன் கார்டுகளை,

எவ்வாறு கண்டுபிடித்து, அந்த ரேஷன் அட்டைகளை—circulation-லிருந்து—வினியோகத்திலிருந்து எப்படி வெளியே எடுக்கப்போகிறது நம்முடைய அரசு? (குறுக்கீடு) எப்படி அந்த ரேஷன் அட்டைகளை வெளியே எடுக்கப்போகிறது? அப்படி 30 இலட்சம் ரேஷன் அட்டைகளை வினியோகத்திலிருந்து வெளியே எடுக்கின்றபோது, நியாயமான, உண்மையான சில பொது மக்கள் பாதிக்கப்படக்கூடிய அபாயமும் இருக்கிறது. ஏனென்று சொன்னால், ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் ரேஷன் அட்டைகளில், நம்முடைய சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்தவர்களால் clerical mistakes ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அதை வாங்கிப் பதிகின்றபோது ஏற்பட்ட தவறுதலான அந்தக் கருத்துகளால், புள்ளிவிவரங்களால், ஏறக்குறைய 1¼ இலட்சம் ரேஷன் அட்டைகள் உண்மையான பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலுங்கூட, போலி ரேஷன் அட்டைகளாக அவை வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதைச் சரிபார்ப்பதற்காக அரசு முயற்சியை எடுத்து வருகின்றது என்ற விவரத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-00*

இதிலே, நான் என்ன சொல்ல விழைகிறேன் என்று சொன்னால், இதைப்போன்ற முயற்சிகளை மேற்கொள்கின்றபோது இந்த 30 இலட்சம் ரேஷன் அட்டைகளால், நம்முடைய மாநில அரசுக்கு ஓராண்டுக்கு 300 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த 300 கோடி ரூபாய் இழப்பைச் சரி செய்ய அரசு நியாயமாக எடுக்கின்ற முயற்சியை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு எல்லோரும் துணை நிற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதேநேரத்திலே அதைக் கண்டுபிடிப்பதற்காக அரசு நியமித்துள்ள பணியாளர்கள் 286 பேர்தான் என்கிற தகவலும் வந்திருக்கிறது. 286 பேர்களை வைத்துக்கொண்டு 30 இலட்சம் ரேஷன் அட்டைகளுடைய உண்மை அல்லது மாற்று விவரங்களை நீங்கள் எப்படி கண்டுபிடிக்கப் போகின்றீர்கள்? அதை எந்தவகையிலே சீர் செய்யப்போகின்றீர்கள்? ஒரு வகையிலே நமக்கு மத்திய அரசு தந்திருக்கிற புள்ளிவிவரத்தைப் பார்க்கின்றபோது, தமிழக அரசிலே சற்று ஆறுதலாக இருக்கக்கூடிய செய்திகளும் இருக்கின்றன. ஏனென்றால், அகில இந்திய அளவிலே 3.5 விழுக்காடு ரேஷன் அட்டைகள் பொய் அட்டைகள், B.P.L. cards என்று நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரே பாராளுமன்றத்திலே தகவல் தந்திருக்கிறார். அவர்கள் 10 கோடி அட்டைகள் வழங்கியதிலே, 3½ கோடி அட்டைகள் போலி அட்டைகள் என்று சொல்லுகிறார்கள்.





ஆகவே, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் என்ன அறிய விரும்புகிறேன் என்று சொன்னால், இந்த போலி ரேஷன் கார்டுகளைத் தடுப்பதற்கு ஒரு வழி இருப்பதாக, நான் சமீபத்திலே இரண்டு, மூன்று கருத்துகளைத் தேடுகின்றபோது கண்டுபிடித்தேன். -- பெரு விரல் அடையாளங்களை இந்த ரேஷன் அட்டைகளிலே பதிய வைக்க முடியுமா? ஏனென்று சொன்னால், இப்பொழுது அமெரிக்காவிலேகூட போலி பாஸ்போர்ட் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரே உண்மையான வழி பெரு விரல் ரேகைகளைப் பதிவு செய்வதுதான். ஆகவே, வருடம் ஒன்றுக்கு 300 கோடி ரூபாயை இழக்கின்றபோது, அந்த ரேஷன் அட்டைகளை வழங்குகின்ற, பெறுகின்ற மக்களுடைய பெரு விரல் ரேகைகளை அந்த ரேஷன் அட்டைகளிலே பதிவு செய்தால், நான் நிச்சயமாக நினைக்கிறேன், 15 விழுக்காடு அல்ல, ஏறக்குறைய 30 விழுக்காடு ரேஷன் அட்டைகள் போலியான அட்டைகள் என்பது தெரியவரும். அதைப்போன்ற முயற்சிகளை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா? அப்படி எடுக்கின்றபோது, சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசு என்ன உத்தரவாதம் தரும் என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2008 நிலவரப்படி, தமிழ்நாட்டில், குடும்பங்களிலே புழக்கத்திலே இருக்கிற குடும்ப அட்டைகள் 1 கோடியே 97 இலட்சத்து 47 ஆயிரத்து 517. இதிலே, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் குடும்பங்களுக்கு விடுபட்ட அட்டைகள் என்ற அடிப்படையிலே 36.59 இலட்சம் அட்டைகள் அப்போது வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக, மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையிலே 2.93 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. 2005-இலே, புழக்கத்திலேயிருந்த குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதுப்பித்து வழங்கப்பட்ட அட்டைகள் 1.49 கோடி. ஆக மொத்தம், அப்போது 2005-இல் 1 கோடியே 89 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. இதிலே ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ELCOT மூலமாகத்தான் இதை நாம் monitoring - மேற்பார்வை இடுகிறோம். அதிலே 3 கட்டமாக தனித்தனி software-லே, தனித்தனி கணினிகளிலே அவை பதியப்பட்டிருந்தன. இந்த ஆட்சி புதிதாகப் பொறுப்பேற்றவுடனே, இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்த வேண்டும், ஒரு software-லே—மென்பொருளிலே கொண்டு வரவேண்டும் என்று

ELCOT-க்கு இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே ஓர் ஆணையிட்டதன்மூலமாக அவை ஒன்றுதிரட்டப்பட்டன. ஒன்றுதிரட்டப்பட்டு, ஒரு software-லே, ஒரு மென்பொருளிலே வருகிறபொழுது, அதிலே கீழ்க்கண்ட அடிப்படையிலே—ஒரே ஒரு முகவரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள், ஒரே முகவரியில் பார்த்தால், ஒரு குடும்பத்திலே, நான்கு, ஐந்து பேரிடம் அட்டைகள் இருக்கும்.

இன்னொன்று, ஒரே முகவரியில்—முகவரி ஒன்றாக இருக்கும், பல பெயர்களிலே அட்டைகள் இருக்கும். உதாரணத்திற்கு, இராமசாமி என்று பார்த்தால், இராமசாமி என்ற பெயரில் 3 அட்டைகள் இருக்கும். இன்னும் ஒன்று, பழைய குடும்ப அட்டைகளின் எண்ணில், ஒரே எண் மட்டும் இருக்கும் அவர் சொன்னதுமாதிரி. ஆக, ஒரே எண்ணில், பல அட்டைகள் இருக்கும். இப்படி வகைப்படுத்தப்பட்டதிலே, software-லே ஒன்றாக ஆக்குகிறபொழுது 34 இலட்சத்து 51 ஆயிரத்து 312 அட்டைகள் கணினிமூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இதைக் கண்டுபிடித்தவுடனே, ELCOT-னுடைய நிருவாக இயக்குநர் என்னிடத்திலே தகவலைச் சொன்னவுடனே, அவற்றையெல்லாம் பிரித்து ஒவ்வொரு வட்டத்திற்கும் தாலுகா அளவிலே யூனிட்டுக்கு, ஒவ்வொரு மென்பொருளிலே தனித்தனி C.D. ஆக எடுத்து, அதை print out கொடுத்து. ஒவ்வொரு தாலுகாவிற்கும் அனுப்பி, நீங்கள் நேரடியாக 34 இலட்சத்தையும் verify செய்ய வேண்டும், தலத் தணிக்கை செய்யவேண்டுமென்று அரசுதான் ஆணையிட்டது. அப்படி அரசு ஆணைப்படி, ஒவ்வொரு குடும்பமாகச் சென்று 2007-இலே பார்க்கப்பட்டதில், 11-4-2008 வரை நேரடியாக அந்த 34 இலட்சத்தையும் எடுத்துக்கொண்டு தணிக்கை செய்ததிலே—அந்த அட்டைகளை வைத்துக்கொண்டு, 30 இலட்சத்து 5 ஆயிரத்து 217 வீடுகளிலே நேரடியாக தணிக்கை செய்தோம். அதிலே 69,770 அட்டைகள்தான் நேரடியாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இராமசாமி என்ற பெயரில் மூன்று அட்டைகள் இருந்தால், மூன்று பெயர்களும் ஒருவரே என்று ELCOT-லே இருக்கிற software சொல்கிறது. ஆனால், நேரடியாகத் தணிக்கை செய்யும்போது, மூன்று பேர்கள் இராமசாமி என்ற பெயரில் தனித்தனியாக இருக்கிறார்கள். ஆனால், அப்படியும் சில தவறுகள் நடந்ததைக் கண்டுபிடித்ததிலே 69,770 அட்டைகளில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு அதன்மூலமாக அதை நிவர்த்தி செய்தோம்.



முற்பகல் 11-05

இன்னொன்று நுகர்வு. ஒரு கடைக்குப் போனால் 100 சதவீதம் நுகர்வு இருக்குமானால்—இங்கேகூட பல சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கடைகளுக்கு ஏன் 100 சதவீதம் பொருட்களை அனுப்பவில்லை என்றெல்லாம்கூட இங்கே குரல் எழுப்பினார்களே, அதுபோன்ற கடைகளை அடையாளம் கண்டு தமிழ்நாட்டிலே அதையும் நாங்கள் நேரடியாக வீடுவீடாகச் சென்று தணிக்கை செய்ததிலே 96,520 அட்டைகள் தவறான அட்டைகள் என்று கண்டுபிடிக்கப்பட்டு மொத்தம் இப்போது 1,66,290 குடும்ப அட்டைகள் போலி என்று கண்டுபிடிக்கப்பட்டு, இன்றைக்கு அவையெல்லாம் ரத்து செய்யப்பட்டன. அதன்மூலமாக இப்போது அரசாங்கத்திற்கு 33.25 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணாச்சி திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். ELCOT நிறுவனத்தின் Chairman திரு. உமாசங்கர் அவர்கள் ஒரு பத்திரிகையிலே செய்தி சொல்லியிருக்கிறாரே, 'software செலவு இரண்டு கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறாரே' என்று சொன்னார்கள். இந்த மென்பொருளையெல்லாம் எங்களுடைய துறையிலே நாங்கள் நேரடியாக இதை மேற்பார்வையிடுவது அல்ல. மென்பொருள்களைப் பொறுத்த அளவிற்கு ELCOT-லேதான் மேற்பார்வையிடுகிறார்கள். அவர் ஏற்கெனவே எங்களுக்கு அனுப்பிவைத்த குறிப்பில் 34 இலட்சம் குடும்ப அட்டைகள் போலியானவை என்று எங்களுக்கு அனுப்பிவைத்த எண்ணிக்கையை வைத்துக்கொண்டு அவர் சொல்லிவிட்டார். ஆனால், நாங்கள் துறையின்சார்பாக இவற்றையெல்லாம் தலத்தணிக்கை செய்து, இவ்வளவுதான் அதன்மூலமாகக் கிடைக்கப்பெற்றது. மற்றவையெல்லாம் original card -ஆகத்தான் இருக்கிறது.

ஆனாலும்கூட நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சரத்பவார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 3 கோடிக்கு மேற்பட்ட போலி அட்டைகள் இருக்கின்றன என்பதை அவர் அறிவித்ததோடு மட்டுமல்லாமல், மாநில அரசுகளுக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதனுடைய முயற்சியாக இரண்டு தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய துறையினுடைய அதிகாரிகளையும், என்னையும் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தி இரண்டு மணி நேரம் அதை ஆய்வு

[திரு. எ.வ. வேலு] [2008 ஏப்ரல் 28

செய்து, எந்தெந்த வகையிலே தொடர்ந்து இந்த bogus card-களை அகற்ற வேண்டும் என்று அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். பரிட்சார்த்தமாக இரண்டு மாவட்டங்களை ஆய்வுக்கு உடனுக்குடன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அடுத்த ஆண்டு புதிய அட்டைகளை வழங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை புதிய அட்டைகளைக் கொடுக்கிறோம். எனவே, புதிய அட்டைகளை அடுத்த ஆண்டு கொடுக்க வேண்டிய அவசியம் வேறு வருகிறது. இப்போது தமிழ்நாடு பூராவும் 30 மாவட்டங்களிலும் தலைவர் கலைஞர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் சொன்ன அறிவுரைகளை ஏற்று, அரசின் சார்பாக தீவிரமாக அதற்கு நடவடிக்கை எடுத்து முழுமையாக போலி அட்டைகளைக் களைவதற்கு இந்த அரசாங்கம் முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, புதியதாக அட்டை கொடுக்கிறபோது, இங்கே அவர்கள் சொன்னார்களே, பல்வேறு வகையிலே—இப்போதெல்லாம் விஞ்ஞானமுறையிலே இந்த அட்டைகள் எல்லாம்—இனி தவறாக, அட்டைகள் வழங்கப்படமுடியாத நிலையிலே—ஏற்கெனவே அட்டைகள் வழங்கினார்கள் என்று சொன்னால், அட்டையை பிடிக்கிற salesman-ஐயோ அல்லது கீழே இருப்பவர்களைத்தான் பிடித்துக்கொண்டிருக்கிறோம். அந்த அட்டை வழங்கிய அதிகாரிமீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரைக்கும் நடைமுறையிலே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அதைத்தான் கேட்டார். அட்டை வழங்குவதில் responsibility யார்? அங்கே இருக்கிற T.S.O.வா? வட்ட வழங்கல் அதிகாரியா? அல்லது D.S.O.—மாவட்ட வழங்கல் அதிகாரியா? சம்பந்தப்பட்டவர்கள் யார்மீதாவது அதற்கு responsibility fix செய்ய வேண்டும், அந்த அட்டை தவறாக வழங்கப்பட்டுவிட்டால், அந்த அதிகாரிமீதுகூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிவுரையை ஏற்று இந்த ஆண்டில் அதற்காக மிக வேகமாகச் செயல்பட்டு அனைத்துப் போலி அட்டைகளையும் களைவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட குடும்ப அட்டைகளில் கை ரேகையெல்லாம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்னும்கூட, இன்னும் advance science எல்லாம் இப்போது வந்திருக்கிறது. ஆக, இனிமேல் இந்த அட்டைகள் genuine அட்டையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் genuine அட்டை வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 28] [திரு. எ.வ. வேலு]

நான் இன்னொன்றை சொல்ல விரும்புகின்றேன். ஒரு குடும்ப அட்டை பெறவேண்டுமென்று சொன்னால் Commissioner Office வரைக்கும் வர வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்பு கொண்டால் அங்கே அட்டை வழங்குகின்ற அளவுக்கு easy-யாக ஒரு நிலைமையை உருவாக்கிவிட்டோம். ஊர்கூடித் தேர் இழுப்பதுபோல தவறான அட்டைகளைக் களைய வேண்டுமென்று சொன்னால், இங்கே குரல் கொடுக்கின்ற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்கு உறுதுணையாக இருந்தால்தான் அகற்ற முடியும். இதற்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவில் இந்த விளக்கம் நம்முடைய அண்ணாச்சிக்கு போதும் என்று நிறைவு செய்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டு முதல் நூற்று ஆறு வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-10

## 5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,933,96,14,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 21, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 233, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9322, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13587, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13817, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14483, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2236, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10732, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13194, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5375, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6433, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9574, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9888, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11930, திரு. தி.க ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12060, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13989*, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *14669*, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15425*, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *16170*, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *17105*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15700*, திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *15943*, திரு. ப. டில்லிபாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *16830*, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1475, டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யாறில் பிரம்மதேசம் ஓச்சேரி மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1736, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள ஒட்டப்பிடாரம்-வெள்ளறம் மற்றும் கவர்னகிரி சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அதை உடனடியாகச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1744, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகரத்தில் உள்ள காவிரிப் பாலத்தை புதியதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1803, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், அரியாவூர் கிராமத்தில் அரியாறு ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1826, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம், வைப்பாறு ஆற்றுப் பாலத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1887, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள தெலுங்கு வீதியை மாநகராட்சிவசம் ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2392, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதற்கும், தரம்வாய்ந்த சாலைகள் அமைப்பதற்கும், ஒன்றியந்தோறும் சாலைகளைக் கண்காணிக்க குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2536, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரில் தற்சமயம் போடப்பட்ட புதிய சாலைகள் அனைத்தும் தற்போது பெய்த மழையினால் கடும் சேதடைந்துள்ளது. அவற்றை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2990, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3145, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, சூரங்காடு-எட்டுபுளிக்காடு பகுதியில் நசுவினி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3150, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் உள்ள வீரபோகம் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3531, திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3567, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3665, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம்-பேர்ணாம்பட்டு-ஆம்பூர் சாலை மற்றும் குடியாத்தம்-மேல்பட்டி-கைலாசகிரி-ஆம்பூர் சாலை இரண்டையும் இருவழிச் சாலைகளாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4023, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கீழ்வல்லம் மஞ்சள் ஆற்றில் பாலம்

கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4054, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொற்கோவில் அமைந்த பிறகு வேலூர் நகரம் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிப்பதால் வேலூரைச் சுற்றி சுற்று வட்டப் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4175, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளை பேரூராட்சி பகுதி, பொன்னன் திட்டு மண்டபம் பகுதியில் கடந்த மழை வெள்ளத்தில் பாலம் உடைந்ததால், அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலன் கருதி அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4899, திருமதி ரா. லீமா றோஸ்.



**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, திருவட்டாறு கூத்தவிளாகம், மூன்றுமடை தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக்க ரூ.1½ கோடி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5492, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் நகரம், காமராஜர் வீதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தவிர்க்க தாலுகா அலுவலகம் எதிரில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6695, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள வத்தலக்குண்டு நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திட விரைவில் புறவழிச்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7484, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் நாசரேத் ரோட்டில் கருமேனி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8878, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, மதுரை-தேனி நெடுஞ்சாலை, வாலாந்தூர் கண்மாய் அருகில் தடுப்புச் சுவர் கட்ட நெடுஞ்சாலைத் துறை நிதி ஒதுக்கீடு செய்தும், தடுப்புச் சுவரை முழுமையாகக் கட்டாததால் விபத்து நடக்கக்கூடுமென பொதுமக்கள் அஞ்சுகிறார்கள். விரைவில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9096, திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9116, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் உட்கோட்டம், அய்யலூரிலிருந்து ஆலம்பட்டி செல்லும் சாலையில் கோடாங்கி சின்னாம்பட்டியில் ஒரு பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9242, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9263, திரு. ஆர்.கே. பாரதிமோகன்.

**திரு. ஆர்.கே. பாரதிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர்-விக்ரவண்டி சாலையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9627, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10078, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகரின் மையப் பகுதியில் உள்ள மதுரை-நெல்லை நெடுஞ்சாலை மிகவும் சேதமடைந்து போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. இச்சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10192, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகள் பழுதடைவதைத் தடுக்கும்வகையில், சாலைப் பணியாளர்கள் அதிக அளவில் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10394, திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10551, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10765, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் உள்ள திருவொற்றியூர் பஞ்சட்டி சாலையுடன் வல்லூர், வட சென்னை அனல் மின் நிலையம், அத்திப்பட்டு, புதுநகர், கத்திவாக்கத்துடன் எண்ணூர் அதிவேக சாலையை இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10917, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம்-தாளம்பட்டி செல்லும் சாலையிலிருந்து அன்னமாக்கரை வழியாக பண்டாரத்தான் வளவில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டடுக்கு கம்பிச் சாலை மற்றும் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11313, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11353, திரு. டி. மூர்த்தி.



**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள தையூர் கிராமத்தில், மழைக் காலங்களில் நடந்து செல்ல முடியாத அளவிற்கு உள்ளதால், கேளம்பாக்கம்-தையூர் சாலையை அகலப்படுத்தி, தரமான தார்ச்சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11469, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11537, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையிலுள்ள வைகை மேம்பாலத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11827, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள சர்க்கரை ஆலையிலிருந்து பெறப்படும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்ட நிதியை, தொகுதியிலுள்ள சாலைகளை மேம்பாடு செய்ய ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11862, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் ஒன்றியத்தில், சமுசிகாபுரம்-கலிங்கப்பட்டி சாலை, மீனாட்சியாபுரம்-தெற்கு மீனாட்சியாபுரம் சாலை, புனல்வேலி-பஞ்சம்பட்டி சாலை ஆகிய சாலைகள் பாரத் நிர்மாண் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், விரைவில் வேலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12466, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், சேரனூர் ஊராட்சிப் பகுதியில் வெள்ளாற்றின் குறுக்கே கடந்த 2005-ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் உடைபட்ட தரைப்பாலங்களை மேம்பாலங்களாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12734, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிப்புத்தூர் முதல் அச்சம்தவிர்த்தாள் சாலையில், அளைந்தலப்பட்டி அருகில் காயக்குடி ஆற்றில் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12804, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, எறையூர் சர்க்கரை ஆலைச் சாலையான கிளியூர் முதல் நன்னை இடையில் உள்ள ஆற்றில் மேம்பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13039, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் உள்ள நெடுஞ்சாலைகளைப் புதுப்பித்து தரமான சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13083, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13144, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13498, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, விளாத்துறை கடலில்

உயர்தரப் பாலம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13618, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆதனூர் கோமல் நபார்டு சாலையைப் புதுப்பித்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13716, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13760, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 47, விஜயமங்கலத்திலிருந்து ஊத்துக்குளி வழியாக திருப்பூர் செல்லும் சாலையை நான்கு வழிச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13778, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.



**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பாலப்பள்ளம் பேரூராட்சியில் மிடாலம் முதல் குற்றுத்தாளி வரை சாலை போடப்பட்டுள்ளது. அதற்கு இணைப்புப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13828, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகரில் தினசரி ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் வகையில், புதிதாகச் சுற்றுச் சாலையை இவ்வாண்டுத் திட்டத்தில் இணைத்து நிறைவேற்றிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14302, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் ஒன்றியம் மற்றும் மேலூர் நகர் ஆகிய பகுதிகளிலுள்ள நெடுஞ்சாலைகள் குண்டுங்குழியுமாக மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இதனால் அடிக்கடி இரு சக்கர மற்றும் சிறிய, பெரிய வாகனங்கள் விபத்துள்ளாகின்றன. எனவே, குண்டுங்குழியுமாக உள்ள சாலைகளைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14912, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்தில் துறையூர், உத்தூர்-எரவாஞ்சேரி வரை நீண்ட நாள் பழுதடைந்துள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14918, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதியில், ஆசாரிப்பள்ளம், சாந்தபுரம் வெள்ளமடி சாலையில் பாம்பன்விளை என்ற இடத்தில் பன்றி வாய்க்காலின் குறுக்கேயுள்ள போக்குவரத்து நிறைந்த மிகக் குறுகிய பாலத்தை மாற்றி புதிய, அகலமான பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14961, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதிக்கு உட்பட்ட அறந்தாங்கி முதல் பட்டுக்கோட்டை வரையுள்ள என்.எச். சாலையில் ஆவணந்தான்கோட்டை முதல் ஆவணம் வரையில் உள்ள சாலையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15024, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலைகள் பழுதாவதைத் தடுக்க, கூடுதல் சாலைப் பணியாளர்களைப் புதிதாகச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15160, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவில் பாபநாசம், காரையாறு வழியாக திருவனந்தபுரம் செல்ல மலைச்சாலை அமைக்கும் கோரிக்கைமீது நடவடிக்கை எடுத்து, தென் மாவட்ட மக்களுக்கு மிகப் பெரிய நன்மையைத் தர, அதை உடனே நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15199, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம்-கோவனூர் சாலையில் உள்ள நாயக்கன்பாளையம் தரைப்பாலத்தை உயர்மட்டப்

பாலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16348, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16814, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தரமான சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16941, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16978, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17044, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17085, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் சாலைகளைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,933,96,14,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் துறை, சிறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும், தெலுங்கிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கலாம் என்று கருதினோம். உறுப்பினர்களுக்குப் படிக்க நேரம் இருக்காது என்பதால், தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டும் அவர்களுக்குப் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை * நான் இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தமிழகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது நான் அவைக் குறிப்பில் படித்ததாகக் கருதி என்று சொல்வதற்கு முன்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டுமல்லாமல், கன்னடம், தெலுங்கு,

---

* 531 முதல் 615 வரையிலான பக்கங்களில் இணைப்பு - I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மலையாளம் போன்ற மொழிகளிலெல்லாம் அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தேன் என்று சொல்லுகிறார். ஏன் நினைத்தார் என்று தெரியவில்லை. இது தமிழ்நாடு. தமிழில் இருப்பதும், ஆங்கிலத்தில் இருப்பதும் பொருத்தமானது. ஆகவே, இல்லாத நடைமுறையை கன்னடத்திலும், மலையாளத்திலும், தெலுங்கிலும் அச்சடிப்பதற்கு ஏன் நினைத்தார் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அது பெருந்தன்மைதான். ஏனென்றால், தமிழேதான் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டுச் சாலைகள் கேரளாவிற்கும், ஆந்திராவிற்கும், கர்நாடகாவிற்கும் போகின்ற காரணத்தினால் அந்த மொழிகளிலெல்லாம் அச்சடிக்கலாம் என்று நினைத்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பக்கத்து உறுப்பினராகிய திரு. கோபிநாத் அவர்கள், தெலுங்கு script வைத்துக்கொண்டுதான் தமிழிலே பேசுகிறார் என்பதை நான் கண்கூடாகக் கண்டேன். ஆகவே, அந்த எண்ணம் தவறானது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் கிடைத்தால், விடமாட்டீர்கள். உட்காருங்கள். திரு. சின்னராஜ். பேசுங்கள் (குறுக்கீடு) No, No.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும், தமிழ் மக்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்கின்ற உணர்வு உயிரோடும், உள்ளத்தோடும் கலந்துவிட்ட எங்கள் இதய தெய்வம், கழகத்தினுடைய காவல் தெய்வம், ஆறு கோடி தமிழ் மக்களுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், இருண்டு கிடக்கின்ற தமிழகத்திற்கு ஒளியூட்ட வருகின்ற முழுமதி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகரிக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி என சமூக வளர்ச்சிக்கும் முக்கியப் பங்கு வகிப்பது சாலைக் கட்டமைப்பு வசதிகளேயாகும். அந்த வகையிலே, சுதந்திர இந்தியாவில் சாலை வசதிகளிலே தமிழகம் மேம்பாடு கண்ட காலம் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்தத் திட்டங்கள் மீதும் போடப்பட்ட சாலைகள் 23,125 கிலோ மீட்டர் நீளமாகும். ஆனால், 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டு காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்ட சாலைகளின் நீளம் 39,918 கிலோ மீட்டர்களாகும். சாலை வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த அளவுக்கு முனைப்போடு செயல்பட்டார்கள் என்பதை இது காட்டுகிறது.

அதுபோல, 2006-2007 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே சாலைகள் மேம்பாட்டுப் பணிக்கு 3,529.90 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால், ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த நீங்கள் அதே ஆண்டில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில், சாலை மற்றும் பாலங்கள் என்ற தலைப்பில் 2,461 கோடி ரூபாயை இதுவரை இல்லாத மிக உயரிய அளவாக, ஒதுக்கீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கிய 3,529.80 கோடி ரூபாய் அதிகமா அல்லது உங்களுடைய அரசு ஒதுக்கிய 2,461 கோடி ரூபாய் அதிகமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மேலும், 500 முதல் 1,000 பேர் வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ஊரக சாலைத் திட்டம்மூலமாகவும், சிறப்பு உறுப்புத் திட்டம்மூலமாகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற்று 3,225.58 கி.மீ. தூரத்திற்கு சாலைப் பணிகளையும், 69 பாலப் பணிகளையும் 451.39 கோடி ரூபாய் செலவில் செய்து முடித்துத் தந்தார்கள். அதேபோல, வங்கியினுடைய கடன் உதவியைப் பெற்று ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு 2,970.85 கி.மீ. நீள சாலைப் பணிகளையும், 409 பாலப் பணிகளையும் ரூ.454.53 கோடி செலவிலே செய்து முடித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை என்பது எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் கோவை-மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை எண் 67 ஆகும். தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்பட்ட இந்த 45 கி.மீ. சாலை, இன்று போக்குவரத்திற்கு அருகதையற்றதாக உள்ளது. ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லுகின்ற இந்தச் சாலை, ஏராளமான தொழிற்சாலைகள், குடியிருப்புகள் அமையப்பெற்ற இந்தச் சாலை, கடந்த இரண்டு ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இதனால் இந்தச் சாலையில் நூற்றுக்கணக்கான மரணக் குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்தக் குழிகளினால், தினந்தோறும் விபத்துகள் ஏற்பட்டு அப்பாவி பொதுமக்கள் உயிர் இழக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு, எனது வாகனத்திற்கு முன் பைக்கில் சென்று கொண்டிருந்த ஒரு பாதிரியார் தனக்கு முன்பு தென்பட்ட ஒரு குழியைத் தவிர்க்க முயன்றபோது, எதிரிலே வந்த பேருந்திலே அடிப்பட்டு என் கண்ணெதிரே உயிரிழந்தார். இச்சம்பவத்தை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இச்சாலையில் இம்மாதிரியான விபத்துகள் நாள்தோறும் நடந்தேறி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இச்சாலையில் நடக்கும் விபத்துகள் பற்றிய புள்ளிவிவரங்களைக் கேட்டுப் பார்த்தீர்களேயானால், மாநிலத்திலேயே, அதிக அளவு விபத்து நடக்கின்ற சாலையாக இது இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

இந்தச் சாலையினைப் பழுதுபார்க்கவும், அகலப்படுத்தவும் கோரி எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா



அவர்களின் ஆணையின்படி ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அங்கேயிருக்கின்ற விவசாயப் பெருமக்கள் எல்லாம் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அங்கேயிருக்கின்ற வழக்கறிஞர்கள் எல்லாம் நடைபயணம் மேற்கொண்டார்கள். அதற்கு மேலாக, அங்கேயிருக்கின்ற சமூக ஆர்வலர்கள் எல்லாம், அந்தக் குழிகளிலே தேசியக் கொடியினை நட்டு, அவர்களுடைய உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்தினார்கள். எந்த ஒரு போராட்டத்திற்கும், தேசிய நெடுஞ்சாலைத் துறை அசரவில்லை. இந்நிலையில், தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லும் இந்தச் சாலையின் அவல நிலையை மிகைப்படுத்திச் சொல்வதாக நீங்கள் நினைக்கக்கூடாது.

கடந்த 2006, 2007 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் அரசு அளித்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில், இச்சாலைக்கு விரிவானதொரு திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, இந்த ஆண்டிலாவது அந்தப் பணியைத் தொடங்கி, அதை விரைவிலே முடித்துக் கொடுக்க வேண்டுமென அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இச்சாலை மேட்டுப்பாளையம் நகரின் மையப் பகுதியில் இருப்பதால், நகரில் போக்குவரத்திற்கு தடை ஏற்படுகிறது. அதுவும் சுற்றுலா சீசனில் உதகைக்குச் செல்கின்ற வாகனங்கள் அதிகமாக வருவதால், அந்த நேரத்தில் மணிக்கணக்கில் போக்குவரத்து ஸ்தம்பிக்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிப்பிற்கு ஆளாகிறார்கள். எனவே, ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட புறவழிச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். மேலும், இந்தச் சாலையில் காரமடையில், ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். இச்சாலையில், அமைய வேண்டிய ஒரே இரயில் மேம்பாலம் இதுதான். ஆகவே இரயில்வே கேட் போடுகின்ற சமயத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இப்பாலம் உதவிகரமாக இருக்கும்.

மேலும் கோவை-சேலம் தேசிய நெடுஞ்சாலை மிக முக்கியமான சாலையாகும். ஆனால், தற்போது இந்தச் சாலை பழுதடைந்துள்ளது. குறிப்பாக, கருமத்தம்பட்டி முதல் பெருந்துறை வரை மிக மோசமான நிலையில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலைத் துறை உடனடியாக இதனை புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலையிலே ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவினை அனைவரும் அறிவார்கள். அப்போது முதல்வராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால

[திரு. ஓ.கே. சின்னராஜ்] [2008 ஏப்ரல் 28

அடிப்படையிலே செயல்பட்டு, சாதனைக் காலமாக, இரண்டு மாத காலத்திலே பாலங்களைக் கட்டி அங்கு புதிய சாலைகளை அமைத்து போக்குவரத்துக்கு வழி வகுத்தார்கள். அப்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் புவியியல் வல்லுனர்கள் இச்சாலையை ஆராய்ச்சி செய்து, இப்பகுதியினுடைய மண்ணினுடைய பிடிப்புத்தன்மை குறைவாக இருக்கின்ற காரணத்தால், மழைக்காலங்களில் நிலச்சரிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது எனக் கூறினார்கள். அதுபோலவே ஒவ்வொரு மழைக்காலங்களிலும் நிலச்சரிவு ஏற்பட்டு, போக்குவரத்து தடைபடுவதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆக, புவியியல் வல்லுனர்களின் ஆய்வின் காரணமாக ஊட்டிக்கு மாற்றுப் பாதை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் ஊட்டிக்கு மாற்றுப்பாதையாக மேட்டுப்பாளையத்திலிருந்து நெல்லித்துறை-பில்லூர்டேம் வழியாக ஊட்டி செல்கின்ற வகையில் சாலை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூர் அணை 15 கிலோ மீட்டர்தான். இதில் நெல்லித்துறை வரை 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலை உள்ளது. மீதமுள்ள 7 கிலோ மீட்டர் தூரம் வனப் பகுதியில் ஜீப், லாரிகள் செல்லக்கூடிய அளவில் உள்ளது. இப்போது 45 கிலோ மீட்டர் சுற்றி பில்லூர் பகுதி செல்வதற்குப் பதில் 15 கிலோ மீட்டரில் சென்றடையலாம். பில்லூரிலிருந்து ஊட்டி வரை செல்கின்ற சாலையை விரிவுபடுத்த வேண்டும். எனவே, இச்சாலை அமைப்பதில் தனிக்கவனம் செலுத்தி உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சாலை வசதி வேண்டிப் போராடிய எனது தொகுதியைச் சார்ந்த கோபனாரி மலைப்பகுதி மக்களுக்கு 18 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச் சாலை ரூ.3 கோடி செலவில் அமைத்துக் கொடுத்து அப்பகுதி ஆதிவாசி மக்களின் வாழ்வில் வளம் சேர்த்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



2008 ஏப்ரல் 28] [திரு. ஓ.கே. சின்னராஜ்]

தமிழ்நாடு-கேரளா மாநில எல்லையாக இருக்கின்ற கோபனாரி கொடிங்கரை ஓடை வரை இச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மறுபுறம் கேரள அரசும் சாலை அமைத்துள்ளது. இடையில் உள்ள இந்த ஓடைமீது உயர்மட்டப் பாலம் கட்டினால் இருமாநில போக்குவரத்திற்கும் வழியேற்படும். மேலும், மேற்குக் கடற்கரைத் துறைமுக நகரான கொச்சி செல்ல இச்சாலை நேர் வழிச் சாலையாக அமையும். அதுமட்டுமின்றி, எதிர்காலத்தில் இச்சாலை தேசிய நெடுஞ்சாலையாகின்ற அளவிற்கு முக்கியத்துவம் பெற்ற சாலையாக ஆகும். ஆகவே, தமிழக-கேரள அரசுகள் இணைந்து உரிய நடவடிக்கை எடுத்து, இந்த உயர்மட்டப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது மேட்டுப்பாளையம் தொகுதியில் 50-க்கும் மேற்பட்ட ஆதிவாசிகள் வசிக்கும் கிராமங்கள் உள்ளன. வனத் துறையின் அனுமதியின்மை காரணமாக பல கிராமங்களுக்கு இன்னும் மின்சார வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. மத்திய அரசு, மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, மத்திய வனத் துறையின் அனுமதி தேவையில்லை என்றும், மாநில அரசே இப்பணிகளைச் செய்ய அனுமதி வழங்கலாம் என்றும் ஓர் ஆணை பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது. அப்படி ஏதாவது அரசாணை இருந்தால், அதன் அடிப்படையில், பில்லூர், அத்திக்கடவு, கோபனாரி, அரக்கடவு பகுதிகளில் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு இந்தச் சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும், கோபனாரி-அரக்கடவு சாலைக்காக கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ரூ.40 இலட்சம் வனத் துறையின்மூலமாக சாலை வசதிக்கு ஒதுக்கியதாக அறிவித்தீர்கள். இப்பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. வனத் துறைமூலம் நிதி ஒதுக்கப்பட்டு, இப்பணிக்கு வனத் துறையே தடையாக இருக்கும் விநோதமான நிலை உள்ளது. எனவே, நிதி ஒதுக்கீடு செய்த இச்சாலைப் பணியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து தண்டிப்பெருமாள் கோவில் வழியாக தாயனூர் சென்றடையக்கூடிய சாலையானது, ஊராட்சி ஒன்றியம்மூலம் மண் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக ரூ. 4.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்து, நபார்டு திட்டத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சாலை அமைக்கப்படும்பட்சத்தில், காரமடை ஒன்றியத்தின் மேற்குப் பகுதி, நீலகிரி மாவட்டத்தின் ஒரு பகுதி, கேரளா மாநிலத்தின் ஒரு பகுதி என பல்வேறு பகுதி மக்களுக்கும் கோவைக்கு செல்ல நேர் வழியாக அமையும். இதனால், தூரமும், நேரமும் குறையும், எரிபொருளும் சிக்கனமாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், இதர மாவட்டச் சாலைகள் என நெடுஞ்சாலைத் துறைமூலம் நிறைவேற்றப்படும் பணிகள் உரிய தரத்துடனும், உரிய கனத்துடனும் இல்லாத காரணத்தால், போடப்பட்ட சாலைகள் போட்ட 6 மாத காலத்திலே புதுப்பிக்க வேண்டிய ஒரு நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஒப்பந்ததாரர்களைக் கேட்டபோது, இந்த அளவுக்குத்தான் தரமான சாலை அமைக்க முடியும் என்று நேரடியாகவே சொல்கின்றார்கள்.

*முற்பகல் 11-30*

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது பேசிய ஆளும் கூட்டணி உறுப்பினர்கள், கடந்த ஆட்சியில் paper roast போலவும், இந்த ஆட்சியில் தோசை போலவும் சாலை போடுகின்றார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் இந்த ஆட்சியில்தான், பண்டைய காலத்திலே சீனத்துப் பட்டு என்று சொல்வார்களே, அந்த சீனத்துப் பட்டு போன்ற மிக மெல்லிய இழை போன்ற சாலைகளை போடுகின்றார்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வட்டம் மற்றும் கோட்ட அளவில் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தீர்கள். அறிவித்து ஓராண்டு ஆகியும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்?

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2005-லே என்னுடைய தொகுதியிலே போடப்பட்ட சாலைகள் அனைத்தும், 2006 தேர்தலுக்குள்ளேயே பழுதடைந்துவிட்டன. அப்படிப்பட்ட சாலைகள் கடந்தகாலத்திலே போடப்பட்டன. இப்பொழுது உண்மையிலேயே தரமான சாலைகள் போடப்படுகின்றன என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டில் எனது தொகுதிக்குட்பட்ட ஒரு சாலை காரமடையிலிருந்து சிறுமலை வரை செல்கின்ற சாலை. 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு போடப்பட்ட சாலை. தற்போது அது ஆறு மாத காலத்திலேயே பழுதடைந்து, அதை பழுதுபார்த்திருக்கின்றார்கள் என்ற செய்தியை நான் இங்கே சொல்லிக்கொள்கின்றேன். 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வட்டம் மற்றும் கோட்ட அளவில் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தீர்கள். அறிவித்து ஓராண்டு ஆகியும் இதுவரை அந்த அமைப்புகள் அமைக்கப்பட்டு, அவை சரியாக இயங்குகின்றனவா என்பதே தெரியவில்லை. அதேபோல, துறையின் பல்வேறு தலைமைப் பொறியாளர்களை ஒருங்கிணைத்து துறைத் தலைவர் - Director General என்னும் புதிய பதவி ஏற்படுத்தப்படும் என்றீர்கள். அதுவும் செயல்பாட்டில் இதுவரை வரவில்லை.

கடந்த 1-7-2007 முதல் ரூபாய் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்பீடு கொண்ட வேலைகளை e-Tender ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 12-ல் கூறியுள்ளீர்கள். ஆனால் இம்முறை மூலம் இதுவரை டெண்டர் எதுவும் கோரப்பட்டதாகத் தெரியவில்லை. (மணியடிக்கப்பெற்றது) அப்படிக் கோரப்பட்டிருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் தார்க்கலவை மையங்கள் நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைத்து, ஒப்பந்ததாரர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்படும் என கடந்த 2006-2007 ஆம் ஆண்டிலேயே அறிவித்தீர்கள். ஆனால் இதுவரை அப்படிப்பட்ட மையங்கள் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆக, மொத்தம் இந்த அரசு, அறிவிப்புகளை மட்டும் அலங்காரமாகச் செய்கின்றதே தவிர, முனைப்பான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

மாநில நெடுஞ்சாலைகளில் 75 சதவீதம் சாலைகளையும், மாவட்ட முக்கியச் சாலைகளில் 65 சதவீதம் சாலைகளையும், இந்திய சாலைக்

கழக நெறிமுறைகளைப் பின்பற்றி மேம்படுத்தப்படும் என அறிவித்துள்ளீர்கள். எனது கோரிக்கை என்னவென்றால், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இருப்பதைப்போல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) சரி, one minute-ல் பேசி முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தோண்டை என்ற கிராமத்தில் கடந்த 3-10-2007 ஆம் தேதியன்று ஆற்றைக் கடக்க முயன்றபோது, பரிசல் கவிழ்ந்து 5 பேர் நீரில் முழ்கி இறந்தனர். அவர்கள் பழுதடைந்த பரிசலில் சென்ற காரணத்தால் அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே பாதிக்கப்பட்ட அக்குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டுமென்று சொல்லி நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை நிறைவு செய்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 ஆண்டுக் கால அரசியல் அனுபவத்தை வைத்து, பொது வாழ்வினுடைய அனுபவத்தை வைத்து, ஏழை எளிய மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பேராசிரியர் என்று சொன்னால் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்த சபைக்கும் பேராசிரியராக விளங்கிக் கொண்டிருக்கின்ற அவை முன்னவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தனக்குக் கொடுக்கின்ற பதவி, பொறுப்புகள் எதுவாக இருந்தாலும், தனித் திறமையோடு அவற்றை வெற்றியோடு நடத்திக் கொண்டிருக்கின்ற, உள்ளாட்சியிலே ஒரு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற அன்புத் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியின் உருவமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையிலே பேச அனுமதியளித்த தங்களுக்கும், இந்த நேரத்திலே, என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



முற்பகல் 11-35

கடந்த 2005 ஆம் ஆண்டு பெய்த மழையில், உள்ளகரம்-புழுதிவாக்கம் பகுதி, மடிப்பாக்கம் பகுதி, பள்ளிக்கரணை பகுதி, வேளச்சேரி பகுதிகளெல்லாம் எப்படித் தண்ணீரால் சூழப்பட்டு, வெள்ளக்காடாகக் காட்சி தந்ததென்பதை நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள், நேரிலே சென்று, அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு, பொதுப் பணித் துறையின்மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகவும், சென்னை மாநகராட்சியின்மூலமாகவும், அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்று, கடந்த கால மழையிலே நாங்கள் சுற்றிப் பார்க்கின்றபோது, அந்தப் பகுதிகளிலே ஒரு துளி தண்ணீர்கூட நிற்காத அளவிற்கு இருந்ததைக் கண்டு, உண்மையிலேயே மக்களெல்லாம் மகிழ்ச்சி அடைந்தார்கள். அதற்காக இந்த நேரத்திலே, அனைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சராக இருந்த, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஹெலிகாப்டரிலே அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்தார்களே தவிர, அந்த மக்களுக்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, திருவான்மியூர் பகுதியிலே எல்.பி. சாலையிலே இப்போது 127 கோடி ரூபாயிலே ஒரு மேம்பாலமும், ஒரு சுரங்கப் பாதையும், அமைக்க நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். பழைய மகாபலிபுரம் சாலையில் மட்டும் 72 கோடி ரூபாய்க்கு பாதாள சாக்கடைத் திட்டமும், அதேபோல, குடி தண்ணீர் திட்டமும், I.T. Corridor-லே இருப்பவர்களுக்காக, நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். தாம்பரம் நகர குடி தண்ணீருக்காக மட்டும், 35 கோடியே 85 இலட்சம் ரூபாயை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். உள்ளகரம் நகராட்சிக்கு குடிதண்ணீருக்காக 28 கோடி ரூபாயும், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக 24 கோடி ரூபாயும் இப்போது ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

உள்ளகரம்-புழுதிவாக்கம் பகுதி, அனகாபுத்தூர் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளுக்கு மட்டும், இரண்டு புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தந்தமைக்கும், இன்றையதினம், நான்கு நகராட்சிகளுக்கும், 9 பேரூராட்சிகளுக்கும், 11 ஊராட்சிகளுக்கும், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஆய்வினை மேற்கொண்டதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, நம்முடைய முன்னணி அமைச்சர்களில், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், தாம்பரம் தொகுதிக்கு மட்டும், 2 துணை மின் நிலையம் அமைத்துத் தந்திருக்கிறார்கள். மாடம்பாக்கம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் 2 துணை மின் நிலையங்கள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். சோழிங்கநல்லூரிலே 2 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாம்பரத்திற்கென்று இரண்டு கோடியே எண்பத்தைந்து இலட்சம் ரூபாய் செலவிலே, ஒரு நீதிமன்றக் கட்டடமும், அதேபோன்று Sub-Court-ம் தனியாக அமைத்துத் தந்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலந்தூர் R.T.O. அலுவலகத்தைத் தனியாகப் பிரித்து, தாம்பரத்திற்கென்று தனியாக ஒரு R.T.O. அலுவலகமும், அதேபோல, 25 புதிய வழித்தடங்களும் அமைத்துத்தந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஒன்றேகால் கோடி ரூபாயிலே 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையும், 40 இலட்சம் ரூபாய் செலவிலே, ஒரு அதிநவீன சலவை இயந்திரமும் அமைத்துத் தந்துள்ளதற்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதிக்கு என்று மட்டும் தனியாக 40 சர்வேயர்களைக் கொண்டு சர்வே பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், தாம்பரத்திற்கென்று தனியாக ஒரு மண்டலத்தைப் பிரித்து வழங்கிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியாக அர்பன் வங்கிக்கென்று மட்டும் 75 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய கட்டடம் கட்டுவதற்காக, அண்ணன் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் நிதி ஒதுக்கித் தந்தமைக்காகவும், அதேபோல, பள்ளிக் கல்வித் துறையிலே 2006-2007 ஆம் ஆண்டிலே இரண்டு பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தந்தும், 2007-2008 ஆம் ஆண்டிலே மூன்று பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தந்தமைக்காகவும் இந்த நேரத்திலே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தேசிய நெடுஞ்சாலைபற்றிப் பேசுகின்றபோது, ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் பேரில் தாம்பரத்தில் 38.5 கோடி ரூபாய் செலவிலே ஒரு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பள்ளிக்கரணையிலே, 12 கோடி ரூபாயிலே ஒரு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தாம்பரம், சானடோரியத்திலே 14 கோடி ரூபாயிலே ஒரு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பல்வேறுபட்ட வளர்ச்சிப் பணிகள் இந்த நேரத்திலே தாம்பரம் தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தமிழகத்திற்கு மட்டும் 4 ஆண்டுகளிலே தேசிய நிதியின் மூலமாக 13,842 கோடி ரூபாய் மத்திய அரசின் மூலமாக வாங்கித் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

தாம்பரம் நகரிலே காந்தி சாலைக்கு மட்டும் 9 கோடி ரூபாயும், இந்த இரண்டு ஆண்டுகளிலே 2 சுரங்கப் பாதைகளும், 400 மீட்டர் கொண்ட புறவழிச் சாலையும் அமைத்துத் தந்ததற்கு இந்த நேரத்திலே மாண்புமிகு அண்ணன் மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலுவிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, இரயில்வே துறையினுடைய இணை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. வேலு அவர்கள், ஒரு சுரங்கப் பாதையும், இரயில்வே மேம்பாலமும் 5 கோடி ரூபாயிலே அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து இப்பொழுது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக அனைத்து அமைச்சர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்பாக இன்றைக்கு, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறுபட்ட பணிகள் இருந்தாலும், தாம்பரம் தொகுதியிலே சாலைப் பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை நேரடியாக ஒரு முதல்வர் பார்த்திருக்கிறார் என்று சொன்னால் அது நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே பெருமையாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறை பல்வேறுபட்ட பணிகளையும் சாதனைகளையும் செய்திருக்கின்றது. இந்தக் குறுகிய கால கட்டத்திலே புதியதாக Schedule-ஐ அமைத்துக் கொடுத்து—கடந்த காலத்தில் இல்லாததைப் போல—2007-2008-க்கு ஆகஸ்ட், செப்டம்பரில்தான் வெளியிடுவார்கள். ஆனால் 2007-2008-க்கு மே மாதம் ஒன்றாம் தேதியே அறிவிக்கப்பட்டது. 2007-2008-க்கு ஏப்ரல் 1-4-லிருந்தே புதிய Schedule Rates-ஐ இன்றைக்கு வழங்கி இருக்கிறார்கள்.

அதைப்போல, விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் பணியாற்றினால் ஒப்பந்த காலம் 18 மாதங்கள் என்றிருந்த நிலை போய், 12 மாதங்களாக மாற்றி, இன்றைக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை என்று மாற்றம் செய்யப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே நான் வரவேற்கின்றேன்.

சென்னை மாநகரத்திலே மட்டும் சுற்றியிருக்கிற வளர்ச்சிப் பணிக்காக தனியாக ஒரு தலைமைப் பொறியாளரை நியமித்திருக்கிறார்கள். அதைப்போல துறை கணினிமயமாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு நெடுஞ்சாலைகளுக்கு என்று அளவுகளை அமைத்து இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை அரசு நெடுஞ்சாலைகளையும் இருவழித் தடங்களாக மாற்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலக வங்கியிலே இருந்து 742 கிலோ மீட்டருக்கு பணி எடுத்து 379 கிலோ மீட்டர் பணி முடித்து உலக வங்கியின் பாராட்டை இந்த நேரத்திலே பெற்றிருக்கிறது.

நம்முடைய மத்திய நெடுஞ்சாலைத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள் சற்றேறக்குறைய 4,500 கிலோ மீட்டர் இரண்டு வழிச் சாலைகளாக இருந்ததை 3,260 கிலோ மீட்டருக்கு அகலப்படுத்துவதற்கு இந்த 4 ஆண்டுகளிலே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே ஒரு செய்தியை நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு நதிகளை இணைப்பதற்காக மாபெரும் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். நதிகளை இணைப்பது எவ்வளவு முக்கியமோ அதைப்போல சாலைகளை இணைப்பது அதைவிட முக்கியமாக



இன்றைக்கு மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. ஆகவே அதை மையமாகக் கொண்டு ஒரு நில வள வங்கியை Highways இலாகாவிற்கு மட்டும் ஏற்படுத்தி, உடனடியாக நிலங்களைக் கையகப்படுத்தினால்தான் வருங்காலத்திலே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாம்பரம் தொகுதி என்று எடுத்துக் கொண்டால், நெடுஞ்சாலைத் துறையில் குறிப்பிட்ட சில பணிகளை மட்டும் பற்றிப் பேச வேண்டும் என்று சொன்னால், வேளச்சேரி பகுதியிலே, விஜயநகரம் பகுதியிலே உடனடியாக ஒரு மேம்பாலத்தை அமைத்துத் தர வேண்டிய நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் பல்லாவரத்திலிருந்து குன்றத்தூருக்கு செல்கிற வழியிலே ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். மேடவாக்கம்-மாம்பாக்கம் சாலையில் மதுரப்பாக்கத்தில் ஒரு தரைப் பாலம் பழுதடைந்த காரணத்தினால் அதை மாற்றி ஒரு புதிய தரைப் பாலத்தை அமைத்து, மழைக் காலத்தில் அப்பகுதிவாழ் மக்கள் படும் சிரமங்களைப் போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மேடவாக்கம், பள்ளிக்கரணை, விஜயநகரம், தரமணி ஆகிய அந்தச் சாலையை 6 வழிச் சாலையாக மாற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். துரைப்பாக்கத்திலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்க புதிய இணைப்புச் சாலை அல்லது ஒரு மேம்பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். மன்னிக்க வேண்டும்.

முற்பகல் 11-45

கிழக்குத் தாம்பரம் புறவழிச் சாலைத் திட்டத்தில், ராஜகீழ்ப்பாக்கத்தில் இருந்து பீர்க்கன்கரணை வரை புதிய சாலை உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, நேரம் முடிந்துவிட்டது (குறுக்கீடு) என்னங்க, 10 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறேன். 10 நிமிடங்கள் பேசி விட்டீர்கள். (குறுக்கீடு) இன்னும் மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டும். Time வேண்டும் இல்லையா. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு, என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவராஜ், one minute. திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் பேசுங்கள், ஒரு நிமிடத்திற்குள் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** பல்லாவரம்-குன்றத்தூர் சாலையை 4 வழிச் சாலையாக மாற்ற வேண்டும். கிழக்குக் கடற்கரைச் சாலையை திருவான்மியூரில் இருந்து அக்கரை வரை 6 வழித் தடமாக மாற்ற வேண்டும். தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட திருநீர்மலை சாலை, பாரதமாதா சாலை, பழைய G.S.T. சாலை மற்றும் காந்தி சாலை ஆகியவற்றை அரசு சாலையாக மாற்ற வேண்டும். NH 45, இரும்புலியூரில் இருந்து G.S.T. சாலை வரை மிகவும் குறுகலாக இருக்கின்றது. அந்தச் சாலையை அகலப்படுத்தி விபத்துகள் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு சில நிலங்களைக் கையகப்படுத்த, நிலத்தைத் தேர்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேடவாக்கம்-மவுண்ட் சாலையை 6 வழிச் சாலையாக மாற்றித் தர வேண்டும். சாலையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, ஒரே ஒரு கருத்து. இன்றைக்கு நான் சட்டமன்ற உறுப்பினராக நின்று பேசிக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால், தாம்பரம் நகரப் பொருளாளர் மறைந்த விசுவநாதன் அவர்கள், எங்களையெல்லாம் உற்சாகப்படுத்தியதன் காரணமாக. அவர் முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களிடம் ஒப்பந்தம் போட்டுவிட்டு இந்த இரும்புலியூர் பகுதியிலே accident—லே இறந்துவிட்டார் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். அதேபோல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜியினுடைய மகன் அந்த இடத்தில்தான் இறந்தார். ஆகவே இதை முக்கியமாக வைத்துக்கொண்டு அந்த இரும்புலியூர் பகுதியை அகலப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.



**திரு. கு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் துறையின் வளர்ச்சிக்கும், போக்குவரத்துச் சேவைக்கும், நெடுஞ்சாலையின் பங்கு இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்த காரணத்தினாலேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்கு இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ.4,179 கோடி ஒதுக்கியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ஏறத்தாழ 61,471 கி.மீ. சாலைகள் பல்வேறு சாலைகளாகப் பராமரிக்கப்படுகின்றன. இதிலே குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், மாவட்ட இதரச் சாலைகள் என்று வருகின்ற 36,510 கி.மீ. சாலைகள்தான், பல இடங்களிலே மிக மோசமான நிலைகளிலே இருந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, அதிலே தனிக் கவனம் செலுத்தி அதிக அளவில் அந்தச் சாலைகளைப் புதுப்பிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வெறும் 1,746 கி.மீ. சாலைகள்தான் இன்றைக்கு கரும்புச் சாலைகள் sugarcane roads என்று இருக்கின்றன. இதற்காக தனியாக ஒரு துறையே sugarcane division என்று தனியாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில், இந்த sugarcane roads-ஐ எடுத்துவிட்டு regular—இலேயே சேர்த்துவிட்டால், இந்தச் சாலைகள் உடனுக்குடன் பராமரிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே துறைத் தலைவர் பதவி என்ற ஒரு பணியிடம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் இதை வேறு மாதிரியாக Director General என்ற பணியிடம் உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே, இந்த ஆண்டே அந்தப் பணியிடம் நிரப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு எனக்கு முன்பு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கூட விபத்து பற்றிக் குறிப்பிட்டார்கள் விபத்து என்பது நாளுக்கு நாள் நெடுஞ்சாலைகளிலே, பல்வேறு இடங்களிலே நடைபெற்று. அதிக அளவிலே மதிப்பு மிக்க மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், 2006-2007 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே 300 இடங்கள் அதிக விபத்து நடக்கும் பகுதி என்று கணக்கிடப்பட்டு,

அதிலே அதி முக்கிய இடங்கள் என்று 50 இடங்கள் கண்டறியப்பட்டு, அந்த 50 இடங்களுக்கு ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு 2 ஆண்டுகள் கழித்துக் கொடுத்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால், அதிலே முடிக்கப்பட்ட பணிகள் என்பது இரண்டே இரண்டு என்றும், மீதி 13 பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்றும், 2 பணிகள் கோர்ட்டிலே நிலுவையிலே இருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் 30 பணிகள் வேறு முடிக்கப்பட வேண்டியதிருக்கிறது. ஆகவே, பணம் ஒதுக்கப்பட்டும் 2 ஆண்டுகளாக 2 பணிகள் மட்டும்தான் முடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஏன் இவ்வளவு மெத்தனம் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

அதைப்போல போக்குவரத்து நெரிசல் என்பது சென்னையில் மட்டுமல்ல, சிறிய நகரங்களிலேகூட தற்பொழுது அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றது. குறிப்பாக, சென்னையிலே நாம் எடுத்துக்கொண்டால் தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கு எங்கள் ஊரிலிருந்து 200 கி.மீ. தூரம்தான். ஊரிலிருந்து புறப்பட்டால் தாம்பரத்திற்கு நான் 2 மணி நேரத்தில் வந்து விடுகிறேன். ஆனால் தாம்பரத்திலிருந்து சென்னைக்கு உள்ளே வருவதற்கு ஏறத்தாழ 1½ மணி நேரம் ஆகின்றது. அதேபோல பெங்களூர் நெடுஞ்சாலையிலே பூந்தமல்லியிலிருந்து சென்னை வருவதற்கு 1½ மணி நேரம் ஆகின்றது. குறிப்பாகப் பார்த்தோம் என்று சொன்னால், போரூர் ரவுண்டானாவில் 20 அல்லது 25 நிமிடங்களாக நாம் நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக போரூர் ரவுண்டானாவிலே மேம்பாலம் கட்டப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Elevated Expressway என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதுரவாயிலிலிருந்து துறைமுகம் வரையிலே 1,468 கோடி ரூபாய் செலவிலே மத்திய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த ஒரு சாலையில் மட்டும் போட்டால் போதாது. சென்னையிலே பல சாலைகளிலே Elevated Expressway அமைக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இப்பொழுது 1 இலட்சம் ரூபாய்க்கு எல்லாம்கூட கார் வர ஆரம்பித்திருக்கிறது. அவை இன்னும் 4, 5 மாதங்களிலே சாலைகளிலே வலம் வரும் என்று



குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தக் கார்கள் வேறு வந்துவிட்டால் வாகன நெரிசல் எப்படி இருக்கும் என்பதை நாம் கணிக்க முடியாது. ஆகவே, இந்த வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு டெல்லியிலேகூட தற்போது ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே Commercial Vehicle-க்கு எல்லாம் Fitness Certificate, F.C.. நாம் கொடுக்கிறோம். அதற்கு 6 மாதங்கள், 1 வருடத்திற்குள் கொடுக்க வேண்டும். ஆனால் பிரைவேட் வாகனங்களுக்கு அதுமாதிரி எந்தக் கட்டுப்பாடும் இடையாது. ஆக, 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தக்கூடிய வாகனங்களுக்கு டெல்லியிலே சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப்போலவே இங்கேயும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மதிப்பீடுகள். Estimate தயார் செய்யும்போது மண்ணின் தன்மைக்கேற்ப அந்த soil இருப்பதற்கு தகுந்தாற்போல் estimate ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எங்கள் கடலூர்-சித்தூர் சாலையில் முதலூர் என்று ஒரு இடம் இருக்கிறது. அதுபோல மேட்டூர்குப்பம் என்று ஓர் இடம் இருக்கிறது. இந்த 2 இடங்களிலே சாலைகள் போடுவோம் என்று சொன்னால் அடுத்த 3 மாதத்தில் அந்த ரோடு sink ஆகி உட்கார்ந்து விடும். தொடர்ச்சியாக இது நடந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி அதிகாரிகளுக்கும் தெரியும். அதுமாதிரி சாலைகளிலே estimate போடும்போது எந்த இடத்தில் sink ஆகிறதோ அந்த இடத்தை strengthen செய்யும் நடவடிக்கையுடன் சேர்ந்தே அந்த estimate செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கழிவுநீர் வாய்க்கால்கள் சில இடங்களில் கட்ட வேண்டியிருக்கும். Highways-ல் நாம் வெறும் ரோடு மட்டும்தான் போடுகிறோம். கழிவுநீர் வாய்க்கால் கட்டுவது இல்லை. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியிலே திருவெண்ணெய்நல்லூர் சாலையில் Highways-ல் ரோடு போட்டிருக்கிறார்கள். அதிலே கழிவுநீர் வாய்க்காலையும் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். இப்போது அந்த ரோடு பக்காவாக நல்ல முறையில் செயல்படுகிறது. ஆகவே, அந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காட்டிலிருந்து தூத்துக்குடி வரையில் செல்கின்ற அந்த Road Sector Project-ல் இன்றைக்குப் பல இடங்களிலே ரோடு போடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆற்காட்டிலிருந்து, திமிரி, தாமரைப்பாக்கம், ஆரணி பகுதிகளிலே இன்னும் தொடங்கப்படாமல்

இருக்கிறது. ஆகவே, அதை உடனே தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சென்னை, கிருஷ்ணகிரி 4 வழிச்சாலையை 6 வழிச்சாலையாக மாற்ற சென்ற பட்ஜெட்டிலே Central Government-லே அறிவித்தார்கள். ஆனால் இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையினுடைய பணிகளும் வேகப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பணிகள் மிகவும் தாமதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

அதைப்போல இன்றைக்கு நாம் நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின்மூலம் பல்வேறு நெடுஞ்சாலைகளை 4 வழிச் சாலைகளாக, 6 வழிச் சாலைகளாக அகலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே நாம் பார்த்தோம் என்று சொன்னால் இப்போது செங்கல்பட்டில் **Toll Plaza** வைத்திருக்கிறார்கள். அங்கே பார்த்தால் காருக்கு 20 ரூபாய், அதுவே அன்றைக்குத் திரும்பி வருவது என்று சொன்னால் 30 ரூபாய். வேனுக்கு 40 ரூபாய், திரும்பி வந்தால் 60; லாரி, பஸ் போன்றவைகளுக்கு 85, திரும்பி வந்தால் 128; **Container Lorry**-க்கு 185, திரும்பி வந்தால் 278. இப்பொழுது திண்டிவனத்திலிருந்து உளுந்தூர்பேட்டை வரை ஒரு பகுதியாகவும், உளுந்தூர்பேட்டைக்கு அப்பால் பெரம்பலூரிலிருந்து திருச்சி வரை ஒரு பகுதியாகவும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, சென்னையிலிருந்து திருச்சி போகிற சாலையில் 4 இடங்களில் **Toll Plaza** வைத்து வசூலித்தால் கிட்டத்தட்ட ஒரு லாரிக்கு 340 ரூபாய் கொடுக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஆகவே, இதைக் குறைத்து ஒரே இடத்தில், இப்போது செங்கல்பட்டிலே முதலிலேயே வாங்கிவிட்டோம் என்று சொன்னால், அந்த வண்டி திருச்சிக்குப் போகிறது என்று சொன்னால், திருச்சி வரையில் வாங்க வேண்டியதில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். (குறுக்கீடு) அதைப்போல, பூவிருந்தவல்லி பை-பாசிலேயும் அதேமாதிரி இருக்கிறது. அதேமாதிரி, கிழக்குக் கடற்கரைச் சாலையிலே இரண்டு இடங்களிலே toll வாங்குகிறார்கள். அதை ஒரே இடத்தில் வாங்க வேண்டும். ஆகவே, இப்படி சென்னையிலேயிருந்து மதுரைக்கு ஒரு வாகனம் செல்கின்றது என்றால், அது தொடங்குகின்ற இடத்திலேயே முழுமையாக toll வசூல் செய்கின்ற நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



முற்பகல் 11-55

அதைப்போல, அந்த toll plaza-க்களிலேயே இரவு நேரத்திலே அந்த டிரைவர்கள், க்ளீனர்கள் இவர்களெல்லாம் தங்குவதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் அவர்களுக்கென்று ஷெட் கட்டப்பட்டிருக்கின்றது. அதிலே, குளியல் அறை, உணவு விடுதி, போன்ற வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை செயல்படாமல் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்பொழுது இருக்கின்ற கடலூர்-சித்தூர் மாநில நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்பது எங்களுடைய பகுதியினுடைய நீண்டநாள் கோரிக்கை. அதை மத்திய அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இன்னும் அதற்கான ஆணை வெளியிடப்படவில்லை. அந்த ஆணையை வெளியிடுவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியிலே கடந்த ஆண்டு மழை வெள்ளத்தின்போது சேதமடைந்த கெடிலம் ஆற்றின் குறுக்கே பழங்கூருக்கும்-மொகலாருக்கும் இடையேயுள்ள பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மணலூர்பேட்டை-தியாகதுர்கம் சாலையிலே மணலூர்பேட்டையிலே இருக்கக்கூடிய தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, தியாகதுர்கம்-மணலூர்பேட்டை சாலையிலே கீழத்தியனூர் என்ற ஊருக்கு அருகிலே கெடிலம் ஆறு உருவாகின்றது. மழைக் காலங்களிலே வெள்ளம் வந்தால் 400, 500 ஏக்கர் நெற் பயிர்கள் மழை நீரில் மூழ்கி விடுகின்றன. அதனால், உடனடியாக அங்கே ஒரு சிறு பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, திருக்கோவிலூருக்கும் அரகண்டநல்லூருக்கும் இடையே இருக்கக்கூடிய தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு பழைய தரைப் பாலம் இருக்கின்றது. இப்போதுதான், ஒரு 6 மாதங்களுக்கு முன்னால், 5 இலட்சம் ரூபாய் செலவு செய்து அதைச் சீரமைத்தார்கள். இப்போது வெள்ளம் வந்தது, ஒரு மாதத்திற்கு முன்னால். அந்த ரோடு முழுவதும் போய்விட்டது.

அது ஒரு மாற்றுச் சாலையாக இருக்கின்றது. அரகண்டநல்லூர் Marketing Committee-க்குப் போவதற்கு அதுதான் ஏற்ற சாலைத் தரைப்பாலம். அதையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ், உரையை முடியுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** அரியலூர் தொகுதியிலே, அம்பலக்கட்டளைக்கும் சுண்டக்குடிக்கும் இடையிலே மருதையாற்றிலே ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்திலிருந்து தமிழக மக்களுக்கு மட்டும் அல்லாது இந்திய வாழ்மக்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்தும், போராடியும், உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இட ஒதுக்கீடு இந்திய அளவில் பெற்றுத் தந்த எங்களது குடும்பத் தலைவர், தமிழ்க் குடிதாங்கி, மருத்துவர் அய்யா, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்ன அய்யா, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்னார் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் என் நன்றியினைச் சொல்லி, பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்குச் சாலைகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதை உணர்ந்து நமது அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் 31,698 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்த, மேம்படுத்த, புதுப்பிக்க ரூபாய் 6,466 கோடி நிதி ஒதுக்கி பணிகளை நிறைவேற்றியுள்ளது.

இதுபோல், 2,380 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை, கூடுதலாக இருவழித் தடங்களாக மாற்றியும், 343 சிறு மற்றும் பெரும் பாலங்கள், ரூபாய் 214 கோடி செலவில் கட்டப்பட்டும் உள்ளன. வரும் ஆண்டில் ரூ.2,816 கோடியில் 16,476 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தவும், 1,350 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை இருவழித் தடமாகவும், 254 சிறு, பெரும் பாலங்கள் கட்டி முடிக்கவும் இதோடு சாலைகள் பராமரிக்க ரூபாய் 855 கோடியும், ஆக மொத்தம் இந்த



ஆண்டிற்கு நெடுஞ்சாலைத் துறைக்கு என ரூபாய் 4,179 கோடி நிதி ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

அதேவேளையில், நெடுஞ்சாலைத் துறைக்கு நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சக அமைச்சர் பெருமக்களுக்கும் மாண்புமிகு முதல்வருக்கும் தனித்தனியாக மடல் எழுதி, நெடுஞ்சாலைத் துறையின் சிறந்த செயல்பாட்டிற்குத் தங்களது மேலான ஆலோசனைகளையும், கருத்துகளையும் எடுத்துச் சொல்லுங்கள் என்று மடல் எழுதி, அதே வேளையில் நிதியைக் கொண்டு பணிகளைத் திறம்படச் செய்வதைக் காட்டிலும், மதியைக் கொண்டு தமிழகமெங்கும் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் நிலத்தை இருபுறமும் அளந்து, எல்லைக் கற்களை நட்டு, சாலையின் இருபுறங்களிலும் பசுமையான மரக் கன்றுகளை நட்டுப் பராமரித்துவரும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பாராட்டுகிறோம்.

நண்பகல் 12-00

நடுவண் அரசுத் திட்டங்களிலே சிறப்பானதொரு திட்டம் நான்கு வழிப் பாதை, தங்க நாற்கரச் சாலைத் திட்டம் ஆகும். இத்திட்டத்தில், சேலம் முதல் தொப்பூர் வரை சாலைப் பணிகள் குறிப்பிட்ட காலஅவகாசத்தில் முடிக்கப்படாமல், 8 ஆண்டு காலமாக பணிகள் நடந்து வருவதால், அதிக வாகன விபத்து நடந்து, உயிர்ச்சேதம் நடந்தவண்ணமாக உள்ளது. விரைவில் சாலைப் பணிகளை முடித்து பயன்பாட்டிற்கு அரசு கொண்டுவர வேண்டுகிறேன்.

இப்பணியின்போது, எனது சொந்த ஊரான புளியம்பட்டி சாலை உயரமாக அமைந்துவிட்டதால், கிராமத்தின் இருபுறமும் தாழ்வாக உள்ள சாக்கடைக்கழிவுகள் வெளியே செல்ல இயலாமல் உள்ளது. வாய்க்கால் தண்ணீர் சாலையைக் கடக்க இயலாமல் இடையூறாக சாலையின் குறுக்கே உள்ள சிறு பைப்பை அகற்றி, 5 மீட்டர் விட்டம் அகலம் கொண்ட பாலம் அமைத்து, வாய்க்கால் தண்ணீர் செல்லவும், சாக்கடைத் தண்ணீரினை வெளியேற்றவும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் மாநில அரசு நிதி, நபார்டு நிதி, மத்திய அரசு நிதி வழியாகப் போடப்படும் சாலை ஏல முறை கணினி வழியாக நடக்கும் என்பதை வரவேற்கிறோம். இருப்பினும், தற்போது

அதில் குளறுபடி உள்ளது. ஒளிவுமறைவற்ற ஒப்பந்தம் நடைபெற துறை அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கடந்த காலங்களில் சாலைகள் அமைக்க பட்டா நிலங்களுக்கு நெடுஞ்சாலைத் துறையே நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கி 1990 ஆம் ஆண்டு வரை போடப்பட்டதுபோல, வரும் காலங்களிலும் துறை, அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இந்நிலை தற்போது இல்லாததால் நிதி ஒதுக்கீடு, டெண்டர் கோரி சாலைப் பணிகள் செய்யாமல், மீண்டும் நிதி திரும்ப அரசுக்கே செல்கிறது. இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். சாலை அமைக்கத் தேவையான ஜல்லி, கிராவல்களை ஒப்பந்தக்காரர்கள் எடுத்துவர, அரசு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள இடத்தில் பெரும்பாலும் இல்லை. எனவே, 4 வழிப்பாதை ஒப்பந்ததாரர்களுக்கு அரசே ஜல்லி, கிரசர் அமைய, கிராவல் எடுக்க, வழிவகை செய்ததுபோல, இதர சாலை ஒப்பந்ததாரர்களுக்கும் அரசே வழிவகை செய்ய வேண்டும்.

பாரத் நிர்மாண் என்ற திட்டத்தில் அமைக்கப்படும் தார்ச் சாலைகளுக்கு, ஒப்பந்ததாரர்கள் முன்வைப்புத் தொகையாக 10% துறை பிடித்தம் செய்து, 5 ஆண்டுகளுக்குப் பிறகு வழங்கப்படும் என்ற விதி இருப்பதால், பாதைப் பணிகள் பாதித்து நிதி மீண்டும் திருப்பிச் செல்லும் நிலை உள்ளது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதற்கு மாற்றுத் திட்டம் அரசு கொண்டுவந்து, நிதி திருப்பிச் செல்லாமல் சாலைப்பணி முழுமையாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மழைக் காலங்களில் தார்ச்சாலை அமைப்பதை அரசு அறவே தவிர்க்க வேண்டும். வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள நெடுஞ்சாலைகளைக் கண்டறிந்து, அவற்றை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி தரத்தினை உயர்த்தலாம். இதனால் மாநில அரசு சாலைப் பராமரிப்பு செலவைக் குறைக்கலாம். இதனால், மத்திய அரசு நிதியை நமது அரசு அதிகம் பெற வாய்ப்பு ஏற்படும்.

மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் சாலைகளை அமைக்க வனத் துறைச் சட்டம் தடையாக இருப்பதால், சாலை அமைக்க வனத் துறைச் சட்டத்தைத் தளர்த்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சாலைப் பணிகளை நிறைவேற்றும்போது, அவற்றின் தரம் சிறிதும் குறையாமல் போடவேண்டுகிறேன். போட்ட சாலையையே மீண்டும் மீண்டும் உடனே போடுவதைத் தவிர்த்து, சாலை அமைத்த காலத்தைக்



கணக்கிட்டு, அதன் அடிப்படையில் சாலைப் பணிக்கு நிதி ஒதுக்கி பணி செய்யும் முறையை அரசு பின்பற்ற வேண்டுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர், திரு. கு. பிச்சாண்டி தலைமை)

தமிழகத்தில் உள்ள அனைத்துச் சாலைகளிலும் வழிகாட்டும் தகவல்பலகை இரவிலும் ஒளிரும் வண்ணம் ஆங்கிலம் மற்றும் தமிழில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கணிப்பொறியின் உதவியுடன் நெடுஞ்சாலைத் துறை நவீனமயமாக்கப்பட வேண்டும்.

சாலை மேம்பாட்டிற்காக ஸ்மெக் இண்டர்நேஷனல் லிமிடெட் வழங்கிய ஆலோசனைகளான தரக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, சாலைப் பயன்பாட்டாளர் பாதுகாப்பு, துறைக்கான நிதி, திட்டமிடல் ஆகியவை அரசால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறை மற்றும் கிராமப்புற நெடுஞ்சாலைத் துறை வழியாக அமைக்கப்பட்டுள்ள சாலையின் அனைத்து நிலங்களும் வருவாய் கணக்குப் பதிவேடுகளில் பதிவு செய்து, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும். 4 வழிப் பாதை நில ஆர்ஜிதம் செய்ததில், அரசுப் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட (Taurus) தார்சு வீடுகளுக்கு எட்டு ஆண்டுகளாகியும் இதுவரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாதது ஏன்? 4 வழிப்பாதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு, நிலங்கள், இழப்பீட்டுத் தொகை வழங்குவதோடு, இலவச வீட்டுமனைப் பட்டா, இலவச 2 ஏக்கர் நிலம் உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி 45 சாலை ஆய்வாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், பணிவரன்முறையும், ஓய்வூதியமும் இரண்டு ஆண்டுகளாகியும் இதுநாள் வரை முறைப்படுத்தாதது ஏன்? சென்னை மாநகரில் சாலை வசதி போதுமான அளவில்லாமல், வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு காலவிரயம் ஏற்படுகிறது. இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர்க்க, சென்னை மாநகர் போக்குவரத்து நலன் கருதி கூடுதலாக சிறப்பு நிதி ஒதுக்கி, அகலமானதாகவும், தரமானதாகவும் பெரிய சாலைகளை உடனே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-05*

சாலை விபத்தின்போது பாதிக்கப்படுவோர் உடன் சிகிச்சை பெற ஏதுவாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தின் பல இடங்களில் நவீன அறுவை சிகிச்சைக் கருவிகள், இரண்டு ஆம்புலன்ஸ் உட்பட ரூபாய் 1½ கோடி நிதியொதுக்கி, அவசர விபத்து சிசிக்சைப் பிரிவு மையம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். ஆனால், தற்சமயம் ஓமலூரில் கட்டித் திறக்கப்பட்ட மருத்துவமனையில் தேவையான 40 மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் முழுமையாக நியமிக்கப்படவில்லை. எனவே, அரசு மருத்துவர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் உடனே முழுமையாக நியமித்து, மருத்துவமனைகள் நல்லமுறையில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கோவை, ஈரோட்டிலிருந்து சங்ககிரி, தாரமங்கலம் வழியாக பெங்களூருக்குச் சென்றுவரும் ஓமலூர் சாலையை இருவழிச் சாலையாகவும், சேலம் முதல் ஓமலூர் என்.எச். 7 சாலையில் முத்துநாயக்கன்பட்டி பிரிவிலிருந்து ஓமலூர் பேருந்து நிலையம் வழியாக ஆர்.சி. செட்டிப்பட்டி நான்கு வழிப்பாதை வரையிலும் இருவழிப் பாதையாக மாற்றியமைக்க வேண்டுகிறேன்.

சாலைப் பணிகளைப் பார்வையிட ஏதுவாக ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் ஒரு ஜீப் வாகனம் வழங்க வேண்டுகிறேன். நெடுஞ்சாலைத் துறையில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் முழுமையாகத் துறை நிரப்ப வேண்டுகிறேன்.

அதிக நீளச் சாலைகள் கொண்ட கோட்டம் சேலம் மாவட்டம். இதை இரண்டாகப் பிரித்து ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டம் அமைக்க வேண்டுகிறேன். ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் சாலைப் பராமரிப்புப் பணிகளைச் செய்ய சாலை உருளை, லாரி மற்றும் மினி JCP வழங்க வேண்டுகிறேன்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்படாததால், அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட 44 மாத காலத்தினை பணி வரன்முறை செய்ய வேண்டுகிறேன்.

காடையாம்பட்டி ஒன்றியம், கோவிந்தாபுரம், வேப்பாடி அருகே ஒரு பெரிய பாலமும், ஓமலூர் ஒன்றியம், காமலாபுரம் கிழக்குக்காடு அணைமேடு வழியாகச் செல்லும் வாய்க்கால் பகுதியின் குறுக்கே ஒரு சிறு பாலமும் இந்த ஆண்டே கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.



தொப்பூர் நான்கு வழிப் பாதை முதல் தொப்பை ஆறு வழியாக வி.மோட்டூர் வரை 6 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாகவும், மலைவாழ் மக்கள் நலன் கருதி கே.என். புதூர் முதல் கண்ணப்பாடி வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாகவும், டேனிஷ்பேட்டை முதல் ஏற்காடு சாலையைத் தார்ச் சாலையாகவும், டேனிஷ்பேட்டை முதல், குடுவம்பட்டி வழியாக சேலம் வழியாக கோரிமேடு வரை தார்ச் சாலையாகவும், . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** ஒரேயொரு நிமிடம். காமலாபுரம் நான்கு வழிப் பாதை முதல் நாலுகால் பாலம் வழியாக பண்ணப்பட்டி பிரிவு நான்கு வழிப் பாதை வரை தார்ச் சாலையை அகலப்படுத்தவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், இந்த அவைக்கும் ஒரு துயரமான சம்பவத்தை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உறவினர் ஓட்டுநராக இருக்கிறார். அவர் கொல்கத்தாவில் இருந்து திருச்சூருக்கு லாரியை ஓட்டி வரும்பொழுது சித்தூர் மாவட்டம், பாகலா காவல் துறை எல்லைப் பகுதியிலே மர்மக் கும்பலால் கொலை செய்யப்பட்டு, ஓட்டுநரையும், கிளீனரையும் அடித்துக் கொன்றுவிட்டு லாரியைக் கடத்திச் சென்றுவிட்டார்கள். அந்தக் குடும்பம் மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறது. அவர்களுக்குத் தலா இரண்டு பெண்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிறார்கள். மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள். எனவே, அந்தக் குடும்பங்களுக்கு தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், உதவித் தொகை கொடுக்க வேண்டும். வாகனம் வெளி மாநிலங்களுக்குச் செல்லும்பொழுது இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காவண்ணம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். எனவே, இவற்றை கவனத்திலே எடுத்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி புரிய வேண்டும், பதில்கூற வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை எண் 21-ன்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் சமூக நலன், சமூகப் பொருளாதார வளர்ச்சி, மக்கள் குடியமர்வு, நகர வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிப்பதில் சாலைக் கட்டமைப்பு வசதிகள் பெரும் பங்கு வகிக்கிறது.

இத்துறையானது கடந்த 10 ஆண்டுகளில் செயல்பட்டதைவிட தற்பொழுது இரண்டு ஆண்டுகளில் இதன் செயல்பாடுகள் மாநிலத்தில் இருவழிச் சாலைகளும், புதிய சாலைகளும் பாலங்களும் அமைத்திட அதிக நிதியொதுக்கீடு செய்து, பணியாற்றி வருவது பாராட்டுக்குரிய விஷயமாகும்.

எனது அரூர் தொகுதியில்கூட கடந்த 15 ஆண்டு காலமாகப் போடப்படாமல் இருந்த சேலம்-அரூர்-திருப்பத்தூர் மாநில நெடுஞ்சாலையில் இவ்வரசு, இத்துறையின் அமைச்சருடைய சீரிய முயற்சியினால் இவ்வாண்டில் சாலை போடப்பட்டதற்கு இந்தத் தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அமெரிக்கா, இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக ஆசியாவிலேயே முதன்மையாகத் திகழும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி மையம் தமிழகத்தில்தான் உள்ளது. இவ்வாராய்ச்சி மையத்தை பெருங்குடிக்கு மாற்றுவதைத் தவிர்த்து, நெடுஞ்சாலையினுடைய ஆராய்ச்சி வளாகத்திலே அமைத்திட வேண்டுகிறோம்.

பிற்பகல் 12-10

மாநில நெடுஞ்சாலைகளைத் தனியார்மயமாக்குவது என்று இவ்வரசு சாலைகளைப் பராமரிப்புச் செய்திட, தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதாக கூறப்படுகிறது. தருமபுரி மாவட்டம், தொப்பூர்-மேட்டூர்-பவானி-ஈரோடு சாலை 94 கிலோமீட்டரும், அதேபோல் ஓமலூர்-சங்ககிரி-திருச்செங்கோடு-பரமத்தி சாலை 80 கிலோமீட்டரும் தனியாரிடம் ஒப்படைப்பதாகக் கூறப்படுகிறது. கொள்கை விளக்கக் குறிப்பில்கூட பக்கம் 54-ல் பொது - தனியார் பங்கேற்புமூலம் சாலை மேம்பாடு என்று ஒகேனக்கல்-பெண்ணாகரம்-தருமபுரி சாலை உட்பட சாலைகளை அகலப்படுத்துவதில் தனியார்மயத்திற்கு இத்துறை விடுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பரிசீலனை செய்திட வேண்டுகிறது.



இவ்வாண்டின் Peformance Based Maintenance என்ற அடிப்படையில் இத்துறை தனியாரிடம் சாலைகளை ஒப்படைக்க முயற்சிப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கைவிட வேண்டுகிறது.

இத்துறைக்கு நிதியொதுக்கீடு உயர்ந்து கொண்டே வருகிறது. ஆனால் சாலைகளின் தரம் தரமானதாக இருப்பதில்லை. கிராமப்புறங்களில் 6 மாத காலம், 1 வருடக் காலத்திற்குள்ளே சாலைகள் மோசமாகிவிடுகின்றன. இன்னும் மழைக் காலங்களில் சில சாலைகள் அடித்தே செல்லுகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. ஊத்தங்கரை தாலுகா, பாபக்கல் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, 2 ஆண்டுக் காலத்திலே, பெய்த மழையிலே Bridge-ஏ அடித்துச் சென்றிருப்பதை அனைத்து அதிகாரிகளும் அறிவார்கள். தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகளை ஆராய்ச்சி நிலையத்தினுடைய கட்டுப்பாட்டிலிருந்து விலகி, கோட்டப் பொறியாளர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அதிகாரிகளை நியமித்ததன்மூலமே தார்ச் சாலைகளினுடைய தரம் மிகவும் மோசமாகக் குறைந்ததற்குக் காரணம் என்று கூறப்படுவதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 60-ல்கூட தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்வது ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டுச் சொல்கிறேன். அதேபோல் ஆய்வுக் கோட்டங்களில் உள்ள மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு, கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 69-ல் குறிப்பிட்டுள்ள 6 அம்சங்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதில்லை. மாறாக, தனியார்கள் அதன் மதிப்பீடுகளைத் தயாரித்திட ஈடுபடுத்துவதன்மூலம் அரசு பணமும் வீணடிப்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1 கோடியே 5 இலட்சம் வாகனங்கள் ஓடுகின்றனவாம். தினமும் பத்திரிகையைப் பார்த்தால், இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட, அரூர் அருகே விபத்தில் 7 பேர் பலி. இப்படிப் பல விபத்துகளில் வருடத்திற்கு பல நூற்றுக்கணக்கான பேர் இறந்து கொண்டே இருக்கிறார்கள். காரணம் டிரைவர்களின் பொறுப்பில்லாத் தன்மையும், மற்றொன்று சாலைகளின் தன்மையும். மக்கள் பெருக்கத்திற்கேற்ப உயர்ந்து வரும் வாகனப் பெருக்கம்; வாகனப் பெருக்கத்திற்கேற்ப சாலைகளின் பெருக்கம் இன்னும் உயர்த்தப்பட வேண்டும். 50 சதவிகிதமான சாலை விபத்துகள் ஒரு வழிச் சாலைகளில்தான் நடைபெறுவதாக ஆய்வு கூறுகிறது.

எனவே, அனைத்துக் கிராமப்புறச் சாலைகளையும் இரு வழிச் சாலைகளாக்கிட வேண்டுகிறோம்.

அதேபோல், தேசிய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளில் வேகத் தடைகள், வேகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்திட, மனித உயிர்கள் பலியாவதைத் தடுத்திட உரிய நடவடிக்கைகளில் இவ்வரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுகிறோம். அதிக இடங்களில் Service Road-களை ஏற்படுத்திட வேண்டுகிறோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினை மின் வாரியத்துடன் இணைப்போம் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சபையிலே அறிவித்ததை இவ்வரசு நிறைவேற்றிட வேண்டுகிறோம். இக்கழகத்தில் 20 ஆண்டு காலமாகப் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுகிறோம்.

வியாசர்பாடி மேம்பாலம் கட்டுவதை தொடர்ந்து 7 ஆண்டுக் காலமாக எங்கள் அருமைத் தோழர் மகேந்திரன் வலியுறுத்தி வருவதை இந்த ஆண்டிலாவது நிறைவேற்ற வேண்டுகிறோம்.

சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி வரை உள்ள மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்திட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுகிறோம். Road Sector மூலம் டெண்டர் விடப்படும் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் பராமரிப்பு இல்லாததால் மத்திய அரசுதான் பராமரிப்பு என்று பல ஆண்டுக் கணக்கில் கிடப்பில் போடப்பட்டுள்ளதை, மாநில அரசு இதனுடைய பராமரிப்புப் பணிகளை செய்திட வேண்டும். சாலை புதுப்பித்தல் 5 வருடம் என்று உள்ளதை 3 வருட காலத்தில் புதுப்பிக்க வேண்டுகிறோம். அதேபோல், திட்டமிடப்படுதல், சாலைகளினுடைய கம்பி, தார் விலை, கம்பி விலை இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்து உயர்த்திட வேண்டுகிறோம்.

சாலைகளினுடைய ஆயுட்காலம் அதிகரித்திட தண்ணீர் நிற்காமல் வடிந்து செல்லும் இரப்பர் சாலைகளை அரசு மாற்றிட முன்வர வேண்டுகிறோம். திருவட்டாறு தொகுதி, தாமிரபரணியாற்றின் குறுக்கே திருக்குறிச்சி வள்ளக்கடவு பாலம் அமைத்திட 9 கோடி ரூபாய்க்கு திட்டமிடப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. ப. டில்லி பாபு:** மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் 10,000 சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு, ஏறக்குறைய பழிவாங்கப்பட்ட காலமாக 7-9-2002 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினைப் பணிக் காலமாக அறிவித்திட வேண்டுகிறோம். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கரூர் மாநாட்டிலே அறிவித்த ஒரு விஷயத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே நிறைவேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பணியிலே இறந்தவர்களுக்கான வாரிசுப் பணியை உடனடியாக வழங்கிட வேண்டுகிறோம்.

சாலைப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு, 10 ஆம் வகுப்பு வரை படித்த சாலைப் பணியாளர்களுக்கு விதிகளைத் தளர்த்தி சாலை ஆய்வாளர் பணி உயர்வு வழங்கிட வேண்டுகிறோம்.

30 ஆண்டுக் காலமாக இத்துறையில் Record Clerk பதவியில் தகுதியான 196 பேர்களுக்கு பதவி உயர்வு அளித்திட வேண்டுகிறோம்.

சாலைப் பராமரிப்பு, புதிய அணுகுமுறைகள், சாலைப் பொறுப்பு, சாலைப் பணிகள் புத்தகம் ஆகிய விதிகளை நிர்ணயம் செய்து உத்தரவிட வேண்டுகிறோம்.

நெடுஞ்சாலைப் பணியாளர் சிக்கன நாணயச் சங்கத்திலிருந்து பெற்ற கடனுக்கான வட்டி, அபராதத் தொகையை பழி வாங்கப்பட்ட காலத்தில் தள்ளுபடி செய்திட வேண்டுகிறோம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி. (குறுக்கீடு)

**திரு. ப. டில்லி பாபு:** ஒரே நிமிடம், ஒரே நிமிடம். முடித்துவிடுகிறேன். நன்றி சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது பக்கத்து தொகுதியில் இருக்கக்கூடிய, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் வெள்ளையர் காலத்திலே கட்டப்பட்டிருக்கிற அனுமன்தீர்த்தம் பிரிட்ஜ்ஜைத் தரம் உயர்த்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே இந்த ஆண்டு காலத்திலாவது முடிக்க வேண்டுகிறேன்.

அதேபோல். மதுரை எல்லிஸ் நகர் இரயில்வே பாலம் பல ஆண்டு காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றிட வேண்டுகிறோம்.

எனது தொகுதியின் பக்கத்தில் இருக்கக்கூடிய திருவண்ணாமலை அருரை ஒட்டியிருக்கக்கூடிய அம்மாப்பேட்டை-நீப்பத்தூர் பாலம் மூன்று மாவட்டங்களை இணைக்கின்ற பாலம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை நான் வலியுறுத்தியிருக்கிறேன். அதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இரண்டு ஆண்டு காலமாக நின்றுகொண்டிருக்கிறது. ஆக, இந்தக் காலத்திலாவது நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த பேரவையின் மாண்புமிகு மாற்றுத் தலைவருக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துத்கொள்கின்றேன்.

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம். சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்றான் மகாகவி பாரதி. இந்த அரசு பாலங்களையும், சாலைகளையும் மேம்படுத்த எடுக்கும் முயற்சிகளை வரவேற்கின்றேன்.

நன்னிலம் தொகுதியிலுள்ள சியாத்தமங்கை ஊராட்சிப் பகுதி மக்களின் சுமார் 25 ஆண்டு கால கோரிக்கையான முடிகொண்டான் ஆற்றில் பாலம் கட்டுவதற்கு ரூ.1 கோடியே 20 இலட்சம் ஒதுக்கீடு செய்து கட்டுமானப் பணியைத் தொடங்க கடுமையான முன் முயற்சியை மேற்கொண்டு, நிறைவேற்றித் தந்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாலை மேம்பாட்டில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழகத்தில் உள்ள சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், இதர சாலைகள் என்ற வகையில் மத்திய, மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தச் சாலைகளின் அகலமும் தரமும் வித்தியாசம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் சாலை விபத்துகளைத் தவிர்க்க இயலும். மழைநீர் தேங்கி சாலை அடிக்கடி சேதம் அடையாமல் இருக்கும் வகையில் சாலை வடிவமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



தமிழ்நாட்டில் உள்ள தரைப்பாலங்களை மேம்பாலங்களாக அமைக்க திட்டம் உருவாக்க வேண்டும். தமிழகத்தில் நான்கு வழிச் சாலைகள் விரிவுபடுத்தப்பட்டு, பணிகளை முடிக்க வேண்டும். இந்த ஆட்சியில் துறைமுகத் திட்டங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்னிலம் தொகுதியில் பேரளத்தில் இரயில்வே கேட்டைக் கடக்கும் பாதையில் மேம்பாலம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருமருகல் ஒன்றியம் இடையாத்தங்குடி மற்றும் 9 கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கிறார்கள். 18 கிலோ மீட்டர் சுற்றி திருமருகல் வந்துதான் தேவையான பொருள்களை வாங்கிச் செல்ல வேண்டும். திருமலைராஜன் ஆற்றில் ஆதினக்குடி-இடையாத்தங்குடிக்கிடையே அந்த ஆற்றில் பாலம் அமைத்துத் தந்தால், 3 கிலோ மீட்டர் தூரத்தில் ஆற்றைக் கடந்து வந்துவிடுவார்கள். அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. ஆதி திராவிடர் சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் இந்தப் பாலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வாண்டில் இந்தப் பாலத்தைக் கட்டித் தர நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுப்புரையிலே அறிவிக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சிமெண்ட், கம்பி விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் பாலங்கள் டெண்டர் எடுக்க யாரும் முன்வரவில்லை. மறு மதிப்பீடு செய்து தொகையை அதிகப்படுத்தி, உடன் பாலங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு சார்பிலான சிமெண்ட் ஆலையில் உற்பத்தியை அதிகப்படுத்தி பற்றாக்குறையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி விலையைக் குறைக்கப் போவதாகக் கூறினீர்கள். பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய நாங்கள் விரும்புகின்றோம்.

அதேபோன்று சகடமங்கலம் அரசலாற்றிலும், அதேபோல சகடமங்கலம் திருமலைராஜன் ஆற்றிலும் பாலம் கட்டித் தர வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

*பிற்பகல் 12-20*

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, price revision-ஐப்பற்றிய விவரம் தற்போதைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. ஆந்திர அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வருகின்ற நடைமுறை இது. அந்தவகையிலே, நீண்டகால அடிப்படையில் செய்யப்பட்ட பணிகளுக்கு, விலைப் பட்டியல் revision செய்யப்படும் என்று அறிவித்திருப்பது, பணிகளை முடுக்கிவிடும் நோக்கத்திலே நல்லதாக அமையும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே—retrospective aspect—பின்னோக்கி இந்த அரசாணை அளிக்கப்படுமா என்பதனையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருமலைராஜன் ஆற்றில் பாலம்; பரமநல்லூரில் அரசலாற்றில் சிறு பாலம்; நன்னிலத்தில் வாஞ்சியாற்றில் போழக்குடிப் பகுதியில் பாலம்; கொரடாச்சேரி ஒன்றியம், நீலக்குடியில் வெட்டாற்றில் பாலம்; இந்தப் பாலங்களையெல்லாம் இந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; தொடர் கோரிக்கையாக இருக்கிறது. இந்தப் பாலங்களைக் கட்டி, கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சாலைகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையைக் கொண்டதாகும். எனவே, அனைத்துச் சாலைகளையும் அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த செயல்பாட்டு முறைகளை ஆய்வுகள் செய்ய, ஆய்வகத் துணை ஆய்வு மையங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருமருகல் ஒன்றியத்தில், தென்னமரக்குடி-பில்லாலி-மத்தாளங்குடி சாலை 5 கி.மீ.; அதுபோல, மருங்கூர்-துறையூர்-புத்தூர் சாலை 4 கி.மீ.; ஏரவாஞ்சேரி-நாட்டார்மங்கலம் சாலை 3 கி.மீ; திருப்பயத்தங்குடி-வீரபோகம்-மத்தளாங்குடி சாலை 4 கி.மீ.; பரமநல்லூர்-விச்சூர்-மருதாவூர்-சித்தம்பள்-ஏர்வாடி சாலை 6 கி.மீ.;



கொங்கராயநல்லூர்-அம்பல் சாலை 4 கி.மீ.; கோபுராஜபுரம்-வெள்ளப்பாக்கம்-நரிமணம் சாலை 3 கி.மீ. ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு திருத்துறைப்பூண்டி புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. கொள்கை விளக்கக் குறிப்பில் அரசு பரிசிலனையில் இருப்பதாக உள்ளது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் தங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** எனவே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதைத் தவிர்க்க உடனடியாக இவ்வாண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆட்சியில் பணி நீக்கம் செய்யப்பட்ட 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தி, அவர்கள் வாழ்வில் புத்துயிர் வழங்கிய நமது அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிக்கின்ற இந்த வேளையில், நெடுஞ்சாலைத் துறையில் பல ஆண்டு காலமாக பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்)

**திருமதி பி. பத்மாவதி:** ஒரு நிமிடம். சிவகங்கை தொகுதி, காளையார் கோவில் ஒன்றியப் பகுதியில் சுமார் 100 கிராமங்களுக்குச் சாலைகள் இல்லை. அங்கே சாலைகளை உடனடியாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாலை வசதிகளை அமைப்பதும், சாலை வசதிகளை மேம்படுத்துவது என்பதும் இன்றைய காலகட்டத்தில்

மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம், அடிப்படை ஆதாரத்தை மேம்படுத்துவதற்குச் சாலை வசதி இன்றியமையாத ஒன்றாக இப்போது இருக்கிறது. Investment on road is investment on Civilization என்று சொல்வார்கள். எனவே, அப்படிப்பட்ட சாலை வசதி இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் இன்றியமையாததாக இருந்து வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களில் வசித்து வருகிறார்கள். அந்தக் கிராமப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை வசதி மிகவும் முக்கியமானதாக இருந்து வருகிறது. பல கிராமங்களுக்குச் சாலை வசதிகள் அமைக்கப்படவும், எண்ணற்றக் கிராமங்களுக்குச் சாலை வசதிகளைச் செப்பனிட்டுத் தரவேண்டிய அவசியத் தேவையும் இப்போது இருந்து வருகிறது. பல கிராமங்களில் நாம் பார்க்கிறோம்; சாலைகள் அமைக்கப்படுகின்றபோது, metal சாலையாக அமைத்துவிட்டு, நீண்டகாலம் அப்படியே போட்டுவிடுகிறார்கள். அந்த metal சாலைகளில் நடந்து போவதும், சைக்கிள்களில் செல்வதும், மோட்டார் சைக்கிளில் செல்வதெல்லாம் சிரமமாக இருக்கின்றன என்பதை நாம் பார்க்க முடிகிறது. எனவே, metal சாலையாக மட்டும் நிறுத்திவிடாமல், அதனைத் தார்ச்சாலையாக அமைப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில், 2005 ஆம் ஆண்டில், 61,289 கி.மீ. தூரச் சாலைகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

2006-2007 ஆம் ஆண்டு, 61 ஆயிரத்து 420 கிலோ மீட்டர் தூரம் சாலைப் பராமரிப்பில் இருப்பதாகவும் அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டு ஆண்டுகள் கழித்து 61 ஆயிரத்து 471 கிலோ மீட்டர் தூரம்தான் என்றிருப்பதைப் பார்க்கின்றபோது, இந்த இரண்டாண்டு காலத்தில் ஏன் நெடுஞ்சாலைத் துறையினுடைய பராமரிப்புத் தூரம் அதிகரிக்கப்படவில்லை என்பதை இங்கே கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

என்னுடைய திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டிலும், திருமங்கலம்-சோழவந்தான் செல்லும் பன்னப்பட்டி சாலை வளைவுகளாக இருக்கிறது; குறுகிய பாலங்களாக இருக்கிறது.



எனவே, ஒரு வழிச் சாலையாக இருக்கின்ற அந்தச் சாலையை இரு வழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும். கள்ளிக்குடி-கல்லுப்பட்டி சாலையை இருவழிச் சாலையாக அமைப்பதற்கும், அதேபோல, கள்ளிக்குடி-காரியாபட்டி சாலையை இரு வழிச் சாலையாக, இப்போது இரண்டு கிலோ மீட்டர் தூரம் மட்டும் அமைக்கப்பட்டு வருகிறது; அதில் மீதியுள்ள தூரம் முழுவதையும் இரு வழிச் சாலையாக அமைப்பதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் ஒன்றியத்தில் இருக்கின்ற, ஆலம்பட்டியிலிருந்து சேடப்பட்டிக்குச் செல்கின்ற சாலையையும், அதேபோல, புதுப்பட்டியிலிருந்து மங்கள்ரேவு செல்லுகின்ற சாலையையும் இரு வழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐயும், அதேபோல, மதுரை-தூத்துக்குடி நெடுஞ்சாலை எண் 45-பி ஆகிய இரண்டு சாலைகளையும் இணைக்கின்ற திருமங்கலம்-கூடக்கோயில் சாலையை, மாவட்ட இதரச் சாலையாக இருப்பதை, முக்கிய மாவட்டச் சாலையாக தரம் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலத்தின் மையப் பகுதியில் இருக்கின்ற தேவர் சிலையிலிருந்து மதுரை விமான நிலையத்திற்குச் செல்கின்ற அந்தச் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நீண்டநாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. எனவே, அரசு இதனைக் கவனத்தில்கொண்டு, உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்வினைக் குறித்த ஒரு செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திருமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட பெருங்குடி என்ற அந்தப் பகுதியில் அமைந்திருக்கின்றது மதுரை விமான நிலையம். அந்த விமான நிலையத்தின் விரிவாக்க நிகழ்ச்சி கடந்த 26 ஆம் தேதியன்று அங்கே விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி மட்டுமல்லாமல், தொழில்நுட்பப் பூங்காக்களுக்கான அடிக்கல் நாட்டுவிழாவும் நடைபெற்றது. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதல்வர் அவர்களும் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் அங்கே அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். விமான நிலையம் அமைந்திருக்கின்ற பகுதி, திருமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட பெருங்குடி என்ற கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதி. 250 ஏக்கருக்கும் மேற்பட்ட அந்தப் பகுதியில் அந்த விமான நிலையம் அமைந்திருக்கிறது. அதேபோல, அந்தத் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படுகின்ற இடமும் எங்கள் தொகுதிக்கு உட்பட்ட கின்னிமங்கலம் பகுதியில், ஏறத்தாழ 100 ஏக்கர் பரப்பளவில் அங்கே அமைக்கப்படவிருக்கிறது. எனவே, இந்த இரண்டு நிகழ்ச்சிகளும், இந்த இரண்டு அமைப்புகளும் அங்கே திருமங்கலம் தொகுதிக்கு உட்பட்டுதான் இருக்கிறது. ஆனால், மரபுகளெல்லாம் அங்கே மீறப்பட்டிருக்கின்றன. 1982, 1987 மற்றும் 1989-ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட அரசாணைகள் இருக்கின்றன. அரசு நிகழ்ச்சிகள் நடக்கும்போது, சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அழைப்பிதழிலே பதிவு செய்யப்பட வேண்டுமென்று அதில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அங்கே மீறப்பட்டிருக்கின்றன. என்னுடைய பெயர் அந்த இரண்டு அழைப்பிதழ்களிலும் இடம்பெறவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார். (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** ஒரு நிமிடத்தில் நான் சொல்லிவிடுகிறேன். இதுகுறித்து ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 25 ஆம் தேதியே நான் கொடுத்திருக்கிறேன். அதுவும் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விமானம் நிலையம் திருமங்கலம் தொகுதியில் இருக்கிறதா, அல்லது வேறு இடத்தில் இருக்கிறதா என்பதுகூட தெரியாமல் அங்கே அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார்கள் என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பெயரை அழைப்பிதழிலே போடக்கூடாது என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையல்ல. சில நேரங்களிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கிறார்கள்; சில நேரங்களிலே கலந்துகொள்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது அவருடைய விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார். எதிர்காலத்திலே அவருடைய அனுமதியைப் பெற்று அழைப்பிதழிலே அவருடைய பெயர் அச்சடிக்கப்படும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார். (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** இல்லை, time ஆகிவிட்டது. நேரம் இல்லை.

**திரு. வீர. இளவரசன்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார். (குறுக்கீடுகள்)

***திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாய், ஒரு கட்சியின் தலைவர் என்றால் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாய், ஒரு மாநிலத்தின் முதல்வர் என்றால் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாய், மற்ற மாநிலங்களின் முதல்வர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் திகழ்ந்துகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் (மணியடிக்கப்பெற்றது)...

பிற்பகல் 12-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** திரு. ம. இராஜ்குமார், ஒரு நிமிடம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், ஒரு நிமிடத்தில் நிறைவு செய்யுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்தில் நான் முடித்துவிடுகிறேன். இங்கே பேசிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட- மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள் இப்பொழுது, ஒரு உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாக்க

வேண்டிய கடமை இந்த அவைக்கு இருக்கிறது, பேரவைத் தலைவருக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய உரிமையும் அங்கே பறிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். ஆளுங்கட்சி உறுப்பினருக்கு மட்டுமல்ல, கூட்டணிக் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தச் சபைக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது எனக்கு ஏற்பட்ட அவமானமாக நான் கருதவில்லை. ஜனநாயகக் கோட்பாட்டிற்கும், மக்களாட்சித் தத்துவத்திற்கும் இழைக்கப்பட்ட அநீதியாக, அவமானமாக நான் கருதுகிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பெயர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பெயர்கள், மாநிலங்களவை உறுப்பினர் பெயர்கள் எல்லாம் சில இடங்களிலே போடுகிறோம். ஆனால் அவர்கள் வருவதில்லை. எல்லோரும் வருவது என்றால் (குறுக்கீடுகள்) அழைப்பிதழிலே பெயர் போட்டால், நாங்கள் எல்லோரும் வருகிறோம் என்று எந்தக் கட்சி சொன்னாலும் அவர்களுடைய பெயர்களைப் போடுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற முறை இதே மாமன்றத்திலே ஐந்தாண்டுகள் நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். ஆனால் ஒரு நாள்கூட அந்த ஐந்தாண்டு காலங்களிலே என்னுடைய மாவட்டத்திலே ஒரு அழைப்பிதழில்கூட எங்களுடைய பெயர் போடப்பட்டதும் இல்லை, அழைக்கப்பட்டதும் இல்லை. ஆனால் தலைவர் கலைஞர் ஆட்சியில் ஜனநாயக ரீதியாக அனைவரின் பெயரும் போடப்பட்டு அழைக்கப்படுகிறது. எங்களுடைய மாவட்டத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கிறார்கள், ஒருவரைத் தவிர.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லுகிறபோது, நாங்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் வருவதாக இருந்தால் எல்லோருடைய பெயரையும் போடுகிறோம் என்று சொன்னார். விதிமுறைகளில் அப்படி இருக்கிறதா? அரசால் போடப்பட்டிருக்கிற G.O.-விலே பார்க்கிறபோது, வந்தாலும், வரவில்லையென்றாலும் அத்தனை பேருடைய பெயர்களும் அந்தந்த மாவட்டங்களில் நீங்கள் கலந்துகொள்கிறபோது போட்டாக வேண்டும் என்பது விதியிலே இருக்கிறது. அந்த விதிக்கு மாறாக ஒரு அமைச்சர் இப்படி பதில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், ஜனநாயகம் காக்கப்படுகிறதா என்பதைத் தங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளைப் பின்பற்றித்தான் நாங்கள் பெயர்களைப் போடுகிறோம். ஆனால் பல நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளமாட்டேன் என்கிறீர்கள். பெயர்களைப் போட்டு நீங்கள் வரவில்லை என்று சொன்னால் அரசாங்க விழா நடத்துகின்ற எங்களுக்குத்தான் அவமானம். எனவேதான். வருவதாக நீங்கள் வாக்குறுதி தந்தால் நிச்சயமாக நாங்கள் உங்கள் பெயர்களைப் போடுவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதைத்தான் மாண்புமிகு கொறடா அவர்களிடத்திலே நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது பெயர்களைப்போட்டு சில பேர் வருவதில்லை என்று சொன்னார்கள். வருவதும், வராததும் அவரவர்களுடைய விருப்பம். அது வேறு. ஆனால் இதேபோல ஆளுங்கட்சியாக

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது, பெயரைப் போடுகிறபோது இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அன்றைக்கு வந்திருக்கிறார்களா? வந்தாலும், வரவில்லை என்றாலும் பெயரைப் போட வேண்டுமென்ற விதி முறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை பின்பற்றப்போகிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது எங்கள் பெயர்களைப் போட்டதே இல்லை. ஆனால் நாங்கள் இப்போது பெயர்களைப் போடுகிறோம். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், நான் கலந்துகொண்ட கோவை மாவட்டத் தொலைக்காட்சி வழங்கும் நிகழ்ச்சியில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் உட்பட எல்லாக் கட்சி உறுப்பினர்களின் பெயர்களையும் போட்டிருந்தார்கள். ஆனால் வரவில்லை. அதைத்தான் சொல்கிறேன். பெயர்களை நாங்கள் இனிமேல் போடுகிறோம். நீங்கள் வந்தால் வாருங்கள், வரவில்லை என்றால் உங்களுடைய விருப்பம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார். (குறுக்கீடுகள்) சார் இப்படியே போய்க்கொண்டிருந்தால் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடு) திரு. ம. இராஜ்குமார்.

*** திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகவும், ஒரு அரசியல் கட்சித் தலைவர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகவும், ஒரு மாநிலத்தின் முதல்வர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் முத்தமிழறிஞர், மூதறிஞர் உலகத் தலைவர்களுள் ஒப்பற்ற தலைவர், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, நிதிநிலை அறிக்கை என்றால் இப்படித்தான் வழங்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்து கொண்டிருக்கும் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், உள்ளாட்சி என்றால், இப்படித்தான் நல்லாட்சி செய்ய வேண்டும் என்பதற்கு



முன்னுதாரணமாய் திகழும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மத்திய அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் என்றால் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் ஆ. இராசா அவர்களையும் வணங்கி, நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளைப் பதிய வைப்பதற்கு முதலில் உங்களுடைய அனுமதியைக் கேட்டு அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

ஒரு சமுதாயத்தில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களையும் மனதிலேகொண்டு, அந்தச் சமுதாயத்திற்காக கோட்டையிலே நிறைவேற்றப்படும் திட்டங்கள் யாவும் குக்கிராமங்கள் வரையிலும் சென்றடையும்விதமாக, ஒரு நிதிநிலை அறிக்கையை வழங்குவதென்பது, 14 வயதில் பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, இன்று 85 வயதுவரையும் பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ள உங்களால்தான் முடியும் என்பதை மீண்டும் இம்மாமன்றத்தில் பதிய வைத்துக்கொள்கிறேன்.

இந்தச் சமுதாயத்திலே வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும், இந்தச் சமுதாயத்தில் மாணவர்களும் ஓர் அங்கம் என்றால், அந்த மாணவர்களுக்குக் கருவிலேயே சத்தான முட்டைகளை வழங்கி, பள்ளிக் கல்வி முதல் கல்லூரிக் கல்விவரை இலவசக் கல்வியைத் தந்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்தச் சமுதாயத்திலே விவசாயிகள் ஓர் அங்கம் என்றால், அந்த விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் வழங்குவதிலே தொடங்கி, இன்று ஏழாயிரம் கோடி ரூபாய் அளவிற்கான கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழக அரசு. மாறாக, இந்த அரசு, அவர்களை எலிக் கறி தின்னும் நிலைக்குக் கொண்டு செல்லவில்லை என்பதையும் இம்மாமன்றத்திலே பதியவைக்க விரும்புகிறேன்.

இந்தச் சமுதாயத்திலே நெசவாளர்களும் ஓர் அங்கம் என்றால், அந்த நெசவாளர்களுக்காக இலவச மின்சாரத்தை வழங்கியிருக்கிறது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு. மாறாக, அந்த நெசவாளர்களுக்காகக் கஞ்சித் தொட்டி திறக்கும் நிலைக்கு இந்த அரசு கொண்டு செல்லவில்லை என்பதையும் நான் இந்த மாமன்றத்திலே பதியவைக்க விரும்புகின்றேன்.

உச்சகட்டமாக, இந்தச் சமுதாயத்திலே வாழும் பிணம் எரிக்கும் வெட்டியான்களைக்கூட ஓர் அங்கமாகக் கருதி, அவர்களை இந்த அரசு, அரசு ஊழியர்களாக மாற்றியிருக்கிறது. மாறாக, அவர்களைச் சாதியைச் சொல்லித் திட்டவுமில்லை; விமானத்திலேயிருந்து கீழேயிறக்கி விடவுமில்லை. இவ்வாறாக ஒரு சமுதாயத்தில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும், இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அத்தகைய ஒரு தலைவரைத்தான் நாம் வணங்க வேண்டுமேயல்லாமல், (குறுக்கீடு) பேய்க்காற்றிலே கோபுரத்தில் ஏறிய குப்பைகளை அல்ல என்பதையும் இந்த மாமன்றத்திலே பதியவைக்க விரும்புகின்றேன்.

அடுத்ததாக, நெடுஞ்சாலைத் துறை குறித்து எனது கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு, தரமான சாலைகளை அமைத்திட பல்வேறு கட்டத் திட்டங்களை வகுத்து வந்தாலும், ஒப்பந்தக்காரர்களுக்கென்று ஒருசில கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். தற்போது அரசால் வழங்கப்படும் schedule of rates என்று சொல்லப்படும் விலைப்புள்ளியானது, போதுமானதாக இல்லையென்று ஒப்பந்தக்காரர்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது. தற்சமயம் அந்த விதிமுறைகளை அரசு மாற்றியிருந்தாலும், மீண்டும் schedule of rates -ஐ வருடம் ஒருமுறை, பணி எந்த இடத்தில் நடைபெறுகிறதோ, அந்த இடத்திற்கு ஏற்றாற்போல், schedule of rates-ஐ மாற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்யப்படும்பொழுது, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராஜ்குமார், நீங்கள் என்ன எஞ்சினியரா? சரியாக, schedule of rates என்றெல்லாம் பேசுகிறீர்கள்.

**திரு. ம. இராஜ்குமார்:** பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்யும்பொழுது, முன்பெல்லாம் கட்டுமானப் பொருட்களின் சந்தையில் உள்ள ஏற்ற இறக்க விலையைக் கருத்திற்கொண்டு, மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவீதம் difference of cost என்று ஒரு item வழங்கப்பட்டிருக்கும். எப்படி, earth work, sand filling, concrete என்று வரிசையாக வருகிறதோ, அதேபோல், difference of cost என்று ஒரு item estimate-இலேயே இருக்கும். கடந்தகால ஆட்சியில், கசப்பு மருந்து தருகிறேன் என்று சொன்ன பேர்வழிகள், அந்த item-ஐ நீக்கிவிட்டார்கள். Difference of cost என்ற அந்த item-ல் உள்ள பத்து சதவீதத்தையும் சேர்த்து வழங்கினால், பணிகள் தரமாக இருக்குமென்பதையும் என்னுடைய கருத்தாக இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



அதேபோல், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்விதம், percentage tender என்ற முறையிலேயே பெறப்படுகின்றன. பொதுவாக, ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு இரண்டு முறைகள் உண்டு. Percentage tender என்றும், itemwise tender என்றும் இரண்டு விதங்கள் உள்ளன. Percentage tender என்ற முறையைப் பின்பற்றும்போது, மொத்தமாக—உதாரணமாக, ஒரு ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு 10 இலட்சம் என்று இருக்குமானால், ஒப்பந்தக்காரர்களால் 5 சதவீதம் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ குறிப்பிடப்பட்டிருக்கும். இது பொத்தாம்பொதுவாகக் குறிப்பிடும் விதம். Itemwise tender என்ற முறையைப் பின்பற்றினால், ஒவ்வொரு பொருட்களுக்கும், அதாவது ஒவ்வொரு item-மிற்கும் earth work, concrete போன்ற அந்தந்த item-களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன, item-ஐப் பற்றிப் பேசும்போது தடுமாறுகிறீர்களே! சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. ம. இராஜ்குமார்:** அதற்கும் எனக்கும் ஒத்துக்கொள்ளாது. ஒவ்வொரு பொருள்களுக்கும் ஏற்றவாறு ஒப்பந்தக்காரர்கள் விலையைக் குறிப்பிட்டால், பணிகள் சிறப்பாக நடைபெறும் என்பது என்னுடைய கருத்து.

போக்குவரத்துத் துறை சம்பந்தமாக ஒருசில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக மானியக் கோரிக்கையாக இருந்தாலும், போக்குவரத்துத் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளதென்பதால், போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட சில கருத்துகளையும் இம்மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

போக்குவரத்தில் பயணிகளை மட்டுமே ஏற்றிச் செல்லும் நடைமுறை தற்சமயம் உள்ளது. பெரும்பாலான தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், பயணிகளை மட்டுமே நம்பியிராமல், சரக்குகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, குறிப்பாக சென்னையிலிருந்து, மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்கிறது.

அதற்காக ஏராளமான கட்டணங்கள் வசூல் செய்யப்படுகின்றன. எனவே அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் parcel service என்ற

ஒரு வியாபார யுக்தியைக் கையாண்டால் அரசுக்கு நல்ல நிதி வருவாய் கிடைக்கும் என்பதை என்னுடைய கருத்தாக இம்மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-40*

அதேபோல, அதிக தூரம் செல்லும் விரைவுப் பேருந்துகளில் Mobile charger வசதியும் செய்து தர வேண்டுகிறேன்.

சாலைப் பணியாளர்களைப்பற்றி ஒரு கருத்து. தனியார் கட்டுமான நிறுவனங்கள் தங்களின் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் குடைகள் மற்றும் தலைக் கவசங்களை வழங்கியிருப்பதைப்போன்று தமிழக அரசின் சாலைப் பணியாளர்களுக்கும் பாதுகாப்பு உடைகளையும், தலைக் கவசங்களையும் வழங்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதியின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இந்த சின்னஞ்சிறிய, ஆனால் சிங்காரமான பெரம்பலூர் மாவட்டத்திற்கு இரண்டு ஆண்டுகளில் மாவட்டத்தின் அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், 5,000 கோடி அளவிலான சிறப்புப் பொருளாதார மண்டலம், அரசு கலைக் கல்லூரி, அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி, எம்.ஆர்.எப். டயர் தொழிற்சாலை, சிப்காட் தொழில் வளாகம், புறவழிச் சாலை, பாதாள சாக்கடைத் திட்டம், எரிவாயு தகன மேடை, நவீன ஆட்டிறைச்சிக்கூடம், பருத்தி ஆராய்ச்சி மையம் போன்ற திட்டங்களெல்லாம் வகுத்திருந்தாலும், இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் பெரம்பலூருக்கு இன்று மருத்துவக் கல்லூரியை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், மத்திய அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பெரம்பலூர் ஒன்றியத்தில் எனது சொந்த ஊரான இலாடபுரம் கிராமத்திலுள்ள மயில்ஊற்று அருவியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

வட்டாரத் தலைநகரான, வேப்பந்தட்டையில் காவல் நிலையமும், தீயணைப்பு நிலையமும் அமைத்திட வேண்டுகிறேன்.

வேப்பந்தட்டை ஒன்றியத்தில் கல்லாற்றின் குறுக்கேயுள்ள பாலம் மிகவும் அவசியமான ஒன்றாகும். மாண்புமிகு நெடுஞ்சாலைத்



துறை அமைச்சர் அவர்களே நேரில் வந்து இடத்தைப் பார்வையிட்டிருக்கின்றார். அந்த இணைப்புப் பாலப் பணிகளை விரைவில் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மலையாளப்பட்டியிலிருந்து எறையூர் சர்க்கரை ஆலைவரை செல்லும் சாலையின் நீளம் சுமார் 42 கிலோ மீட்டர். அதற்கு இடையிலுள்ள 8 கிலோ மீட்டர் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்ற காரணத்தினால், நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே, அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறையோடு சேர்த்து, இருவழிச்சாலையாக மாற்ற வேண்டுகிறேன்.

பூலாம்பாடியிலிருந்து சென்னைக்கு ஓர் அரசு விரைவுப் பேருந்து வழங்க வேண்டுகிறேன். இதன்மூலம், சென்னைக்குச் செல்ல 40 கிலோ மீட்டர் தூரம் குறைவதோடு, பயண நேரமும் குறையும்.

பெரம்பலூரிலிருந்து கூலித் தொழிலாளர்கள் நிறைய பேர் வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிகின்றனர். எனவே, பெரம்பலூர்-வால்பாறைக்குப் புதிய வழித்தடம் ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

பெரம்பலூரிலிருந்து திருவண்ணாமலை வழியாக திருப்பதிக்கு ஒரு பேருந்து இயக்க வேண்டுகிறேன்.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள பெரம்பலூர் நகராட்சியில் நிரந்தரப் பொறியாளர்கள் இல்லை. கட்டட ஆய்வாளர் போன்ற ஆய்வாளர்கள் இல்லை. எனவே, மாவட்டத் தலைநகரிலுள்ள பெரம்பலூர் நகராட்சிக்குப் போதுமான ஊழியர்களைப் பணியமர்த்த வேண்டுகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும், சார்பதிவாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அப்பணியிடங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிற்கொண்டு, கண்டிப்பாக நிரப்பிட வேண்டுகிறேன்.

பெரம்பலூர் வெள்ளந்தாங்கியம்மன் ஏரி தூர்வாரப்பட்டு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்த ஏரியில் முட்புதர்கள் அகற்றப்பட்டு, தூர்வாரப்படுவதோடு, ஏரி வாய்க்காலில் பாலம் கட்டித்தரவும் வேண்டுகிறேன்.

மாவட்டத் தலைநகரான பெரம்பலூரில் தீயணைப்பு நிலையம் அமைந்துள்ளது. ஆனால் அதற்கான வாகன வசதிகள் எதுவும் இல்லை. திருச்சியிலிருந்து இரண்டு மாற்று வண்டிகள் மட்டுமே உள்ளன. எனவே, இந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு இரண்டு வாகனங்களை உடனடியாக வழங்க வேண்டுகிறேன்.

வளர்ந்துவரும் பெரம்பலூர் நகரில், சிறப்புப் பொருளாதார மண்டலம், எம்.ஆர்.எப். டயர் தொழிற்சாலை போன்றவை அமைந்திருப்பதால், சுற்றுச்சாலை அவசியமாகின்றது. எனவே, பெரம்பலூருக்கு அவசியம் சுற்றுச்சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பெரம்பலூரில் ஓர் அரசு கலைக் கல்லூரி மற்றும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. கலைக் கல்லூரி தொடங்கப்பட்ட முதல் வருடத்திலேயே 1,100 மாணவர்கள் பயின்று வருகின்றனர். எனவே, பெரம்பலூரில் ஒரு அரசு விடுதியை அவசியம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பெரம்பலூர் மாவட்டம் தற்சமயம் பெரம்பலூர் மற்றும் அரியலூர் என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு நெடுஞ்சாலைத் துறைக்கான ஒரு தனிக் கோட்டம் அமைக்க வேண்டுகிறேன்.

மாவட்ட வணிக வரி அலுவலகத்தையும் பெரம்பலூரில் அமைத்திட வேண்டுகிறேன்.

வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

***திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வளர்ச்சியிலே பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கி மத்திய அரசினை மிகச் சிறப்பாக வழிநடத்தி வருகின்ற ஒப்பற்ற தலைவி அன்னை சோனியா காந்தியை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாட்டினுடைய வளர்ச்சி மற்ற துறைகளின்மூலம் இருந்தாலும், தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் மற்ற மாநிலங்களுடன் தொடர்பு ஏற்படுத்தித் தருகின்ற சாலைகளும், பாலங்களும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. கடந்த இரண்டு



வருடங்களில் தமிழகம் பல்வேறு வகைகளில் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. நல்லுறவுகளை ஏற்படுத்துவதில் பாலமாக இருப்பவர் நமது முதலமைச்சர். அந்த வகையிலே மிக முக்கியச் சாலைகள், பாலங்கள், மேம்பாலங்கள் அதிக அளவிலே கலைஞர் ஆட்சியிலே மட்டுமே செய்யப்பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.

இன்றைக்கு, ஒவ்வொரு துறையிலும் புதிய வேலைவாய்ப்பினை உருவாக்கி ஆயிரக்கணக்கான குடும்பங்களில் விளக்கேற்றி வைத்துள்ளீர்கள். குறிப்பாக சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியமர்த்தியது, பணி நியமன தடைச் சட்டத்தைத் திருத்தி அனைத்து காலியிடங்களையும் நிரப்பியது என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையிலே இன்றைக்கு அனைத்து ஏழை, எளிய மக்களின் இல்லங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சி வழங்குகிறவகையிலே, தமிழகத்தில் மின்சார இணைப்பு இல்லாத வீடே இல்லை என்கின்ற பெருமை நம் தமிழகத்திலே இருக்கிறது. முதலிலே என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவந்த மிகப்பெரிய கோரிக்கையும், நானும் இந்த அவையிலே தொடர்ந்து தங்களை வலியுறுத்திய வேண்டுகோளையும் ஏற்று மணல்மேட்டிலிருந்து முட்டத்தை இணைக்கின்ற கொள்ளிடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்க நபார்டு திட்டத்தின்மூலம் ரூ.32.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-45

மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டமாக அறிவிப்பதற்கும், மாவட்டந்தோறும் அமைக்கவிருக்கும் மருத்துவக் கல்லூரியை, மயிலாடுதுறையில் அமைத்திடவும், ஏற்கெனவே, பொறியியல் கல்லூரியை நாகப்பட்டினத்தில் அமைத்திருக்கின்ற காரணத்தினாலே, மருத்துவக் கல்லூரியை மயிலாடுதுறையில் அமைப்பதற்கும், ஆடவர்களுக்கான தனி அரசுக் கல்லூரி அமைப்பதற்கும், குறிப்பாக மிகவும் குறுகிய சாலைகளாக இருக்கின்ற மயிலாடுதுறை நகருக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல நகரங்களுக்கு புறவழிச் சாலை ஏற்படுத்திய இவ்வரசு, மயிலாடுதுறைக்கும் புறவழிச் சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கடந்த இரண்டு கூட்டத்தொடர்களிலும் கேட்டும், தொடர்ந்தும் வலியுறுத்தியும் வருகின்றேன், மயிலாடுதுறைக்கு மேலும் ஒரு புதிய காவல் நிலையமும், காவல் துறை மினி கட்டுப்பாட்டு அறையும், மணல்மேட்டில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கும் ஆவன செய்ய கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளாட்சித் துறையில் பல்வேறு புதிய, புதிய திட்டங்கள் மிகச் சிறப்பான நிர்வாகமான மக்களின் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடைத் திட்டம், நல்ல தரமான குடிநீர் வழங்கும் திட்டம், உலகத் தரத்திற்கு இணையான சாலைகள் அமைக்கும் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக உருவாக்கியிருக்கின்ற உள்ளாட்சியில் நல்லாட்சி செய்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள சாலைகளை, உலகத்தரம் வாய்ந்த சாலைகளாக மேம்படுத்துவதற்கு ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், ராஜீவ் காந்தி சிறப்புச் சரக விளையாட்டு மையத்திற்கு நகராட்சி இடத்தினை அளித்தமைக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, அமைச்சர் அவர்கள் நேரில் வந்து, ஆய்வு செய்து நல்ல இடத்தினைத் தேர்வு செய்து, மயிலாடுதுறை மக்களின் நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றித் தர அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, நான் சட்டமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திய வேண்டுகோளை ஏற்று மானியக் கோரிக்கையின் அறிவிப்பில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், பயிற்சி ஓடு பாதையும் கட்ட ரூ.99 இலட்சம் ரூபாய் அளித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, என் தொகுதியில் மிக முக்கியப் பிரச்சினையான அய்யாவையனாறு ஆற்றினை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி கரைகளை உயர்த்தித் தருவதற்காக, Cauvery Modernisation திட்டத்தின்மூலமாக



68 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என அறியப்பெற்றிருக்கிறேன். ஒவ்வொரு மழை, வெள்ளக் காலங்களிலும் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் தண்ணீரில் மூழ்கி, பல்வேறு இழப்புகள் ஏற்படுகின்றன. மிகவும் பின்தங்கிய கடைமடைப் பகுதியில் இருக்கின்ற இதற்கு நிரந்தரத் தீர்வு காணும்வகையில் இப்பணியினை விரைவில் செயல்படுத்துவதற்கும், மயிலாடுதுறையில் உள்ள மிகப் பழமையான ஓட்டுக் கட்டடத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், அதேபோல பழங்காவேரி ஓடும் இடத்தினை நகராட்சிக்கு ஒப்படைப்பதென பொதுப் பணித் துறை தீர்மானத்தை வரவேற்கின்றேன். மிகவும் மோசமாய் இருக்கின்ற அவ்வாற்றின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரிட, நகராட்சியில் அந்த அளவிற்கு நிதிநிலை இல்லையென்பதால், அரசு அதற்கு தனி கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல 100 ஆண்டுகளுக்கு மேலாக பழமையான கட்டடத்தில் இயங்கிவரும் வட்டாட்சியர் அலுவலகம் போக்குவரத்து நெருக்கடியான சாலையில் அமைந்துள்ளது. அதற்குப் புதிய கட்டடமும், அதே நேரத்தில் கோட்டாட்சியர் இல்லமானது தங்குவதற்கு வசதியில்லாமல் இடிந்த நிலையில் உள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கும், கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் கோரிக்கை வைத்துவருகின்ற மணல்மேடு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தருவதற்கும், நீண்ட காலமாக மணல்மேட்டில் இயங்கி வந்த பத்திரப் பதிவு அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கும், கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமிப்பதற்கும், ஆனந்த தாண்டவபுரம், திருச்சிற்றம்பலம், பாண்டூர் ஆகிய ஊராட்சிகளில் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைப்பதற்கும், நடமாடும் கால்நடை மருந்தகத்தை மீண்டும் இயக்குவதற்கும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மயிலாடுதுறையில் இயங்கிவரும் தனி வட்டாட்சியர் அலுவலகத்தின் பொறுப்பில் மயிலாடுதுறை, கீவலூர், நாகப்பட்டினம், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் ஆகிய தாலுகாக்கள் உள்ளன. இதனால் காலதாமதமும் பல்வேறு சிரமங்களும் ஏற்படுகின்றன. ஆகவே, திருக்குவளையைத் தலைமையிடமாகக் கொண்டு, நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளை உள்ளடக்கிய புதிய தனி வட்டாட்சியர் அலுவலகம் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மணல்மேட்டில் இயங்கிவந்த பஞ்சாலையை மீண்டும் திறப்பதற்கு வேண்டுகோள் வைத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களிடமிருந்தும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்தும் எனக்குக் கடிதம் வந்துள்ளது. அதில் திறப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். பஞ்சாலையாக மீண்டும் திறக்கவில்லையென்றாலும்கூட, சுமார் 40 ஏக்கர் நிலத்துடன் கட்டடங்கள் இருப்பதைப் பயன்படுத்தி, அங்கே அருகிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளின் கரும்புச் சக்கையிலிருந்து பேப்பர், அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு அங்கே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். அதனால் பலருக்கு வேலைவாய்ப்பும், அரசுக்கு வருமானமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல ஆண்டுகளாக நலிவுற்றிருந்த N.P.K.R.R. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நமது அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளாக சுமார் 4.5 டன் வரையில் கரும்பு அரைவைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தாலும் ஆலையில் உள்ள சாலைகள், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு நீர் செல்வதற்கான பைப் லைன் போன்றவற்றை சீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

N.P.K.R.R. கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்புக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டத்தினை தொடங்க தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புதல் அளித்து, அதற்கான மதிப்பீடு தயார் செய்து கரும்பு விவசாயிகளின் பங்கீட்டுத் தொகை கேட்டதற்கு தற்போது விவசாயிகளும் ஒப்புதல் அளித்து பங்கீட்டுத் தொகையில் முதல் தவணையும் அளித்துள்ளனர். அதற்காக, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அதனை விரைவாக செயல்படுத்திட அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாப்படுகை கூடலங்குடி ஓ.டி.ஆர். சாலை மிக மோசமாக உள்ளது. மயிலாடுதுறை பட்டவர்த்தி சாலையில், நீடூரிலிருந்து, அய்யாவையனாறு பாலம் வரை எம்.டி.ஆர். சாலையும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ள சாரங்கபாணி மேம்பாலத்தின் ஓடுதளத்தைப் புதுப்பித்திடவும், சித்தமல்லி மணல்குவாரி செல்லும் சாலையினை சிமென்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேரடியாகக் கடிதம் எழுதி



அவர்களது கோரிக்கை மனுக்களைப் பெற்று, அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டது மட்டுமல்லாமல், யார் யாருக்கு, எந்தெந்தச் சாலைகள் தொகுதியில் உள்ளன என்பதை வரைபடமாகவும் அனுப்பி வைத்து, தொடர்ந்து மாவட்ட அளவில் ஆய்வுக்கூட்டங்களையும் சிறப்பாக நடத்தியதை காங்கிரஸ் கட்சி சார்பில் அமைச்சர் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-50

அதேபோல் கடந்த ஐந்தாண்டுகளாகப் பராமரிப்பில் இல்லாது இருந்த கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் ரூ.303 கோடி வழங்கி இத்திட்டத்தை உருவாக்கியது. குறிப்பாக, கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் 46,000 கிலோ மீட்டர் சாலைக்கு ரூ.4,235 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. அதில் ரூ.497 கோடி ரூபாயில் 871 பாலங்களும், 3,035 கி.மீ. சாலைகளையும் அகலப்படுத்தியுள்ளது. அதேநேரத்தில், நமது அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டாண்டு காலத்தில் ரூ.4,690 கோடியில் 3,740 கிலோ மீட்டர் வரையிலே சாலை போடப்பட்டுள்ளது. அது பாராட்டுக்குரியது. அதைப்போல, ரூ.214 கோடியில் 343 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. அதில் 5,478 கிலோ மீட்டர் சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. நல்ல தரமான புதிய டெக்னாலஜியில் WMM போடப்பட்டிருப்பது என்பது பாராட்டுக்குரியது.

அதேபோல மிகப் பெரிய சாதனையாக கடந்த 40 ஆண்டுகளாக நம்மக்களிடையே இருந்து வந்த கோரிக்கையை ஏற்று நான்கு மிகப் பெரிய உயர்மட்டப் பாலங்களை தமிழகத்தில் அமைப்பதற்கு 121.50 கோடி ரூபாயினை நபார்டு திட்டத்தின்மூலமாக ஏற்று இன்று தொடங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

அதேபோல் கனிம மற்றும் மணல் குவாரிக்குச் செல்கின்ற சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அதனை நபார்டு திட்டத்தின்மூலமாக செயல்படுத்த இருக்கிறார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அன்றைய பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்களை வலியுறுத்தி, தமிழகத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தை ரஷ்யா உதவியோடு நெய்வேலியில் தொடங்குவதற்கு முயற்சி எடுத்தபோது, ரஷ்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் ரஷ்யாவிலிருந்து வரவேண்டிய கனரக இயந்திரங்கள் துறைமுகத்திலிருந்து நெய்வேலி செல்வதற்கு தகுந்த

சாலைகள் இல்லை என்பதால் இந்த நிறுவனம் இங்கே தொடங்க வாய்ப்பில்லை எனத் தெரிவித்தனர். இதனை அறிந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) உங்களது இயந்திரங்கள் வருவதற்கு எத்தனை மாதங்கள் ஆகும் என கேட்டார்கள். ரஷ்ய வல்லுநர்கள் 6 மாதங்களில் வரும் என்றனர். உடனே, நான்கு மாதங்களில் அத்தனை சாலைகளையும் மேம்படுத்துவதோடு வழியில் இருக்கின்ற பாலங்களையும் அகலப்படுத்தித் தருகிறேன் என்று சொல்லி அன்றையதினம் அதைச் செயல்படுத்தியதன் பயனாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கிக்கொண்டிருக்கும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் நமக்குக் கிடைத்தது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன். (குறுக்கீடுகள்) என்ன சார், என்ன? (குறுக்கீடுகள்) எத்தனை பேர் இருந்தால் என்ன சார்? Prescribed time-தானே ஒதுக்க முடியும்?

**திரு. எஸ். ராஜகுமார்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் B.A.C.-யிலேதான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) இப்போது எவ்வளவு நிமிடங்கள் பேசியிருக்கிறார் என்று நினைக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லையே, அவர் 8 நிமிடத்திற்கு மேல் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) நாங்கள்தான் நேரத்தைக் குறித்து வைத்திருக்கிறோமே.

**திரு. எஸ். ராஜகுமார்:** உரையை முடித்து விடுகிறேன். இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ராஜகுமார்:** தற்போது பல்வேறு கிராமங்களை இணைக்கக்கூடிய இணைப்புச் சாலைகள் புதியதாக போடப்பட்டுள்ளன. அந்தச் சாலைகளின் வழியாக புதிய தடம் அமைத்து பேருந்து போக்குவரத்து உருவாகக்கூடிய வகையில் அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொண்டு போக்குவரத்துச் சாலையாக அமைத்தால் இன்னும் பல கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த முடியும்.



தேசிய நெடுஞ்சாலைத் துறைமூலமாக தமிழகத்தில் மட்டும் 13,840 கோடி ரூபாய்க்கு சுமார் 4,500 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் குறிப்பாக 1,193 கோடி மதிப்பீட்டில் 342 கிலோ மீட்டர் தங்க நாற்கர சாலைத் திட்டத்தில் செய்யப்பட்டு, தற்போது அதனையே ஆறு வழிச் சாலையாக மத்திய அரசு இப்போது செயல்படுத்தி இருக்கிறது.

அதைப்போல, வடக்கு, தெற்கு இணைக்கின்ற சாலையினை (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். (குறுக்கீடு) அரை நிமிடம் போதும். 6,693 கோடி மதிப்பீட்டில் சுமார் 129 கிலோ மீட்டர் சாலையினை பலப்படுத்தி இன்றைக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். ராஜகுமார்:** நன்றி மட்டும் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேல் பதில் சொல்லியாக வேண்டும்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை, பாலங்கள் மற்றும் சிறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து பற்றிய மானியக் கோரிக்கையில் பேசுகின்ற பெரும் வாய்ப்பைக் கொடுத்த, எதற்கும் அஞ்சாத உறுதிகொண்ட வீரமங்கையாய், துணிவின் தலைமையகமே, கேடு விளைவிப்பவர்களுக்குப் புயலாகவும், நாடி வருகின்ற நல்லவர்களுக்குத் தென்றலாகவும், பசித்து வருபவர்களுக்கு அறுஞ்சுவை விருந்து வழங்கும் அன்னையாகவும், பகைமை கொண்டோருக்கு எரிமலையாகவும், நல்லாட்சி தந்த நற்செயல் நாயகி, எங்கள் உயிரினும் மேலான எங்கள் புரட்சித் தலைவி, வருங்கால தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, இந்த வாய்ப்பினை வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய பொருளாதாரம் உயர, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளம் பெருக்கி, மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற, கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய, ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதியான உள் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும், நேர்த்தியான சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிந்து வைத்திருந்த

காரணத்தால், எவ்வளவு நிதிப் பற்றாக்குறை இருந்தாலும், கடந்த ஐந்தாண்டு கால அம்மா ஆட்சியில் அவற்றையெல்லாம் சரி செய்து, நெடுஞ்சாலைத் துறையில் மகத்தான சாதனைகளைச் செய்து கொடுத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையுள்ள ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 23,125 கி.மீ. ஆகும். அதேபோன்று அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 435. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை மிகுந்த 2001 முதல் 2006 வரையுள்ள ஐந்தாண்டு கால ஆட்சியில், 2006 மார்ச் மாதம் வரையில் போடப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 48,247 கி.மீ. ஆகும். அதேபோன்று கட்டப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 890. ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியைவிட எங்கள் அம்மா ஆட்சியில் இரண்டு மடங்குகளுக்கு மேல் பணிகள் நடந்திருக்கின்றன என்பதை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையில் கோட்டப் பொறியாளர் அலுவலகம், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் என அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள், ஒப்பந்தக்காரர்கள், அலுவலர்கள் தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமென்றால், சென்னையை நோக்கித்தான் வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகர் போக்குவரத்து நெரிசல் நிறைந்த நகரமாக இருப்பதால், அலுவலர்களின் வேலை, பொதுமக்களின் நேரம் வீணாகின்றது. பொதுப் பணித் துறையில் உள்ள தலைமைப் பொறியாளர் மண்டல அலுவலகம், தென்மாவட்டத்திற்கென மதுரையில் உள்ளதுபோல், நெடுஞ்சாலைத் துறைக்கும் மதுரையில் தலைமைப் பொறியாளர் அலுவலகம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக சாலைகள் மற்றும் பாலப் பணிகள் முடிவடைந்தவுடன் தரக் கட்டுப்பாடு சான்று பெற்றுதான் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்ற நிலையை மாற்றி, தரக் கட்டுப்பாடு சான்று பெறாமலேயே பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. தரக் கட்டுப்பாடு சான்று பெற்றுதான்



ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யும் நடைமுறையை செயல்படுத்தவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியில் வத்தலக்குண்டு-பேரையூர் சாலை கி.மீ. 24/6 உள்ள அன்னமார்பட்டிக்கு ஒரு பாலமும், கி.மீ. 27/10 உள்ள நல்லுத்தேவன்பட்டி பிரிவில் ஒரு பாலமும், உசிலம்பட்டி-திருமங்கலம் ரோட்டில் உள்ள கி.மீ. 24/10, ஏ. ராமநாதபுரத்தில் உள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்துக் கொடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன். வத்தலக்குண்டு-பேரையூர்-கல்லுப்பட்டி சாலை, எண் 154 மாநிலச் சாலையாக உள்ளது. எண் 208 தென்காசி-தேசிய நெடுஞ்சாலையின் இணைப்பில் உள்ளதால், வத்தலக்குண்டு-பேரையூர்-கல்லுப்பட்டி சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

உசிலம்பட்டியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமாக உள்ள தற்போது இயங்கி வரும் பயணியர் விடுதி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சிறிய விடுதியாகும். உயர் பெருமக்கள் தங்குவதற்குச் சிரமமாக உள்ளதால், பெரிய அளவில் பயணியர் விடுதி ஒன்றைக் கட்டிக்கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மாநகரில் அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் மதுரை மாநகர் மக்களுடைய நன்மைக்காக 3 முக்கிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு அனுமதியளித்து, கூடல் நகர் மேம்பாலம் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. அதேநேரத்தில் எல்லீஸ் நகர் பாலப் பணி மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்று வருகின்றது. செல்லூர்-தத்தனேரி பாலம் கடந்த இரண்டு வருட காலமாக பணி நடைபெறாமல் உள்ளது. ஏன் வேலை நடைபெறவில்லை என்ற காரணத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை 49 நீட்சியில் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர் நகரங்களுக்குப் புறவழிச் சாலை அமைக்கப்படும் என சென்ற மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2006-2007 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் பக்கம் 409-ல் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கண்ணாபட்டியில் ரூ.300 இலட்சம் செலவில் ஒரு பாலம் அமைக்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். அதேபோன்று தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, பிள்ளையார்

நத்தத்தில் ரூ.9 கோடி செலவில் ஒரு பாலம் கட்டப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்தப் பணியில் எந்த முன்னேற்றமும் இல்லை. விரைவில் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. பதிலும் அனுப்புவதில்லை. அதிகாரிகள் மெத்தனத்துடனும், அலட்சியப்போக்குடனும் நடந்துகொள்கின்றார்கள். இதற்கு உதாரணம், குரோம்பேட்டை நியூகாலனியைச் சேர்ந்த திரு. சந்தானம் என்பவர் கேட்ட தகவல்களை நெடுஞ்சாலைத் துறையினர் உரிய காலத்தில் கொடுக்காததால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் தருவதில் காலதாமதம் செய்த நெடுஞ்சாலைத் துறை அதிகாரிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றால், இந்த அரசு எந்த அளவுக்கு மெத்தனப் போக்குடன் செயல்படுகின்றது என்பது இதன்மூலம் தெரிகின்றது.

பிற்பகல் 1-00

மேலும், உசிலம்பட்டி தொகுதி, மிகவும் வறட்சியான பகுதி என்பதால், எங்கள் பகுதியிலே விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கின்ற மக்கள்தான் அதிகம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உசிலம்பட்டி பகுதியில், 58 கிராமக் கால்வாய் திட்டப் பணிகள் 1996-இல் ஆரம்பிக்கப்பட்டபோது, ரூ.33.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிவடையாமல் இருந்ததையடுத்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், 1-3-2006 இல் திருத்திய மதிப்பீடாக ரூ.74.70 கோடி என ஒதுக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில், 58 கிராமக் கால்வாய் திட்டப் பணிகள் முடிவடையாமல் உள்ளன. விரைவில் கால்வாய்ப் பணிகளை முடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். ஒரே ஒரு நிமிடம்.

**திரு. இ. மகேந்திரன்:** உசிலம்பட்டி தொகுதியில் அசுவமாநதி அணைத் திட்டம் என்ற ஒரு அற்புதமான திட்டம் உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், இதற்கு ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வேலை நடைபெற்று வந்தது. கடந்த 2 ஆண்டு காலத்தில் வேலை நடைபெறவில்லை. அசுவமாநதி அணைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



மதுரை-தேனி தேசிய நெடுஞ்சாலை 49 நீட்சியில் உள்ள வாலாந்தூர் கண்மாய் வடபுறத்தில் கி.மீ. 31/1 முதல் 31/800 வரை கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி 13-7-2007-ல் தொடங்கப்பட்டது. ஆனால், இதுநாள் வரை முடிவடையவில்லை. ஆகவே, அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 11-4-1974-ல் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றிவருவதற்காக நிறுவப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியில், 1998 முதல் 2001 வரை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் இயங்கி வந்தது. முந்தைய ஆண்டுகளின் வருமான வரி ரூ. 1,099.43 இலட்சம் சேர்த்து நிகர நஷ்டம் ரூ.1,292.14 இலட்சம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததும், 6-3-2003 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டத்தை கூட்டச் செய்து ஆலோசனை வழங்கியதன் அடிப்படையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை இலாபத்தில் இயங்கச் செய்த பெருமை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து கம்பி விலை, ஜெட் வேகத்திலும், சிமெண்ட் விலை விஷம்போலவும் ஏறிவிட்டது. இந்த விலையேற்றத்தினால், 105 பாலங்களின் பணி பாதிப்பு ஏற்பட்டுள்ளது என Builders' Association of India Trust-னுடைய தலைவர் திரு. ராமச்சந்திரன் வேதனையுடன் தெரிவித்துள்ளார். ஒப்பந்ததாரர்களுடைய டெண்டர் தேதியில், கட்டுமானப் பொருட்களின் விலையை star rate குறிப்பிடவேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். இந்த star rate முறையை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பயன்பாட்டாளர்கள் மகிழ்வினைப் பெறுவதற்காக, சாலை ஓரங்களில், ஆங்காங்கே சாலை ஓரப் பூங்காக்கள் வைத்து, இன்றைக்கு அவை பராமரிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. சாலை போடப்படுகின்றபோது, அந்தப் பூங்காக்கள் வைக்கப்படுகின்றன.

பிறகு, அரசு மறந்துவிடுகிறது. எனவே, இந்தப் பூங்காக்களை அரசு பராமரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நான்கு வழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றபோது, பயணிகளின் மகிழ்விற்காகவும், ஓட்டுநர்களுடைய பாதுகாப்பிற்காகவும், ஒவ்வொரு 200 கிலோ மீட்டர் தொலைவிலும், ஓய்வு அறை, உணவு விடுதி, கழிப்பறை வசதிகள் மற்றும் வணிகக் கடைகள் அமைத்துக் கொடுத்தால், விபத்துகள் குறைவதோடு, பயணிகளும் மகிழ்ச்சியாகப் பயணம் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) முடியாது. இப்போது நேரம் 1-03.

*** மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்கான மானியக் கோரிக்கையினை மாமன்றத்தில் மூன்றாவது முறையாக சமர்ப்பிக்க வாய்ப்பளித்தவரும், 'மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்புக்கொள்ளார், கருமமே கண்ணாயினார்' என்ற வரிகளுக்கேற்ப, தமிழ்நாட்டிற்காகவும், தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும், அயராது உழைத்து வருபவருமான, மாண்புமிகு முதல்வர், ஐயா தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அனைவரிடத்திலும் அன்பு காட்டிவரும், நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், '100 இளைஞர்களை என்னிடம் தாருங்கள், இந்தியாவின் சரித்திரத்தை மாற்றிக் காட்டுகிறேன்' என்று சொன்னார் சுவாமி விவேகானந்தர். 1980 ஆம் ஆண்டு தன்னையும் உள்ளடக்கி, 7 இளைஞர்களைக் கொண்ட, இளைஞர் அணியின் அமைப்புக் குழுவினைத் தொடங்கி, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்து, அதன்மூலம் இலட்சக்கணக்கான இளைஞர்களை தன் வசம் கவர்ந்து, அவர்களையும் தன்னலம் கருதாமல் தமிழ் மக்களுக்காக உழைக்கச் செய்து, அதன்மூலம் தமிழக அரசியலில் வரலாற்றை மாற்றியமைத்து, அண்ணன் படை பெருத்ததோ, அவனி சிறுத்ததோ என்று, கடந்த டிசம்பர் மாதம் நெல்லையிலே கழக இளைஞர் அணியினுடைய வெற்றி மாநாட்டை நடத்திக் காட்டியவருமான எங்கள் வழிகாட்டி தளபதியார் அண்ணன் அவர்களுக்கும், என் நன்றியை உரித்தாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-05

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு ஒரு வரலாறு உண்டு. 1967 ஆம் ஆண்டு அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்று, மானியக் கோரிக்கையை இம்மாமன்றத்தில் இரண்டு முறை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து மானியக் கோரிக்கையின் பதிலுரைக்கு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல சோதனைகளைக் கடந்து ஏறத்தாழ இந்த 2 ஆண்டு என்பதைவிட சரியாகச் சொன்னால் நேற்றோடு 714 நாட்கள் இந்த அரசு பல்வேறு சோதனைகளை சாதனைகளாக மாற்றி இன்றைக்குப் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்திருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த காலத்திலே தொகுப்பு ஒப்பந்த முறை, கட்டுமானப் பொருட்களுடைய விலை ஏற்றம், உள்ளாட்சித் தேர்தல், இயற்கைச் சீற்றங்கள் மூன்று முறை பாதிப்புக்குள்ளாக்கிய நேரத்திலும்கூட, பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறது இந்த அரசு. அந்த அடிப்படையில் சொல்லப்போனால் இந்தத் துறையின் மூலமாக We don't just build roads; We build the Nation என்று சொல்லக்கூடிய அளவில் இந்தத் துறையின்மூலமாக சாலைகளையும், பாலங்களையும் மட்டும் உருவாக்கவில்லை, இந்த தேசத்தையும் உருவாக்கி வருகிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்தைப் பொறுத்தளவில் நான்கு வகை உண்டு என்று கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். சாலை வழி, நீர் வழி, இருப்புப் பாதை வழி, வான் வழி என்கிற வகையில் அதிலே பாமர ஏழைகூட முன் பதிவு இல்லாமல் ஏன் நினைத்த நேரத்திலே பயணம் செய்யக்கூடிய ஒரே வழி சாலை வழி. எனவே இதனை ஏழையின் வழி என்றுகூட கூறலாம்.

அதேபோல, இந்திய மக்கள் தொகையில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு சாலை வசதி இந்திய அளவில் 258 கிலோ மீட்டர்களாக உள்ளன. தமிழகத்தில் 286 கிலோ மீட்டர்களாக உள்ளன.

அதேபோல, 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு இந்தியாவினுடைய சாலை வசதி 75 கிலோ மீட்டர்களாகத்தான் உள்ளன. தமிழகத்தில் 146 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற இந்த 2 ஆண்டு காலத்தில் இந்த நெடுஞ்சாலைத் துறையானது சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கு எல்லாம் I.R.C. என்று சொல்லக்கூடிய இந்திய சாலைக் கழகம் என்கிற அமைப்பு டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது; அதனுடைய வழிகாட்டுதலின்படி பல்வேறு பணிகளை நாம் மேற்கொள்கிறோம். அந்த அடிப்படையில் அவர்கள் சொல்கிற இலக்கின்படி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு சாலையைப் பராமரிக்க வேண்டும். அந்த இலக்கை இந்த இரண்டு ஆண்டு காலத்திலே நாம் எட்டியிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த Taylor Nelson Sofres நிறுவனம் தமிழகத்தில் சாலையைப் பயன்படுத்துவோரின் மன நிறைவு தொடர்பான கருத்துக் கணிப்பினையும், கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தி ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது. அந்த கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடு நன்றாக உள்ளது என்றும், 85 சதவீதம் சாலை பயன்படுத்துவோர் நெடுஞ்சாலையில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சாலை வகைப்பாடுகளை இந்த 5 ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 6,475 கிலோ மீட்டர் நீளத்திற்கு வகைப்பாடு மாற்றம் செய்திருக்கிறோம். அதிலே மாவட்ட முக்கியச் சாலையிலிருந்து மாநில நெடுஞ்சாலையாக வகைப்படுத்தப்பட்ட சாலையினுடைய நீளம் 1,902 கிலோ மீட்டர்.



அதேபோல, மாவட்ட இதர சாலைகளிலிருந்து நேரடியாக மாநில நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட சாலையினுடைய நீளம், வகைப்பாடு செய்யப்பட்டதனுடைய நீளம் 761 கிலோ மீட்டர்.

அதேபோல, மாவட்ட இதர சாலையிலிருந்து மாவட்ட முக்கியச் சாலையாக வகைப்பாடு செய்யப்பட்டதனுடைய நீளம் 3,812 என்று சொல்லி மொத்தம் 6,475 கிலோ மீட்டர் சாலை வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் முந்தைய 5 ஆண்டு கால ஆட்சியில் வெறும் 3,157 கிலோ மீட்டர் சாலைகள்தான் வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டன.

அதேபோல, இங்கே பல உறுப்பினர்களேகூட பாராட்டு தெரிவித்துப் பேசினார்கள் இன்றைக்கு தங்களுடைய சாலை முன்னேற்றத்திற்கு இந்த 2 ஆண்டு காலத்திலே தலைவர் கலைஞருடைய அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்த அடிப்படையில் ஏறத்தாழ இந்த 714 நாட்களில் 4,690 கோடி ரூபாய் செலவில் 31,740 கிலோ மீட்டர் சாலை மேம்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் 1,640 கோடி ரூபாய் செலவில் 5,748 கிலோ மீட்டர் சாலை அகலப்படுத்தப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, 1,144 கோடி ரூபாய் செலவில் 4,738 கிலோ மீட்டர் சாலைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல 1,906 கோடி ரூபாய் செலவில் 21,254 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், கடந்த அரசு 5 ஆண்டு காலத்தில் வெறும் 3,055 கிலோ மீட்டர் சாலைகளைத்தான் அகலப்படுத்தியது. அதேபோல 5 ஆண்டு காலமும் சேர்த்து கடந்த ஆட்சியில் 4,731 கோடி ரூபாய் செலவில் 46,017 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டன. ஆனால் இந்த அரசு இந்த 2 ஆண்டு காலத்திலேயே அந்த இலக்கை எய்தி இருக்கிறது. இன்னும் 3 ஆண்டு காலத்தில் அந்த 5 ஆண்டு காலத்தில் செய்த பணிகளைவிட நிச்சயம் இந்த அரசு கடந்து செல்லும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-10*

அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே, மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் படிப்படியாக இருவழிச் சாலைகளாக மாற்றப்படும் என்று சொல்லியிருந்தார்கள். அந்த அடிப்படையில் இப்போது இந்த அரசு பொறுப்பேற்று 3 மாவட்டங்களில் அந்த இலக்கை எட்டி இருக்கிறது.

சென்னை, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மூன்று மாவட்டங்களிலும், அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், இரு வழிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல ஒரு வழித் தடத்திலிருந்து இடைவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிற மாவட்டங்கள் திருவாரூர், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய 9 மாவட்டங்களிலும் மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் இடைவழிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இப்போது கோவை கோட்டத்திலும், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கோட்டத்திலும், இரண்டு கோட்டங்களிலும் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், இடைவெளித் தடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல, தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் இந்த இரண்டாண்டு காலத்தில் 211 கோடி ரூபாய் செலவில் 561 கி.மீ. பணியும், 7 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, மத்திய அரசினுடைய சாலைத் தொகுப்பு நிதித் திட்டத்திலிருந்து இந்த இரண்டாண்டு காலத்தில், 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 449 கி.மீ. நீளச் சாலைகள் மற்றும் ஆறு பாலப் பணிகளும் முடிந்திருக்கின்றன.

அதேபோல, இந்திய தேசிய ஆணையத்தின் பணியைக்கூட இங்கே நம்முடைய உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த இரண்டாண்டு காலத்தில், ஏறத்தாழ 1,280 ஹெக்டேர் நிலம் அந்தப் பணிக்காக இந்த அரசு கையகப்படுத்திக் கொடுத்துள்ளது. ஆனால் முந்தைய அரசில், கடந்த 5 ஆண்டு காலத்தில் வெறும் 320 ஹெக்டேர் நிலம்தான் கையகப்படுத்திக் கொடுத்தது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நபார்டு வங்கி, கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில் முக்கியச் சாலைகளோடு, முக்கிய நகரங்களோடு அங்கே உற்பத்தி செய்யுக்கூடிய வேளாண் விளைபொருட்களை முக்கிய



நகரங்களுக்கு விவசாயிகள் கொண்டு வரவேண்டும், மார்க்கெட் பகுதிகளுக்கு விவசாயிகள் கொண்டு வரவேண்டும் என்பதற்காக, அந்த மண் சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்று சொல்லி, இந்த நெடுஞ்சாலைத் துறையில் தனி அலகையே உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த அடிப்படையில் நபார்டு வங்கிக் கடன் உதவி பெற்று, கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் ரூ.397 கோடி மதிப்பீட்டில் 4,344 கி.மீ. சாலை மேம்படுத்தப்பட்டு தார்ச் சாலையாக மாற்றப்பட்டன என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டு காலத்திலேகூட, கடந்த ஆட்சிக் காலத்தில், 486 கோடி ரூபாயில் 3,966 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

D
V211,31'08
V08'10?

அதேபோல, நபார்டு வங்கியினுடைய கடன் உதவி பெற்று அமைக்கப்பட்டிருக்கின்ற கிராமச் சாலைகள் பராமரிப்பு இல்லாமல் இருந்தன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பிரச்சினையை அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். உடனடியாக நிதியை வழங்கி இந்த இரண்டாண்டு காலத்தில் மட்டும் ஏறத்தாழ 4,120 கி.மீ. நீளச் சாலைகள் இப்போது புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேகூட இங்கே குறிப்பிட நான் விரும்புகிறேன். 2001 முதல் 2006 வரை வெறும் 151 கோடி ரூபாய்க்கு 3,426 கி.மீ. சாலைகள் மட்டும் பராமரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டு காலத்தில் அந்த அளவை இப்போது எய்தியிருக்கிறோம், கடந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், இங்கே உலக வங்கியின் உதவியோடு 11 மாவட்டங்களை இணைக்கக்கூடிய வகையில் 2,160 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 742 கி.மீ. நீளம் கொண்ட சாலை மேம்பாட்டுப் பணி, இப்போது முன்னேற்றத்தில் இருக்கிறது. உலக வங்கிகூட இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் அதிலிருந்து ஏறத்தாழ 5,782 மின் கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. 138 கி.மீ. நீளத்திற்குக் குடிநீர்க் குழாய்கள் அகற்றப்பட்டும், 130 மின் மாற்றிகள் மாற்றியும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, திட்டத்திற்குத் தேவைப்படுகிற [illegible] ஹெக்டேர் நிலத்தில் 380 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல

228383
சென்னை-600 009

பாதிக்கப்பட்ட 527 குடும்பங்களில் 457 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலைப் பணியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதேபோல, 39 நபர்களுக்குப் புதிய கடைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தில் 712 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 380 கி.மீ. சாலைப் பணியைச் செய்து முடித்திருக்கிறோம்.

இதில் ஏறத்தாழ 11 புறவழிச் சாலைகள், ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், விருத்தாசலம், அரியலூர், சிதம்பரம், சீர்காழி, திருவாரூர், கும்பகோணம், இராமநாதபுரம் ஆகிய 11 நகரங்களுக்கும், அதேபோல் 10 இரயில்வே மேம்பாலங்கள், போளூர், விருத்தாசலம், அரியலூர், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் தலா ஒரு இரயில்வே மேம்பாலமும் திருவண்ணாமலை நகரத்திலே இரண்டு இரயில்வே மேம்பாலங்களும் அமைக்கின்ற பணிகளும் இப்போது முன்னேற்றத்தில் இருக்கின்றன.

பிற்பகல் 1-15

அதேபோல, இராஜீவ் காந்தி தொழில்நுட்ப விரைவுச் சாலை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் பெயர் வைக்கப்பட்டது. அது சென்னை மத்திய கைலாஷிலிருந்து சிறுசேரி வரை சுமார் 20 கி.மீ. நீளம் கொண்ட சாலை. அந்தச் சாலையை 6 வழிச் சாலையாக மாற்றுகிற பணியும், அதேபோல அந்தச் சாலையின் சோழிங்கநல்லூர் பகுதியையும் கிழக்குக் கடற்கரைச் சாலையையும் இணைக்கக்கூடிய 2 கி.மீ. சாலை, அதை 4 வழித்தடச் சாலையாகவும் அகலப்படுத்தி அந்தப் பணிகள் கடந்த வாரத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய தெரு விளக்கு வசதிகள், நடைமேடைகள், மின் கம்பி வடம் மற்றும் தொலைத் தொடர்பு கம்பி வடங்கள், தனியாக பொது வேலி அமைத்தல், மழைநீர் வடிகால் வசதி போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்தப் பணிகள் முடிக்கப்படவிருக்கின்றன.

அதேபோல, இன்றைக்கு நம்முடைய தாம்பரம் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றுமுள்ள பிற உறுப்பினர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், அவர்களுக்காகச் சொல்லிக்கொள்வது, சென்னையை ஒட்டிய பகுதியிலே பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. உலக வங்கி உதவியுடனும், அரசினுடைய நிதியுதவியுடனும் இன்றைக்கு சென்னைப் பெரு நகர வளர்ச்சித் திட்டம் என்கின்ற முறையிலே



பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் ஏறத்தாழ 893 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைக் கண்காணித்து, அந்தப் பணிகளை விரைந்து செய்ய வேண்டும் என்பதற்காக கடந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கென தனியாக தலைமைப் பொறியாளர் (பெருநகர் சாலை) தோற்றுவிக்கப்படும் என்று சொன்னோம். இந்த அரசு பொறுப்பேற்றபோது இந்தத் துறையில் 7 தலைமைப் பொறியாளர்கள் பணியிடங்கள் இருந்தன. இன்றைக்குக் கூடுதலாக 8 தலைமைப் பொறியாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு தற்போது தலைமைப் பொறியாளர்கள் பொறுப்பேற்று இதிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலேதான் இன்றைக்கு பெருநகர வளர்ச்சிப் பகுதி திட்டத்திற்கு என்று தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அதேபோல, ஆதி திராவிடர் நலத் திட்டம். இங்கேகூட மேட்டுப்பாளையம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஆதி திராவிடர்களுக்காக நாங்கள் சாலை வசதி அமைத்தோம் என்று சொன்னார். அந்த கிராமச் சாலைத் திட்டம் ஏற்கெனவே கடந்தமுறை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அரசு இருக்கும்போது செயல்படுத்தப்பட்ட திட்டம். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இன்றைக்கு அரசினுடைய நிதிகள் நேரடியாக ஆதி திராவிட மக்களுக்காக, சாலை வசதிக்காக புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றையும் நடைமுறைப்படுத்துகிறோம். இந்த 2 ஆண்டு காலத்தில் மட்டும் 1,814 கி.மீ. நீளம் ரூ.261 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கோவையில் இருக்கக்கூடிய அவினாசி சாலை ஏறத்தாழ நீலாம்பூர் வரை 16 கி.மீ. நீளம் உள்ளது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அங்கே அமையவிருக்கின்ற காரணத்தாலும் அச்சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்பொருட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 27 கோடி ரூபாய்க்கு சாலை அகலப்படுத்த அனுமதி வழங்கப்பட்டு அந்தப் பணிகளும் இன்றைக்கு வேகமாக நடைபெற்று வருகின்றன. பாலப் பணிகள் எல்லாம் ஜூன் மாதத்திற்குள் முடிவடையவுள்ளன. அதேபோல சுற்றுச் சாலை, திருப்பூர் நகரின் தொழில் வளர்ச்சிப் பெருக்கத்தின் காரணமாகவும், போக்குவரத்து நெரிசல் காரணமாகவும், அங்கே இருக்கக்கூடிய ஏறத்தாழ 100 கி.மீ. நீளச் சாலைகள் (புறவழிச் சாலை) மேம்பாட்டிற்கு

எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தச் சாலைப் பணிகளும் முன்னேற்றத்தில் இருக்கின்றன. பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதுபோலவே மதுரை ஆரச்சாலையைப் பொறுத்தவரையில் 70 கோடி ரூபாய் செலவில் 122 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளில் இன்றைக்கு ஏறத்தாழ 22 கோடி ரூபாய் பணிகள் முடிவடைந்திருக்கின்றன; தொடர்ந்து பல்வேறு பணிகள் நடந்து வருகின்றன.

பாலங்களைப் பொறுத்தவரையில், நீண்டகாலம் தாமதப்பட்டுவந்த திண்டுக்கல் மாவட்டம் பேரணை, காஞ்சிபுரம் மாவட்டம் திருமுக்கூடல், கடலூர்-விருத்தாசலம், திருமணிமுக்தா பாலம், அதேபோல, திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு ராயண்டபுரம் பாலம், தஞ்சாவூர் மாவட்டம் சாலியமங்கலம், குமரி மாவட்டம் மங்காடு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாணிக்கப் பங்கு, அதுபோல மடவாமேடு பாலம், வேலூர் மாவட்டத்தில் கோமேஸ்வரம் பாலம், திருநெல்வேலி மாவட்டத்தில் இட்டாமொழி பாலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் குமாரலிங்கம் பாலம், புதுக்கோட்டை மாவட்டத்தில் கோங்குடி பாலம், தேனி மாவட்டத்தில் மேல்மங்கலம் ஆகிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மொத்தம் 214 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 343 பாலப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இரயில்வே மேம்பாலங்களைப் பொறுத்த அளவில் அரசு பொறுப்பேற்ற 2 ஆண்டு காலத்தில் மட்டும் 8 இரயில்வே மேம்பாலங்கள், கிடப்பில் கிடந்தவை எல்லாம் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், இனாம் கரூர், திருச்சி—பாலக்கரை, சேலம்—ஓமலூர், கோவில்பட்டி, மதுரை—கூடல் நகர், கோவை—ஒண்டிப்புதூர் மற்றும் உக்கடம் ஆகிய 8 பாலங்களும், 89 கோடி ரூபாய் மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. இரயில்வே மேம்பாலங்களைப் பொறுத்தவரையில், எப்போதெல்லாம் தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, அப்போதெல்லாம் மத்திய அரசோடு உறவு கொண்டு அதனுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரை 1 இரயில்வே மேம்பாலம். அதேபோல 1991-லிருந்து 1996 வரை 5 ஆண்டு காலத்திலே 3 இரயில்வே மேம்பாலங்களுக்குத்தான் மத்திய அரசிலே அனுமதி பெற்றிருக்கிறார்கள், அந்த ஆட்சிக் காலத்திலே. 1996 லிருந்து 2001 வரை 52 இரயில்வே மேம்பாலங்கள்; அதேபோல 2001-லிருந்து 2006 வரை 5 ஆண்டு காலத்திலே 7 இரயில்வே மேம்பாலங்கள், ஆக மொத்தம் 10 இரயில்வே மேம்பாலங்கள்தான் 10 ஆண்டுகால ஆட்சியில் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆனால், 2006-2007-ல் 25 இரயில்வே மேம்பாலங்களுக்கும், 2007-2008 ஆம் ஆண்டு 42 பாலங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், தலைவர் கலைஞர் அரசில் மட்டும் 120 இரயில்வே மேம்பாலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கின்றன. கட்டிமுடிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலங்கள் 25. அதுபோல அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டவை 11 இரயில்வே மேம்பாலங்கள்தான்.

இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள்கூட சொன்னார்கள் எல்லீஸ் நகரிலே கட்டப்பட்டு வரும் பாலம் வேகப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். 3 இரயில்வே மேம்பாலங்கள் கட்டும் பணி அங்கே நடைபெற்று வந்தன. அதில் கூடல் நகர் பாலம் இந்த அரசால் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. எல்லீஸ் நகர் பால வேலையும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. மீதியிருக்கக்கூடியது செல்லூர் பாலம், அதில் வழக்கு காரணமாக ஒப்பந்ததாரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிற காரணத்தினால் அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. ஆனால், இன்றைக்கு ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அந்த ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம் எப்போது அறிவிக்கப்பட்டதோ, அதே தேதியிலேதான் அந்த மதுரை பாலமும், 2 பாலங்களும் அதாவது கூடல் நகர் மற்றும் செல்லூர் பாலமும், அதாவது அன்றைக்கு 10-5-2000 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அந்தப் பாலங்கள் கட்டும் பணிகள் நடந்து வருகின்றன.

பிற்பகல் 1-20

அதேபோல, மெத்தனம் காரணமாக, பணி சுணக்கமாக இருக்கிறது என்று சொன்னார். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் துறையிலே பொறுப்பேற்றிருந்த காலக்கட்டத்திலே ஒண்டிப்புதூர் இரயில்வே

மேம்பாலம் எப்போது அறிவிக்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியும். அதே இரயில்வே மேம்பாலத்திற்கு நில எடுப்புப் பணிக்காகக் கோப்பு வரப்பெற்றிருக்கிறது, நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு எப்போது வந்திருக்கிறது என்றால் 20-4-2004-லே வந்திருக்கிறது. ஆனால், 16-6-2006-லே எந்தப் பதிலும் இல்லாமல் அந்தக் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. எப்படி, உங்களுடைய ஆட்சியில் வேகமாகப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு இதையே ஓர் உதாரணமாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சாலையை அகலப்படுத்தும்போது புதிய தொழில்நுட்பம் பின்பற்றப்படுகிறது. சாலைகள் அகலப்படுத்தப் படுகின்றபோது WBM-க்குப் பதில் WMM என்கிற புதிய முறையைக் கடைப்பிடிக்கிறோம், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு. அதாவது, கடந்த ஆட்சிக் காலத்திலே பழைய நீர்க் கோப்பிக் கலவைக்குப் பதிலாக புதிய முறையான ஈரப்பத கற்கலவைத் திட்டம்; அது இன்றைக்கு நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இதனால் சாலைப் பணிகள் வேகமாகவும், அதே நேரத்தில் தரமோடும் அமைக்கின்ற வகையிலே இது மாற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல, speed breaker என்கிற வேகத் தடையானது விபத்தினைக் குறைக்கிறது என்கிற எண்ணத்தில் முன்பு அமைக்கப்பட்டு, சரியான வடிவமைப்பில்லாத காரணத்தினால் அதிலேகூட சில விபத்துகள் ஏற்பட்டுவந்தன. அந்த அடிப்படையில் நவீன வேகத் தடை என்கிற முறையில் இதை I.R.C. code பிரகாரம் இப்போது அந்த வேகத் தடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, பல்வேறு விதங்களிலே பாலங்களிலே நடைபெறுகின்ற விபத்துகள் கடுமையான உயிரிழப்பை, சேதத்தை ஏற்படுத்தி வந்ததை நீங்கள் அறிவீர்கள். கடந்த 15 நாட்களுக்கு முன்புகூட குஜராத் மாநிலத்திலே 40 குழந்தைகள், அதுவும் பள்ளிக் குழந்தைகள், இறக்கக்கூடிய உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் பாலங்கள் அமைக்கும்போது, நடைமேடை இருபக்கத்திலும் அமைத்தோமானால் அங்கேயிருக்கக்கூடிய கைப்பிடிச் சுவரில் நேரடியாக மோதி அந்த நீர்வழிப் பாதையிலே விழுந்துவிடாமல், விபத்தைத் தவிர்க்கும் வகையில் நடைமேடை நல்ல முறையிலே அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 6 மீட்டர் நீளத்திற்குமேலே இருக்கக்கூடிய பாலங்களுக்கு அந்தச் சாலையில் இன்றைக்கு பாலத்திலே நடைமேடை அமைக்கிற திட்டம் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



விபத்துகளைப் பற்றிக்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். சாலைகள் சரியாக இல்லாத காரணத்தினால்தான் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள்கூட பேசுகின்றபோது சொன்னார்கள், அரூர் பக்கத்திலே சாலை விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதே சாலை கடந்த 6 ஆண்டு காலமாகப் புதுப்பிக்கப்படாமல் இருந்தது. அதனால் வேகமாக வாகனங்கள் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது; அதனால் விபத்துகளே நடக்கவில்லை என்கிற தகவல் எனக்குத் தெரிய வந்தது. ஆனால், இன்றைக்கு உலக வங்கியின் ஒத்துழைப்போடு அந்தச் சாலை அமைக்கப்பட்ட காரணத்தினால் வேகமாகச் சென்ற வாகனம் இன்றைக்கு விபத்துக்குள்ளாகியிருக்கிறது. இதிலே சாலையைவிட ஓட்டுநர்களின் கவனக் குறைவின் காரணமாகத்தான் அதிகமாக விபத்துகள் நடக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறையினுடைய வரலாற்றில் முதல் முறையாக கட்டுமானப் பொருள்களினுடைய விலைப் பட்டியல் இந்த நிதியாண்டிலே முதல் நாளிலேயே வெளியிடப்பட்டது.

அதேபோல, கணினிமயமாக்கம். இந்தத் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் துறையினுடைய அனைத்து அலகுகளையும் கணினிமயமாக்கும் திட்டம் என்கிற முறையில் அனைத்து அலுவலர்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குத் தேவையான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நிர்வாகச் சீர்திருத்தம். துறையின் நிர்வாகத்தைச் சீர்படுத்தும் வகையில் நீண்டகாலமாக தனியாகக் கோட்டம் இல்லாமலிருந்த தருமபுரி மாவட்டத்திற்கு புதிய கோட்டமும், திருவள்ளூர் மாவட்டத்திலே பள்ளிப்பட்டு வட்டத்திலே புதிதாக ஒரு உட்கோட்டமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மலைப் பகுதியில் அரசின் சார்பாக தார்க் கலவை மையம் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டிலே அறிவிக்கப்பட்டது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் நடவடிக்கை எடுத்து இப்போது ஊட்டியிலே

அந்தத் தார்க் கலவை நிலையம் அமைக்கப்படுகின்ற பணி இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. நிச்சயமாக இந்த மே மாதம் இறுதிக்குள் அந்தக் கலவை மையம் திறக்கப்படவிருக்கிறது. அதேபோல, கொடைக்கானலிலே அந்த இயந்திரங்களெல்லாம் வாங்கப்பட்டுவிட்டன. அங்கே நிலம் கிடைக்காத காரணத்தினால்— அதற்குப் பிறகு இப்போது நிலம் தெரிவு செய்யப்பட்டு, அந்த இடத்திலே தார்க் கலவை மையம் அமைக்கக்கூடிய வகையிலே, அதற்குரிய பணி முன்னேற்றத்தில் இருக்கிறது. விரைவில் அங்கேயும் அது நிறுவப்படவிருக்கிறது. இதனால் அங்கே மலைப் பகுதியிலே சாலை அமைப்பவர்களுக்கு, அந்த ஒப்பந்ததாரர்களுக்கு எளிதாக இந்தக் கட்டுமானப் பொருட்களைக் கொண்டுபோய் அங்கே அந்தத் தார்க் கலவை மையத்தைப் பயன்படுத்தி சாலை அமைப்பதற்கு வசதியாக அது அமைக்கப்படவிருக்கிறது.

அதேபோல, மரக் கன்றுகளை வளர்ப்பது என்கின்ற முறையிலே கடந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதியிலிருந்து சாலையோரத்திலே ஏறத்தாழ 2,50,000 மரக் கன்றுகள் நடப்படும் என்று அறிவித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இலக்கையும் கடந்து ஏறத்தாழ 3,93,000 மரக் கன்றுகள் நடப்பட்டு சிறந்த முறையிலே அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 1-25*

அதேபோல், கடல்சார் வாரியத்தில் புதிய கொள்கைகள், புதிய சிறு துறைமுகங்கள் இன்றைக்கு வளர்ச்சியடைவதற்கான வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 14-8-2007 அன்று வெளியிடப்பட்டு அதன்மூலம், அந்தச் சட்ட திட்டங்கள் எளிதாக்கப்பட்டு துறைமுகங்கள் புதியதாக உருவாக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரத்தில், தமிழகத்தில் மின் பற்றாக்குறை குறித்து இங்கே விவாதத்திலே பேசப்பட்டது. அந்த அடிப்படையிலே, எதிர்காலத்திலே சிறிய துறைமுகங்கள் அமையுமானால், குறிப்பாக அமையக்கூடியவை அனைத்துமே தமிழகத்திலே மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கி, அங்கே நிலக்கரியைக் கொண்டுவந்து அதன்மூலம் அந்த மின் உற்பத்திக்குப் பயன்படுத்தி, எதிர்காலத்திலே தமிழகத்திலே மின் பற்றாக்குறையே இல்லாத வகையிலே நடவடிக்கை எடுத்து வருகிறது நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு.



அந்த அடிப்படையிலே நாகப்பட்டினம் மாவட்டத்திலே திருக்குவளை துறைமுகம் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிற, அந்தத் துறைமுகம் அமைக்கும் பணிக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நிலம் கையகப்படுத்தப்படும் பணி முடிந்த பிறகு துறைமுகம் அமைக்கும் பணியும் தொடங்கப்படவிருக்கிறது. எதிர்காலத்திலே ஏறத்தாழ 2,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் வகையிலே அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

அதேபோல், துறைமுகத்தினுடைய சுனாமி நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. கடலூர் துறைமுகத்திலும், நாகப்பட்டினம் துறைமுகத்திலும் சுனாமி நிவாரணப் பணிகள், ஏறத்தாழ ரூ. 56 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டிலே ஆசிய வளர்ச்சி வங்கி உதவியோடு நடைபெற்று வருகின்றன. அவற்றை ஆய்வு செய்ய வந்த ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய குழு, தமிழக அரசு மற்றும் கடல்சார் வாரியத்தைப் பாராட்டிச் சென்றிருக்கிறது. அந்த அடிப்படையில் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினால் கடலூரிலே ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டு கப்பல்கள் மூலம் 48,000 மெட்ரிக் டன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு கப்பல் மூலம் 5,000 மெட்ரிக் டன் நிலக்கரி சோதனை ஓட்டமாக இறக்கப்பட்டிருக்கிறது. இதனால் கடலூர் பகுதியில் இன்றைக்கு வேலைவாய்ப்பு கூடியிருக்கிறது.

அதேபோல், கன்னியாகுமரி படகுத் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கே, விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு செல்ல படகுப் போக்குவரத்து நடத்தி வருகிறது. அந்த அடிப்படையில் தற்போது M.L. பாகிரதி, M.L. தாமிரபரணி ஆகிய இரண்டு படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு படகுகளும் சுமார் 30 ஆண்டுகள் பழமையானதால், அவற்றிற்குப் பதிலாக இரண்டு புதிய படகுகள் வாங்கப்படும் என சென்ற ஆண்டு அறிவித்தது. அதன்படி புதிய படகுகள் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் தயாரித்துத் தருவதற்கு கேரள மாநில கப்பல் நீர்வழிப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு புதிய படகுகளும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் கடந்த வாரம் M.L. குகன் மற்றும் M.L. பொதிகை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அவை விரைவில் வருகின்ற ஜூன் மாதத்தில் சுற்றுலா பயணிகளின்

படகுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படவிருக்கின்றன என்கிற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அடுத்து புதிய அறிவிப்புகளுக்குச் செல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## அறிவிப்புகள்

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துக்கும் உதவும் வகையில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகளுக்கு இவ்வரசு மிக அதிக அளவாக, நடப்பு ஆண்டில் ரூ.2,934 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.983 கோடி ஒதுக்கப்பட்டு சுமார் 4,000 கி.மீ. நீளச் சாலையில் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி 900 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், 750 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகள், 1,500 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் மற்றும் 870 கி.மீ. நீள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், நடப்பாண்டில், கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 1,130 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் ரூ.169 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும். தவிர, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே முடிவுற்ற 380 கி.மீ. நீள சாலைகள் தவிர எஞ்சியுள்ள 362 கி.மீ. நீள சாலைகளில் ரூ.500 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் நடப்பாண்டில் திட்டப் பணிகளின்கீழ் 280 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.100 கோடி மதிப்பிலும், மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 400 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.75 கோடி மதிப்பிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் 6,172 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் மொத்தம் ரூ.1,827 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



நடப்பாண்டில் மாநில அரசின் பகுதி-2 திட்டம், சுனாமி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் மொத்தம் 41 பெரிய பாலங்கள் ரூ.319 கோடி மதிப்பில் மேற்கொள்ளவும், அவ்வாறே பல்வேறு திட்டங்களின்கீழ் 163 சிறிய பாலங்கள் ரூ.136 கோடி மதிப்பில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேபோல், இரயில்வே பாதைகளைக் கடக்க வேண்டிய இடங்களில், இரயில்வே பணித் திட்டத்தின்கீழ் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல 67 இரயில்வே மேம்பாலங்கள் அனுமதியளிக்கப்பட்டன. இந்த நிதியாண்டில் கூடுதலாக 23 இரயில்வே மேம்பாலங்களுக்கு இரயில்வே அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** அந்த அடிப்படையில் இன்றைக்கு ஏறத்தாழ ரூபாய் 580 கோடி மதிப்பில் அந்தப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதலை விரைவில் வழங்கி, தேவையான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணியை மேற்கொள்ளவும், இத்திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக உதவி செய்த நம்முடைய மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. வேலு அவர்களுக்கும், பாரதப் பிரதமர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகளின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியதன்பேரில் இத்துறையில் மேற்கொள்ளப்படும், பல்வேறு பணிகளின் தரத்தைக் கண்காணிப்பதற்கு தற்சார்பு தரக் கட்டுப்பாடு அலுவலர்கள் (Independent Quality Monitors) நியமிக்கப்பட்டு தரம் கண்காணிக்கப்படும்.

அதேபோல, நெடுஞ்சாலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டு நெடுஞ்சாலைத் துறையின் எல்லைக் கோட்டை வரையறுப்பது என

முடிவு செய்து, முதற்கட்டமாக அனைத்து மாநில நெடுஞ்சாலைகளின் எல்லைகளை வரையறுக்கும் வகையில் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அவற்றை அகற்றவும், சாலைகளை அகலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட முக்கியச் சாலைகளிலும், மாவட்ட இதரச் சாலைகளிலும் எல்லைகளை வரையறுக்கும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

மாநில நெடுஞ்சாலைகளில் பயணிகளை ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் பேருந்துகள் நிற்கும் இடங்களில் போதிய இடவசதி இல்லாதபோது பேருந்துகள் சாலைப் பகுதியிலேயே நிறுத்தப்படுகின்றன. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள்கூட வெட்டுத் தீர்மானம் தந்திருந்தார்கள். இதனால் போக்குவரத்து தடைபடுவதுடன், விபத்துகள் ஏற்படும் ஆபத்தும் உள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மாநில நெடுஞ்சாலைகளில் பேருந்து நிறுத்தங்களுக்கு அருகில் போதிய இடவசதி இருக்குமிடங்களில் பேருந்து ஒதுங்குதளம் (Bus Bays) அமைக்கப்படும்.

மேலும், குறுகிய வளைவுகள் உள்ள சாலைப் பகுதிகளை அகலப்படுத்தி மையத் தடுப்பான்கள் அமைக்கவும், விபத்துக்குள்ளாகும் பிற பகுதிகளிலும் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் நடப்பாண்டில் மேற்கொண்டு விபத்துகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்தும் வகையில் நடப்பு ஆண்டில் குறைந்தபட்சம் ரூபாய் 25 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வலுக்குறைந்த மண் பகுதிகள் மற்றும் நீர்நிலைப் பகுதிகளையொட்டியுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிந்து அவற்றின் அடித்தளத்தை மேம்படுத்தவும், அப்பகுதிகளில் வடிகால் வசதிகள் மற்றும் பாதுகாப்புச் சுவர்கள் அமைத்தும் சாலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் உள்ளதுபோல் மாவட்ட இதரச் சாலைகளில் தார்தளம் தடிமனாக அமைக்கப்படுவதில்லை. இதனால் அத்தகைய சாலைகளில் குறிப்பாக, தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகள், கனரக வாகனங்கள் பெருமளவில் செல்லும் பகுதிகள், மணல் மற்றும் கனிமச் சுரங்கங்கள் அமைந்துள்ள பகுதிகளில் சாலைகள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன. கிராமப்புறங்களிலுள்ள இத்தகைய சாலைப் பகுதிகளைக் கண்டறிந்து நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வரும் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராஜ் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். இதுபோல பல சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். சாலைகளை முறையாகப் பராமரிப்பதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருவதால் சுமார் 1,750 கிலோ மீட்டர் நீள கரும்பு அபிவிருத்திச் சாலைகளையும் மாவட்ட இதரச் சாலைகள் வகையில் சேர்த்து கரும்புத் தீர்வையிலிருந்து ஒதுக்கப்படும் நிதியுடன் மாநில அரசின் நிதியையும் பயன்படுத்தி நெடுஞ்சாலைத் துறையின் நிரந்தரக் கோட்டங்களின் நேரடிப் பராமரிப்பில் எடுத்துக்கொள்ள அரசு முடிவு எடுத்துள்ளது.

அதேபோல, பொருளாதார வளர்ச்சியினைப் பெருமளவில் ஊக்குவிப்பதற்கு சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டும். இதற்குத் தகுதியான சாலைத் தொடர்களை மேம்படுத்துவதற்கான அவசியத்தைக் கண்டறிந்து புதிய திட்டம் தயாரிக்கும் வகையில் Strategic Option Study-II என்கின்ற புதிய ஆய்வுப் பணி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் உலக வங்கி அல்லது பிற பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி பெற்று புதிய சாலைத் தொடர்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சாலைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்காக செயல்பாட்டுடன் இணைந்த சாலைப் பராமரிப்பு (Performance Based Maintenance Contract) என்ற புதிய ஒப்பந்த முறையினை பரீட்சார்த்தமாக செயல்படுத்துவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. இதன்மூலம் சாலைகளை மேம்படுத்தும்போது அல்லது புதுப்பிக்கும்போது ஒட்டுமொத்தமாக செலவினை வழங்குவதற்குப் பதிலாக சாலைகளின் தரமான பராமரிப்புக்கேற்ப ஒப்பந்ததாரர்களுக்கு பராமரிப்பு காலத்தில் ஆண்டுக்கொருமுறை செலவுத் தொகை வழங்கும் முறை

செயல்படுத்தப்படும். இது தொடர்பாக நடப்பு ஆண்டில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னைப் பெருநகரையொட்டி வெளிவட்டச் சாலையானது தேசிய நெடுஞ்சாலை 45-லுள்ள வண்டலூரில் தொடங்கி, தேசிய நெடுஞ்சாலைகள் 4, அதேபோல தேசிய நெடுஞ்சாலை 205, மற்றும் தேசிய நெடுஞ்சாலை 5 ஆகியவற்றை இணைத்து மீஞ்சூர் வரை செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக நில எடுப்பு முடிவடைந்துள்ளது. வண்டலூர் முதல் நெமிலிச்சேரி வரையிலான 32 கி.மீ. நீளத்திற்கு புதிய சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட அலகின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதிய வெளிவட்டச் சாலைப் பணிகளை மேற்கொள்ள நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பாலப் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தால் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது. இதனைப் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பணிகளை துரிதப்படுத்துவதற்காக கட்டுமானப் பொருட்களின் விலை மாற்றத்திற்கேற்ப அவற்றுக்கான விலையை வழங்க உத்தரவிட்டார்கள். அதன் பேரில் இதற்கான அரசு ஆணை 14-3-2008-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ஒப்பந்தக் காலம் ஆறு மாதங்களுக்கு அதிகமாகவும் மற்றும் ஒப்பந்தத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு அதிகமாகவும் இருக்கும் பணிகளுக்கு, சிமெண்ட், ஸ்டீல், தார், பெட்ரோலியம் போன்ற கட்டுமானப் பொருட்களின் விலையேற்ற-இறக்கத்திற்கேற்ப சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலை மாற்றம் வழங்கப்படும்.

*பிற்பகல் 1-35*

மேலும், ஏற்கெனவே ஒப்பந்தக் காலம் 18 மாதங்களுக்கு மேலிருக்கும் பணிகளுக்கு விலை உயர்வு அளிக்கப்பட்டு வந்தது. அந்த வரம்பையும் தளர்த்தி ஒப்பந்தக்கால அளவு 12 மாதங்களுக்கு மேலிருக்கும் பணிகளுக்கும் கட்டுமானப் பொருட்கள் , மற்றும் பிற மதிப்பீட்டு இனங்களுக்கு விலை உயர்வு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III-ன்கீழ் 5 சாலைப் பணிகளுக்கு ரூ.102.24 கோடி மதிப்பில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும் சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டத்தில் 8 சாலைப் பணிகளுக்கான மதிப்பீடுகள் ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகளுக்கு உலக வங்கியின் இசைவு பெற்று நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பணிகளைத் துரிதமாக முடித்து பின் சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பணிகள் என்ற முறையில் அரசின் நேரடி ஒதுக்கீட்டின்கீழ் இன்றைக்கு 6 சாலை மேம்பாலங்கள் (ஹால்டா, திருமங்கலம், வடபழனி, மூலக்கடை, போரூர் மற்றும் MBI சாலை-பல்லாவரம் துரைப்பாக்கம் சாலை சந்திப்பு), அதேபோல ஒரு இரயில்வே மேம்பாலம் (வியாசர்பாடி) (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 4 ஆற்றுப் பாலங்கள் (திரு.வி.க. பாலம் அருகில், அதேபோல அடையாறு பக்கிங்காம் கால்வாய் குறுக்கே, எண்ணூர் முனை மற்றும் முகப்பேர்) ஆக மொத்தம் 11 பாலங்களை ரூ.219 கோடி மதிப்பீட்டில் திட்ட அலகின்மூலம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் அடையாறு-பக்கிங்காம் கால்வாய் பாலப் பணி நீங்கலாக, எஞ்சிய 10 பணிகளுக்கு திட்ட ஆலோசகர்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கைகளைத் துரிதமாகப் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். மாநில நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ள சாலைகள் மற்றும் இத்துறையின்மூலம் பராமரிக்கப்படும் சென்னை மாநகரின் முக்கியச் சாலைகளான அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, ஜவஹர்லால் நேரு சாலை மற்றும் பிற சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மொத்தம் ரூ.280 கோடி மதிப்பிலும், 4 பாலப் பணிகள் ரூ.7.5 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்படும்.

அதேபோல பாரத் நிர்மாண் திட்டத்தின் பகுதி-I-ன்கீழ் 1,296 கிலோ மீட்டர் நீளமுள்ள 297 மாவட்ட இதரச் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இவற்றிற்கான விரிவான திட்ட

அறிக்கை மாநில தொழில்நுட்பக் குழுமத்தின்மூலம் சரிபார்க்கப்பட்டு மைய அரசுக்கு ரூ.232.99 கோடி மதிப்பில் நிருவாக ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிருவாக ஒப்புதல் பெறப்பட்ட பின் பணிகள் மேற்கொள்ளப்படும். இரண்டாவது கட்டமாக திருத்தி அமைக்கப்பட்ட Core Network-ன்படி இதர மாவட்டச் சாலைகள் தெரிவு செய்யப்பட்டு மைய அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஐ.எஸ்.ஓ. தரச் சான்று பெறுதல் என்ற முறையில் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் இந்தியாவிலேயே முதல் முறையாக, பரிட்சார்த்தமாக நடைமுறை மாற்றங்கள் செய்து, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு வட்டங்களுக்கும் புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) ஆகிய மூன்று கோட்டங்களுக்கும் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய வாகனங்கள் வழங்குதல் என்ற முறையில் நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தங்கள் பகுதிகளில் நடைபெறும் பணிகளை அடிக்கடி சென்று கவனிப்பதற்கு வசதியாக நடப்பாண்டில் 73 புதிய வாகனங்கள் ரூ.3.5 கோடி செலவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறைவடையும்போது இப்பகுதியில் கப்பல் போக்குவரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இராமேசுவரத்தில் மீன்பிடித் துறைமுகம், சரக்குக் கையாளும் பகுதி மற்றும் சேது சமுத்திரக் கால்வாயில் வரும் கப்பல்களுக்கான சேவை வசதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த துறைமுகமாக மேம்படுத்துவதற்காக, புதுடில்லி கன்ஸல்டிங் என்ஜினியரிங் அவர்களை ஆலோசகர்களாக சேது சமுத்திரக் கழகம் நியமித்துள்ளது. ஆலோசகர்களின் அறிக்கை பெறப்பட்டபின் இத்துறைமுகத்தை மேம்படுத்த சேது சமுத்திரக் கழகம்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

சரக்குப் போக்குவரத்து என்ற முறையில் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களில் 2007-2008 ஆம் ஆண்டில் மொத்தம் 8,87,384 மெட்ரிக் டன் அளவிற்கு சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் 8,04,832 மெட்ரிக் டன் அளவுள்ள மொத்த சரக்குகள் கையாளப்பட்டன. வரும் நிதியாண்டில் இதனை 10 இலட்சம் மெட்ரிக் டன்களாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



அதேபோல, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக, தூத்துக்குடியில் தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி நிறுவனம் பொது முறை மாலுமிப் பயிற்சி மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்த நிறுவனத்தை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் பொறுப்பிலிருந்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பொறுப்பிற்கு மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இதுபற்றி நடப்பு ஆண்டில் தக்க ஆணை வெளியிடப்படும்.

மேலும், இந்த ஆண்டு பணியாளர்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கடந்த ஆண்டு தலைவர் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கி, உதவிப் பொறியாளர் காலியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல இந்த ஆண்டு 53 உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு தேர்வாணையக் குழுமம்மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல இந்த நிதியாண்டில் எடுக்கப்பட இருக்கின்ற பெரிய பாலங்கள், இரயில்வே மேம்பாலங்களினுடைய பட்டியல் இந்த அறிவிப்பிலே இணைக்கப்பட்டிருக்கிறது.@ இதை இந்த அவையிலே நான் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொண்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்கு 10 பேர் அரிய கருத்துகளை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல பாராட்டியும் இருக்கின்றார்கள். பாராட்டுகளையும் எடுத்துக்கொள்வதோடு, சொல்லியிருக்கின்ற குறைகளையும் நிச்சயமாக மனதில் பதிய வைத்து, எதிர்காலத்திலே மேலும் எங்களுடைய செயல்பாட்டை விரைவாகவும் அந்தப் பணிகளைத் தொடர்ந்து நல்ல முறையிலே மேலும் முன்னேற்றம் செய்வதற்கும் தக்க ஆலோசனையாக அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு, நிச்சயமாக எதிர்காலத்திலே தரமுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தந்திருக்கின்ற இந்த விளக்கத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். ஏற்கெனவே கடிதம்வாயிலாக இருமுறை நான் மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே தொடர்பு கொண்டு பல்வேறு விளக்கங்களை, அவர்களுடைய தொகுதியில் நடைபெற்ற பணிகள் குறித்து கடிதம் எழுதி தொடர்பு கொண்டிருக்கிறேன். அந்த அளவில் நிச்சயமாக திருப்தியாக இதைப் பாராட்டியிருக்கின்றார்கள். மேலும் இங்கே

@ 617 முதல் 622 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தந்திருக்கின்ற இந்த விளக்கத்தோடு, மேலும் தொடர வேண்டுமானால் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய இணையதளம்கூட இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த இணையதளத்தில்கூடத் தொடர்புகொண்டு மேலும் விவரங்களைக்கூட அவர்கள் தெரிந்துகொள்ளலாம். அந்த அடிப்படையில் இந்த விளக்கம் இதோடு போதும் என்று கருதுகிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 567 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். அதேபோல இன்றைக்கு அது புத்தகமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற மானியக் கோரிக்கைகளில் பேசிய கருத்துகளைக்கூட புத்தகங்களாக வடிவமைத்திருக்கிறோம், குறிப்பெடுத்து நிச்சயமாக எதிர்காலத்திலே அந்தக் கருத்துகளையெல்லாம் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதை இந்த நேரத்தில் உறுதி செய்து, தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டி விரும்பிக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுகின்ற கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும் அதை நபார்டு வங்கியினுடைய நிதியுதவி பெற்று தார்ச் சாலைகளாக மாற்றுகின்றோம். அந்த வகையில் 1991-லிருந்து 1996 வரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் சாலைகள்--கிராமச் சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றி, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற இதர சாலைகள் வகைப்பாட்டில் சேர்க்கப்பட்டது. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், 1997-ல் அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் சேர்க்கக் கூடாது என்று அரசாணை போடப்பட்டது. அந்த நிலை தொடர்ந்து இன்றுவரை இருந்துகொண்டிருக்கிறது. இதனை மாண்புமிகு அமைச்சர்



அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி முடிவெடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய மானியக் கோரிக்கையில் அதுபற்றிய அறிவிப்பு வரவில்லை.

2007-2008 கடந்த கால வரவு-செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் 2,493 கோடி ரூபாய். ஆனால், அவர்கள் செலவழித்தது துறையின் சார்பாக 2,159 கோடி ரூபாய். ஆக, 334 கோடி ரூபாயைச் செலவழிக்காமல் அவர்கள் சரண்டர் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அவருடைய பதிலுரையில் கடந்த காலத்தினுடைய ஆட்சியின் சாதனை, இவர்கள் ஆட்சியினுடைய சாதனையை ஒப்பிட்டு எல்லாம் பேசி வந்தார்கள். ஆனால், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, ஆறு மடங்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு மடங்கு நிதியை அதாவது 334 கோடி ரூபாயை துறையின் சார்பாக திட்டப் பணிகளுக்காக செலவழிக்காமல் நீங்கள் திரும்ப அரசினுடைய கஜானாவிற்கே திருப்பியிருக்கிறீர்கள் என்பதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 51,000 கோடி ரூபாய் மாநில நிதிநிலை அறிக்கையில் வரவு-செலவுத் திட்டம் போட்டுவிட்டது. அதில் மாநில வருவாய் மாநிலத்தினுடைய சொந்த வருவாய் ஏறக்குறைய 33,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருகிறது. இந்த 2,159 கோடி ரூபாயில் உலக வங்கியினுடைய நிதி, சுனாமி ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதி, நபார்டு வங்கியினுடைய நிதி இவைபோக மாநில நிதி ஆதாரத்திலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் மொத்தமாகப் பதில் சொல்லிவிடுங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு புள்ளிவிவரங்களைத் தந்து சாலைப் பணிகள் தமிழகத்திலே எப்படி நடக்கின்றன என்பதை விளக்கமாகச் சொன்னார்கள். இரயில்வே மேம்பாலங்கள்பற்றி அவர்கள் சொல்கின்றபோது, நம்முடைய கலைஞருடைய ஆட்சியிலே தொடர்ந்து அதிகமாகப் பெற்று வரப்படுகின்ற இரயில்வே மேம்பாலங்களுடைய எண்ணிக்கை

எப்போதெல்லாம் கூடி வருகிறது என்பதைச் சொல்கின்றபோது, நமக்குச் சாதகமான மத்திய அரசு இருக்கின்றபோது இரயில்வே மேம்பாலங்களினுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது.

நான் நம்முடைய மாண்புமிகு இரயில்வே துறையினுடைய இணை அமைச்சர் திரு. வேலு அவர்கள் வந்தபோது கேட்டேன். எங்கள் தென்காசி, கடையநல்லூர் தொகுதிகளை இணைக்கின்ற இரயில்வே மேம்பாலம் கடந்த ஆண்டே அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவில்லையே, என்ன காரணம் என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். மாநில அரசு No Objection for drawing funds என்கிற அந்த உத்தரவை எங்களுக்கு எழுத்துமூலமாகத் தெரிவித்தால்தான் நாங்கள் அந்தப் பணியை ஏற்றுக்கொள்வோம்; நாங்கள் ஏறக்குறைய 30 பாலங்களுக்குப் பணம் தயார் என்று சொல்லியிருக்கிறோம்; ஆனால் அதற்கு - matching grant - மாநில அரசு கொடுக்க வேண்டிய பணத்தை நாங்கள் எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் No Objection தர வேண்டும். அதை நீங்கள் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே இந்த ஆண்டும் நீங்கள் 40 பாலங்களுக்கும் அதிகமாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் நானும், நம்முடைய தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் நம்முடைய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளருமாக இருக்கின்ற திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும் இந்த மேம்பாலம் வேண்டுமென்று கேட்டு, ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அந்தப் பணி நடைபெறவில்லையே? அது நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பாலங்கள் குறித்து நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி, நம்முடைய துறைச் செயலாளரையே என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு அழைத்துச் சென்று காண்பித்தேன். அவர்களே நேரடியாக வந்து, அந்த ஆற்றிலே இருக்கின்ற பாலம் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டிருப்பதைப் பார்த்தார்கள். அந்தப் பாலங்கள் எல்லாம் சேர்க்கப்படவில்லையே? அவையெல்லாம் சேர்க்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், கொஞ்சம் இருங்கள். திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்பகுதியில் சுனாமி என்கிற ஆழிப் பேரலை வந்தபோது, பெரும் பாதிப்பிற்குள்ளான தியாகவள்ளி, நடுத்திட்டு, நொச்சிக்காடு பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்களைப் பாதுகாக்கின்ற வகையில், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், நொச்சிக்காட்டிலிருந்து செம்மங்குப்பத்திற்கானப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்து, அதற்கான அடிக்கல்லையும் நாட்டி முடித்தார். அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலே இருக்கிறதேதவிர, இதுவரையிலும் அந்தப் பாலம் கட்டப்படவில்லை.

அதுபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பிறந்த பகுதியான தஞ்சை, திருவாரூர், நாகை பகுதிகளுக்குச் செல்கின்ற—பண்ருட்டியைக் கடந்து செல்கின்ற—பகுதியில் இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதுவும் அறிவிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அதுவும் இடம் பெறவில்லை.

அதுபோல, வடகுத்துப்பாலம், விசூர் பாலம் வேண்டுமென்று கேட்டபோது, அமைச்சர் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்; நான் அமைச்சரிடம் எழுதிக் கொடுத்தேன். ஆனால், அதுவும் இடம்பெறவில்லை? அது ஏன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிலே சிமெண்ட், கம்பிகளுடைய விலை உயர்வின் காரணத்தினாலே, மறுமதிப்பீடு செய்யவேண்டுமென்று ஏற்கெனவே ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அதைப்பற்றி பரிசீலித்து, அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் என்று ஒரு குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், இந்த சிமெண்ட், கம்பி விலை உயர்வைப்பற்றி, மத்திய அரசுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அதற்குப் பதில் ஏதேனும் வந்திருக்கிறதா என்றுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி அவர்கள் கேட்டார்கள்; அதற்குப் பதில் இல்லை. நான் கேட்க விரும்புவது, மத்திய நிதித் துறை அமைச்சர் அவர்களும்

சொல்கிறார்; தொழில் துறை அமைச்சர் அவர்களும் சொல்கிறபோது—இந்தச் சிமெண்ட், கம்பிகளை உற்பத்தி செய்கின்ற முதலாளிகள், அவர்களுடைய விருப்பப்படி விலையை உயர்த்திக் கொள்கிறார்கள். அவர்கள் எல்லாம் விலையைக் குறைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடப்படுகிறது. அதன்மூலமாகவே, இந்த விலை குறைக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அது விவாதத்திற்குரிய விஷயம் அல்ல. இது குறைகிற வரையில், இதற்கேற்றாற்போல, அந்த ஒப்பந்தப்புள்ளிகளின் விலையைக் கோருவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா? என்னுடைய தொகுதியிலேயே அதனால் ஒரு பாலம் பாதிக்கப்படுகிறது; அநேகமாக, இடிந்துவிடும் நிலையில் இருக்கிறது; விழுந்தால் பெரிய சிக்கல் ஏற்படும்; வேதாரண்யம் வரையிலும் போக்குவரத்தே தடைபட்டுப் போய்விடுகிற ஒரு அபாயம் இருக்கிறது.

இன்னொன்று, தஞ்சாவூரிலே இருக்கிற இரயில்வே மேம்பாலப் பணி, ஏதோ ஆவுடையார்கோவில் திருப்பணிபோல நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. ஏன் அது முடியாமல் இருக்கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தினார்களா? அதை உடனடியாகத் திறப்பதற்குரிய முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல, மன்னார்குடிக்குச் சுற்றுச்சாலை வேண்டுமென்று கேட்டேன். அதைப்பற்றிய அறிவிப்பு எதுவுமே வரவில்லை. அதைத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *234 சட்டமன்ற உறுப்பினர்களும் எழுந்து நிற்பீர்கள். எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த காலத்திலே ஒதுக்கப்பட்ட நிதி சரியாகச் செலவு செய்யப்படவில்லை என்று சொல்லி இங்கே ஒரு வினாவை எழுப்பியிருக்கின்றார்கள். அதேபோன்று, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயும் நடைபெற்றிருக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டில், 2,233 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1,758 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, 2001-2006 ஆம் ஆண்டுகளில், மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5,833 கோடியாக



இருந்திருக்கிறது. ஆனால், செலவு ரூபாய் 4,543 கோடியாகத்தான் இருந்திருக்கிறது. இப்படி கடந்த காலங்களிலேயும் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. எதிர்பார்த்த அளவிலே அந்தப் பணிகள் நடைபெறாததற்குக் காரணம், நில எடுப்பு போன்ற பிரச்சினைகள் இருந்ததுதான். நிலத்தைக் கையகப்படுத்திவிட்டுத்தான், புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று சொல்வதால், அதுபோன்ற பணிகளிலே தடை ஏற்படுகிறது.

உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், நம்முடைய கிண்டி இரயில்வே மேம்பாலம் அருகில், ஆலந்தூர் நகராட்சியிலே நான் சென்று பார்த்த நேரத்தில், அதை முதல் பாலமாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டோம். அதுவும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அறிவிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலம்; அரசாணை வெளியிடப்பட்ட நாள் *5-10-2000*. அங்கே போய்ப் பார்க்கிற நேரத்தில், அந்தப் பகுதி இரண்டு மாவட்டங்கள் உள்ளடங்கிய பகுதி; ஒரு பகுதி சென்னை மாவட்டம், இன்னொரு பகுதி காஞ்சிபுரம் மாவட்டம். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய அந்தப் பாலத்தின் பணி நடைபெறவில்லை. காரணம், நிலம் கையகப்படுத்தப்படவில்லை. அங்கேயிருக்கக்கூடிய மின் கம்பங்கள் அப்புறப்படுத்தப்படவில்லை; குடிநீர்க் குழாய்கள் மாற்றியமைக்கப்படவில்லை. இதனால், ஒப்பந்ததாரர்கள் அந்தப் பணியை மேற்கொள்ளவில்லை. அந்தப் பணிகளையெல்லாம் மேற்கொண்டபிறகு, ஒப்பந்ததாரரைப் 'பணியைச் செய்யச் சொல்லுங்கள்' என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நேரத்தில், அவரைப்போய்த் தேடிப் பார்த்த நேரத்தில், அவர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார். 'உரிய நேரத்திலே நிலம் எங்களிடத்திலே ஒப்படைக்கவில்லை. அதற்குப்பிறகு கட்டுமானப் பொருட்களுடைய விலை உயர்ந்திருக்கின்றது. இதனால், அந்தப் பணியைச் செய்ய இயலாது' என்று சொல்லி, அவர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அது இரத்துச் செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; செப்டம்பர் மாத இறுதியிலே முடிவடையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படிக் கடந்த காலங்களிலே, முறையான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணத்தினாலும், இதுபோன்று பல்வேறு பணிகள் தாமதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 1-50

அதேபோல, கிராமச் சாலைகளைப் பொறுத்தளவில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசிலேதான், தனி அலகே நெடுஞ்சாலைத் துறையில் ஏற்படுத்தப்பட்டு, கிராமச் சாலைத் திட்டம் என்று ஆரம்பித்து, தலைமைப் பொறியாளர் மட்டத்திலே ஒரு உயரதிகாரியை நியமித்து, அதன்மூலம் கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வந்தன. அந்த அடிப்படையிலேதான் நபார்டு வங்கியினுடைய நிதியுதவியைப் பெற்று, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நபார்டு வங்கியின் திட்டத்தோடு தார்ச் சாலைகளாக மாற்றுகிறோம். அப்பொழுது அந்தச் சாலைகள், உள்ளபடியே உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த சாலைகள். அதற்கு சிறப்புத் திட்டம் கிடைத்த காரணத்தினால் அதை எடுத்து மேம்படுத்துகிறோம். அதற்குப் பிறகுதான், அங்கே இருவேறு கருத்துகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை கடந்த காலத்திலே இருந்தது. ஆனால், தலைவர் கலைஞருடைய அரசு வந்து, அதற்கேற்ப இன்றைக்கு நிதி ஒதுக்கப்பட்டு அந்தச் சாலைகள் நல்ல முறையிலே பராமரிக்கப்படுகின்றன. இந்த ஆண்டிலேகூட ஏறத்தாழ 3,000 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படவிருக்கின்றன. இப்படி அந்தப் பணிகளும் சிறப்பாக நடந்துவருகின்றன. O.D.R. ஆக வகைப்படுத்தியதை ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக இந்த அரசு எப்பொழுதும் மாற்றியது கிடையாது. தவறான தகவலை இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் ஒரு பாலத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக எதிர்காலத்திலே அது கவனிக்கப்படும். வடக்குத்துப் பாலத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அது தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கக்கூடிய பாலம். அது நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதுபோன்ற பணிகள் நிச்சயமாக எதிர்காலத்திலே எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், அணைக்கரை பாலத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே அதற்கு நான் பல முறை பதில் சொல்லியிருக்கிறேன். கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, முக்கியமான அந்தப் பாலம். இன்றைக்கு அது இடிந்து விழுந்தால் நிச்சயமாக தஞ்சை மண்டலத்தினுடைய போக்குவரத்து, சென்னைக்கு வரக்கூடிய வாகனங்கள் பாதிக்கப்படும். அதுவும்



குறிப்பாக, பொதுப் பணித் துறையினுடைய மதகு. அதன்மீதுதான் தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. அந்த வழியாகச் செல்லக்கூடிய அந்தச் சாலையை மட்டும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரித்து வருகிறது. அந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில், பொதுப் பணித் துறையினுடைய சொத்து. அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாகச் சென்று அதற்கு மாற்று ஏற்பாடு செய்து, இப்பொழுது போக்குவரத்து நடைபெற்று கொண்டிருக்கிறது. அதிலேதான் இன்றைக்கு முட்டம்-மணல்மேடு பகுதிகளை இணைக்கக்கூடிய வகையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடலூர் மாவட்டத்தையும், நாகப்பட்டினம் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய வகையிலே புதிய பாலத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தையும், அரியலூர் மாவட்டத்தையும், இணைக்கக்கூடிய வகையிலே மதனத்தூர், நீலத்தநல்லூரிடையே வருகின்ற கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலத்தையும் அமைப்பதற்காக இந்த நிதியாண்டு அனுமதி தந்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆண்டு அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனால், அதைப்போன்ற பகுதிகளிலே, போக்குவரத்து எதிர்காலத்திலே சீர் செய்யப்படுகிற வகையிலே, அணைக்கரைப் பாலத்தை மட்டும் நம்பியில்லாமல், இரண்டு பாலங்கள் அதன் அருகிலே அமையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், இன்றைக்கு திட்டை இரயில்வே மேம்பாலத்தைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் குறிப்பிட்டிருக்கிறார் என்ற கருதுகிறேன், தஞ்சாவூர் நகரத்திலே. அது எங்களுடைய ஆய்வுப் பணியிலே வந்தது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நேரடியாக நானும், துறையினுடைய செயலாளரும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டோம். தஞ்சாவூரிலே ஆய்வுப் பயணம் செய்தபோதுகூட அதைப்பற்றிக் குறிப்பிட்டோம். ஆய்வுப் பணியின்போது அதற்குரிய நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெறாமல் இருந்தன. இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அந்தப் பணிகள் இந்த மாதத்திலேயே நிறைவடைய இருக்கின்றன. எதிர்காலத்திலே நிச்சயமாக அந்த இரயில்வே மேம்பாலத் திட்டப் பணி நடக்கவிருக்கின்றது.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், நம்முடைய துறையின் செயலாளர் அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவருடைய தொகுதிக்குச் சென்று காண்பித்தார்கள் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு ஒருங்கிணைந்த

சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அந்தப் பாலம் செப்பனிடப்பட இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக குலவணிகர்புரம் இரயில்வே மேம்பாலத்தைப் பொறுத்தளவு, மீண்டும் நம்முடைய மாண்புமிகு இரயில்வே மத்திய அமைச்சரையும், மத்திய அரசையும் தொடர்பு கொண்டு, அந்த இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

சான்றிதழ் வழங்க வேண்டும் என்று சொன்னால், அதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. அந்தச் சாலையில் செல்லக்கூடிய வாகனங்களுடைய எண்ணிக்கையும், அந்த இரயில்வே பாதையிலே செல்லக்கூடிய இரயில்களுடைய எண்ணிக்கையையும் பெருக்கினால், 24 மணி நேரத்திலே ஒரு இலட்சம் train vehicle unit என்கிற வகையிலே அந்தச் செறிவு வரவேண்டும். அந்தச் செறிவு வந்தால் மத்திய அரசும், மாநில அரசும் சம—பாதிப் பங்கை செலுத்தி, அந்தப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, அதுவும் கவனிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடுகள்)

மேலும், பண்ருட்டி இரயில்வே மேம்பாலம் நிச்சயமாக கவனிக்கப்படும். எனவே, பாலங்களைப் பொறுத்தளவு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு, "பாலங்களின் ராஜா" என்று சொல்லக்கூடிய வகையிலே அந்தப் பாலங்கள் அமைத்து, ஒவ்வொரு வரலாற்றையும் சிறப்பித்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றிலே இடம்பெற்றிருக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பாலப் பணிகளும் எதிர்காலத்திலே செய்யப்படும். எனவே, மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)



வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,933,96,14,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இந்த அவையில் கூறும்போது, ** என்று கூறினார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அதேபோன்று நான் இப்பொழுது சொன்ன அந்த வார்த்தைகளும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. மின் உற்பத்தி இயந்திரம் வாயிலாக மின்சக்தி தயாரிப்பதை ஊக்குவிக்கும் வகையில் யாதொரு வணிகர் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள தொழிலக நுகர்வோருக்கு ஊதுலை எண்ணெய் விற்பனை செய்வதன் மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 28

நிபந்தனைக்கு உட்பட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 5-3-2008 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## (ஐ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

130. நெடுஞ்சாலைகள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

131. இந்து சமய அறநிலைத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

132. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

133. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2007-2008)

134. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

135. பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. (2007-2008)

136. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

137. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2007-2008)

138. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2007-2008)



2008 ஏப்ரல் 28]

139. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2007-2008)

140. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை. (2007-2008)

141. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை. (2007-2008)

11-87—12a

## இணைப்பு—I

(437 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

## முன்னுரை

தமிழ்நாடு மொத்தம் 1,30,058 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டு இந்தியாவின் 11-வது பெரிய மாநிலமாக விளங்குகிறது. மேலும், நகர்ப்புறப் பகுதிகள் அதிகமுள்ள மாநிலமாகவும் திகழ்கிறது. மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு சிறந்த சாலைக் கட்டமைப்பு வசதிகள் இன்றியமையாதவையாக உள்ளன.

இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பு வசதிகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் சுமார் 1,93,918 கி.மீ. நீள சாலைகள் உள்ளன. இதில், 61,471 கி.மீ. நீள சாலைகள் நெடுஞ்சாலைத் துறை மூலமும் எஞ்சியுள்ள சாலைகள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற துறைகள் மூலமும் பராமரிக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகளில், 4,500 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளாகவும், 9,264 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளாகவும், 9,451 கி.மீ. மாவட்ட முக்கியச் சாலைகளாகவும், 36,510 கி.மீ. மாவட்ட இதரச் சாலைகளாகவும், மற்றும் 1,746 கி.மீ. சாலைகள் கரும்புச் சாலைகள் எனவும் பல்வேறு வகையாக உள்ளன.

சாலைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதாவது, சாலை வசதியில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு, 286 கி.மீ. நீள சாலைகள் என்ற அளவில், இந்தியாவின் சராசரி அளவான 258.20 கி.மீ. நீளத்தை விட அதிகமாக உள்ளது.

மேலும், ஒவ்வொரு 100 சதுர கி.மீ. பரப்பிலும், இந்தியாவின் தற்போதைய சராசரி அளவான 74.90 கி.மீ. என்ற அளவைவிட அதிகமாக தமிழ்நாட்டில் 146 கி.மீ. நீள சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பு வசதி நல்ல மேம்பாடு அடைந்துள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும்.

[2008 ஏப்ரல் 28

## 1. அரசு சாலைகளின் வகைகள்

### 1.1. தேசிய நெடுஞ்சாலைகள் (National Highways)

மாநிலத் தலைநகரங்கள், பெரும் துறைமுகங்கள், பெரிய தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 4,500 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில், 3,260 கி.மீ. நீள சாலைகளை, அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) நேரடியாக மேற்கொண்டுள்ளது. எஞ்சிய 1,240 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில், மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைக்கொண்டு, மேம்பாடு, பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது.

### 1.2. மாநில நெடுஞ்சாலைகள் (State Highways)

இச்சாலைகள் மாவட்டத் தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களை இணைக்கின்றன. இந்திய சாலைக் கழகத்தின் (IRC) நெறிமுறைகளைப் பின்பற்றி குறைந்தபட்சம் 7.5% அளவு மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடையும் விதத்தில் தற்போதுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் இந்திய சாலைக் கழகத்தின் நெறிமுறைகளின்படி அமைக்கப்பட வேண்டிய சாலைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவ்விவரங்களின் அடிப்படையில் மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 9,264 கி.மீ. இதில் 7,483 கி.மீ. நீள சாலைகள் இருவழி மற்றும் பலவழித் தடச் சாலைகளாகவும், 954 கி.மீ. நீள சாலைகள் இடைவழித் தடமாகவும், 827 கி.மீ. நீள சாலைகள் ஒருவழித் தடச் சாலைகளாகவும் உள்ளன. அவற்றை குறைந்தபட்சம் இடைவழித் தடமாக்கி பின்னர் இருவழித் தடமாக அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.3. மாவட்ட முக்கியச் சாலைகள் (Major District Roads)

மாவட்டத்திலுள்ள உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை இணைக்கும் வகையிலும், இந்த மையங்களை தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் வகையிலும் மாவட்ட முக்கியச் சாலைகள் அமைந்துள்ளன. இச்சாலைகளில் குறைந்தபட்சம்



2008 ஏப்ரல் 28]

65% அளவிற்கு இந்திய சாலைக் கழகத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடையும் விதத்தில் தற்போதுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளில் இந்திய சாலைக் கழகத்தின் நெறிமுறைகளின்படி அமைக்கப்பட வேண்டிய சாலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் மாவட்ட முக்கியச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

மொத்தமுள்ள 9,451 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளில் 2,621 கி.மீ. நீள சாலைகள் இருவழி/ பலவழித் தடச் சாலைகளாகவும், 6,830 கி.மீ. நீள சாலைகள் ஒருவழி/ இடைவழித் தடச் சாலைகளாகவும் உள்ளன. ஒருவழித் தடச் சாலைகளை படிப்படியாக குறைந்தபட்சம் இடைவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.4. மாவட்ட இதர சாலைகள் (Other District Roads)

கிராமப்புற உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள் ஆகியவற்றை வட்டத் தலைமையிடங்கள் மற்றும் அருகில் உள்ள பிற முக்கியச் சாலைகளுடன் மாவட்ட இதரச் சாலைகள் இணைக்கின்றன.

மொத்தமுள்ள 36,510 கி.மீ. நீள மாவட்ட இதரச் சாலைகள் மற்றும் 1,746 கி.மீ. நீள கரும்புச் சாலைகளில் பெரும்பாலான சாலைகள் ஒருவழித்தட சாலைகளாகவே உள்ளன. இவற்றில் கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்லும் சாலைகளையும் கனிமச் சுரங்கங்கள் உள்ள சாலைப் பகுதிகளையும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.5. பாலங்கள், சிறிய பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலங்கள்

மாநிலத்தில் தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பில், 1,309 பெரிய பாலங்களும், 7,912 சிறு பாலங்களும் (Minor bridges) 1,03,917 மிகச் சிறு பாலங்களும் (Culverts), 225 இரயில்வே மேம்பாலங்களும்/ கீழ்ப்பாலங்களும் உள்ளன. இவற்றை முறையாகப் பராமரிக்கவும், பழுதடைந்த நிலையிலுள்ளவற்றை புதுப்பித்துக் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 28

## II. கொள்கை வரையறை

பெருகிவரும் வாகனப் போக்குவரத்தைச் சமாளிக்கும் விதத்திலும் சாலைகளைப் பயன்படுத்துவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதனால் சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை வேகமாகவும், சிறப்பாகவும் செயல்படுத்த பின்வரும் கொள்கைகளை அரசு வகுத்துள்ளது:

1. மாநிலத்திலுள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும், படிப்படியாக அகலப்படுத்தி குறைந்தபட்சம் இருவழிப் பாதையாக மாற்றுதல்
2. வாகனப் போக்குவரத்து அதிகமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளைக் கண்டறிந்து அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப குறைந்தபட்சம் இடைவழித் தடமாக அகலப்படுத்துதல்
3. கிராமங்களை நகர்ப்புறங்களோடு இணைக்கும் மாவட்ட இதரச் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை அளித்து மேம்படுத்துதல்
4. நகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஆரச் சாலைகள், வட்டச் சாலைகள், புறவழிச் சாலைகள், மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் அமைத்தல்
5. சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைப்பதற்காக, சாலைப் பாதுகாப்பு செயல்திட்டத்தினை உருவாக்குதல் மற்றும் அதிக விபத்துகள் ஏற்படும் பகுதிகளை மேம்படுத்துதல்
6. சாலைகளில் விபத்துகள் அடிக்கடி நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துதல்
7. மிக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளை பொது மற்றும் தனியார் கூட்டு பங்கேற்புமூலம் மேம்படுத்துதல்
8. தொழிற்சாலைகள் அமைந்துள்ள மற்றும் புதிதாக உருவாகி வரும் தொழிற்சாலை பகுதிகளுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துதல்



2008 ஏப்ரல் 28]

9. திட்டப் பணிகளில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக பணிகளைத் தொடங்குமுன் நிலம் கையகப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்
10. மழைநீர் தேங்குவதைத் தவிர்த்து தடையற்ற போக்குவரத்திற்கு உதவும் வகையில் சாலைகளில் தேவைக்கேற்ப வடிகால் வசதியினை ஏற்படுத்துதல்
11. சாலைகளை முறையாகப் பராமரிப்பதுடன் சாலை ஓரங்களில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்தல்
12. துறையிலுள்ள அனைத்து அலகுகளிலும் மேற்கொள்ளப்படும் பணிகளை ஒருங்கிணைத்து துறையின் செயல்பாட்டை மேம்படுத்த "துறைத் தலைவர்" என்ற புதிய பதவியினைத் தோற்றுவித்தல்
13. தொழில்நுட்ப ஒப்பளிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒப்பளிப்பு தொடர்பாக சார்நிலை அலுவலர்களுக்குக் கூடுதல் அதிகாரம் அளித்தல்
14. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (CMDP) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III (TNUDP) தொடர்பான பணிகளை புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் (பெருநகர்) மூலம் விரைந்து செயல்படுத்துதல்
15. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலை மற்றும் பாலப் பணிகளை கண்டறிய சிறப்பு ஆய்வினை மேற்கொண்டு அதன் அடிப்படையில் சாலை விரிவாக்கப் பணிகளை நிறைவேற்றுதல்

## III நிர்வாக அமைப்பு மற்றும் மேம்பாடு

### 3.1. பணிப் பகிர்வு

நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாகத்தினை சீரமைத்து செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடனும், துறையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான பணிகளை துறையில் உள்ள 8 அலகுகளிடையே முறையாகப் பகிர்ந்து அளிக்கும் விதத்திலும் பணிப் பகிர்வு தொடர்பாக அரசாணை வழங்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

[2008 ஏப்ரல் 28

**(அ) பொது அலகு:**

- துறையின் ஒட்டுமொத்த திட்டமிடுதல் மற்றும் நிதிநிலை அறிக்கை
- துறையின் அனைத்து பணியாளர் தொடர்பான நடவடிக்கைகள்
- மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளையும் அவற்றிலுள்ள பாலங்களையும் பராமரித்தல்
- பகுதி-2 திட்டப் பணிகளின் செயலாக்கம்
- வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர் நிவாரணப் பணிகள்
- ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை /பாலங்களை மேம்படுத்தல்
- பொது - தனியார் பங்கேற்பின்மூலம் சாலை மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தல்
- அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

**(ஆ) தேசிய நெடுஞ்சாலை அலகு:**

- தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் மற்றும் அவற்றிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகளின் பராமரிப்பு
- புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டப் பணிகள்
- பொருளாதார முக்கியத்துவம் மிக்க மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சாலைகளை மேம்படுத்தும் திட்டம்
- பாரத் நிர்மாண் திட்டம்
- மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்
- மலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்



2008 ஏப்ரல் 28]

- பழங்குடியினர் வாழும் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்
- மைய அரசின் பிற சாலை மேம்பாட்டுத் திட்டங்கள்

**(இ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு:**

- நபார்டு நிதி உதவியின்மூலம் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் சிறு பாலப் பணிகள்
- நபார்டு நிதி உதவியின்மூலம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு
- ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் சுனாமி நிவாரணப் பணிகள்
- அரசு அவ்வப்போது ஒப்படைக்கும் பிற பணிகள்

**(ஈ) திட்டங்கள் அலகு:**

- அரசு மற்றும் நபார்டு நிதி உதவியின்மூலம் செயல்படுத்தப்படும் பெரிய பாலப் பணிகள்
- கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்
- இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ் இரயில்வே மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலப் பணிகள்
- ஊரச் சாலைகள் மற்றும் சுற்றுச் சாலைகள்
- அரசு ஒப்படைக்கும் பிற சிறப்புத் திட்டங்கள்

**(உ) ஆய்வு மற்றும் வடிவமைப்பு அலகு:**

- புதிய பாலப் பணிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- பாலங்களுக்கு வடிவமைப்பு தயாரித்து அளித்தல்
- ரூ. 2 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள பாலப் பணிகளுக்கு கட்டுமான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல்
- அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

**(ஊ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்:**

- சாலை மற்றும் பாலங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகள்
- சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சிப் பணிகள்
- ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண்டல ஆய்வகங்கள்மூலம் தரக்கட்டுப்பாட்டுப் பணிகள்
- அரசால் ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

**(எ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்:**

- உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாட்டுப் பணிகள்
- மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்புப் பணிகள்
- பொது - தனியார் பங்கேற்பின்கீழ் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- துறை அமைப்புகளை பலப்படுத்துதல் மற்றும் செயல் திட்டங்களை நிறைவேற்றுதல்

**(ஏ) பெருநகர் சாலை மேம்பாட்டுத் திட்ட அலகு:**

- சென்னை பெருநகர்ப் பகுதிக்கான வளர்ச்சித் திட்டப் (CMDP) பணிகளை செயல்படுத்துதல்
- தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் (TNUDP III) பணிகளை செயல்படுத்துதல்
- அரசால் ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

**3.2. நிர்வாக சீரமைப்பு**

**(அ) ஐ.எஸ்.ஓ. சான்று பெறுதல்**

நிர்வாக அமைப்பை சீரமைத்து வலுப்படுத்தும் செயல் திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக,



நாட்டிலேயே முதன் முறையாக நெடுஞ்சாலைத் துறையின் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி வட்ட அலுவலகங்கள் மற்றும் ஈரோடு (நெ), புதுக்கோட்டை (நெ) மற்றும் கோவை (நபார்டு & கி.சா.) கோட்ட அலுவலகங்களுக்கு ஐ.எஸ்.ஓ. (ISO- 9001:2000) சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(ஆ) கணினிமயமாக்குதல்**

துறையின் செயலாக்க அமைப்புகளை வலுப்படுத்தவும் செயல்திறனை அதிகரிக்கவும் பல்வேறு அலகுகளையும் கணினிமயமாக்க முடிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இத்துறையின் பல்வேறு அலகுகளில் 751 அலுவலகங்களுக்கு மொத்தம் 1,779 கணிப்பொறிகள் ரூ.14.77 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ் 2,700 பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. தவிர, இத்திட்டத்தின்கீழ் கணினிகளை ஆறு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பொறுப்பும் தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதில் ஒளிவுமறைவற்ற தன்மையைக் கடைப்பிடிக்கும் வகையில் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பிலுள்ள அனைத்துப் பணிகளுக்கும் மின் ஒப்பந்த முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடைமுறை இத்துறையில் 1-7-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகளை பெறும் திட்டமும் (submission) செயல்படுத்தப்படும்.

**(இ) விலை மாற்றக் கொள்கை (Price adjustment)**

சாலை மற்றும் பாலப் பணிகளை நிறைவேற்றும்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால் பணிகள் தாமதப்படுகின்றன. இதனை உணர்ந்த அரசு, பணிகளைத் துரிதப்படுத்தும் வகையிலும், விலை ஏற்ற இறக்கத்திற்கேற்ப புதிதாக ஒப்பந்தம் கோரப்படும் பணிகளுக்கு விலை மாற்றம் செய்து வழங்கவும் முதல் முறையாக, அரசாணை எண் 60, பொதுப் பணித் (ஜி.2) துறை நாள்: 14-3-2008 இன்படி விலை மாற்றக் கொள்கை (price adjustment) யினை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி இதுவரை ஒப்பந்தக் காலம் 18 மாதங்களுக்கு மேல் இருக்கும் பணிகளுக்கு மட்டும் விலை மாற்றம் வழங்கும் முறையினை

மாற்றி ஒப்பந்தக் காலம் 12 மாதங்களுக்கு மேல் இருக்கும் பணிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், 6 மாதங்களுக்கு மேல் ஒப்பந்தக் காலமும் ஒப்பந்தத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு அதிகமாகவும் இருக்கும் பணிகளுக்கும் குறிப்பிட்ட சில பொருட்களின் விலை மாற்றத்திற்கேற்ப விலை மாற்றம் வழங்கும் புதிய முறையினையும் பரீட்சார்த்தமாக ஓர் ஆண்டுக்கு செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களுக்கேற்ப ஒப்பந்ததாரர்கள் நிறைவேற்றும் பணிகளுக்கு தொகை வழங்கப்படும்.

## IV. துறை செயல்படுத்தும் திட்டங்கள்

### 4.1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளை, இந்திய சாலைக் கழகத்தின் (IRC) நெறிமுறைகளின்படி படிப்படியாக அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

### 4.1.1. மாநில நெடுஞ்சாலைகள் (State Highways)

இத்திட்டத்தின்கீழ் 2006-07 ஆம் ஆண்டில் 1,045 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.240 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2007-2008-ல், ரூ.310.13 கோடி மதிப்பீட்டில் 780 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தவும், 140 கி.மீ. நீள சாலைகளை வலுப்படுத்தவும், 4 சிறு பாலங்களைக் கட்ட/ திரும்பக் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது. இதில் நிலுவைப் பணிகள் உட்பட 1,121 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 16 பால/சிறு பாலப் பணிகளும் ரூ.415.44 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மாநில நெடுஞ்சாலைகளில் எஞ்சியுள்ள ஒருவழித்தட சாலைகள் அனைத்தும் வரும் ஆண்டுகளில் இடைவழி/ இருவழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தப்படும். சுமார் 900 கி.மீ. நீள சாலைகளில், அகலப்படுத்துதல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளையும், தேவைப்படும் இடங்களில் வாகன நிறுத்தம் அமைத்தல், வடிகால் அமைத்தல் ஆகிய பணிகளையும் 2008-2009-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து 2008-2009-ல் ரூ.441.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.2. மாவட்ட முக்கியச் சாலைகள் (Major District Roads)

இத்திட்டத்தின்கீழ் 2006-07 ஆம் ஆண்டில் 1,141 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.241 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2007-08-ல், ரூ. 225 கோடி மதிப்பீட்டில் 817 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளை அகலப்படுத்தவும், 108 கி.மீ. நீள சாலைகளை வலுப்படுத்தவும், 6 சிறு பாலங்களைக் கட்ட/திரும்பக் கட்டவும் அரசு அனுமதியளித்தது. நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 1,869 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 17 பால/சிறு பாலப் பணிகளும் ரூ.379.89 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட முக்கியச் சாலைகளில் எஞ்சியுள்ள 3,961 கி.மீ. நீள ஒருவழித்தட சாலைகள் வரும் ஆண்டுகளில் குறைந்தபட்சம் இடைவழித் தடச் சாலைகளாக அகலப்படுத்தப்படும். 2008-2009-ல், சுமார் 750 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்தவும் மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து 2008-2009-ல் ரூ.283.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.3. மாவட்ட இதரச் சாலைகள் (Other District Roads)

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 1,739 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.166 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2007-2008-ல், ரூ.132 கோடி மதிப்பீட்டில் 361 கி.மீ. நீள மாவட்ட இதரச் சாலைகளை அகலப்படுத்தவும், 547 கி.மீ. நீள சாலைகளை வலுப்படுத்தவும், 26 சிறு பாலங்களைக் கட்ட/திரும்ப கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது. நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 1,105 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 40 பால/சிறு பாலப் பணிகளும் ரூ.161.94 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் சுமார் 1,500 கி.மீ. சாலைகளை மேம்படுத்தவும் அகலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து 2008-2009-ல் ரூ.162.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 28

### 4.1.4. ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதரச் சாலைகள் மேம்பாடு

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதரச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தை 2006-2007 ஆம் ஆண்டு முதல் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 244 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.32 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. மேலும், 2007-2008-ம் ஆண்டில், ரூ. 62.15 கோடி மதிப்பில் 456.43 கி.மீ. மாவட்ட இதரச் சாலைகளை அகலப்படுத்தவும், மேம்படுத்தவும், 6 சிறிய/மிக சிறு பாலப் பணிகளை மேற்கொள்ளவும், அரசு ஒப்புதல் அளித்தது. 2007-2008 ஆம் ஆண்டில் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 919 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 20 பால/சிறு பாலப் பணிகளும் ரூ.105.13 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 870 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து 2008-2009-ல் ரூ. 95.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2. பகுதி 2 திட்டப் பணிகள்

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 30 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 19 பாலப் பணிகளும் ரூ.24.65 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின்கீழ் ரூ. 9.45 கோடி மதிப்பிலான 2 பாலப் பணிகளையும், 21 கி.மீ. நீள சாலைப் பணிகளையும், மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்தது. இப்புதிய பணிகள் மற்றும் நிலுவைப் பணிகளில் 11 பால/சிறு பாலப் பணிகளும் 107.41 கி.மீ. நீள சாலைப் பணிகளும் ரூ.29.39 கோடி மதிப்பில் 2007-2008-ல் செய்து முடிக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் 2008-2009-ல் செய்து முடிக்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 10.34 கோடி மதிப்பில் பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன :



2008 ஏப்ரல் 28]

(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டப் பணி | பாலப் பணி | | ஏனைய பணி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | மதிப்பு | எண் | மதிப்பு | எண் | மதிப்பு |
| 1. | மாநில நெடுஞ்சாலை | 2 | 6.00 | - | - | 2 | 6.00 |
| 2. | பழுதடைந்த பாலங்களை சீரமைத்தல் | 8 | 3.20 | - | - | 8 | 3.20 |
| 3. | பாலமில்லா சாலை குறுக்கீடுகளில் பாலம் கட்டுதல் | 2 | 0.62 | - | - | 2 | 0.62 |
| 4. | இயந்திரங்களும், கருவிகளும் | - | - | 4 | 0.22 | 4 | 0.22 |
| 5. | ஆராய்ச்சி மேம்பாடு | - | - | 3 | 0.30 | 3 | 0.30 |
| | மொத்தம் | 12 | 9.82 | 7 | 0.52 | 19 | 10.34 |

தற்போது நடைபெற்று வரும் பணிகளுக்கும் புதிய பணிகளுக்கும் சேர்த்து 2008-2009-ல் ரூ.39.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3. சுனாமி மறுவாழ்வுத் திட்டம்

### 4.3.1. ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம்

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் ரூ.54.70 கோடி மதிப்பில் 5 பெரிய பாலங்கள் கட்டவும், ஒரு சாலைப் பணியை மேற்கொள்ளவும் அரசு ஒப்புதல் வழங்கியது. இவற்றில் நாகப்பட்டினம் மாவட்டம் - வேட்டைக்காரன் இருப்பு, கொடியம்பாளையம் மற்றும் கடலூர் மாவட்டம் கிள்ளை, சோத்திக்குப்பம் ஆகிய நான்கு இடங்களில் பாலங்கள் கட்டுவதற்கு கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியும்,

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அனுமதியும் பெறப்பட்டு தற்போது இப்பாலங்களுக்கு அடித்தளத் தூண்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதியில் கட்டப்படவுள்ள பாலம் பழவேற்காடு பறவைகள் சரணாலய எல்லைக்குள் அமைவதால், அப்பணிக்கு உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பேரில் அனுமதி பெறப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டு இப்பணிகளுக்கு ரூ.13 கோடி செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.42.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3.2. மைய அரசின் உதவியுடன் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், பொது அலகின்மூலம் ரூ.224.38 கோடி மதிப்பில் 423.22 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும், 54 புதிய பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முன்னேற்றத்தில் உள்ள அனைத்துப் பணிகளும் 2008-2009 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

தவிர, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின்மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.53.40 கோடி மதிப்பில், 47 கி.மீ. நீள கடலோர கிராமச் சாலைகளை மேம்படுத்தவும், 6 உயர் மட்டப் பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டத்திற்கு 2007-2008-ல் மொத்தம் ரூ.53.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணிகளுக்காக 2008-2009-ல் ரூ.164.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3.3. உலக வங்கி நிதியுதவியுடன் அவசர கால சுனாமி மறுவாழ்வுத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட கீழ்மணக்குடி, மேல்மணக்குடி கிராமங்களுக்கு இடையேயான



பாலத்தினை ரூ.15 கோடி மதிப்பில் உலக வங்கி உதவியுடன் திரும்பக் கட்டும் பணிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இப்பாலத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### 4.4. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (CMDP)

மாநில அரசு நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் சாலைகள் மேம்படுத்தல், பாலங்கள் கட்டுதல், மத்திய தடுப்புகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் உள்ளிட்ட 590 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் பாலப் பணிகளுக்கு ரூ.825 கோடி மதிப்பில் சென்னைப் பெருநகர் பகுதியில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதில், 200 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 33 பாலம் மற்றும் சிறு பாலப் பணிகள் மற்றும் மத்திய தடுப்புப் பணிகள் ரூ.135 கோடி மதிப்பில் 2007-2008-ல் செய்து முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள ரூ.280 கோடி மதிப்பிலான 220 கி.மீ. நீள சாலைப் பணிகளும் ரூ.225 கோடி மதிப்பிலான 16 பாலம் மற்றும் சிறு பாலப் பணிகள் மற்றும் மத்திய தடுப்புப் பணிகள் 2008-2009-ல் நிறைவேற்றப்படும்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் 6 சாலை மேம்பாலங்கள், 1 இரயில்வே மேம்பாலம் மற்றும் 4 ஆற்றுப் பாலங்கள் ஆக மொத்தம் 11 பாலங்களை ரூ.219 கோடி மதிப்பீட்டில் திட்ட அலகின்மூலம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்தது. இவற்றுள் மறைமலை அடிகள் பாலம் - இரும்புலியூர் சாலையுடன் பல்லாவரம் துரைப்பாக்கம் சாலை சந்திப்பில் பள்ளிக்கரணை அருகே உள்ள சாலை மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது.

பிற பாலப் பணிகளைப் பொறுத்த வரையில், சர்தார் பட்டேல் சாலையில் மத்திய கைலாஷ் பகுதியில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்தும் பணி, சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட்டதால் கைவிடப்பட்டது. மீதமுள்ள பணிகள் அனைத்திற்கும் ஆலோசகர்மூலம் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2008-2009-ல் இப்பணிகள் தொடங்கப்படும்.

[2008 ஏப்ரல் 28

மேலும், ஆலோசகர்கள் அளித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளின்படி போரூர் மற்றும் மூலக்கடை ஆகிய இடங்களில் உள்ள இரு சாலை மேம்பாலப் பணிகளுக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்தபின் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து செயல்படுத்தப்படும்.

3 சாலை மேம்பாலப் பணிகளுக்கான நேர்ப்பாடு சென்னை பெருநகர இரயில்வே திட்டப் பாதையில் குறுக்கிடுவதால் இப்பணிகளை தங்கள் பணிகளுடன் சேர்த்து வடிவமைப்பு தயாரித்து, நெடுஞ்சாலைத் துறையினரின் ஒப்புதல் பெற்ற பிறகு இரயில் கழகமே மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

இவ்வாறே, ஆலோசகர்கள் அளித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையினைத் தொடர்ந்து வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பணிக்கு இரயில்வே துறையின் 50% பங்கீட்டுத் தொகையினைப் பெறுவதற்கான கருத்துரு இரயில்வே துறையின் பரிசிலனையில் உள்ளது. இரயில்வே துறையின் ஒப்புதல் கிடைத்தபின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் தொடங்கப்படும்.

இத்திட்டங்களுக்கான நில எடுப்பு மற்றும் மின் கம்பங்கள் அகற்றும் பணிகளில் ஏற்படும் தாமதத்தால் பணிகளின் முன்னேற்றத்தில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இக்காலதாமதத்தைத் தவிர்த்து பணிகளை விரைந்து முடிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணிகளுக்காக 2008-2009-ல் ரூ. 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.5. ஒரகடம் தொழிற்பூங்கா பகுதியில் சாலை கட்டமைப்பு மேம்பாடு

திருப்பெரும்புதூரை ஒட்டிய ஒரகடம்-தொழிற்பூங்கா (காஞ்சிபுரம் மாவட்டம்) பகுதியில் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.300 கோடி மதிப்பில் பின்வரும் பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது :

(i) சிங்கப்பெருமாள்கோயில் - திருப்பெரும்புதூர் சாலையை (SH-57) (24.60 கி.மீ.) மத்திய தடுப்புடன் ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்துதல் (முதல் கட்டமாக நான்கு வழிச் சாலை அமைத்தல்)



2008 ஏப்ரல் 28]

(ii) வண்டலூர் - வாலாசாபாத் சாலையை (SH-48) (33.60 கி.மீ.) மத்திய தடுப்புடன் நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துதல்.

(iii) சிங்கப்பெருமாள்கோயில் - திருப்பெரும்புதூர் சாலையில் போந்தூர் கிராமத்திற்கு புறவழிச் சாலை அமைத்தல்;

(iv) ஒரகடம் சந்திப்பில் இரு பக்கங்களிலும் 3 கி.மீ. நீள சேவை சாலை அமைத்தல்.

v) ஒரகடம் கூட்டுச் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்.

சாலைகளை அகலப்படுத்தும் பணிகளுக்கு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகளை விரைவாக முடிக்கும்பொருட்டு நான்கு தொகுப்புகளாக பிரித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன் பேரில் வேலை உத்தரவு வழங்கப்பட்ட பின்னர், ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முன்வராததால் வேலை உத்தரவு இரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இவை விரைவில் முடிவு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

2 சாலைகளிலும் ஒரு பகுதியில் 4 வழித்தடமும், மறு பகுதியில் 6 வழித்தட ஓடு பாதையும் அமைப்பதற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணிகளுக்காக 2008-2009-ல் ரூ.119 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.6. இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை விரிவாக்கம்

இராஜீவ் காந்தி சாலையில் முதற்கட்டமாக மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையின் முதற்கட்டப் பணிகள் (ஆறு வழித்தடம்) முடிவு பெறும் நிலையில் உள்ளன. இச்சாலையை, 2 ஆம் கட்டமாக சிறுசேரியிலிருந்து மாமல்லபுரம் வரை ஆறுவழிச் சாலையாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள 25.3 கி.மீ. நீள தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையை அகலப்படுத்துவதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்காக அரசு ரூ. 70 கோடி அனுமதித்துள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை முடிவுற்ற பின் சாலைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஏப்ரல் 28

## 4.7. முக்கிய நகரங்களுக்கு புறவழிச் சாலைகள் அமைத்தல்

ஈரோடு நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திடும்பொருட்டு புறவழிச் சாலை அமைப்பதற்கு முதல் கட்டமாக கொக்கராயன்பேட்டை முதல் திண்டல் வரை 14 கி.மீ நீளத்திற்கு நில எடுப்புப் பணிகளுக்கு ரூ.22 கோடியும், ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கும் பொருட்டு ரூ.35 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு 11-9-2007 அன்று அரசாணை வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகளை நடப்பு நிதியாண்டில் முடித்து அதன் பின் சாலைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கொக்கராயன்பேட்டை அருகே பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம் எட்டுக்குடி நகருக்கு புதிய புறவழிச் சாலை அமைக்கவும், அதற்கான நிலங்களைக் கையகப்படுத்தவும், ரூ.155 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவுற்றபின் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவை தவிர, பெரம்பலூர், தாராபுரம், இராசிபுரம், காஞ்சிபுரம், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர், ஓசூர் மற்றும் பட்டுக்கோட்டையில் புதிய புறவழிச் சாலைகளை அமைப்பது குறித்த கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. நில எடுப்புப் பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.8. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III (TNUDP - III)

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் சென்னையிலும் மற்றும் புறநகரிலும் (CMDA) ரூ.110.95 கோடி மதிப்பில் 6 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள், ரூ.6.30 கோடி மதிப்பில் 3 சுரங்க நடைபாதைகள், ரூ.2.35 கோடி மதிப்பில் 3 சாலை மேம்பாலங்கள் மற்றும் ரூ.2.53 கோடி மதிப்பில், 97 கி.மீ நீள 13 சாலைப் பணிகள் சேர்த்து மொத்தம் ரூ.605 கோடி மதிப்பிலான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

13 சாலைப் பணிகளுள், ரூ.120.24 கோடி மதிப்பிலான 5 சாலைப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பு ஆண்டில் துவங்கப்படும்.



2008 ஏப்ரல் 28]

எஞ்சிய 8 சாலைப் பணிகள், 5 இரயில்வே மேம்பாலங்கள், 1 கீழ்ப்பாலம், 3 சுரங்க நடைபாதைகள் மற்றும் 3 சாலை மேம்பாலங்கள் ஆகிய பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை விரைவாகப் பெற்று இப்பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உலக வங்கி நெறிமுறைகளின்படி பணிகளுக்கான நில எடுப்பு மற்றும் திட்டத்தால்பாதிக்கப்படுபவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செய்த பின்னரே பணிகளை செயல்படுத்த இயலும். எனவே, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பணிகளை விரைவாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.9. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 4.9.1. மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகள் மேம்பாடு செய்தல்

இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டு நிலுவையிலிருந்த ரூ.23.53 கோடி மதிப்பிலான 196 கி.மீ நீள சாலைப் பணிகளும் 8 பாலப் பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில், 127 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 4 பாலப் பணிகளும் ரூ.18 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 பாலப் பணிகள் மட்டும் நடைபெற்று வருகின்றன. அவை நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

இத்திட்டத்திற்கு 2008-2009-ல் ரூ.2.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.9.2. கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மாவட்ட இதரச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்தப்படுகின்றன. மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய வணிகத் தலங்கள் ஆகியவற்றை முக்கியச் சாலைகள்மூலம் இணைக்கும் கிராமச் சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்தும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் நிலுவையிலிருந்த ரூ.105 கோடி மதிப்பிலான 585 கி.மீ நீள சாலைப் பணிகளும், 18 பாலப் பணிகளும் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும், இத்திட்டத்தின்கீழ் ரூ.145 கோடி மதிப்பில், புதிதாக 640 கி.மீ நீள சாலைகளை மேம்பாடு செய்யவும், 32 பாலங்களைக் கட்டவும் அரசு ஒப்புதல் வழங்கியது. இவற்றில் நிலுவைப் பணிகளையும் சேர்த்து மொத்தம் 471 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 9 பாலப் பணிகளும் ரூ.95 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 280 கிராமங்கள் தார்ச் சாலை இணைப்பு வசதி பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய பணிகளுக்கு ஒப்புதல் கோரி கருத்துருக்கள் நபார்டு வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.134 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.9.3. பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

(அ) இத்திட்டத்தின்கீழ், நபார்டு வங்கி நிதியுதவியுடன் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மாவட்ட இதரச் சாலைகளின் தரத்திற்கு இணையாக தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

2007-2008-ம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ் நிலுவையிலிருந்த ரூ.53.43 கோடி மதிப்புள்ள 320 கி.மீ நீள சாலைப் பணிகளும், 7 பாலப் பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும், இத்திட்டத்தின்கீழ் ரூ.41.53 கோடி மதிப்பில் புதிதாக 152 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்யவும், 11 பாலங்களைக் கட்டவும் அரசு ஒப்புதல் வழங்கியது. இவற்றில் நிலுவைப் பணிகளையும் சேர்த்து மொத்தம் 250 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 5 பாலப் பணிகளும் ரூ.48.50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய பணிகளுக்கு ஒப்புதல் கோரி கருத்துருக்கள் நபார்டு வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு திட்டத்தின்கீழ், 2007-2008-ம் ஆண்டில் நிலுவையிலிருந்த 497 கி.மீ நீள பேருந்து செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 4 பாலப் பணிகள், ரூ.26 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 476 கி.மீ நீள சாலைப் பணிகளும், 3 பாலப் பணிகளும் ரூ.24 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. முன்னேற்றத்திலுள்ள மீதிப் பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.





**4.9.4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தார்ச் சாலை வசதி செய்தல்**

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் கிராம மக்கள் தொகையில் ஆதி திராவிடர்கள் 50%-க்கு அதிகமாக உள்ள சிறு குடியிருப்புகளுக்குச் செல்லும் இணைப்புச் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த ரூ.23.67 கோடி மதிப்புள்ள 101 கி.மீ நீள சாலைப் பணிகளும் 6 பாலப் பணிகளும் மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும், இத்திட்டத்தின்கீழ் புதிதாக 160 கி.மீ நீள சாலைப் பணிகளையும், 6 பாலப் பணிகளையும் ரூ.36.24 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியது. இவற்றில் நிலுவைப் பணிகளையும் சேர்த்து மொத்தம் 80 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 1 பாலப் பணியும் ரூ.20.50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 105 கிராமங்கள் தார்ச் சாலை இணைப்பு வசதி பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய பணிகளுக்கு ஒப்புதல் கோரி கருத்துருக்கள் நபார்டு வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

2008-2009-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.9.5. அரசு சாலைகள் மற்றும் கிராமச் சாலைகளில் பாலங்கள் கட்டுதல்**

(அ) 2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் நிலுவையிலிருந்த ரூ.108.97 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு 254 பாலப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் மார்ச் 2008 வரை 111 பாலப் பணிகள் ரூ.33.50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 143 பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அவை நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

2008-2009-ல் இத்திட்டத்திற்கு ரூ.55.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், மாநிலத்தின் முக்கியச் சாலைகளில் உள்ள குறுகிய மற்றும் வலுவிழந்த பாலங்களைக் கண்டறிந்து அவற்றுக்குப் பதிலாக புதிதாக உயர்மட்டப் பாலங்களைக் கட்டுவதென அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி நடப்பாண்டில் புதிய பணிகளாக, 22 மாவட்டங்களில் ரூ.125.45 கோடி மதிப்பில் 102 பாலங்களைக் கட்டுவதற்கு நிதி உதவி கோரி நபார்டு வங்கிக்கு கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2008-2009-ல் இத்திட்டத்திற்கு தனியாக ரூ.34.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.9.6. நபார்டு வங்கி நிதியுதவியுடன் காவிரி பாசனப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின்கீழ் காவிரி டெல்டா பகுதிகளில் 2006 ஆம் ஆண்டு வரை ரூ.83.23 கோடி மதிப்பில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 48 பாலங்கள் கட்டுவதற்கும், மற்ற மாவட்டங்களில் 7 பாலங்கள் கட்டுவதற்கும், 417 கி.மீ நீளமுள்ள 139 கரும்புச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கும் அரசு ஒப்புதல் அளித்தது. இவற்றில் 43 பாலப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2 பாலப் பணிகள் நீக்கப்பட்டன. எஞ்சிய 10 பாலப் பணிகளை நடப்பாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், எடுத்துக்கொள்ளப்பட்ட 139 சாலைப் பணிகளில், இதுவரை 137 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரு சாலைப் பணிகள் நீக்கம் செய்யப்பட்டன.

### 4.9.7. முக்கிய ஆறுகளின் குறுக்கே பெரிய பாலங்கள் கட்டுதல்

நபார்டு வங்கியின் உதவியுடன் முக்கிய ஆறுகளின் குறுக்கே 4 பெரிய பாலங்களை மொத்தம் ரூ.121.50 கோடி மதிப்பில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை துரிதப்படுத்தும் வகையில் அவ்வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணிகளுக்கு ஆலோசகர்கள்மூலம் விரிவான இட்ட அறிக்கை தயாரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.





- கரூர் மாவட்டத்தில் வாங்கல் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.42.50 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்
- தஞ்சாவூர் மாவட்டம் நீலத்தநல்லூரையும் அரியலூர் மாவட்டம் மதனத்தூரையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.45 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்
- கடலூர் மாவட்டம் முட்டத்தையும் நாகப்பட்டினம் மாவட்டம் மணல்மேட்டையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.22.40 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்
- இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியையும், எமனேஸ்வரத்தையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ.10.60 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்

இப்பணிகளுக்கு விரிவான இட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டபின், ஒப்பந்தப்புள்ளி கோரி நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட நான்கு பணிகளுக்கும் மொத்தம் ரூ.51.92 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.10. சென்னை உள் வட்டச் சாலை

சென்னை நகரில் தென் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு 9.4 கி.மீ நீளத்தில் தெற்கு உள் வட்டச் சாலை அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. முதற்கட்டமாக, 4.4 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

தற்போது நில எடுப்புப் பணிகள் முடிவுற்று, இரண்டாம் கட்டமாக 5 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் ஆதம்பாக்கம் ஏரியின் குறுக்கே கட்டப்படவுள்ள பாலத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இப்பாலப் பணி தொடங்கப்படும். சாலைப் பணியினை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.11.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 28

**4.11. மதுரை ஆரச் சாலைகள்**

மதுரையைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளை மதுரை மாநகருடன் இணைக்கும் சாலைகளை மேம்படுத்துவதற்காக ஹட்கோ வங்கி நிதியுதவியுடன் 123.20 கி.மீ. நீளமுள்ள 12 சாலைகள் ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முதல் கட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில் எல்லீஸ் நகர் இரயில்வே மேம்பாலம் தவிர அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. எல்லீஸ் நகர் இரயில்வே மேம்பாலப் பணி நடப்பாண்டில் முடிக்கப்படும்.

ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை ஆரச் சாலைகளுக்கு 2-ஆம் கட்டமாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட 122.3 கி.மீ. நீளமுள்ள 14 பணிகள் ரூ.70.60 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டது. இப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவை நடப்பாண்டில் முடிவுறும். கடந்த ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ.22 கோடி செலவிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.29.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.12. திருப்பூர் சுற்றுச் சாலை**

திருப்பூர் நகரில் பெரும் தொழில் வளர்ச்சி காரணமாக போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது. இத்தகைய நெரிசலைக் குறைப்பதற்காக திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, ரூ.70 கோடி மதிப்பில் 98.60 கி.மீ. நீள சுற்றுச் சாலை அமைக்கவும், 2 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 6 ஆற்றுப் பாலங்களை கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது. இவற்றுள் பொது அலகில் 84.40 கி.மீ. நீள சாலைப் பணிகளும் மீதமுள்ள பணிகள் திட்ட அலகிலும் மேற்கொள்ளப்பட்டு 70 கி.மீ. நீள பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. திட்ட அலகில் 2 இரயில்வே மேம்பாலங்கள், 6 ஆற்றுப் பாலப் பணிகள் மற்றும் 14.20 கி.மீ. நீளமுள்ள 5 சாலைப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 2 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 பாலப் பணிகள் ஒப்பந்தம் கோரப்பட்ட நிலையிலும், இரண்டு பணிகள் மதிப்பீடு தயாரிக்கப்படும் நிலையிலும் உள்ளன. இந்த 6 பாலப் பணிகளையும் சாலைப் பணிகளையும் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஏப்ரல் 28]

விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்து ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்த பின்னர் இரயில்வே மேம்பாலப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இப்பணிகளுக்கு ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.13. இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப் பாலங்கள் கட்டுதல் (Railway Works Programme)**

அரசு சாலைகளில், இருப்புப்பாதை குறுக்கிடும் பகுதியில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்திற்கும் மேல் இரயில் வாகன அலகுகள் (Train Vehicle Unit) இருக்கும் இருப்புப்பாதை கடவிற்கு பதிலாக இரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலம் கட்டும் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இரயில்வே பணி திட்டத்தின்கீழ் இப்பணிக்கு அணுகுசாலைகள் மற்றும் பயன்பாட்டுச் சாலைகள் உள்பட இரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலம் கட்டுவதற்கு ஆகும் செலவை மாநில அரசும், இரயில்வே அமைச்சகமும் சமமாக ஏற்றுக்கொள்கின்றன.

1999 முதல் 2005 வரை உள்ள 6 ஆண்டுகளில், 47 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் மார்ச் 2008 வரை, 17 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் முடிக்கப்பட்டன. பிற பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் 15 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் முடிக்கப்பட உள்ளன.

மேலும், 2006-2007 ஆம் ஆண்டில் 25 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்கு இரயில்வே அமைச்சகத்தின் இசைவுடன் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இப்பணிகளுக்கு ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வறிக்கைகள் பெறப்பட்டபின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் தொடங்கப்படும்.

2007-2008 ஆம் ஆண்டில் 12 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் இரயில்வே பணித் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இப்பாலங்களைக் கட்டுவதற்கு ரூ.876.70 கோடி மதிப்பில் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர்கள் மூலம் தயாரிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 2008-2009 ஆம் ஆண்டில் புதிதாக 23 இரயில்வே மேம்பாலங்களை இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ், செலவுத் தொகை பங்கீட்டு முறையில் மேற்கொள்ள இரயில்வே துறை அனுமதி அளித்துள்ளது. இப்பணிகளில் நெடுஞ்சாலைத் துறை தொடர்பான பணிகளுக்கு நடப்பாண்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கி செயல்படுத்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

இரயில்வே துறையினரோடு கூட்டம் நடத்தி, பொது தோற்பாடு வரைபடத்தினை (GAD) துரிதமாக முடிவு செய்ய காலமுறைதோறும் இரயில்வே துறையினரும், நெடுஞ்சாலைத் துறையினரும் கூட்டாக தள ஆய்வு மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் கால தாமதம் தவிர்க்கப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்படும்.

இப்பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.293 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.14. திருநெல்வேலியில் மேம்பாலம் கட்டுதல்

திருநெல்வேலி புறவழிச்சாலையில் செல்லபாண்டியன் சிலை அருகில் ரூ.16.40 கோடி செலவில் மேம்பாலம் கட்டுவதற்கு 4-12-2007-ல் அரசு ஒப்புதல் வழங்கியது. இப்பணிக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணியை முடித்து நடப்பு நிதியாண்டில் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.15. நபார்டு நிதியுதவியுடன் பாலங்கள் கட்டும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், நபார்டு நிதியுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பில் 61 பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இவற்றில் 52 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2 பணிகள் நீக்கப் பட்டுவிட்டன. எஞ்சிய 7 பாலப் பணிகளை நடப்பாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நடப்பாண்டில் இப்பணிகளுக்கு ரூ.9.49 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.16. கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம் (SCRD)

கரும்பு ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வையைப் (Cess Fund) பயன்படுத்தி கரும்பு விளையும் பகுதிகளிலிருந்து ஆலைகளுக்கு கரும்பு கொண்டு வருவதற்கு சாலைகள் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.



நிலுவையில் இருந்த பணிகளில் மார்ச் 2008 வரை 3 பாலங்களும் 91 கி.மீ. நீளமுள்ள 49 சாலைகளும் ரூ.13 கோடி செலவில் முடிக்கப்பட்டன. நீக்கப்பட்ட 12.10 கி.மீ. நீளமுள்ள 9 பணிகள் தவிர, எஞ்சிய 34.75 கி.மீ. நீளமுள்ள 21 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 3.4 கி.மீ. நீளமுள்ள 2 பணிகள் ஒப்பந்த நிலையிலும் உள்ளன. இப்பணிகள் அனைத்தையும் நடப்பு ஆண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பணிகளுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.9.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.17. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 4,500 கி.மீ. இதில் 3,260 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மேற்கொண்டுள்ளது. எஞ்சியுள்ள 1,240 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளில், மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைக்கொண்டு மாநில அரசின் மூலம் மேம்பாடு, பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.17.1. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

#### 4.17.1.1. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் (NHDP)

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களான தங்க நாற்கரச் சாலை திட்டம், வடக்கு-தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம், துறைமுக இணைப்புத் திட்டம், மற்றும் இதர திட்டங்களின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதைகளாக மாற்றும் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### (அ) தங்க நாற்கரச் சாலைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தே.நெ. 4 (சென்னை-பெங்களூரு), தே.நெ.5 (சென்னை-நெல்லூர்), தே.நெ.7 (பெங்களூரு-சேலம்-கன்னியாகுமரி) மற்றும் தே.நெ.46 (கிருஷ்ணகிரி-ராணிப்பேட்டை) ஆகிய சாலைகளில் தமிழ்நாட்டில் மொத்தம் 342 கி.மீ. நீளச் சாலைகளை ரூ.1,193 கோடி செலவில் நான்கு வழிப்பாதையாக மேம்படுத்தும் பணிகள் முடிவடைந்துள்ளன.

[2008 ஏப்ரல் 28

**(ஆ) வடக்கு–தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், தே.நெ.7 மற்றும் தே.நெ.47-ல் (சேலம்-கொச்சின் பகுதி) 756 கி.மீ. நீளச் சாலைகளை ரூ.4,141 கோடி மதிப்பில் நான்கு வழிப்பாதையாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நில எடுப்புப் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால் இத்திட்டப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்டிருந்தது. தற்போது நில எடுப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 34 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) துறைமுக இணைப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், 30 கி.மீ. நீள சென்னை-எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டம் (EMRIP) ரூ.309 கோடி மதிப்பிலும் திருநெல்வேலி முதல் தூத்துக்குடி வரையுள்ள 47 கி.மீ. நீள தூத்துக்குடி துறைமுக இணைப்புத் திட்டம் (தே.நெ-7A) ரூ.231 கோடி மதிப்பிலும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகளால் இப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்டிருப்பினும் அவற்றைச் சுமூகமாக தீர்த்து பணிகளை துரிதப்படுத்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**(ஈ) இதர திட்டங்கள்**

தே.நெ. 45-ல் தாம்பரம் முதல் திண்டிவனம் வரையிலான 93 கி.மீ. நீளச் சாலை நான்கு வழிப்பாதையாக 2004-2005-ல் அகலப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக திண்டிவனம் முதல் திருச்சி வரையிலான 204 கி.மீ. நீளச் சாலைப் பகுதியை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணிகள் ரூ.1,260 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் தே.நெ.45B-ல் திருச்சி முதல் மதுரை வரையிலான 125 கி.மீ. நீளச் சாலையை நான்கு வழிப்பாதையாக மாற்றும் பணிகள் ரூ.420 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளும் நடப்பு ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கரூர் முதல் கோயம்புத்தூர் வரையுள்ள 114 கி.மீ. நீள தே.நெ. 67-ல் கடின தள புருவத்துடன் கூடிய இருவழித் தடம் மற்றும்



2008 ஏப்ரல் 28]

சில பகுதிகளில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி ரூ.178 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. இப்பணி நடப்பு ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(உ) பறக்கும் சாலைத் திட்டம் (Elevated Expressway)**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்காக "பறக்கும் சாலை" திட்டத்தினை (Elevated Expressway) செயல்படுத்துவது என இந்த அரசு கொள்கை முடிவு செய்தது. அதன் பேரில் சென்னை துறைமுகத்திற்கு சரக்கேற்றி வரும் கனரக வாகனங்களுக்கு தனியே விரைவு சாலைத் திட்டத்தினை மைய அரசுடன் இணைந்து செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள மதுரவாயலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு நேரடியாக "பறக்கும் சாலை" (Elevated Expressway) அமைக்கும் திட்டத்தினை மொத்தம் ரூ.1,468 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு, மைய அரசு மற்றும் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் இணைந்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மதுரவாயலில் இருந்து கோயம்பேடு வரை தற்போதுள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் பெரிய தூண்கள் அமைத்து அதன் மீது பறக்கும் சாலை அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து, கோயம்பேடு பகுதியிலிருந்து சென்னைத் துறைமுகம் வரை கூவம் ஆற்றின் இடது கரையோரமாக பறக்கும் விரைவுச் சாலை உருவாக்கப்படும்.

மேலும், இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலத்தை இலவசமாக வழங்கவும், கூவம் ஆற்றின் கரையை இத்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு இசைவு அளித்துள்ளது. தவிர, இத்திட்டத்திற்குத் தேவைப்படும் தனியார் நிலங்களை கையகப்படுத்தவும், பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு மறு குடியமர்வு செய்யவும் ஏற்படும் உத்தேசச் செலவான ரூ.345 கோடியை தமிழ்நாடு அரசும், சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகமும் சரிசமமாக ஏற்றுக்கொள்ளவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டமானது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

**4.17.1.2. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–III**

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 1,460 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணி

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் அமைத்தல், நிர்வகித்தல், ஒப்படைத்தல் BOT எனும் முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவை தவிர, கோயம்புத்தூர் முதல் மேட்டுப்பாளையம் வரை (தே.நெ. 67 விரிவு) தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேட்டுப்பாளையம் முதல் காக்கநல்லா (தமிழ்நாடு/கர்நாடக எல்லை) வரை நிரந்தர சீரமைப்புப் பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், கோவை மாநகர எல்லைக்குள் விடுபட்ட 12 கி.மீ. தே.நெ. 67-ன் சாலைப் பகுதியை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் இச்சாலையில் மேம்பாட்டுப் பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**4.17.1.3. சென்னைப் புறவழிச் சாலை**

சென்னைப் புறவழிச் சாலை கட்டுமானப் பணியின் முதற்கட்டமாக கடந்த 2002 ஆம் ஆண்டில் தாம்பரம் முதல் மதுரவாயல் வரை 19 கி.மீ. நீளத்தில் இருவழித் தடச் சாலை அமைக்கப்பட்டது. தற்போது, இரண்டாம் கட்டமாக இச்சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தவும், சேவைச் சாலைகள் அமைக்கவும், மதுரவாயல் (தே.நெ.4) முதல் புழல் (தே.நெ.5) வரை 13 கி.மீ. நீளத்திற்கு புதிய சாலை அமைக்கவும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ரூ.405 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளை நடப்பு ஆண்டில் முடிக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**4.17.1.4. சென்னை மாநகரில் செயல்படுத்தப்படும் அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலப் பணிகள்**

கத்திப்பாரா சந்திப்பு, கோயம்பேடு சந்திப்பு, பாடி சந்திப்பு மற்றும் சென்னை விமான நிலைய முகப்புப் பகுதி ஆகிய நான்கு இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் கோயம்பேடு முதல் மதுரவாயல் வரையுள்ள சாலையை அகலப்படுத்துதல் ஆகிய பணிகளை ரூ.196 கோடி மதிப்பில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதில், கத்திப்பாரா சந்திப்பு





மேம்பாலப் பணியின் ஒரு பகுதி முடிக்கப்பட்டு போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையம் முகப்புப் பகுதி, கோயம்பேடு மற்றும் பாடி சந்திப்புகளில் உள்ள அடுக்குப் பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கோயம்பேடு முதல் மதுரவாயல் வரையிலான 4 கி.மீ. நீளச் சாலைப் பகுதியினை நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அகலப்படுத்தி, சாலையின் இருபுறமும் சேவைச் சாலைகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளைத் துரிதமாக முடிக்குமாறு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**4.17.1.5. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–VII**

மைய அரசால் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, சென்னை ஆகிய மாநகரங்களுக்கு சுற்றுச் சாலை/புறவழிச் சாலை அமைக்கும் உத்தேசத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**4.17.2. தமிழக அரசு மூலம் செயல்படுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்**

மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின் கீழ் 1,240 கி.மீ. நீளச் சாலைகள் மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைப் பயன்படுத்திப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.91.25 கோடி நிதியை மைய அரசு ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் கீழ் 268 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும், திருவலம், குழித்துறை ஆகிய 2 பெரிய பாலங்கள் மற்றும் 2 சிறு பாலப் பணிகளும் ரூ.91.25 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

தவிர, இராமநாதபுரம் மாவட்டம் சனவெளி அருகில் ரூ. 12.41 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நடப்பு ஆண்டில் முடிவடையும்.

மேலும், ரூ.133.36 கோடி மதிப்பீட்டில் 59 தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை நடப்பு ஆண்டில் முடிவடையும்.

11-97—14a

[2008 ஏப்ரல் 28

மேலும் தேசிய நெடுஞ்சாலை பராமரிப்புப் பணிகளின்கீழ் ரூ. 12.86 கோடி செலவில் 36 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

### 4.17.3. 2008–2009-ஆம் ஆண்டுக்கான புதிய பணிகள்

நடப்பு நிதி ஆண்டில் 211 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 3 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு பெரிய பாலம் (Major Bridge), 15 சிறு பாலங்கள் (Minor Bridges), 76 மிகச் சிறு பாலங்கள் (Culverts), புறவழிச்சாலைகளுக்கான நில எடுப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு ரூ. 258.20 கோடி மதிப்பில் 2008-2009-ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசு முதற்கட்ட ஒப்புதல் அளித்துள்ளது.

**(அ) சாலைப் பணிகள்**

தே.நெ. 4, 45A, 45 விரிவு, 47B, 49, 49 விரிவு, 208, 209, 210, 220 ஆகிய சாலைகளில் அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல், ஓடுதளத்தை மேம்பாடு செய்தல், கடினதளபுருவம் அமைத்தல், மிகச் சிறு பாலங்கள் கட்டுதல் உள்ளிட்ட 211 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.134.28 கோடி ஒதுக்கீடு செய்து மைய அரசு 2008-2009-ஆம் ஆண்டுத் திட்டத்தில் அனுமதி அளித்துள்ளது. இப்பணிகளுக்கான விரிவான மதிப்பீடு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**(ஆ) இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் இதர பாலங்கள்**

தே.நெ. 209-ல் முள்ளுப்பாடி, ஈச்சனாரி, கணபதி ஆகிய மூன்று இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் ரூ.35 கோடி மதிப்பில் மைய அரசு அனுமதி அளித்துள்ள 2008-2009 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றில் முள்ளுப்பாடி மற்றும் ஈச்சனாரியில் உள்ள இரு மேம்பாலப் பணிகளுக்கு தென்னக இரயில்வேயும் 2008-2009 ஆண்டுத் திட்டத்தில் அனுமதி அளித்துள்ளது. தவிர, தற்போது கணபதியில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலத்தை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணி இரயில்வே துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தே.நெ. 208-ல் கவுண்டா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான நில எடுப்புப் பணிக்கு மைய அரசு ரூ.5.38 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், 2008-2009-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான பணிகளிலும் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான மதிப்பீடு தயார் செய்து அதன் பேரில் மைய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2008 ஏப்ரல் 28]

**(இ) புறவழிச்சாலைகள்**

தே.நெ. 49 விரிவில் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, போடி நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைப்பதற்கான நேர்ப்பாட்டிற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், தே.நெ.7 மற்றும் தே.நெ.45B-ஐ இணைக்கும் வகையில் மதுரை மாநகருக்கும், தே.நெ. 208-ல் சேத்தூர் மற்றும் சொக்கம்பட்டிக்கும், தே.நெ.209-ல் பொள்ளாச்சி நகருக்கும் புறவழிச்சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறு மற்றும் விரிவான தொழில்நுட்ப ஆய்வுப் பணிக்கான மதிப்பீட்டிற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இது தவிர, தே.நெ.209-ல் உடுமலைப்பேட்டையில் புறவழிச்சாலை அமைக்க சாத்தியக்கூறு மதிப்பீடு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனைத்துப் புறவழிச்சாலைகளையும் அமைப்பதற்குத் தேவையான நில எடுப்புப் பணிகளுக்கு ரூ.22.50 கோடி ஒதுக்கீடு செய்து மைய அரசு 2008-2009-ஆம் ஆண்டுத் திட்டத்தில் அனுமதித்துள்ளது.

தவிர, புதுச்சேரியில் புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தபின் புறவழிச்சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், நடப்பு நிதியாண்டில் 2008-2009 திட்டப் பணிகளுக்காக மைய அரசிடமிருந்து சுமார் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.18. மத்திய சாலை நிதித் திட்டம் (CRF)

2000-ம் ஆண்டு முதல் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்புத் தீர்வை விதிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியைப் பயன்படுத்தி மத்திய சாலை நிதியினை மைய அரசு உருவாக்கியுள்ளது. இந்நிதியிலிருந்து 2001 முதல் 2005 வரை மொத்தம் ரூ.448.55 கோடி மதிப்பிலான 552 பணிகளுக்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் நீக்கப்பட்ட 6 பணிகள் தவிர மற்ற அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

மேலும். இந்நிதியிலிருந்து 2005 முதல் 2008 வரை ரூ.219.51 கோடி மதிப்பில் 104 பணிகளுக்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் 32 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2 பணிகள் நீக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 70 பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை நடப்பாண்டில் முடிக்கப்படும். மேலும், புதிய பணிகளுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற்று மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.19. பொருளாதார முக்கியத்துவமிக்க மற்றும் மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் (E & I Scheme)**

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் வேலூர் நகரத்தில் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் கடலூர்-சித்தூர் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணிக்கான பிரேரணை ரூ.39 கோடி மதிப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் கோரியதன் பேரில் மைய அரசு 50% தொகை வழங்கவும் மீதியை மாநில அரசு ஏற்கவும் அனுமதி அளித்துள்ளது.

மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் (Inter State Connectivity Scheme) ரூ.16 கோடி மதிப்பீட்டில் பாலாற்றின் குறுக்கே வேலூரையும் காட்பாடியையும் இணைக்கும் வகையில் புதிய பாலம் அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் 2 சாலைப் பணிகளை ரூ. 8.85 கோடி மதிப்பில் மேற்கொள்ளவும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் 7 சாலைப் பணிகளை ரூ. 12.97 கோடி மதிப்பில் மேற்கொள்ளவும் தேவையான பிரேரணைக்கு கொள்கை அளவிலான ஒப்புதலை மைய அரசு அளித்துள்ளது. இப்பணிகளுக்கான விரிவான கருத்துரு மைய அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் பெறப்பட்டபின் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**4.20. பாரத் நிர்மாண் திட்டம்**

பாரத் நிர்மாண் பகுதி-I திட்டத்தின்கீழ் 1,296 கி.மீ. நீளமுள்ள 297 மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை மாநில தொழில்நுட்பக் குழுமத்தினால் (STA) சரிபார்க்கப்பட்டு





ரூ.232.99 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் கோரி மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டபின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பாரத் நிர்மாண் பகுதி-II திட்டத்தின்கீழ் 167 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துவதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு மாநில அளவிலான நிலைக் குழுவின் (SLSC) ஒப்புதல் பெற்று நடப்பு ஆண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மைய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4.21. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (WGDP)**

இத்திட்டத்தின்கீழ் 2007-2008-ஆம் ஆண்டில் சாலைகள்/சிறு பாலங்கள் உள்ளிட்ட 9 பணிகள் ரூ.88.67 இலட்சம் செலவில் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் புதிய பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்காக நடப்பு ஆண்டில் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.22. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP)**

இத்திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் சாலைகள்/சிறு பாலங்கள் உள்ளிட்ட 16 பணிகள் ரூ.298.10 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், புதிய பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**4.23. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக தரத்திற்கேற்ப சாலைகளை உருவாக்கும் பணிகள் ரூ.2,160 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் உலக வங்கியின் கடனுதவி ரூ.1,670 கோடி, தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.490 கோடியாகும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

(அ) 11 மாவட்டங்களை இணைக்கும் வகையில் 742 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்துதல்;

(ஆ) மாநில சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் 1,030 கி.மீ. நீளத்திற்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் விபத்துப் பகுதிகளை மேம்பாடு செய்தல் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்;

(இ) நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாகப் பிரிவுகளைப் பலப்படுத்துதல் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குதல்.

### 4.23.1 சாலைப்பணிகளில் முன்னேற்றம்

#### அ. சாலை மேம்பாட்டுப் பணிகள்

- ஆற்காடு முதல் திருவாரூர் வரையிலான 393 கி.மீ. நீள சாலைப் பணிகள், வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் துவங்கி திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் (தற்போது அரியலூர்), தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் வழியாக திருவாரூர் வரை செல்கிறது. இதன் மதிப்பு ரூ.768.50 கோடி.
- நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 349 கி.மீ. நீள சாலையானது நாகப்பட்டினம் நகரில் துவங்கி திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாக தூத்துக்குடி வரை செல்கிறது. இதன் மதிப்பு ரூ.513.07 கோடியாகும்.
- மொத்தம் 742 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் தரம் உயர்த்தும் பணியில் 379 கி.மீ. சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன; பிற சாலைப் பணிகளும் பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன; நடப்பு நிதியாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

#### ஆ. நில எடுப்பு மற்றும் மறுகுடியமர்வுப் பணிகள்

இத்திட்டத்திற்கு மொத்தம் 395.42 ஹெக்டேர் நில எடுப்பு செய்ய வேண்டும். இதில் 382 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவை, விரைவில் நிறைவடையும்.

உலக வங்கி கடன் ஒப்பந்தத்தின்படி இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட 13,068 நபர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.





மேலும், வீடுகளை இழந்த 527 குடும்பங்களில் 457 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 70 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அவை நடப்பாண்டில் முடிவடையும். மேலும், கடைகளை இழந்த 40 நபர்களுக்கு 39 கடைகள் கட்டிக்கொடுக்கப்பட்டு எஞ்சியுள்ள 1 கடை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியும் விரைவில் முடிவடையும்.

#### இ. சாலை பராமரிப்புப் பணிகள்

இத்திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் 597 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.167 கோடி செலவில் எடுத்து முடிக்கப்பட்டுள்ளன.

2-ஆம் ஆண்டு பராமரிப்பின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 250 கி.மீ. சாலைப் பணிகளில் 94 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு 156 கி.மீ.-க்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவை நடப்பாண்டில் முடிவடையும்.

3 மற்றும் 4 ஆம் ஆண்டிற்கான சாலைப் பராமரிப்புப் பணிகளின் கீழ் 183.50 கி.மீ. நீள சாலைகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 4.23.2 பாலப்பணிகள்

இத்திட்டத்தில் சாலைப் பணிகளுடன் 44 பெரிய பாலங்கள், 84 சிறிய பாலங்கள் மற்றும் 10 இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்படவுள்ளன. (போளூர், விருத்தாசலம், அரியலூர், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் தலா ஒரு இரயில்வே மேம்பாலம், திருவண்ணாமலையில் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள்).

இரயில்வே மேம்பாலங்கள் விரைவில் நிறைவேற்ற வேண்டிய அவசியத்தைக் கருத்தில்கொண்டு உலக வங்கி ஒப்புதலுடன் 9 பாலங்கள் கட்டும் பணியை இந்திய இரயில்வே கட்டுமான (IRCON) நிறுவனத்திடம் ஒப்படைக்கவும் இராமநாதபுரத்தில் அமையும் இரயில்வே மேம்பாலத்தை அத்துறையின் மூலம் நேரடியாக மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.23.3. உலக வங்கி ஆய்வறிக்கை

2008 ஆம் ஆண்டு துவக்கத்தில் உலக வங்கி ஆய்வுக் குழு தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் பல்வேறு பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் தமிழகத்தில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடு மற்றும் முன்னேற்றம் அனைத்துக் கூறுகளிலும் திருப்தியளிப்பதாக உள்ளது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத்திட்டப் பணிகளை துரிதப்படுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.23.4. சாலை மேலாண்மை அமைப்பு (Road Management System)

மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து நிறைந்த மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள பல்வகைப்பட்ட பாலங்கள் குறித்து அனைத்து தகவல்களையும் சேகரித்து அவற்றை கணினிமயமாக்கும் பணி ஆலோசகர் மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணி நிறைவுற்றபின் சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை முன்னுரிமை மற்றும் தேவையின் அடிப்படையில் உரிய காலத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளும் வசதி உருவாக்கப்படும்.

## 4.24. சாலைகளைக் காலமுறைப்படி புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்

### 4.24.1. சாலை புதுப்பிக்கும் பணிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு

அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் பெரும் பொருட்செலவில் மேம்படுத்தப்படும் சாலைக் கட்டமைப்பு வசதிகளை முறையாக பராமரிப்பது மிகவும் அவசியமாகும். இதனை நன்கு உணர்ந்த இந்த அரசு சாலை புதுப்பித்தல் மற்றும் பராமரிக்கும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

முதல் முறையாக, சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கு அதிகபட்சமாக 2006-2007ஆம் ஆண்டில் ரூ.80137 கோடியும் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.826.26 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கென தனியாக ரூ.103.60 கோடி உள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006-2007ஆம் ஆண்டில் 7,889 கி.மீ. நீள சாலைகளிலும், 2007-2008 ஆம் ஆண்டில் 7,115 கி.மீ. நீள சாலைகளிலும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் நபார்டு கடனுதவியுடன் 1996 முதல் 2002 ஆம் ஆண்டு வரை மேம்படுத்தப்பட்டு பராமரிப்பின்றி இருந்த 2,114 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளிலும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு கடந்த இரண்டு ஆண்டுகளில் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், முதன்முறையாக, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலையின் ஓடுதளத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்ற இந்திய சாலைக் கழகத்தின் (IRC) நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் சாலைகளைப் புதுப்பித்துப் பராமரிக்கும் வாய்ப்பினை அரசு உருவாக்கியுள்ளது.

### 4.24.2 சாலைப் பராமரிப்பில் புதிய அணுகுமுறைகள்

சாலைப் பராமரிப்புப் பணிகளை மாவட்ட நிர்வாகத்திடம் கலந்து ஆலோசித்து முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், பாலங்களைப் பராமரிப்பதற்கு இந்நிதியைப் பயன்படுத்தவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சாலைப் பராமரிப்புப் பணிகள் சரியான முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், உறுதி செய்யவும் தேவைப்படும் எண்ணிக்கையில் சாலை ஆய்வாளர்களைப் புதிதாக நியமிக்கவும், இப்பதவியில் தற்போதுள்ள காலி இடங்களை நிரப்பவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சாலை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை அரசு நிதியைக் கொண்டு மேற்கொள்வதுடன் இப்பணிகளில் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் சிறப்பான முறையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன், செயல்பாடு அடிப்படையில் தரமான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் (Performance Based Maintenance Contract) புதிய முறையில் சில முக்கிய சாலைகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2008-2009-ல், அரசு மற்றும் ஊரகச் சாலை பராமரிப்புப் பணிகளுக்காக ரூ. 849.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.24.3. சாலைப் பணிகளில் தரக்கட்டுப்பாடு

சாலைகளின் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பெருமளவில் நிதி செலவிடப்படுகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யவும், முறையாகப் பராமரிக்கவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்ளுகிறது.

2006-2007 வரை தர ஆய்வுப் பணிகளுக்குத் தமிழ்நாடு முழுவதும் 13 உட்கோட்டங்கள் (தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மண்டல ஆய்வகங்கள் உட்பட) சாலை மற்றும் பாலப் பணிகளில் தரக்கட்டுப்பாடு சோதனைகளை மேற்கொண்டு வந்தன. இவை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் இயங்குகின்றன.

2007-2008 முதல் பல்வேறு சாலை மற்றும் பாலப் பணிகளையும் விரிவாக சோதனை செய்வதற்கும் தரத்தினை மேம்படுத்தவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக 38 உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் 114 உதவிப் பொறியாளர் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொரு நிரந்தர கோட்ட அளவில் நடைபெறும் பல்வேறு அலகுகளின் பணிகளைப் பரிசோதனை செய்து தரமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். இதன் மூலமாக, வேலைத் தளங்களில் பணி நடைபெறும்பொழுதே தரக்கட்டுப்பாடு சோதனை மேற்கொள்ளப்படுகிறது. வேலையின் தரத்தினை முறையாகப் பரிசோதிக்க இம்முறை உதவுகிறது.

மேலும், தரக்கட்டுப்பாடு அலகிற்கு மாற்று பணியிடங்களிலுள்ள பொறியாளர்களை நியமித்து, முழுமையான தரக் கட்டுப்பாட்டு அலகு அமைக்கப்பட உள்ளது. தவிர, முற்றிலும் மேம்படுத்தப்பட்ட 114 தரக்கட்டுப்பாடு சோதனைக்கூடங்கள் அமைக்கப்பட உள்ளன.

பல்வேறு பணிகளின் தரத்தினை நன்கு கண்காணிக்க நடப்பு ஆண்டிலிருந்து தற்சார்பு தரக் கட்டுப்பாடு அலுவலர்களை (Independent Quality Monitors) ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## V 2008-2009-க்கான புதிய திட்டங்கள்

### 5.1. சென்னை வெளிவட்டச் சாலை (Chennai Outer Ring Road)

சென்னை மாநகரில் தற்போதுள்ள சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னை பெருநகரைச் சுற்றி வெளிவட்டச் சாலை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தினை இரு கட்டங்களாக செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இச்சாலை தே.நெ.-45-ல் வண்டலூரில் தொடங்கி திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் மீஞ்சூரில் இணைகிறது. இச்சாலையை 62 கி.மீ. நீளத்தில், 6 வழித்தடங்களைக் கொண்டதாகவும், இருப்புப் பாதை மற்றும் வணிகப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலும் மொத்தம் 122 மீ. அகலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 34 கி.மீ. நீள சாலை அமைக்கத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 16 கி.மீ. நீள அரசு நிலங்கள் இத்திட்டத்திற்காக நில மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன் பேரில், வண்டலூர் (தே.நெ.45) முதல் நெமிலிச்சேரி (தே.நெ.208) வரையில் சுமார் 32 கி.மீ. நீளத்திற்குப் புதிய சாலையினைப் பொது மற்றும் தனியார் பங்கேற்பு முறையில் உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் பணியினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### 5.2. கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு

சென்னை முதல் கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரை சாலை, மொத்தம் 765 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளது. முதற்கட்டமாக, சென்னை முதல் கடலூர் வரையுள்ள 166 கி.மீ. நீள சாலைப் பகுதிகள், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.102 கோடி மதிப்பில் இருவழித்தடமாக அகலப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதில் சென்னை முதல் புதுச்சேரி வரையுள்ள பகுதி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் BOT முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. புதுச்சேரி முதல் நாகப்பட்டினம் வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான பகுதியில் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை முதல் புதுச்சேரி வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள அதிகபட்ச போக்குவரத்தை கணக்கில்கொண்டும், விபத்துகளை தவிர்க்கவும் சுற்றுச்சூழல் நிலையை ஆய்வு செய்தபின் நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆய்வுகளை மேற்கொள்ளவும், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை கிடைக்கப் பெற்றபின் சாலையை மேம்படுத்துவது தொடர்பாக தக்க மேல் நடவடிக்கை எடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

### 5.3. பொது - தனியார் பங்கேற்பு மூலம் சாலை மேம்பாடு

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நாடு முழுவதிலும் தேசிய நெடுஞ்சாலைகளை தனியார் பங்களிப்பின் மூலம் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழ்நாட்டிலும் பொது மற்றும் தனியார் கூட்டுச் செயல்பாட்டின் மூலம் சாலைகளை மேம்பாடு செய்வதற்கென முதற்கட்டமாக 140 கி.மீ. நீளத்தில் பின்வரும் நான்கு சாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| அ. | கோயம்புத்தூர் மேற்கு புறவழிச்சாலை | - | 27 கி.மீ. |
| ஆ. | ஒகேனக்கல் - பெண்ணாகரம் - தருமபுரி சாலை | - | 46 கி.மீ. |
| இ. | விருத்தாசலம் - தொழுதூர் சாலை | - | 45 கி.மீ. |
| ஈ. | விருத்தாச்சலம் - உளுந்தூர்பேட்டை சாலை | - | 22 கி.மீ. |
| | மொத்தம் | - | 140 கி.மீ |

பொது மற்றும் தனியார் கூட்டு செயல்பாட்டின் மூலம் மேற்கண்ட சாலைகளை மேம்பாடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவடைந்தபின் அந்த அறிக்கைகளின் அடிப்படையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## VI சாலைப் பாதுகாப்பு செயல் திட்டம்

பாதசாரிகள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்வோர் தொடர்புடைய சாலை விபத்துகளை வெகுவாகக் குறைக்கும் பொருட்டு, சாலைப் பாதுகாப்பு செயல்திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது. விபத்து விகிதத்தைக் குறைப்பதன் மூலம் அதிக அளவில் உயிர் இழப்பைத் தவிர்க்க முடியும். எனவே, சாலை அமைப்புகளிலுள்ள குறைபாடுகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைக்க நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக, முறையான ஆராய்ச்சி செய்யவும், விபத்துகள் பற்றிய விவரங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கிடையே பகிர்ந்துகொள்ளவும், அவற்றை அவ்வப்போது சேகரித்து, பகுப்பாய்வு செய்யவும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- விபத்துகள் பற்றி முறையான ஆய்வு செய்து, விபத்துகள் தொடர்பான புள்ளிவிவரங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கிடையே பகிர்ந்துகொண்டு, அவற்றை பகுப்பாய்வு செய்தல்.

- சாலைப் பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகம் செய்தல்; விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து நிவர்த்திப் பணிகளை மேற்கொள்ளுதல், சாலைகள் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தில் மேம்பட்ட தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தல்.

- போதிய எண்ணிக்கையிலான தொழில்நுட்பப் பணியாளர் மற்றும் நவீன கருவிகளுடன் போக்குவரத்துப் பொறியியல் அமைப்பை வலுப்படுத்துதல்.

- சாலைகளிலுள்ள வேகத் தடைகளால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு, சாலைச் சந்திப்புகள் மற்றும் வளைவுகளில் தேவைக்கேற்ப, ஒரே மாதிரியான, புதிய வகை வேகத் தடைகளை அமைத்தல்.

### 6.1. விபத்துப் பகுதிகள் மேம்பாடு

தமிழகத்தில், முதற்கட்டமாக 50 இடங்கள் விபத்துக்குள்ளாகும் பகுதிகளாகக் கண்டறியப்பட்டன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 20 விபத்துப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 13 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட உள்ளன. மீதமுள்ள 3 பணிகள் இத்திட்டத்தின் மூன்றாமாண்டு பராமரிப்புப் பணியுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

எஞ்சியுள்ள 30 பணிகளில், 1 பணி நெடுஞ்சாலைத் துறையின் பொது அலகின் மூலம் முடிக்கப்பட்டுள்ளது. 1 பணி நில எடுப்பு தொடர்பான நீதிமன்ற வழக்கு காரணமாக நிலுவையில் உள்ளது. மீதி 28 பணிகள் ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாடு (CRIDP) திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையின் பொது அலகின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 6.2. சீரான வேகத் தடைகள் அமைத்தல்

சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வேகத் தடையே சில நேரங்களில் விபத்துக்குக் காரணமாகிவிடுகிறது என்பதால் மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான வேகத் தடைகளை அமைக்க அரசு முடிவு செய்தது. இதுவரை 1,622 சீரற்ற வேகத் தடைகள் உள்ளதெனக் கண்டறிந்து அவை அனைத்தும் சரி செய்யப்பட்டுள்ளன.

### 6.3. சாலைப் பயன்பாட்டாளர்களின் கருத்தாய்வு

சாலைப் பயன்பாட்டாளர்களின் மனநிறைவு குறித்து மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. முதல் ஆய்வு 2004-2005-லும், இரண்டாவது ஆய்வு 2007-2008-லும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வுகளின் போது தெரிவிக்கப்பட்ட முக்கியக் கருத்துகள் பின்வருமாறு:

- நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் உள்ளது. பரவலாக சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தேசிய நெடுஞ்சாலையைப் போலவே, மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதரச் சாலைகள் மற்றும் கிராமச் சாலைகளில் தகவல் பலகைகள், எச்சரிக்கைப் பலகைகள் மைல் கற்கள் முழுமையாக அமைக்க வேண்டும்.



- பலகைகள் மற்றும் மைல் கற்களை முறையாகப் பராமரித்து பகல் மற்றும் இரவு நேரங்களில் தகவல்கள் சரியாகத் தெரியுமாறு செய்ய வேண்டும்.
- சாலையின் பாதுகாப்பு, தரம், வாகனப் போக்குவரத்து வசதிகள், காற்று மற்றும் ஒலியால் மாசுபடுவதைத் தவிர்த்தல், சாலை தோற்றம் மற்றும் வாகன நிறுத்தும் வசதி ஆகியவை மனநிறைவளிப்பதாக உள்ளன.
- வாகன ஓட்டுநர்களின் மோசமாக வாகனம் ஓட்டும் நடத்தையே பெரும்பாலான சாலை விபத்துகளுக்கு முக்கியமான காரணமாகும்.
- வண்டிகளை நிறுத்துமிடங்கள் (Parking Place) அதிகரிக்கப்படவேண்டும் என்றும், அதற்காகப் பணம் செலுத்தவும் பயன்பாட்டாளர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.
- தகவல் பலகைகளில் சுவரொட்டி மற்றும் விளம்பரங்கள் ஒட்டுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சாலைப் பாதுகாப்பு குறித்து வாகன ஓட்டுநர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாய்வுகளில் தெரிவிக்கப்பட்ட பொது மக்களின் கருத்துகளை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது கவனத்தில் கொள்ளுமாறு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### 6.4. மாநில மற்றும் மாவட்ட அளவிலான நெடுஞ்சாலை பயன்படுத்துவோர் ஆலோசனைக் குழு

மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான நெடுஞ்சாலை பயன்படுத்துவோர் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சாலைப் பயன்பாட்டில் அக்கறை கொண்டோரின் கருத்தரங்குகள் இருமுறை நடத்தப்பட்டு கருத்துகள் பெறப்பட்டுள்ளன. சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும்போது இக்கருத்துகளையும் கவனத்தில் கொண்டு செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 28

### 6.5. வழிகாட்டிப் பலகைகள்

வாகன ஓட்டுநர்களுக்குத் தெளிவாக வழிகாட்டும் வகையில் ஒரே மாதிரியான நிறம் மற்றும் அளவில் இந்திய சாலைக் கழகக் குறியீடுகளின்படி, வழிகாட்டிப் பலகைகள், அனைத்து அரசுச் சாலைகளிலும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.6. மரம் நடுதல்

மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் ஓரங்களில் 3,00,000 மரக் கன்றுகளை நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, கடந்த ஆண்டில் இலக்கைவிட அதிகமான அளவில் 3,93,000 மரக் கன்றுகள் நடப்பட்டன. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

### 6.7. அரசுச் சாலைகளின் எல்லைகளை வரையறுத்தல்

நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு அரசுச் சாலைகளின் எல்லைகளை வரையறுத்து எல்லைக் கற்கள் நடும் பணி முதற்கட்டமாக மாநில நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறை பிற சாலைகளுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும். இதன் மூலம் சாலைப் பகுதிகளின் முழு அளவைத் தெரிந்துகொண்டு அகலப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## VII நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

### 7.1. ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள்

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் சிறப்பான ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகள் மேற்கொண்டு சாலைகள் மற்றும் பாலப் பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இதன் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

- சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த செயல்முறை சார்ந்த கள ஆராய்ச்சி



2008 ஏப்ரல் 28]

- தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்
- தரக் கட்டுப்பாடு ஆய்வுகள் மேற்கொள்வது

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சென்னையில் நான்கு ஆய்வகங்களும் கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள நான்கு மண்டல அளவிலான துணை ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன.

### 7.2. சென்னையிலுள்ள ஆய்வகங்கள் மற்றும் அவற்றின் பணிகள்

#### அ. மண் மற்றும் அடித்தளப் பொறியியல் ஆய்வகம்

- கடின மற்றும் நெகிழ்வான சாலை அடித்தள வடிவமைப்புக்குப் பரிந்துரை செய்தல்
- மண் பரிசோதனை மேற்கொண்டு அடித்தளம் மற்றும் கீழ் அடித்தளப் பகுதிகளின் வடிவமைப்பிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்
- பாலங்களுக்கான கீழ்த் தூண்களின் (Piles) தாங்கு திறனைக் கண்டறிந்து வடிவமைப்புக்கு உதவுதல்
- சாலைகள் அமைப்பு மற்றும் பாலங்கள் கட்டுவதற்காகப் புதிய பொருட்களைப் பயன்படுத்துவது பற்றி தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்

#### ஆ. கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வகம்

- பாலங்களின் கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்படும் கற்கலவை விகிதங்களை முடிவு செய்து பரிந்துரைத்தல்.
- சிமென்ட் மற்றும் கற்கள் சோதனை மற்றும் அவற்றின் ஒத்திசைவு பற்றிய பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்.
- பாலங்களில் கான்கிரீட் பகுதிகளைச் சேதப்படுத்தாமல் அவற்றின் தரத்தைப் பரிசோதனை செய்தல்.

**இ. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள் ஆய்வகம்**

- பகுதி அடர்த்தி நிலக்கீல் கான்கிரீட், முழு அடர்த்தி நிலக்கீல் கான்கிரீட், நிலக்கீல் தளம் ஆகியவற்றின் கலவை விகிதத்தை நிர்ணயம் செய்தல்.
- நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள் தொடர்பான பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

**ஈ. போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வகம்**

- சாலைகளின் மேல் தளத்திலுள்ள மேடு பள்ளங்களைக் கணக்கிடுவதற்கு பம்ப் இன்டகிரேடர் பரிசோதனை மேற்கொள்ளுதல்.
- போக்குவரத்து அளவு கணக்கெடுப்பு மற்றும் வாகனங்களின் அச்சு எடை கணக்கெடுப்பு மூலம் சாலைத் தளத்தின் கனத்தை வடிவமைத்தல்.

**7.3. மண்டல ஆய்வகங்களின் பணிகள்**

- நெகிழ்வான சாலைகளின் மேற்பரப்பில் கருவிகள் மூலம் சோதனைகள் மேற்கொண்டு அமுங்கு திறனை அறிந்து மேற்தளம் வடிவமைப்பிற்குப் பரிந்துரைகள் செய்தல்.
- சாலைகள் அமைந்துள்ள/அமையவுள்ள பகுதிகளில் அடிமட்ட மண் பரிசோதனைகள் செய்து சாலைத் தளங்களை முறையாக வடிவமைக்க தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.
- சாலைகளில் பணிகள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான தரக் கட்டுப்பாடு பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்.
- சென்னையிலுள்ள தலைமை ஆய்வகம் மூலம் செய்யப்படும் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையாக இருத்தல்.



**7.4. செயலாக்கம் மற்றும் சாதனை**

**அ. ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள்**

முறையாகப் பராமரிக்கப்படும் சாலைகளிலும் சில பகுதிகளில் மேற்தளம் சேதமடைவதற்கான காரணங்களை ஆராய்ந்து அதனைச் சரிசெய்வதற்கு தக்க பரிந்துரைகள் வழங்குவது அவசியமாகும்.

பாலங்களின் உறுதித்தன்மை, தாங்குதிறன், பயன்பாட்டு ஏற்பு குறித்து தகவல்கள் விரைவாகக் கிடைக்கும் வண்ணம் சாலைகளிலுள்ள பாலங்களின் அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு, தொடர் தள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விபத்தில்லா பாதுகாப்பான, இலகுவான பயணத்திற்கு, தே.நெ. 45 கி.மீ. 0/0-56/0 மற்றும் கிழக்கு கடற்கரைச் சாலையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வு அறிக்கையினைப் பரிசீலித்து விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**ஆ. செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தில் பின்வரும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :

(i) நிலக்கீல் குளிர் கலவையைப் பயன்படுத்தி சாலையில் பள்ளங்களை நிரப்பி அதன் தன்மை ஆய்வு செய்தல்; மற்றும்

(ii) பருவகால மாறுபாட்டிற்கேற்ப சாதாரண நிலக்கீல் மற்றும் இரப்பர் கலந்த நிலக்கீலைப் பயன்படுத்தி போடப்படும் சாலை தளத்தின் தன்மையை ஆய்வு செய்தல்; இப்பணிகள் முடிவுற்று, காலமுறை கண்காணிப்பு நடைபெற்று வருகிறது. இறுதியான அறிக்கை நடப்பு ஆண்டில் வெளியிடப்படும்.

2007-2008-ம் ஆண்டில் ரூ.20 இலட்சம் மதிப்பில் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகளுக்கு உதவும் புதிய கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

**இ. மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள்**

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல்வேறு பணிகளுக்குரிய மாதிரிகளைச் சேகரித்து பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான கலவை

விகிதங்கள் நிர்ணயம் செய்தல் மற்றும் பரிசோதனைகள் மேற்கொண்ட விவரம் பின்வருமாறு:

- தள வடிவமைப்பு மண் ஆய்வு சோதனைகள் தூணின் தாங்கும் திறன் கண்டறிதல் சாலையின் மேடு பள்ள குறியீடு கண்டறிதல் மற்றும் பிற ஆய்வு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டவை - 9,185
- சாலைப் பணிகளுக்கான நிலக்கீல் கலவை விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டவை - 185
- சாலைப் பணிகளுக்கான மண் அடித்தள கற்கலவை விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டவை - 955
- பாலப் பணிகளுக்கான கற்கலவையின் கலவை விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டவை - 201

**ஈ. தரக் கட்டுப்பாடு பரிசோதனைகள்**

*2007-2008* ஆம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்ட தரச் சோதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | சோதனை மேற்கொள்ளப் பட்ட வேலைகள் | மாதிரிகள் சேகரிக்கப் பட்டவை | சோதனைகள் மேற்கொள்ளப் பட்டவை | திருப்தி அளிக்க கூடியவை | தரம் முன்னேற்றம் காண்பிக்க வேண்டியவை |
|---|---|---|---|---|---|
| 1 | 2,550 | 25,178 | 25,178 | 24,523 | 655 |

*2008-2009* ஆம் ஆண்டில் *28,000* பரிசோதனைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.5. பாதிப்புக்கு இலக்காகும் சாலைப் பகுதிகள்

இத்துறையின் பல்வேறு வகையான சாலைகளிலும் மண் தரக்குறைவின் காரணமாகவும் கன ரக வாகனங்கள் பெருமளவில் செல்வதாலும் அடிக்கடி பழுதடையும் சாலைப் பகுதிகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முடிவு





செய்துள்ளது. அத்தகைய சாலைகளை, களப் பொறியாளர்கள் மூலம் கண்டறிந்து நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய ஆய்வகங்கள் மூலம் சாலைகளைப் பார்வையிட்டு மண் பரிசோதனைகள் செய்யப்படும். அதன்மூலம் பழுதடைவதற்கான காரணங்களைத் தெரிந்து அப்பகுதிகளை மேம்படுத்தி சாலைகள் பழுதடையாதவாறு அமைப்பதற்கு பரிந்துரைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 7.6. தகவல் தொகுப்பு வங்கி (Data Bank)

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும் உடனடியாக அறிந்துகொள்ள, தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இதில் 614 பெரிய பாலங்கள், 3,408 சிறு பாலங்கள் பற்றிய விவரங்கள் மாநில நெடுஞ்சாலைகள் மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதரச் சாலைகளில் சேகரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், பாலங்களுக்கு தனிக் குறியீட்டு (Unique) எண் வழங்கி சீரிய முறையில் பராமரிக்க தனிச் செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளில் 6,900 இடங்களில் எடுக்கப்பட்ட வாகன சோதனை விவரங்கள் கணினியில் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பாலங்களின் விவரங்களை உடனடியாகப் பெற்று பழுதடைந்த பாலங்களைக் கண்டறிந்து அவற்றைச் சீர்படுத்த முடியும். 2005 ஆம் ஆண்டு போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்கள் நிரந்தர கோட்டங்களிலிருந்து பெறப்பட்டு கணினியில் சேமிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் கணினிகளில் விவரங்கள் முழுமையாகச் சேகரிக்கப்படும்.

## 7.7. பயிற்சித் திட்டம்

பொறியாளர்களின் தொழில்நுட்ப அறிவுத் திறனை மேம்படுத்தி ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தி நுட்பமான செயல்முறைகளை எடுத்துக் கூறுவதற்கு பயிற்சி இன்றியமையாததாக அமைகிறது. களப் பணியின் போது ஏற்படும் தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு சாத்தியமான செயல்முறைகள் மூலம் அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலை மற்றும் பாலங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பங்களை விளக்கவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உதவுகிறது.

[2008 ஏப்ரல் 28

தற்பொழுது துறையில் உள்ள அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், மண், நிலக்கீல், கற்கலவை, போக்குவரத்து மற்றும் கணினி ஆகியவற்றில் மாதம் ஒருமுறை 5 நாட்களுக்கு தரக்கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறைத் திட்டமாகும் மார்ச் 2008 வரை 100 தரக் கட்டுப்பாடு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு புது தில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையம் (CRRI) மற்றும் தேசிய நெடுஞ்சாலை பொறியாளர் பயிற்சி நிலையம் (NITHE) மற்றும் இதர நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2007-2008-ம் ஆண்டில் 33 பொறியாளர்கள் மேற்காணும் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். 2008-2009 ஆம் ஆண்டிலும் இத்தகைய பயிற்சி அளிக்கப்படும்.

### 7.8. 2008–2009 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

சாலை மற்றும் பாலப் பணிகள் தொடர்பான அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளும் வசதி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளது. துறையில் மேற்கொள்ளப்படும் பெரிய பணிகளுக்குத் தேவைப்படும் தார் மற்றும் கற்கலவை கலவை விகிதங்கள் இவ்வாராய்ச்சி நிலையத்தில் நிர்ணயம் செய்யப்படுகிறது. பரிசோதனை மற்றும் தர நிர்ணயத்திற்குத் தேவையான மேம்பட்ட கருவிகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன. இதனை மேம்படுத்தும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.20.60 லட்சம் மதிப்பில் நவீன கருவிகள் வாங்குவதற்கும், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் ரூ.9.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு பணிகளுக்கான மதிப்பீடுகளிலும் தரக் கட்டுப்பாட்டுக்காக ஒதுக்கப்படும் 1 சதவீத தொகையினைப் பயன்படுத்தி புதிய கருவிகள் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 28]

## VIII ஆய்வு மற்றும் வடிவமைப்பு

### 8.1. செயல்பாடுகள்

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பாலப் பணிகளுக்கான ஆய்வு செய்தல், வடிவமைப்பு, வரை படங்கள் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் ஆகிய பணியை இப்பிரிவு மேற்கொள்கிறது.

ஆய்வுப் பிரிவானது பாலப் பணிகளுக்குத் தேவைப்படும் நீரியல், மண்ணின் தன்மை, பாலத்தின் நேர்ப்பாடு போன்ற பல்வேறு கள விவரங்களைச் சேகரித்து வடிவமைப்பு பிரிவிற்கு வழங்குகிறது. அதன் அடிப்படையில் வடிவமைப்பு பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது :

ஆய்வு மற்றும் வடிவமைப்பு அலகில் 7 ஆய்வுக் கோட்டங்களும், 4 வடிவமைப்புக் கோட்டங்களும் உள்ளன.

### 8.2. ஆய்வுக் கோட்டங்களும் அவற்றின் பணிகளும்

சென்னை, விழுப்புரம், அரியலூர், மதுரை, நெல்லை, கோவை, சேலம் ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு ஆய்வுக் கோட்டங்கள் இயங்குகின்றன. அவற்றின் பணி விவரம் பின்வருமாறு:

- பாலம் கட்டப்படவுள்ள பகுதிகளில் நில அளவை செய்தல்.
- ஆறுகளின் புவியியல் விவரங்களின் அடிப்படையில் நீரியல் விவரங்களைக் கணக்கிடுதல்.
- பொதுப் பணித் துறையிடமிருந்து நீரியல் விவரங்களைப் பெறுதல்.
- ஆழ்துளைகளின் வாயிலாக மண்ணியல் ஆய்வு செய்தல்.
- பாலங்களின் நேர்ப்பாட்டு வரைபடம் தயாரித்து, கண்காணிப்புப் பொறியாளர்களிடமிருந்து ஒப்புதல் பெறுதல்.
- மேற்கூறப்பட்டுள்ள கள விவரங்களை ஒருங்கிணைத்து அறிக்கையாக வடிவமைப்பு பிரிவுக்கு சமர்ப்பித்தல்.

[2008 ஏப்ரல் 28

## 8.3. வடிவமைப்புக் கோட்டங்களும் அவற்றின் பணிகளும்

சென்னையில் உள்ள ஆய்வு மற்றும் வடிவமைப்பு தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் 4 வடிவமைப்புக் கோட்டங்கள் இயங்குகின்றன. அவற்றின் பணி விவரம் பின்வருமாறு:

- ஆய்வுக் கோட்டங்களிலிருந்து பெறப்படுகின்ற கள விவர அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, ரூ. 2 கோடி மதிப்பிற்கு மேற்பட்ட பெரிய பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகள், வரைபடங்கள், மதிப்பீடு, தொழில்நுட்ப நெறிமுறைகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.
- பாலப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளோடு பெறப்படும் மாற்று வடிவமைப்புகள், செயலாக்கத்தின்போது பெறப்படும் விரிவான மாற்று வடிவமைப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.
- மிகப் பெரிய கனரகச் சுமையுந்துகள் சாலைகளில் செல்ல உள் துறை அமைச்சகம் அனுமதி வழங்குதற்பொருட்டு மைய அரசின் விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு அரசின் விதிமுறைகளின்படியும் கூர்ந்தாய்வு செய்து தக்க பரிந்துரை செய்தல்.
- பிற துறைகளாலும், உள்ளாட்சி அமைப்புகளாலும் நிறைவேற்றப் படும் பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகளை கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.
- அரசிடமிருந்து பெறப்படும் குறிப்பிட்ட பணிகளுக்கு ஆய்வு மற்றும் வடிவமைப்பு தொடர்பான கருத்துரை வழங்குதல்.

## 8.4. வடிவமைப்பில் கணினிகளின் பயன்பாடு

பாலங்களின் கட்டமைப்புப் பகுதிகளான பல்வேறு வகையான அடித்தளங்கள், தாங்கு தூண்கள், தாங்கு சுவர்கள், மேற்கட்டுமானம் ஆகியவற்றிற்கான வடிவமைப்புகளும், வரைபடங்களும், மதிப்பீடுகளும் கணினிகளின் மூலம் உலகத் தரம் வாய்ந்தவையாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



2008 ஏப்ரல் 28]

## 8.5. ஆய்வு மற்றும் வடிவமைப்பு அலகின் சீரமைப்பு

ஒருங்கிணைந்த நெடுஞ்சாலைத் திட்டங்களைச் சிறந்த முறையில் தயாரிக்க உதவும் வகையில், ஆய்வு மற்றும் வடிவமைப்பு அலகில் தனியாக திட்டப் பிரிவினை ஏற்படுத்துவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள திட்டப் பிரிவுக்கு பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படும் :

- நெடுஞ்சாலைப் பெருந்திட்டம் தயாரித்தல்
- மாவட்டச் சாலைத் திட்டங்கள் தயாரித்தல்
- தனித் தட மேலாண்மைத் திட்டங்கள் தயாரித்தல்
- சாலை மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்
- திட்டங்கள் தயாரித்தல்

## 8.6. 2007–2008 ஆம் ஆண்டுப் பணிகள் மற்றும் புதிய பணிகள்

2007-2008 ஆம் ஆண்டில் சுமார் ரூ.619 கோடி மதிப்புள்ள 45 பணிகளுக்கான வடிவமைப்புகளும், வரைபடங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கட்டமைப்பு | மதிப்பீட்டுத் தொகை | | மதிப்பீடுகள்/ பிரேரணைகள்/ வடிவமைப்பு களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | ரூ.200 இலட்சம் வரை | ரூ.200 இலட்சத்திற்கு மேல் | |
| 1 | இருப்புப்பாதை மேம்பாலங்கள்/ வரையறுக்கப்பட்ட பயன்பாட்டு சுரங்கப்பாதைகள் | - | 18 | 18 |
| 2 | ஆற்றுப் பாலங்கள் | 2 | 23 | 25 |
| 3 | சாலைப் பணிகள் | -- | 2 | 2 |
| | மொத்தம் | 2 | 43 | 45 |

[2008 ஏப்ரல் 28

நடப்பு ஆண்டில் (2008 - 2009) அரசால் நிறைவேற்றப்படவுள்ள பாலத் திட்டங்களில், ரூ.2 கோடி மதிப்பிற்கு மேற்பட்ட பாலப் பணிகளுக்கும் கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வடிவமைப்புகளும், வரைபடங்களும், மதிப்பீடுகளும் சுமார் ரூ.650 கோடி மதிப்பிலான பாலப் பணிகளுக்கு இவ்வலகின் மூலமாகத் தயாரிக்கப்படவுள்ளன.

## IX தமிழ்நாடு கடல்சார் வாரியம்

1,076 கி.மீ. நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரையில், 1963 ஆம் ஆண்டின் பெருந்துறைமுகக் கழகச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று பெரிய துறைமுகங்கள் உள்ளன. மேலும், 1908 ஆம் ஆண்டின் இந்திய துறைமுகச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட 16 சிறு துறைமுகங்களும் உள்ளன. இச்சிறு துறைமுகங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் தொடர்பான பணிகள், தமிழ்நாடு அரசின் துறைமுகத் துறையிடமிருந்து தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம் 1995-ன்படி (தமிழ்நாடு சட்டம் 4/1996) நிறுவப்பட்ட தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு மாற்றப்பட்டது.

### 9.1. சிறு துறைமுகங்கள்

சிறு துறைமுகங்கள் இரண்டு வகையாக உள்ளன. அவை அரசு துறைமுகங்கள் மற்றும் தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் ஆகும். தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் தனிப்பட்ட தொழிற்சாலைகளுக்கென ஒதுக்கப்பட்டவை. ஆனால், அரசு துறைமுகங்கள் பல்வேறு வகையான பயனாளிகளின் தேவைக்குப் பயன்படுகிறது. அவை பின்வருமாறு:

| அரசு துறைமுகங்கள் | தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் |
|---|---|
| 1. கடலூர் | 1. காட்டுப்பள்ளி |
| 2. நாகப்பட்டினம் | 2. எண்ணூர் சிறு துறைமுகம் |
| 3. பாம்பன் | 3. திருச்சோபுரம் |
| 4. இராமேசுவரம் | 4. பி.ஒய். 03 எண்ணெய் வளப் பகுதி |
| 5. வாலிநோக்கம் | 5. திருக்கடை யூர் |
| 6. கன்னியாகுமரி | 6. புன்னக்காயல் |
| 7. குளச்சல் | 7. மணப்பாடு |
| | 8. கூடங்குளம் |
| | 9. சிலம்பிமங்கலம் கப்பல் கட்டும் தளம் (திருக்குவளை-அறிவிக்கை செய்யப்பட வேண்டியுள்ளது) |



2008 ஏப்ரல் 28]

தமிழ்நாட்டில் தற்போதுள்ள சிறு துறைமுகங்களில் கப்பல் அணையும் தளவசதி இல்லாததால், கப்பல்களைக் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தி மிதவைகள் மூலமாகச் சரக்குகள் கையாளப்படுகின்றன.

### 9.2. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விபரம்

**(அ) அரசு துறைமுகங்கள்**

| வ. எண் | துறைமுகம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1. | கடலூர் | — | யூரியா மற்றும் நிலக்கரி |
| 2. | நாகப்பட்டினம் | நாப்தா மற்றும் டீசல் | சமையல் எண்ணெய், தேங்காய்ப்பிண்ணாக்கு மற்றும் கச்சா எண்ணெய் |

**(ஆ) தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்**

| வ. எண் | துறைமுகம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1. | எண்ணூர் சிறு துறைமுகம் | — | திரவ அமோனியா |
| 2. | பி.ஒய். 03 எண்ணெய் வளப் பகுதி | கச்சா எண்ணெய் | — |
| 3. | திருக்கடையூர் | — | நாப்தா |
| 4. | கூடங்குளம் | — | இயந்திரங்கள் |

## 9.3. சிறு துறைமுகங்களின் செயல்பாடுகள்

அரசு துறைமுகங்களில், கடலூரில் தற்போது, யூரியா மற்றும் நிலக்கரி இறக்குமதியும், நாகப்பட்டினம் துறைமுகத்தில் நாப்தா மற்றும் டீசல் ஏற்றுமதியும், சமையல் எண்ணெய், தேங்காய்ப்பிண்ணாக்கு மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதியும் நடைபெறுகின்றன. பாம்பன் பகுதியில் சிறுகலன்கள் கால்வாயைக் கடப்பதற்கு வழிகாட்டும் பணியும், கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் படகுப் போக்குவரத்து மேற்பார்வைப் பணியும் நடைபெறுகிறது. ஏனைய அரசுத் துறைமுகங்களில் தற்போது செயல்பாடு ஏதுமில்லை.

தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் தொழில் முனைவோரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இயக்கப்படுகின்றன. இவற்றில் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய அனைத்துப் பொறுப்புகளும் முதலீட்டாளர்களைச் சார்ந்ததாகும். எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து திரவ அமோனியா மற்றும் நாப்தா ஆகியவை கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாகக் கரையிலுள்ள சேமிப்புக் கலன்களுக்கு நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஒன்பது தனியார் முதலீட்டுத் துறைமுகங்களில், எண்ணூர் சிறு துறைமுகம் (திருவள்ளூர்), பிஓய். 03 எண்ணெய் வளப் பகுதி (கடலூர்) திருக்கடையூர் (நாகப்பட்டினம்) மற்றும் கூடங்குளம் (திருநெல்வேலி ஆகிய துறைமுகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஐந்து தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் இன்னும் செயல்படத் தொடங்கவில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு துறைமுகங்களின் செயல்பாடு விபரம் பின்வருமாறு:



| வரிசை எண் | ஆண்டு | கையாளப்பட்ட மொத்த சரக்குகள் (மெட்ரிக் டன்களில்) | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சுனாமிக்கு முன் 2004-2005 | 8,53,869 | 457.88 |
| 2 | சுனாமிக்கு பின் 2005-2006 | 7,10,414 | 452.32 |
| 3 | 2006-2007 | 8,04,832 | 589.27 |
| 4 | 2007-2008 | 8,87,384 | 655.75 (தணிக்கைக்கு முன்) |

சுனாமி பாதிப்பின் காரணமாக, 2005-2006 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட சரக்குகளின் அளவு 7.10 இலட்சம் டன்களாகக் குறைந்தது. சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், சரக்குகளின் அளவு 2006-2007 ஆம் ஆண்டில் 8.04 இலட்சம் டன்களாக அதிகரித்தது. மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் 8.87 இலட்சம் டன்களாக உயர்ந்தது. அதிகளவு சரக்கு கையாளப்பட்டதாலும், சிக்கன நடவடிக்கைகளாலும், வாரியத்தின் வருவாய் அதிகரித்து வருகிறது.

## 9.4. சிறு துறைமுகங்களை மேம்படுத்தல்

தமிழ்நாட்டின் தொழில் மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு துறைமுகங்களில் அதிக சரக்குக் கப்பல்கள் வந்து செல்வதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டும் என அரசு உணர்ந்துள்ளது. பெரிய துறைமுகங்களில் அதிகப் போக்குவரத்து காரணமாக நெரிசல் ஏற்படுவதுடன் சுணக்கக் கட்டணமும் செலுத்த வேண்டியுள்ளதால் பெருமளவு அந்நியச் செலாவணி இழப்பும் ஏற்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தற்போதுள்ள சிறு துறைமுகங்களை விரிவுபடுத்தி மேம்படுத்த அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் கடல்பகுதியில் புதிய துறைமுகங்களை ஏற்படுத்தவும், சரக்குகளைக் கையாளத் தேவையான வசதியினை மேம்படுத்தவும், துறைமுகத்தில் சரக்குப் பெட்டக முனையங்களை அமைத்து, இதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இவ்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2008 ஏப்ரல் 28

## 9.5 சிறு துறைமுக மேம்பாட்டுக்கான புதிய கொள்கை

### 9.5.1. கொள்கை

தொழில், வியாபாரம், வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ந்து வரும் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு, சிறு துறைமுகங்களின் மேம்பாட்டில் தனியார் முதலீட்டையும் பயன்படுத்த முன்வந்து அதற்கேற்ப தற்போதைய துறைமுகக் கொள்கையினை திருத்தியமைத்து, புதிய **"சிறு துறைமுக மேம்பாட்டுக் கொள்கை"** யினை அரசாணை நிலை எண் 209, நெடுஞ்சாலை (எச்.என்.2) துறை, நாள் 14-08-2007-ல் இவ்வரசு அறிவித்துள்ளது. சிறு துறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

(i) தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலைத் தொடர்ந்து தேசிய பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்றுமதி-இறக்குமதியில் தமிழகத்தின் பங்கை அதிகரித்தல்.

(ii) சிறு துறைமுகங்களை மேம்படுத்துவதன் மூலம் சரக்குக் கையாளும் திறனை அதிகரித்து எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி பெரும் துறைமுகங்களிலுள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.

(iii) சீரிய வசதிகள் மற்றும் சிறந்த சேவைகள் அளிப்பதன் மூலம் தென்மாநிலங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்தல், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகத்திற்கு உதவுதல்.

(iv) தமிழ்நாடு கடல்சார் நீர்ப் பகுதியில் (Tamil Nadu Maritime) இந்தியாவின் மொத்த சரக்குகளின் 25 சதவிகிதத்தைக் கையாளுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்.

(v) கடற்கரை மாவட்டங்களையொட்டி ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளையும், துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான துறைமுக அமைப்பிற்கு வசதி செய்தல்.



2008 ஏப்ரல் 28]

(vi) பல்வேறு வகையான எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்கென தனித் துறைமுக வசதிகளை அளிப்பதன் மூலம், துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்ட மின் நிலையங்களை ஏற்படுத்துதல்.

(vii) ஏறக்குறைய 1,000 கி. மீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் போக்குவரத்து வசதிகளுக்கு வகை செய்வதன் மூலம் நெடுஞ்சாலையின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.

(viii) கடற்கரையோரப் பகுதி நெடுகிலும் பொழுதுபோக்கு மற்றும் நீர் விளையாட்டுகளுக்கான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் சுற்றுலா வளர்ச்சிக்கு வகை செய்தல்

(ix) கப்பல் பழுதுபார்ப்புப் பணி, பிரித்தெடுத்தல், பாரந்தூக்கிகள் மற்றும் மிதவைக் கப்பல்களைத் தயாரித்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில் வசதிகளைச் செய்துகொடுத்தல்; மற்றும்

(x) மாநிலத்தில் மேம்படுத்தப்படும் துறைமுக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முழுமையாகப் பயன்படும் அளவிற்கு வசதிகள் செய்தல்

### 9.5.2. கொள்கை வழிமுறைகள் (Policy Guidelines)

மொத்தமாக (Bulk) சரக்குகள், சரக்குப் பெட்டகங்கள் மற்றும் திரவ நிலையிலான பெட்ரோலியத் தயாரிப்புகள், இரசாயனங்கள் போன்ற அனைத்துப் பொருட்களையும் கையாளும் வகையில் பல்நோக்கு துறைமுக வசதிகளை, சிறு துறைமுகங்களில் பொது மற்றும் தனியார் பங்கேற்பின் மூலமாக மேம்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இக்கொள்கையின்படி, துறைமுகங்கள் மற்றும் தோணித் துறைகளைக் கட்டுதல் மற்றும் மேம்படுத்தலில் தனியாரின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும். தனியாரின் தீவிர பங்கேற்பினை ஊக்குவிப்பது மற்றும் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது ஆகியவையே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

[2008 ஏப்ரல் 28

**9.6. தனியார் முதலீட்டுத் தோணித் துறைகள்**

தொழில் முனைவோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கான தனியார் முதலீட்டுத் தோணித் துறைகளை உருவாக்குவதற்கு அரசு அனுமதியளிக்கும். கணிசமான அளவில் முதலீடு செய்யும் தனியார் நிறுவனங்கள், கடலோரங்களில் ஏற்படுத்தும் துறைமுகம் சார்ந்த வசதிகளுக்காக தனிப்பட்ட மற்றும் வணிக ரீதியான தோணித் துறைகளை உருவாக்க கடல் பகுதியில் இட வசதியளிக்கப்படும்.

தற்போது அதிகரித்து வரும் சரக்குப் போக்குவரத்தை ஈடுசெய்வதற்காக, ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள தனியார் துறைமுகங்கள் அல்லது அனுமதி அளிக்கப்பட்டுள்ள துறைமுகங்களில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முன் அனுமதியுடன் பல்வேறு நிறுவனங்களின் பயன்பாட்டிற்கும், பல்வேறு வகையான வணிகச் சரக்குகளைக் கையாள்வதற்கும் அனுமதி அளிக்க இப்புதிய கொள்கை வழிவகை செய்கிறது.

துறைமுகங்கள், தோணித் துறைகளைக் கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து வெளிப்படையான வழிமுறைகள் வகுக்கப்பட்டு தனியார் பங்கேற்புக்கு வழிவகை செய்யப்படும். இதற்காக ஒவ்வொரு கருத்துருவும் அதன் தனித்தன்மையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**9.7. அரசு துறைமுகங்களில் சீரமைப்புப் பணிகள்**

அரசு/தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் உருவாக்கப்படும்/ மேம்படுத்தப்படும் துறைமுகங்கள் அரசு துறைமுகங்கள் ஆகும்.

**(i) கடலூர் துறைமுகம்**

கடலூரில் தற்போதுள்ள துறைமுகம், பரவனாறு மற்றும் உப்பனாற்றுப் படுகையில் அமைந்துள்ளது. இங்கு, கப்பல்கள் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன.

சுனாமியின்போது துறைமுகக் கட்டுமானங்களான நீர்த் தடுப்பிகள், அணுகுசாலை போன்றவை பலத்த சேதமடைந்தன. மேலும், மணல் மேவியதால், உப்பனாற்றின் ஆழமும் குறைந்தது.



2008 ஏப்ரல் 28]

சுனாமியால் பாதிப்படைந்த கட்டுமானங்களை ரூ.14.41 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு செய்வதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியிலிருந்து தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது. இதுவரை, ரூ. 8.67 கோடி மதிப்புள்ள பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டதால், இந்திய அரசு, இத்துறைமுகத்தின் மூலம் உரம் இறக்குமதி செய்ய முன்வந்துள்ளது. சுமார் 10 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர், கடந்த சனவரி மாதம் இரு கப்பல்கள் மூலம் மொத்தம் 47,814 மெட்ரிக் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் உர அமைச்சகத்தின் அலுவலர் கடலூர் துறைமுகத்தினைப் பார்வையிட்டு வரும் காலங்களில் தொடர்ந்து உரம் இறக்குமதி செய்வதற்கு துறைமுகத்தில் போதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என திருப்தி தெரிவித்தார். இத்துறைமுகத்தில், மார்ச் 2008 ஆம் ஆண்டின் இறுதி வாரத்தில் தொழிற்சாலைகள் உபயோகத்திற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யும் பணி பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்பட்டு 5,000 மெட்ரிக் டன்கள் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**(ii) நாகப்பட்டினம் துறைமுகம்**

இத்துறைமுகம், நாகப்பட்டினம் மாவட்டம் கடுவையாற்றுப் படுகையில் அமைந்துள்ளது. இங்கும் கப்பல்கள் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன. இத்துறைமுகத்தில், சமையல் எண்ணெய், தேங்காய்ப்பிண்ணாக்கு, கச்சா எண்ணெய், நாப்தா மற்றும் டீசல் ஆகியவை கையாளப்பட்டு வருகின்றன. சுனாமியின்போது பாதிப்படைந்த துறைமுகக் கட்டுமானங்களான சரக்குக் கொட்டகைகள், நீர்த் தடுப்பிகள், சரக்கு கையாளும் இடம், எடை மேடை, மின் விளக்குகள் போன்றவை பாதிப்படைந்தன. இவற்றை மறுசீரமைப்பு செய்வதற்காக, ரூ. 42.52 கோடி நிதியினை ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியிலிருந்து தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது. இதுவரை, ரூ.23.95 கோடி மதிப்புள்ள பணிகள் முடிவடைந்துள்ளன. இப்பணிகள் நடப்பாண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாகப்பட்டினம் துறைமுகத்தை சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்துடன் சேர்த்து மேம்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்வதற்கான நடவடிக்கையை சேது சமுத்திரக் கழக நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

11-97—16a

[2008 ஏப்ரல் 28

**9.8. தனியார் துறைமுகங்களில் வளர்ச்சிப் பணிகள்**

தனியார் உபயோகத்திற்காக அவர்களால் உருவாக்கப்படும்/ மேம்படுத்தப்படும் தோணித்துறைகள்/ துறைமுகங்கள் முறையே தனியார் முதலீட்டுத் தோணித்துறைகள்/ தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் என அழைக்கப்படும்.

**(அ) தனியார் முதலீட்டுத் தோணித்துறைகள்**

**(i) கடலூர்**

கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிட், சென்னை நிறுவனத்தினர், கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைக்கவுள்ள தங்களது பி.வி.சி தொழிற்சாலைக்குத் தேவையான கச்சாப் பொருளை இறக்குமதி செய்வதற்காக கடல்சார் கட்டுமானங்களை உருவாக்குவதற்கு இத்துறைமுகத்தில் 7.56 ஏக்கர் கடலோர நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடல்சார் கட்டுமானப் பணிகளுக்காக, 250 மீட்டர் நீளத்தில் ஒரு தற்காலிக தோணித்துறை, தமிழ்நாடு கடல்சார் வாரிய அனுமதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது நிரந்தர கடல்சார் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதைத்தவிர, கடலூர் பவர் கம்பெனி நிறுவனத்தினர், நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு செயல்படும் 1,320 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தினை தியாகவல்லி கிராமத்தில் அமைத்திட உத்தேசித்துள்ளனர். இம்மின்நிலையத்திற்கு, ஆண்டொன்றுக்குத் தேவையான 35 இலட்சம் டன் நிலக்கரியைக் கையாளும் வகையில் இத்துறைமுகத்தில் சுமார் ரூ.325 கோடி செலவில் ஒரு தோணித்துறை அமைக்க கொள்கை அளவிலான அனுமதியை இந்நிறுவனத்திற்கு கடல்சார் வாரியம் வழங்கியுள்ளது. இது தொடர்பான பூர்வாங்கப் பணிகளை அந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மேலும், இப்பகுதியிலுள்ள அனைத்து தொழில் முனைவோரின் பயன்பாட்டிற்காகவும் தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் கடலூரில் புதிய துறைமுகத்தினை பொது மற்றும் தனியார் பங்கேற்பின்மூலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 28]

**(ii) நாகப்பட்டினம்**

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினர், பனங்குடியில் அமைந்துள்ள கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக அணுகுப் பாலத்துடன் கூடிய கான்கிரீட்டிலான தோணித்துறையை நிறுவியுள்ளனர். இதன்மூலம், மேற்படி நிறுவனத்தினர், கச்சா எண்ணெய்யை தொடர்ந்து பெற்று வருகின்றனர். மேலும், இத்தோணித்துறையின்மூலம் பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்ய இந்நிறுவனத்தினர் குழாய் அமைத்துள்ளனர். இதன்மூலம் தற்போது நாப்தா மற்றும் டீசல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**(ஆ) தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்**

**(i) திருச்சோபுரம் துறைமுகம்**

நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு, திருச்சோபுரத்தில் ஒரு துறைமுகம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினர், தங்களது திட்டத்திற்கான நிதி வரவு தற்போது கிடைக்கப் பெற்றதாக தெரிவித்துள்ளனர். மேலும், எண்ணெய் சுத்திகரிப்பாலை நிறுவத் தேவையான இயந்திரங்களை கையாளுவதற்குத் தற்காலிக தோணித்துறை நிறுவ, சில நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழ்நாடு கடல்சார் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

**(ii) சிலம்பிமங்கலம் கப்பல் கட்டும் தளம்**

குட்எர்த் கப்பல் கட்டும் நிறுவனத்தின் வேண்டுகோளை ஏற்று, சர்வதேச தரத்திலான கப்பல் கட்டும் தளம் உருவாக்குவதற்காக, இத்துறைமுகத்தின் எல்லைகளை வரையறுத்து அரசு அறிவிக்கை செய்துள்ளது. மேலும், 159 ஏக்கர் அளவிலான கடலோர நிலம் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வருகிறது.

**(iii) மணப்பாடு துறைமுகம்**

இந்தியன் கேஸ் லிமிடெட் நிறுவனத்தினர், திரவ இயற்கை வாயு மற்றும் பொதுச் சரக்குகளை கையாளுவதற்கென தூத்துக்குடி மாவட்டத்தில், மணப்பாடு சிறு துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினர், நிதிப் பங்கீட்டினை விரைவில் முடிவு

செய்யவுள்ளனர். மேலும், 100.41 ஏக்கர் கடலோர நிலமானது இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அணுகுசாலை அமைத்தல், பணித்தள அலுவலகம் கட்டுதல் போன்ற அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(iv) புன்னக்காயல் துறைமுகம்**

தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர், இரசாயனப் பொருட்களை கையாள்வதற்காக தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் சிறு துறைமுகம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்குக் கடல்சார் கட்டுமானங்களுக்காக 8.41 ஏக்கர் கடலோர நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(v) சென்னை அருகிலுள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறு துறைமுக வளாகம்**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், மும்பையிலுள்ள லார்சன் அண்ட் டியூப்ரோ நிறுவனமும் இணைந்து, சிறப்புப் பயன்பாட்டு நிறுவனம் அமைத்து, அதன்மூலம் காட்டுப்பள்ளியில் கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறு துறைமுக வளாகம் உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு, அரசாணை நிலை எண் 9, தொழில் (MIE1) துறை, நாள்: 23-1-2008-ன்படி ஒப்புதலளித்துள்ளது. இச்சிறப்புப் பயன்பாட்டு நிறுவனம், இதற்கான பூர்வாங்கப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

**(vi) மரக்காணம் துறைமுகம்**

அப்போலோ இன்ப்ராஸ்ட்ரக்சர் ப்ராஜெக்ட்ஸ் பைனான்ஸ் கம்பெனி பிரைவேட் லிட் எனும் நிறுவனத்திற்கு விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மரக்காணத்தில் வணிக ரீதியிலான மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான அனுமதி தமிழக அரசின் எரிசக்தித் துறையால் அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி இறக்குமதி செய்ய, மரக்காணத்தில் தனியார் முதலீட்டுத் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு கொள்கை அளவிலான ஒப்புதலை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழ்நாடு கடல்சார் வாரியம் வழங்கியுள்ளது.



**(vii) திருக்குவளை துறைமுகம்**

நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், மெக்னமாரா இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினருக்குப் பதிலாக, டிரைடம் போர்ட் அண்ட் பவர் கம்பெனி பிரைவேட் லிட் நிறுவனத்தினர் துறைமுகம் அமைக்க முன்வந்துள்ளனர். இந்நிறுவனத்திற்கு இதற்கான கொள்கை அளவிலான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினர் இதற்கான பூர்வாங்கப் பணிகளை செய்து வருகின்றனர். துறைமுக எல்லைகள் விரைவில் வரையறுக்கப்படவுள்ளன.

**9.9. பிற திட்டங்கள்**

**(i) குளச்சல் துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இத்துறைமுகம், சர்வதேச கப்பல் வழித்தடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதுடன் கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே, சுமார் 15 மீட்டருக்கும் அதிகமான ஆழத்துடன் உள்ளது. மேற்கண்ட சிறப்புத் தன்மைகளின் காரணமாக, ரைட்ஸ் (RITES) லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட **"போர்ட்ஸ் விஷன் 2020"** அறிக்கையில், குளச்சல் துறைமுகம் சரக்குப் பெட்டகங்களை கையாள்வதற்குத் தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து, சேது சமுத்திரக் கழகம் விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்கு அதிக முதலீடு தேவைப்படுமென்பதால் இத்துறைமுகத்தை, மைய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகம்மூலம் சர்வதேச சரக்குப் பெட்டக மாற்று முனையத்துடன் கூடிய பெருந்துறைமுகமாக மேம்படுத்துமாறு மைய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**(ii) சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்**

இத்திட்டத்தின்மூலம் இராமேசுவரம் பகுதியில் அமைந்துள்ள பாக் நீரிணையையும், மன்னார் வளைகுடாவையும் கப்பல்கள் கடந்து செல்லும் வகையில் கடல் பகுதி ஆழப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையினையும் மேற்குக் கடற்கரையினையும்

[2008 ஏப்ரல் 28

இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் (nautical miles) தூரத்தினையும், கப்பல் பயணத்தில் 36 மணி நேரத்தினையும் குறைப்பதற்கு இத்திட்டம் உதவும். அகில இந்தியாவும், குறிப்பாக தமிழ்நாடும், மேலும் வளமும், வலிவும் பெறுவதற்குப் பயன்படக்கூடிய இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றிடுமாறு மைய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், இத்திட்டப் பணிகளுக்குத் தேவையான நிலங்களை அரசு ஒதுக்கியுள்ளது.

## X பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-4-1974 அன்று கம்பெனிகள் சட்டம் 1956-இன்படி நிறுவப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையங்களுக்கு ஒதுக்கப்படும் மொத்த நிலக்கரியை இந்திய துறைமுகங்களிலிருந்து எடுத்து வரும் பணியை இக்கழகம் மேற்கொள்கிறது.

### 10.1. சொந்தம் மற்றும் வாடகைக் கப்பல்கள்

இக்கழகமானது எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார் மற்றும் எம்.வி. தமிழ் காமராஜ் ஆகிய மூன்று சொந்த கப்பல்கள் மூலமாகவும் மற்றும் இந்திய மற்றும் அயல்நாடுகளில் பதிவு செய்துள்ள கப்பல் கம்பெனிகளிடமிருந்தும் கப்பல்களை நீண்டகால மற்றும் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையிலும் வாடகைக்கு அமர்த்தி தமிழ்நாடு மின் வாரியத்தின் அனல்மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியைக் கொண்டுவந்து சேர்க்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 10.2. நிலக்கரி கையாளுதல் மற்றும் நிதிநிலை

இக்கழகமானது, 2007-2008-ல் சுமார் 135.25 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகக் கொண்டு வந்துள்ளது. நடப்பாண்டில் மின்வாரியத்திற்குத் தேவைப்படும் சுமார் 149 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியில் இந்திய நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து ஒதுக்கப்படும் சுமார் 135 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை எடுத்துவரத் திட்டமிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 28]

கடந்த ஐந்து ஆண்டுகளில் இக்கழகம் கையாண்ட நிலக்கரியின் அளவு, ஈட்டிய மொத்த வருவாய் மற்றும் நிதி நிலை விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்) | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்) | நிகர லாபம்/ இழப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2003-2004 | 142.11 | 391.99 | (+) 8.57 |
| 2004-2005 | 141.40 | 453.39 | (-) 1.28 |
| 2005-2006 | 127.58 | 470.79 | (+) 0.39 |
| 2006-2007 | 131.74 | 391.51 | (+) 0.08 |
| 2007-2008 | 135.25 | 536.26 (உத்தேச கணக்கின்படி) | (+) 2.06 (உத்தேச கணக்கின்படி) |

### 10.3. நிலக்கரி கையாளப்படும் துறைமுகங்கள்

இக்கழகமானது தன் சொந்த மற்றும் வாடகைக் கப்பல்கள்மூலமாக ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களில் நிலக்கரியினை ஏற்றி தூத்துக்குடி மற்றும் எண்ணூர் துறைமுகங்களில் கன்வேயர் பெல்ட் மூலமாக இறக்கி நேரிடையாக அனல்மின் நிலையத்திற்கு வழங்குகிறது.

தூத்துக்குடி மற்றும் எண்ணூர் துறைமுகங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கப்பல் நிற்கும் தளங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

### 10.4. கன்னியாகுமரி படகுத் துறை

இக்கழகமானது அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி எடுத்து வரும் பணி தவிர குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகளுக்காக படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது.

[2008 ஏப்ரல் 28

தற்பொழுது எம்.எல். பகீரதி மற்றும் எம்.எல். தாமிரபரணி ஆகிய இரண்டு படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருந்தவாறு கன்னியாகுமரி படகுத்துறையில் தற்போது இயக்கப்பட்டு வரும் சுமார் 30 ஆண்டுகள் பழமையான எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல் பகீரதி ஆகிய இரண்டு படகுகளுக்குப் பதிலாக 150 பயணிகள் செல்லும் வகையில் தானியங்கி இயந்திரம் பொருத்தப்பட்ட இரண்டு புதிய படகுகளை வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது. அதன்படி ரூ.2.10 கோடி மதிப்பில் இரண்டு புதிய படகுகளை வடிவமைத்து கட்டிக் கொடுக்கும் பணிக்கான உத்தரவு கேரளா கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. இப்புதிய படகுகளுக்கு எம்.எல். குகன் மற்றும் எம்.எல். பொதிகை என்று அரசு பெயர் சூட்டியுள்ளது. இவ்விரு புதிய படகுகளும் 2008 ஜுன் மாதத்திற்குள் சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இப்படகுகளுக்கான செலவில் 25% மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து மானியமாகப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதிச் செலவு கழகத்தின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.


**10.5. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் – தூத்துக்குடி**

இந்நிறுவனம் 16-9-1998 அன்று தூத்துக்குடியில் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிறுவனத்தில் ஆரம்ப காலத்தில் மாலுமி பயிற்சி மற்றும் கடல்சார் இயந்திரவியல் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. தற்போது, கடல்சார் இயந்திரவியல் பயிற்சிக்குப் பதிலாக, பொதுமுறை மாலுமி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிறுவனத்தில் 2007-2008 வரை 17 பயிற்சி வகுப்புகள்மூலம் 600 பேர் மாலுமிப் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி நிறுவனத்தால், மாலுமிகளின் சிறப்புப் பயிற்சி உரிமம் பதிவு செய்தல் மற்றும் கப்பல் வேலைகளின் கண்காணிப்பு-95ன் (STCW-95) விதிமுறைகளின்படி "தன்னிலை பாதுகாப்பு முறை", "கடலில் முதலுதவி செய்தல்" "தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு", "எண்ணெய் கப்பல் பாதுகாப்பு", மற்றும் "தீயணைப்பு அடிப்படை பாதுகாப்பு பயிற்சி", ஆகிய ஐந்து பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன


இந்த நிறுவனத்தை தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பொறுப்பிற்கு மாற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் இதற்கான அரசாணை வெளியிடப்படும்.



2008 ஏப்ரல் 28]




[2008 ஏப்ரல் 28





திட்டப் பணிகளின் செலவின விவரம்.



2008 ஏப்ரல் 28]





2007-08 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்





2008-09 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு விவரம்





வேலூர் மாவட்டத்திலுள்ள திருவலம் பாலத்தின் தோற்றம் (தே. நெ. 4)



கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறை பாலத்தின் தோற்றம் (தே.நெ.47)








கன்னியாகுமரி மாவட்டத்தில் மங்காடு பாலத்தின் தோற்றம்

[2008 ஏப்ரல் 28



கோயம்புத்தூர் மாநகரில் ஒளிவெள்ளத்தில்
வாலாங்குளம் இரயில்வே மேம்பாலத்தின் அழகிய தோற்றம்



2008 ஏப்ரல் 28]



விருத்தாசலம் நகரில் மணிமுக்தா பாலத்தின் தோற்றம்

[2008 ஏப்ரல் 28



[illegible] வத்தலகுண்டு சாலையில் [illegible]



2008 ஏப்ரல் 28]



உதகமண்டலம் மாவட்டம்
குன்னூர் கட்டபெட்டு சாலையின் எழில்மிகு தோற்றம்



சேலம் - திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலை அழகிய தோற்றம்






இரவு வெளிச்சத்தில் தி நகர் [illegible] சாலையின் தோற்றம்




மதுரை [illegible] தோற்றம் ( [illegible] )





[illegible]
[illegible] துறைமுகத்தின் தோற்றம்



[illegible]
[illegible] துறைமுகத்தின் தோற்றம்

# இணைப்பு – II

(517 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

## பெரிய பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலங்களின் பட்டியல்

### பெரிய பாலங்கள்

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | வேலூர் | வேலூர் | கிருத்துவ மருத்துவக் கல்லூரி அருகில் பாலம் | 39.00 |
| 2. | திருநெல்வேலி | நாங்குநேரி | ஏர்வாடி அருகே நம்பியாற்றின் குறுக்கே பாலம் | 3.00 |
| 3. | திருநெல்வேலி | தென்காசி | தென்காசியில் சித்தாற்றின் குறுக்கே பாலம் | 3.00 |
| 4. | காஞ்சிபுரம் | திருப்போரூர் | நெமிலி அருகே பாலம் | 1.50 |
| 5. | காஞ்சிபுரம் | செங்கற்பட்டு | பூஞ்சேரி அருகே பாலம் | 4.00 |
| 6. | காஞ்சிபுரம் | அச்சரப்பாக்கம் | தழுதாலிக்குப்பம் அருகே பாலம் | 2.00 |
| 7. | காஞ்சிபுரம் | அச்சரப்பாக்கம் | கடப்பாக்கம் அருகே பாலம் | 2.00 |
| 8. | திருவள்ளூர் | வில்லிவாக்கம் | அண்ணாமலைச்சேரி அருகே பாலம் | 8.00 |
| 9. | திருவள்ளூர் | பொன்னேரி | பசியாவரம் அருகே பாலம் | 16.00 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 10. | திருவள்ளூர் | திருவொற்றியூர் | சடையான்குப்பம் அருகே பாலம் | 9.00 |
| 11. | கடலூர் | கடலூர் | நொச்சிக்காடு அருகே பாலம் | 4.50 |
| 12. | கடலூர் | கடலூர் | கப உப்பலவாடி அருகே பாலம் | 1.50 |
| 13. | புதுக்கோட்டை | அறந்தாங்கி | மஞ்சக்குடி அருகே பாலம் | 1.50 |
| 14. | புதுக்கோட்டை | அறந்தாங்கி | கலக்கமங்கலம் அருகே பாலம் | 1.50 |
| 15. | புதுக்கோட்டை | அறந்தாங்கி | காரக்கோட்டை அருகே பாலம் | 1.50 |
| 16. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | அலிவலம் அருகே பாலம் | 1.60 |
| 17. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | வேளாங்கண்ணி அருகே பாலம் | 5.00 |
| 18. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | அக்கரைப்பேட்டை அருகே இணைப்பு நடைபாலம் | 2.00 |
| 19. | நாகப்பட்டினம் | சீர்காழி | வெள்ளப்பள்ளம் அருகே பாலம் | 8.00 |
| 20 | நாகப்பட்டினம் | சீர்காழி | பழையாறு அருகே பாலம் | 3.00 |
| 21. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | வண்டல் அவரிக்காடு அருகே பாலம் | 13.30 |
| 22. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | வடுகூர் மணக்குடி அருகே பாலம் | 1.15 |



| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 23. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | கோவிந்தன்காடு அருகே பாலம் | 1.00 |
| 24. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | நகராட்சி பகுதிகளில் ஐந்து பாலங்கள் | 7.25 |
| 25. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | வாணவன்மாதேவி அருகே பாலம் | 1.50 |
| 26. | நாகப்பட்டினம் | பூம்புகார் | வேப்பஞ்சேரி அருகே பாலம் | 5.00 |
| 27. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | கீச்சான்குப்பம் அருகே பாலம் | 1.90 |
| 28. | நாகப்பட்டினம் | சீர்காழி | வளையகாரன் ஓடை அருகே பாலம் | 2.50 |
| 29. | நாகப்பட்டினம் | சீர்காழி | கீழமுவக்கரை அருகே பாலம் | 18.00 |
| 30. | நாகப்பட்டினம் | சீர்காழி | பெருந்தோட்டம் அருகே இரண்டு பாலங்கள் | 4.60 |
| 31. | இராமநாதபுரம் | கடலாடி | வாலிநோக்கம் அருகே பாலம் | 1.25 |
| 32. | இராமநாதபுரம் | கடலாடி | மூக்கையூர் அருகே பாலம் | 2.50 |
| 33. | தூத்துக்குடி | தூத்துக்குடி | ஆத்தூர் முக்கனி அருகே பாலம் | 9.00 |
| 34. | கரூர் | கபிலர்மலை/ கரூர் | மோகனூர் வாங்கல் இடையே பாலம் | 43.50 |
| 35. | தஞ்சாவூர் | கும்பகோணம் | நீலத்தநல்லூர் மதனத்தூர் இடையே பாலம் | 35.00 |

[2008 ஏப்ரல் 28

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 36. | கடலூர் | குறிஞ்சிப்பாடி/ மயிலாடுதுறை | முட்டம் மணல்மேடு இடையே பாலம் | 32.40 |
| 37. | இராமநாதபுரம் | பரமக்குடி | பரமக்குடி எமனேஸ்வரம் இடையே பாலம் | 10.60 |
| 38. | ஈரோடு | பவானி | வைரமங்கலம் தளவாய்பேட்டை இடையே பாலம் | 4.70 |
| 39. | திருநெல்வேலி | ஆலங்குளம் | வடக்குசெழியநல்லூர் தெற்குசெழியநல்லூர் இடையே பாலம் | 2.50 |
| 40. | கடலூர் | நெல்லிக்குப்பம் | நரியனோடை சி.என். பாளையம் இடையே பாலம் | 1.60 |
| 41. | திருச்சி | முசிறி | வேளக்காநத்தம் இடையே பாலம் | 2.25 |
| | | மொத்தம் | | 319.00 |

## இரயில்வே மேம்பாலங்கள்



2008 ஏப்ரல் 28]

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | அரியலூர் | அரியலூர் அருகே கடவு எண் 201-ல் பாலம் | 30.00 |
| 2. | திருவள்ளூர் | கும்மிடிப்பூண்டி | எளாவூர் அருகே கடவு எண் 38-ல் பாலம் | 25.00 |
| 3. | கோயம்புத்தூர் | பேரூர் | மதுக்கரை அருகே கடவு எண் 150-ல் பாலம் | 15.00 |
| 4. | கோயம்புத்தூர் | திருப்பூர் | கிணத்துக்கடவு அருகே கடவு எண் 134-ல் பாலம் | 10.00 |
| 5. | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | ஒட்டன்சத்திரம் அருகே கடவு எண் 29-ல் பாலம் | 18.00 |
| 6. | கிருஷ்ணகிரி | பர்கூர் | சாமல்பட்டி அருகே கடவு எண் 96-ல் பாலம் | 35.00 |
| 7. | திருச்சி | திருச்சி–2 | திருச்சி அருகே கடவு எண் 325-ல் பாலம் | 30.00 |
| 8. | கோயம்புத்தூர் | பல்லடம் | இருகூர் அருகே கடவு எண் 2-ல் பாலம் | 20.00 |
| 9. | விருதுநகர் | விருதுநகர் | விருதுநகர் அருகே கடவு எண் 403-ல் பாலம் | 35.00 |
| 10. | மதுரை | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் அருகே கடவு எண் 371-ல் பாலம் | 35.00 |
| 11. | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் அருகே கடவு எண் 5-ல் பாலம் | 20.00 |
| 12. | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் அருகே கடவு எண் 308-ல் பாலம் | 26.00 |
| 13. | திருச்சி | குளித்தலை | மணப்பாறை அருகே கடவு எண் 281-ல் பாலம் | 24.00 |
| 14. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் அருகே கடவு எண் 302-ல் பாலம் | 30.00 |
| 15. | வேலூர் | காட்பாடி | காட்பாடி அருகே கடவு எண் 128-ல் பாலம் | 36.00 |
| 16. | கிருஷ்ணகிரி | பர்கூர் | சாமல்பட்டி அருகே கடவு எண் 98-ல் பாலம் | [illegible]4.00 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | பணியின் பெயர் | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 17. | வேலூர் | திருப்பத்தூர் | ஜோலார்பேட்டை–திருப்பத்தூர் அருகே கடவு எண் 89-ல் பாலம் | 18.00 |
| 18. | வேலூர் | திருப்பத்தூர் | கேதாண்டப்பட்டி–ஜோலார்பேட்டை அருகே கடவு எண் 86-ல் பாலம் | 20.00 |
| 19. | வேலூர் | வாணியம்பாடி | வாணியம்பாடி அருகே கடவு எண் 82-ல் பாலம் | 21.00 |
| 20. | வேலூர் | குடியாத்தம் | குடியாத்தம் அருகே கடவு எண் 63-ல் பாலம் | 16.00 |
| 21. | காஞ்சிபுரம் | செங்கற்பட்டு | பாலூர், செங்கற்பட்டு அருகே கடவு எண் 1-ல் பாலம் | 27.00 |
| 22. | திருநெல்வேலி | பாளையங்–கோட்டை | திருநெல்வேலி அருகே கடவு எண் 4-ல் பாலம் | 25.00 |
| 23. | சென்னை | ஆர்.கே. நகர் | பேசின் பிரிஜ் அருகே பாலம் (சென்னை மாநகராட்சியால் கட்டப்படும்) | 50.00 |
| | | | மொத்தம் | 580.00 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228383
சென்னை-600 008
நூலகம்